www.tamilarangam.net

கறுப்பு ஆடி சிறப்பு இதழ்

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT

# தேசபக்தன்

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT

தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)

## தமிழீழ அகதிகளின் அரசியல் எதிர்காலம்



NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM

**N D P T**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசபக்தன்

“சிறு துளி பெரு வெள்ளம்” அன்பளிப்பு 25 உருபா / வெளிநாடு 10 $ டொலர்

மடல் தொடர்புகளுக்கு மட்டும்

T. ARASAN
67, PARKWOOD
VILLEGE DR
# 308 DONMILLS
ONTARIO
M 34 2x4
C A N A D A

EDITOR
DESAM
POST BOOKS-256
NYBORG
5871 BERGEN
N O R W A Y

Patriot_editor@Yahoo.com

www.ndpt.org

RGSD.ISSN-07647-2262 RNI 04512/1999 CANADA

NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM (N.D.P.T.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கறுப்பு யூலை நினைவு

அன்பான தமிழீழ மக்களே! போராளிகளே!

1983 கறுப்பு ஆடி (யூலை) நினைவுகளை திரும்பிப் பாருங்கள் ஒரு கணம். 83-இல் இருந்து 2001 ஆடி (யூலை) வரை, வந்துபோன ஒவ்வொரு ஆடி (யூலை)யிலும் உங்களின் சொந்த வாழ்க்கையிலும், தமிழீழ தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்திலும் நடந்த மாற்றங்கள் எத்தனை! எத்தனை!

**வெலிக்கடை** சிறைப் படுகொலை, நாடு முழுவதும் கோரத் தாண்டவம் ஆடிய இன-மதவெறிக் கொடூரங்கள், பின்னாளில் தமிழீழ தேசத்தில் **செம்மணி**போல் எத்தனை புதை குழிகள், சித்திரவதை முகாம்கள், பாலியல் பலாத்காரங்கள், **பிந்துனுவேவா** முகாம் படு கொலை, சொந்த மண்ணில் எவ்வளவு அகதி முகாம்கள், போர் முனை களில், அரசு படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வகைவகயான குரூரங்கள் அரங்கேற்றப்படுகின்றது. முதலில் இன - மதவெறி கொண்ட அரசியல் குண்டர் படைகள் செய்த அத்தனை அராஜகங்க ளையும், இப்போது கட்டுக்கோப்பான சிறீலங்கா அரசு படைகள் நமது மண்ணை ஆக்கிரமித்து எல்லாவித அட்டூழியங்களும் செய்கின்றது.

நாட்டை விட்டு வெளியேறி உலகம் முழுவதும் உயிரை மட்டும் காப்பாற்றிய அகதிகளின் வாழ்வில் எத்தனை அவலங்கள், அலங்கோ லங்கள், எதிர்காலம் பற்றிய அச்சங்கள்.

நமது மண்ணில் நாம் சுதந்திரமாக மீண்டும் வாழவேண்டும். நம்மை நாமே ஆள வேண்டும். நமது உழைப்பை இன்னொருவன் சுரண்டாது, மக்களின் உழைப்பை மக்களே அனுபவிக்கும் தமிழீழ புதிய சனநாயக சமூகம் உருவாக்கப்படவேண்டும். இதுதான் இதற்குத் தீர்வு. அந்த இலட்சிய சமூகத்தை, அரசை நிறுவுவதற்கான போராட்டம் தொடரும். தமிழீழ மக்களின் விடுதலைக்காக இதுவரை தங்களின் உயிரை இந்த மண்ணுக்கு உரமாக்கிய போராளிகளுக்கும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களுக்கும் நாம் செய்கின்ற உண்மையான அஞ்சலி. 2001 ஆடி கறுப்பு (யூலை) நினைவு நாளில் நமது உறுதி ஏற்பாக இது இருக்க வேண்டும்.

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சனையை தீர்க்க 1987 யூலை ''இந்திய - இலங்கை ஒப்பந்தம்'' (இந்திய அரசு காஷ்மீரின் தேசிய இனப் பிரச்சனையை தீர்க்க ''இந்திய - பாகிஸ்தான்'' ஒப்பந்தம் செய்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.) சிறீலங்கா இனவாத அரசு நிகழ்த்திய இனப்படுகொலைகளின் நினைவு என்ற எல்லையைத் தாண்டி இந்தியரசும், ஒப்பந்தத்தில் சமரசம் அடைந்த தமிழ்த் தலைமைகளும் கூட தமிழீழ மக்களின் முதுகில் குத்தி துரோகம் இழைத்து, படுகொலைகள் செய்து, தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கத் துவங்கிய நினைவுகளும் சேர்ந்து கொண்டது கறுப்பு ஆடித் (யூலை) துயரங்களில் தனித்தமிழீழ அரசு அமைக்க போராடத் தொடங்கிய பெரிய ஆயுதப் போராட்ட இயக்கங்களில் விடுதலைப் புலிகள் இயக்கமே தொடர்ந்து போராடி வருகின்றது.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போரை நசுக்கி, புலிகளை சமரசப்பட வைக்க உலகளவிலான முயற்சிகள் - சூழ்ச்சிகள் இன்று நடந்து கொண்டிருக்கிறது. தெற்காசியாவில் நடந்த இந்தியரசின் சூழ்ச்சிகளை முறியடித்து தமிழீழ தேசிய விடுதலைப் போரை தொடர்ந்து நடத்திய புலிகள் இயக்கம். இப்போது ஏகாதிபத்தியங்களின் உலகமயமாக்கல் போக்குடன் வெளிப்படும் உலகளவிலான சூழ்ச்சிகளை முறியடித்து, தமிழீழ தேசிய விடுதலைப் போரை தொடர வேண்டும். தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் இதற்காக தங்களை தயார்படுத்த வேண்டும்.

1987-இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தவிர்க்க முடியாமல் ஏற்றுக் கொண்ட புலிகள், இந்திய சமாதானப்(?) படையை உள்ளே நுழைய அனுமதி கொடுத்துவிட்டு, பின்னர், தற்காலிக அரசின் அதிகாரங்கள் பற்றிய பிரச்சனையில் முரண்படத் தொடங்கி. இந்தியரசையும், ஒப்பந்தத்தையும் அம்பலப்படுத்துவதற்காக, திலீபனின் உண்ணாவிரத அரசியல் நடவடிக்கை தேவைப்பட்டது. திலீபனையும், 12 போராளி இராணுவத் தளபதிகளையும் ஒரே காலத்தில் பலி கொடுக்க நேர்ந்தது. இந்த அரசியல் அம்பலப்படுத்தலுக்குப் பின்புதான், அந்த மக்கள் எழுச்சியின் மேல்தான் இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம் நடத்த

www.tamilarangam.net



முடிந்தது. ஒரு தூரநோக்கற்ற தெளிவான உறுதியான முன்னோக்கிய அரசியல் தயாரிப்பை செய்யாத நிலையில் இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தில் புலிகளும், மக்களும் சந்தித்த இழப்புகள் கொஞ்ச நஞ்சமல்ல.

அன்றைய உலக நிலைமையில் தெற்காசிய பிராந்தியத்தில் தமிழீழப் பிரச்சனையை கையாழ்வதில் மேற்கத்திய அரசுகளின் அணுகு முறையும் வேறானதாக இருந்தது.

உடனடியாகவோ அல்லது நீண்டகாலத்திலோ தேசத்தை சுரண்டி அடக்கி ஒடுக்க முற்படும் எதிரிகளை, படைகளை நாட்டுக்குள் உள்ளே வர அனுமதித்து (சமாதானப்படை, கண்காணிப்புப் படை, ஆயுத அப்புறப்படுத்தல் குழு...) விட்டு, பின்னர் அதை எதிர்த்துப் போரிடுவது புத்திசாலித்தனமான தீர்க்கதரிசனமுள்ள அரசியல் - இராணுவப் பார்வை அல்ல. சிறீலங்காப் படைகளை அடிபணிய வைக்க அன்னியப் படைகளை சாந்திருப்பதும், நாட்டுக்குள் அனுமதிப்பதும் தமிழீழ தேசத்தை அன்னிய ஆக்கிரமிப்புக்கு பலி கொடுப்பதாகவே முடியும். ஒரு தேசிய விடுதலை இயக்கம் இச்சூழ்ச்சிக்கு பலியாகக்கூடாது. (இன்று பாலஸ்தீனத்தில் நடந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு அரசியல் - இராணுவ முன்னெடுப்புகளையும் தமிழீழப் போராளிகள், தலைவர்கள், தளபதிகள் கவனிக்கத் தவறக்கூடாது.)

உலகளவில் தேசிய விடுதலை இயக்கங்களை, மிக முன்னேறிய அறிவியல் தொழில் நுட்ப முறையில், மிக நவீன அரசியல் - இராணுவ சாணக்கிய முறையில் சாதுரியமாகத் தொடர்பு கொண்டு அவ்வியக்கங்களை, அதன் பலம் - பலயீனங்களை புரிந்து அணுகி ஏகாதிபத்திய முறைக்குள் உள்ளிளுத்துக் கொள்வதில், விரிவாதிக்க நாடுகளும், விசேடமாக மேற்கத்திய அரசுகளும் கைதேர்ந்த கலைகளை பின்பற்றுகின்றன.

தேசிய விடுதலை இயக்கங்களையும் - இன ஒடுக்குமுறை அரசுகளையும் சமரசப்படுத்தி, ஏகாதிபத்திய உலக முறைக்குள் சிக்க வைப்பதில் நோர்வே அரசு உலக நோபல் பரிசுக்கான தகுதியைப் பெற்றிருக்கிறது.

புலிகளையும், அரசையும் பேச வைத்து, தமிழீழப் போராட்டத்தை திசை திருப்பி சமரசப்படுத்துவதில் நோர்வே அரசு இரகசியமாகவும் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வெளிப்படையாகவும் மிக மும்மரமாக ஈடுபட்டு வருகிறது. புலிகளின் தன்னிச்சையான 4 மாத போர் நிறுத்தமும் புலிகள் எரிக் சோல்கைம் இடம் உறுதியாக முன் வைத்த a. புலிகள் மீதான தடை நீக்கம், b. புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதி மீதான பொருளாதார மருத்துவ தடை நீக்கம், c. நிபந்தனையற்ற போர் நிறுத்தம்.

சிறீலங்கா அரசு இதில் எதற்கும் உடன்படாத நிலையும், புலிகளின் போர் நிறுத்தத்தை அரசு படைகள் மீறிய முறையும், சிறீலங்கா அரசின் சமாதான முகத்தை உலகுக்கு அம்பலப்படுத்தியுள்ளது. புலிகள் **ஓயாத அலையின்** வெற்றியை ஒரு ஆண்டு தக்க வைத்திருப்பதும், அரசு படைகளின் முன்னேறுதலை தடுத்திருப்பதும், புலிகள் அரசை அம்பலப்படுத்தி தன்னிச்சையான போர் நிறுத்தத்தில் இருந்து விலகி இருப்பதும் நடந்திருக்கிறது. சிறீலங்கா அரசு தவிர்க்க முடியாத உலக நிர்பந்தங்களால், புலிகள் மீதான தடையை தற்காலிகமாக நீக்க பரிசீலிக்கிறது. சந்திரிகாவின் சமாதான முகம் மேலும் கிழிக்கப்படாமல் இருக்க இது அவசியமாகிறது.

நோர்வே அரசு தலைவரின், இந்தியப் பயணமும், ஃபில்லியன் டொலர் மதிப்புள்ள பொருளாதார ஒப்பந்தங்களும், தெற்காசியாவில் நோர்வேயின் பொருளாதாரச் சுரண்டலின் எதிர்கால அடித்தளத்தை வெளிப்படுத்தி இருக்கிறது. உலகம் பேசும் காஷ்மீர் மக்களின் தேசியப் பிரச்சனையில் தலையிடமாட்டோம் என்ற நோர்வேயின் வாக்குறுதி. **உலக சமாதானத் தூதன்** என்ற நோர்வே அரசின் **சமாதான முகமூடிக்குள்** ஒளிந்திருக்கும் ஏகாதிபத்திய பொருளாதாரப் **பேய் முகத்தை** வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. உள்நாட்டு நிலமை, பிராந்திய நிலமை, உலக நிலைமை இப்படி சூழ்ச்சி நிறைந்ததாகவும், இராணுவப் பலம் கொண்டு எதையும் சாதிக்க முடியும் என உலக எதிரிகள் துணியும் போது, தமிழீழப் போராளிகள் மிகவும் தூர நோக்குடன் சிந்தித்து செயற்படவேண்டும்.

தமிழீழ மக்கள், மிக நீண்ட யுத்தத்தினால் சலித்துப் போய் இருக்கிறார்கள். போர் முனையிலுள்ள போராளிகள் மிகவும் களைத்துப் போயுள்ளனர். சிறீலங்கா அரசும், உலக எதிரிகளும் தங்களின் தடைகளால், நிர்ப்பந்தங்களால் மக்களையும், போராளிகளையும் நடைப்பிணமாக்கி விட்டு, புலிகளின் தலைமையை சமரசப்படுத்தி விட முயல்கின்றனர்.

www.tamilarangam.net



இந்த வாழ்வா - சாவா யுத்தத்தில் புலிகள் தங்களிடம் இருக்கின்ற இராணுவ பலத்தை தொடர்ந்து பேணுவதுடன் - விரிவாக்கவும் செய்கிறார்கள். இது மிகச் சரியான நடவடிக்கை. மக்களும் போராளி களும் நவீன ஆயுதங்களால் ஆயுத பாணிகளாக்கப்படும் அதேவேளை, மக்களின் விடுதலைக்கு உத்தரவாதம் அளிக்கின்ற புரட்சிகர அரசியல் **கோரிக்கைகளை** மக்களும் போராளிகளும் தங்களின் இரத்தம் போல் உணர்ந்து கொள்ளும் அளவுக்கு தயாரிக்கப்படவேண்டும். புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் என, புலித்தலைமை உலகம் முழு வதும் கோருவதுபோல், புலிகள் இயக்கம் தமிழீழ தேசபக்த புரட்சி கர கட்சிகள் மீதான தடையை நீக்கி சுதந்திரமாக செயற்பட அனுமதிப்பதும் அவசியமாகும். இவ்வாறு அரசியல் ரீதியாக மக்களும், போராளிகளும் அணிதிரட்டப்பட்டால் புலிகளால், இன்று வரை போல் இன்னமும் 25 ஆண்டுகளுக்கு உலக எதிரிகளுக்கு எதிராகக் கூட நின்று பிடிக்க முடியும். புலிகளின் தலைமை, சிங்கள இன ஒடுக்குமுறை எதிர்ப்புக் கொண்ட **இன விடுதலை** அரசியலை கொண்டிருப்பதுடன் தெளிவான ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ள **தேசிய விடுதலை** அரசியலையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

இனியும் தமிழீழ தேசிய விடுதலைப் போரை புலிகள் தொடர்வ தற்கு **ஒரே வழி இதுதான்**. ஏகாதிபத்திய எதிர்ப்பை அடிப்படையாகக் கொள்ளாத தேசிய இன விடுதலை இயக்கங்களால், நவகொலனிய உலகமயமாக்கலை தாண்டிச் செல்ல முடியாது. உண்மையான தேசிய விடுதலையை வெல்ல முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், யுத்தத்தில் உறுதியாக நிற்பது, முன்னேறிச் செல்வது போன்று, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட தேசிய விடுதலை இயக்கமாகவும் முன்னேறவேண்டும் என தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள், புரட்சிகர தேசபக்த அரசியலை விரும்புகின்ற மக்கள் எதிர்பார்க்கிறார்கள். புலிகளின் தலைமை என்ன செய்யப் போகின்றது என்பதை வரலாறு எழுதிக் கொள்ளும். கறுப்பு ஆடி நினைவு குறித்துக் கொள்ளட்டும்.

— **ஆசிரியர் குழு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# யுத்தம் சமாதானம் எதை நோக்கி செல்கின்றது?

தேசியத்தை ஒடுக்கி அழிக்க முனையும் உலகமயமாதல் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட, எமது போராட்டத்தை சனநாயகப்படுத்துவது நிபந்தனையாகும்.

புலிகளின் ஒருதலைபட்ச யுத்த நிறுத்தமும், நோர்வேயின் சமாதனப் பேச்சு வார்த்தையும் எதிர்பாராத விதமாக உலகமயமாதல் உள் முரண்பாட்டால் நெருக்கடிக்குள்ளானது. இக் கட்டுரை எழுதிக் கொண்டிருந்த நிலையில் யுத்தம் மீள ஊக்கிரமாகிய நிலையில், சிறீலங்கா அரசு பாரிய இழப்பை சந்தித்துள்ளது. அதே நேரம் நோர்வே மற்றும் கனடா பிரதிநிதிகள் மீளவும் பேச்சு வார்த்தையை ஆரம்பித்துள்ளனர். இந்த யுத்த நிறுத்தம் மற்றும் பேச்சு வார்த்தையில் ஏற்பட்ட தடைகள் மற்றும் நெருக்கடிக்கு, வெறுமனே சிறீலங்கா அரசை நேரடியாக குற்றஞ் சாட்டப்பட்ட போதும், உண்மை அப்படி அல்ல என்பதே இங்கு கசப்பான உண்மையாகும்.

யுத்தநிறுத்தை சிறீலங்கா அரசு செய்ய மறுத்ததும், பேச்சு வார்த்தையை முன்னெடுக்க தயாரற்ற தன்மையை, வெறும் புலிகள் - அரசு என்ற மட்டத்தில் ஆராயமுடியாது. இப்படியான ஆய்வுகள், கருத்துகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையே மறைமுகமாக விலை கூவி விற்பதாகும். தமிழ் மக்கள், தாம் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையைப் போராடிப் பெற வேண்டிய வரலாற்றில், இந்த உரிமைப் போராட்டம் ஏகாதிபத்தியத்தின் நுகத்தடியில் சிக்கித் தவிக்கின்றது. உலகமயமாதல் உலகளாவில் தன்னை விரிவாக்கி வருகின்ற இன்றைய நிலையில்; தேசங்கள், தேசியப் போராட்டங்கள் என்பது திட்டவட்டமாக உலகமயமாதலுக்கு எதிராக இருப்பதை, விரும்பினாலும் விரும்பா விட்டாலும் நாம் இன்று புரிந்து கொண்டுதான் ஆகவேண்டும். ஏகாதிபத்தியங்களால் உருவாக்கப்பட்ட உலகமயமாதல், உள்ளடக்கத்தில் தேசிய

www.tamilarangam.net



செல்வத்தை சூறையாடி மூலதனத்தை குவிப்பதில் மையங் கொள்கின்றது. இது உலக செல்வங்களை தனது காலடியில் மிதித்தபடிதான், தன் அதிகாரத்தை மக்கள் மேல் நிறுவுகின்றது. இது தேசங்களின் அனைத்து பண்பாட்டு கலாச்சார கூறுகளையும் நாசமாக்கி, அதில் தன்னை நிலை நிறுத்துகின்றது.

இந்த நிலையில் எமது தேசியவிடுதலைப் போராட்டம், ஏகாதிபத்தியத்தால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு போராட்டமாகவே உள்ளது. சிறீலங்காவில் நடைபெறும் உள்நாட்டு யுத்தம், உலகமயமாதலின் மூலதனம் உடுருவிப் பாய்வதற்கு தடையாக உள்ள அதேநேரம், உலகமயமாதலை வரவேற்பதில் சாதகமான நிலைமையை உருவாக்கி உள்ளது. இது சிறீலங்கா அரசு மற்றும் புலிகள் உள்ளிட்ட பொது நிலையில், உலகமயமாதலை வரவேற்கும் கொள்கையில் அகலக் கதவை திறந்தே வைத்துள்ளனர். இந்த நிலையில் இலங்கையில் உலகமயமாதல் முதலீட்டை நடத்துவதன் மூலம் தேசிய செல்வத்தை சூறையாடுவதில், யுத்தம் தடையாக இருப்பது ஏகாதிபத்தியத்தின் குறிப்பான கண்ணோட்டமாகவுள்ளது. இதைக் கடந்து இலங்கையின் பொருளாதாரத்தையும், மக்களின் உழைப்பையும் சூறையாடும் வகையில், உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டியது அவசியமாகியது. இலங்கையின் அமைதியே உலகமயமாதலின் மூலதனத்தின் சூறையாடும் நிபந்தனையாக இருப்பதால், அதுவே யுத்த நிறுத்தமாகவும் பேச்சு வார்த்தையுமாக மாறியது.

நோர்வேயின் வேண்டுகோளை ஏற்று புலிகள் செய்த ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் மற்றும் மூன்றாம் தரப்பு பேச்சு வார்த்தை ஏன் தொடர முடியாமல் போனது. அதேநேரம் இருதரப்பு யுத்த நிறுத்தம், மற்றும் இருதரப்பு பேச்சு வார்த்தை நடைபெற முடியாத நிலைக்கு, ஏன் முன்னேற முடியாத காரணம் என்னவாக இருந்தது. இதை ஆராய்கின்ற போது இந்த நிலை ஏற்பட காரணத்தை உலகமயமாதலின் உள் முரண்பாட்டில் கண்டுகொள்ளமுடிகின்றது. உலகமயமாதல் விரிவாக்கத்தில் அமெரிக்காவுக்கும் மற்றைய ஏகாதிபத்தியத்துக்கும் இடையில் கூர்மையாகி வரும் உள் முரண்பாட்டினால், இலங்கை நிலைமையை கையாள்வதில் ஏற்பட்ட இழுபறியே, நீண்ட இடைவிடாத தீவிர முயற்சியை சிதைப்பதில் பிரதிபலித்தது. சர்வதேச மூலதன ஆதிக்கத்தை நிறுவும் ஏகாதிபத்திய நலன்கள் கூர்மையாகி வரும்

www.tamilarangam.net


இன்றைய நிலையில், ஏகாதிபத்திய முரண்பாடுகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திலும் தனது கரங்களை பதித்து வருவதையே, அண்மைய நிகழ்வுகள் பறைசாற்றியுள்ளது.

நோர்வே தலையீட்டுடன் கூடிய யுத்த நிறுத்தம் மற்றும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், உலகமயமாதலின் ஒரு சார்பாக இருந்த நிலைமைதான், நீண்ட இந்த முயற்சி தோல்வி கண்டது. நோர்வேயின் மத்தியஸ்தம் அய்ரோப்பிய உலகமயமாதல் நலன்களுடன் நேரடியாக தொடர்புடையதாக இருந்தது. இந்த ஒரே ஒரு நிலையில் மட்டும் தான் இந்த தொடர் முயற்சி திடீரென எதிர்பாராதவிதமாக தடைபடக் காரணமாகியது. அமெரிக்கா இதற்குகெதிரான வகையில் செயற்பட்டு, ஒரு தலைபட்சமான புலிகளின் யுத்த நிறுத்தத்தை முறியடித்து, பேச்சு வார்த்தையை நடத்த தடையாக மாறியது. இவற்றை அக்காலகட்டத்தில் நடந்த பல தொடர்ச்சியான சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புடையதாக உள்ளதை, நாம் இனம் கண்டு கொள்ளமுடியும். இந்த உலகமயமாதல் முரண்பாட்டை கவனத்தில் கொள்ளாத போராட்டம் என்பது, எமது போராட்டத்தை ஆழமாக பின்னடைய வைக்கும்.

*18-19.12.2000* அய்ரோப்பிய உதவி வழங்கும் நாடுகளின் இலங்கைக்கான கூட்டத்தில் சந்திரிகா நேரடியாக பங்கு பற்றிய போதும், உதவி வழங்கப்படவில்லை. அய்ரோப்பிய யூனியன் நிதி வழங்குவதற்கு ஒரு நிபந்தனையை முன்வைத்தது. பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதன் மூலம் யுத்தத்தை நிறுத்தி நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதை நிபந்தனையாக கொண்டே, நிதி வழங்கப்படும் என்று தெளிவாக அறிவித்தது. பேச்சு வார்த்தையின் முன்னேற்றம் மற்றும் யுத்தநிறுத்த நிலமையை பொறுத்தே, நிதி கொடுப்பது பற்றி ஆராயப்படும் என்று அறிவித்தனர். முன் கூட்டியே அய்ரோப்பா நோர்வே பிரதிநிதிகள் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில், நிதி மூலம் அரசை நிர்ப்பந்தித்தது. அதே நேரம், புலிகளின் யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வைத்தனர். இந்த நிலையில் உலகமயமாதல் முரண்பாட்டின் சிலவற்றை தொகுப்பாக ஆராய்வதன் மூலம் இதை ஆழமாக புரிந்து கொள்ளமுடியும்.

*18-19.12.2001* அய்ரோப்பிய உதவி வழங்கும் நாடுகளின் இலங்கைக்கான கூட்டத்தில் யுத்தத்தை நிறுத்தவும், பேச்சு வார்த்தையை நடத்தவும் அமைதியை ஏற்படுத்தவும் கோரியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இலங்கையின் அமைதியே விரிவான சூறையாடலை இலங்கையில் செய்ய, அவசியமான உலகமயமாதல் நிபந்தனையாக இருந்தது. அத்துடன் உலகமயமாதலின் அய்ரோப்பிய நலன்களை உறுதி செய்வதில், இந்த நிபந்தனை சார்ந்திருந்தது. அதேநேரம் பேச்சுவார்த்தை மற்றும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும், 18.2.2001 இல் அய்ரோப்பிய பாராளுமன்றக் குழு இலங்கை சென்றது. அதைத் தொடர்ந்து, மார்ச் மாதம் சந்திரிகா அய்ரோப்பிய முன்னணி நாடுகளான ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, பெல்ஜியத்துக்குமான பயணம் நடைபெற்றது. அத்துடன் அய்ரோப்பிய நிதியுதவியை மீண்டும் வேண்டிநின்றார். இது மட்டும் தான் இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு, மீளவும் யுத்தத்தை தொடர்வதற்கான பாதையாக இருந்தது. இந்த காரணத்தை அடிப்படையாக கொண்டே, அய்ரோப்பிய ஏகாதிபத்தியங்கள் தமது நலன்களை அடைய இலங்கை மீதான தனது செல்வாக்கை நேரடியாக பிரயோகித்தன. அதைத் தொடர்ந்து சித்திரை மாதம் 12ம் திகதி சந்திரிகா பிரிட்டன் சென்றார். அதேநேரம் 7.3.2001 இல் பிரஞ்சு துதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி யாழ் சென்று நிலமைகளை அவதானித்தார். மீண்டும் மார்ச் மாதம் சந்திரிகா உதவி வழங்கும் அய்ரோப்பிய நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொண்ட போதும், அய்ரோப்பிய நலன்களை உறுதி செய்யும் வகையில் பேச்சு வார்த்தை மற்றும் யுத்த நிறுத்தத்தில் முன்னேற்றமின்மையால் உதவி வழங்கவில்லை. தொடர்ச்சியாக யுத்த நிறுத்தம் பேச்சு வார்த்தை, அமைதியை நோக்கிய தீர்வு என்ற பாதையில் அய்ரோப்பிய யூனியன் கொள்கை ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் உறுதியாக இருந்தது. இந்த வகையில் பல பத்து முறை நோர்வேயின் பிரிதிநிதி உலகம் முழுக்க பறந்து திரிந்ததுடன், சிறீலங்கா வெளிநாட்டு அமைச்சு மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் உள்ளிட, புலிகள் உள்ளிட்ட பலருடன் பேச்சு வார்த்தைகளை நாட்டுக்குள்ளும் வெளியிலும் தொடர்ச்சியாக நடத்தினார். இந்த நிலையில் புலிகளை தமது .முடிவுக்குள் கொண்டுவர முடிந்த அளவுக்கு, சிறீலங்கா அரசைக் கொண்டு வரமுடியாத நிலை ஏற்பட்டது. போராட்டக் குழுவை இலகுவாக கையாண்ட அய்ரோப்பா, சிறீலங்கா அரசைக் கொண்டு வர முடியமால் போன்மையை, உலகமயமாதலின் உள் முரண்பாட்டில் மட்டுமே நாம் கண்டு கொள்ளமுடியும். சிறீலங்கா அரசின் அனைத்து விதமான மக்கள் விரோதத்துக்கும் தோளோடு தோள் நிற்கும்

அமெரிக்காவே, உலகமயமாதலில் தனது நலன்களை சாதிக்க, அய்ரோப்பிய முயற்சிக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் தடை விதித்தது.

இதை எப்படி அமெரிக்கா சாதிக்க முடிந்தது? சிறீலங்கா வரவு செலவில், செலவாக 36497 கோடி ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், பற்றக்குறை 11700 கோடியாக உள்ளது. சென்ற வருடம் 8000 கோடியை போருக்காக செலவு செய்த அரசு, இம்முறை 6340 கோடியை ஒதுக்கிய போதும், சென்ற முறை போல் 10000 கோடியை யுத்தத்துக்கு செலவு செய்யத் தயராகவுள்ளது. இவ்வருடம் கடன்படும்தொகை 24700 கோடியாக உள்ளது. சென்ற வருடத்தில் 16900 கோடியாக இருந்த கடன்படும்தொகை 46 சதவீதத்ததால் அதிகரித்துள்ளது. இந்தளவுக்கு அன்னியக் கடனைச் சார்ந்து நாட்டை அடகுவைத்து வாழும் ஒரு நாட்டின் உள்நாட்டு முடிவுகளை, நாட்டை அடகு வைப்பவன் முடிவு எடுப்பதில்லை. அதேபோல் யுத்தத்தைக் கூட அன்னியக் கடனில் நடத்துகின்ற நிலையில், கடன் வழங்குபவர்கள் யுத்தத்தை நிறுத்தக் கோரும் போது, அதை நிறுத்த மறுப்பதை உலகமயமாதலின் ஏகாதிபத்திய முரண்பாட்டில் இனம் கண்டு கொள்ளவேண்டும். இந்த இடத்தில் சிறீலங்கா அரசு அய்ரோப்பிய நலன்களைச் சார்ந்த அல்லது அமெரிக்க நலன்களைச் சார்ந்த முடிவுகளை எடுக்கின்றனர் என்பதை பொறுத்தே, யுத்த நிறுத்தம் பேச்சு வார்த்தை, அமைதி என்பன நடை முறை நிகழ்வாகின்றது. சிறீலங்கா அரசு சுயமாக முடிவு எடுக்கும் தன்மை என்பது, முற்றாக கற்பனையானது. அப்படிக் கருதி விமர்சிப்பதும் அரசியல் ரீதியாக தவறானவை.

இந்த நிலையில் நோர்வேயின் தொடர்ச்சியான பேச்சு வார்த்தைகள் அய்ரோப்பிய நலன்களை கொண்டு இருந்த நிலையில், அமெரிக்கா இதற்கு எதிரான மறைமுக செயற்பாட்டிலும், நேரடி செயற்பாட்டிலும் ஈடுபட்டது. அமெரிக்க நலன்களை பாதுகாக்கவும், தனக்கு சார்பான நாடுகளை நேரடியாக பயன்படுத்தியது. நோர்வேயின் வேண்டுகேளுக்கு இணங்க இரண்டாவது தடவையாகவும் புலிகள் ஒரு தலைபட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்தை அடுத்து, அமெரிக்காவுகான இலங்கைத் தூதுவர் அஸ்லிவில்ஸ் தொலைக் காட்சி ஒன்றிற்க்கு பேட்டி ஒன்றை அளித்தார். அதில் அவர் யுத்த நிறுத்தம் போலியானது என்றும், புலிகள் யுத்த நிறுத்தத்தை தமது சொந்த ஆயுத விரிவாக்க

www.tamilarangam.net


நலன்களை அடைய செய்யப்பட்டதாக உண்மைக்கு புறம்பாக அறிவித்தார். உண்மையில் யுத்த நிறுத்தத்தை நோர்வே வற்புறுத்தியதால் செய்தாகவே, புலிகள் ஒத்துக் கொண்டனர். புலிகள் யுத்த நிறுத்தத்தை விரும்பியிருக்கவில்லை. நோர்வேயின் முயற்சியை கொச்சைப்படுத்தும் வகையில், அமெரிக்கா தூதுவர் தனது கருத்தை வெளியிட்டார். நோர்வேயின் வற்புறுத்தலினால் புலிகள் செய்த யுத்த நிறுத்தத்தை கேலி செய்யம் வகையில், அதை புலிகளின் சுய யுத்த நிறுத்தமாக சித்தரித்து அதை போலியானதாக கூறியதன் மூலம், அமெரிக்கா தனது நலன் சார்ந்து அய்ரோப்பிய உலகமயமாதல் விரிவாக்கத்துக்கான எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதன் பின்னால் புலிகளை நேரடியாக சீண்டும் வகையில், 7.3.2001 இல் அமெரிக்க தூதுவர் யாழ்ப்பாணத்தில் நேரடியாகவே உரையாற்றினர். இலங்கைத் தூதுவர் அஸ்லிவில்ஸ் புலிகளிடம் கூறுங்கள் என்று மிரட்டும் தொனியில், புலிகள் தொடர்ந்து போராடுவர்களாயின் அவர்கள் எதையும் அடைய முடியாது என்பதை சொல்லுங்கள் என்றார். அத்துடன் வன்முறையை உடன் கைவிட வேண்டும் என்று எச்சரித்தார். இதன் மூலம் தனது உலக பொலிஸ் பாத்திரத்தை மீண்டும் மிரட்டும் தொனியில் கூறியதன் மூலம், எச்சரித்தார். இதன் மூலம் நோர்வேயின் முயற்சிகளை புலிகளை சீண்டுவதன் மூலம், நெருக்கடிக்கு உள்ளாக்கினர். புலிகளின் போராட்டத்தை நேரடியாக அவர்களின் சொந்த போராடும் மண்ணிலேயே மிரட்டிய நிகழ்வு, உலகமயமாதலில் நேரடி ஆக்கிரமிப்பை நடத்தத் தயாராக இருப்பதை கோடிட்டுக் காட்டினர். இது அய்ரோப்பிய நலன்களுக்கு எதிராக இருக்கும் என்பதையே, ஒரு யுத்த நிறுத்தம் மற்றும் மூன்றாம் தரப்பு பேச்சு வார்த்தைக்கும் எதிராக இருக்கும் என்பதை மறைமுகமாக எச்சரித்தார். இதன் தொடர்ச்சியில் 14.3.2001 இல் 21 அமைப்புகளை பிரிட்டன் தடை செய்த நிகழ்வுக்குள், புலிகளையும் உள்ளடக்கியதன் மூலம் அய்ரோப்பிய முயற்சிக்கு நேரடியாகவே முட்டுக்கட்டையிட்டனர். அமெரிக்கா, இந்தியா, மலேசியா என்று மூன்று நாடுகள் புலிகளை தடை செய்த நிலையில், பிரிட்டனின் தடை கொண்டுவரப்பட்டுள்ளது. ஒரு பேச்சு வார்த்தை மற்றும் ஒரு தலைப்பட்சமான புலிகளின் யுத்த நிறுத்தம் உள்ள நிலையில், பிரிட்டனின் தடை என்பது உலகமயமாதலின் உள் நெருக்கடியை மீண்டும் ஒருமுறை கோரமாக வெளிப்படுத்தியது. அய்ரோப்பிய யூனியனுடன் முரண்பட்ட, அமெரிக்கா நலன்களுடன் பங்கு போட்டுக் கொள்ளும் பிரிட்டன், அய்ரோப்பிய விரிவாக்க முயற்சிகளை தடை போடுவதன் மூலம்,

தனது பங்களிப்பை புலிகளின் தடை மூலம் தெரிவித்தது. அய்ரோப்பிய யூனியன் உலகை தனது உலகமயமாதல் விரிவாக்கத்துக்குள் இலங்கையைச் சூறையாட எடுத்த முயற்சிகளை தடுத்ததன் மூலம், பிரிட்டன் தனது சொந்த மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நலன்களை முதன்மைப்படுத்தி, புலிக்கு நெருக்கடி கொடுத்தது. இதன் மூலம் சிறீலங்கா இனவாத சிங்கள அரசை திருப்தி செய்து ஆதரவை தெரிவித்ததன் மூலம், அய்ரோப்பா பற்றிய ஊசலாட்டத்தை தகர்த்து தனக்கு சார்பாக திருப்பியதன் மூலம், நோர்வேயை மத்தியஸ்தை ஆட்டம் காணவைத்தனர். இந்தத் தடையை இந்தியா ஊடாகவும் அமெரிக்கா நிர்ப்பந்தித்தது. சித்திரை மாதம் கதிர்காமர் 'புறொன்ட்லைனுகு' வழங்கிய பேட்டியில்; புலிகளை பிரிட்டன் தடைசெய்வதில் இந்தியாவின் பங்களிப்பை ஒத்துக் கொண்டதன் மூலம், அய்ரோப்பிய முயற்சிக்கு இயன்ற அணைத்து தடைகளையும், அமெரிக்கா சார்பு நாடுகள் செய்துள்ளது தெளிவாகின்றது. நோர்வே பிரதிநிதி இந்தியாவுக்கு அதிக பறப்புகளை நடத்திய போதும், இந்தியாவின் எதிர்ப்புகள் வெளிப்படத் தவறவில்லை. அய்ரோப்பிய முயற்சிக்கு பல தடைகளை தொடர்ச்சியாக இந்தியா ஏற்படுத்தியது. முன் கூட்டியே இந்த தடைபற்றிய செய்திகள் வெளியான போதும், இந்தியாவும் நோர்வேயும் இதை மறுத்தது தெரிந்ததே. ஒரு தலைப்பட்சமான புலிகளின் யுத்த நிறுத்தம் முறிந்த பின்பு, மீண்டும் பேச்சு வார்த்தையை தொடங்கிய நோர்வே பிரதிநிதி, 30.4.2001 இல் வெளியட்ட கருத்து இதை உறுதி செய்வதுடன், மிகமுக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். நோர்வை பிரதிநிதி இந்தியாவுக்கு, இலங்கை விடையத்தில் எந்த "வீட்டோ அதிகாரமும்" இல்லை என்று வெளிப்படையாக சொல்லும் அளவுக்கு, உலகமயமாதல் முரண்பாடு ஆழமாகி வெளிப்பட்டது. புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்பாக இதை குழப்பி யுத்தத்தை தொடர ஊக்குவிக்கும் வகையில், இந்தியா 10 கோடி பெறுமதியான ஆயுத மற்றும் உதவிகளை தனாகவே முன்வந்து சிறீலங்காவுக்கு வழங்கியது. இதுபோன்று பாகிஸ்தான் இரண்டு கோடி டொலர் ஆயுத மற்றும் உதவிகளை வழங்கியது. இதன் மூலம் அய்ரோப்பாவுக்கு எதிராக அமெரிக்கா தனது உலகமயமாதல் நலன்களை, தனது கைக்கூலி அரசுகள் மூலம் சாதித்தது. அய்ரோப்பிய நலன்களை அடைப்படையாக கொண்ட பேச்சு வார்த்தை முயற்சிகளை தடுப்பதில் வெற்றி கண்டது. சிறீலங்கா அரசுக்கு யுத்த வெறியை ஊட்டியதுடன், அதற்குத் தேவையான

www.tamilarangam.net



ஆயுதங்களை தாரைவார்த்ததன் மூலம், யுத்த நிறுத்தத்தை செய்ய மறுத்ததுடன், பேச்சு வார்த்தையை இழுத்தடித்து. அதே நேரம் அய்ரோப்பிய முயற்சியை தடுக்கும் வகையில், உலகவங்கியின் இலங்கைகான பிரதிநிதி திருமதி மரியணா ரொடோவா தலைமையிலான குழு புலிகளைச் சந்தித்தனர். 18.4.2001 இல் அமெரிக்கா கொங்கிரஸின் சர்வதேச உறவுகள் சங்கத்தின் ஆலோசகர் அடொல்ப் பிராங்கோ கொழும்புக்கு சென்றதுடன், பல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் தமிழ் மற்றும் சிங்களத் தலைவர்களைச் சந்தித்தார். அதே நேரம் கனடா அரசு தான் பேச்சு வார்த்தைக்கு மத்தியஸ்தம் செய்ய விரும்புவதாக நோர்வேயின் முயற்சிக்கு புறம்பாக தீடிரென அறிவித்தது. ஒருபுறம் நோர்வேயின் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த நிலையில், கனடா அரசு புதிதாக மத்தியஸ்தத்தில் ஈடுபட முன்வந்தது. அதாவது அய்ரோப்பிய யூனியன் போன்று அமெரிக்க நாடுகளை ஒன்றிணைக்கும் கனடா உலகமயமாதல் மகாநாட்டின் அமெரிக்க முயற்சியை தொடர்ந்தே, இந்த அறிவித்தல் வெளிவருவதும் அவதானத்துக்குரியது. இது அமெரிக்க நலனை அடைப்படையாக கொண்ட உலகமயமாதல் விரிவாக்க நோக்கத்தை வெளிப்படுத்தியது. புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையில் பேச்சு வார்த்தை திகதி ஒன்று எந்த நேரமும் அறிவிக்கப்படும் என்ற ஒரு நிலையில், அமெரிக்கா தலைமையிலான உலகவங்கி இதை முறியடிக்கும் வகையில் திடிரென அரசுக்கு பெரும் தொகை பணத்தை உதவியாக கொடுத்தது. அய்ரோப்பா வழங்க மறுத்த பணத்தை உலக வங்கியூடாக அமெரிக்கா வழங்கியதன் மூலம், சிறீலங்கா அரசின் ஊசலாட்டம் முடிவுக்கு வந்தது. சிறீலங்கா அரசு அறிவித்த இடைக்கால யுத்த நிறுத்தத்தை தொடர்வதில்லை என்று சிறீலங்கா அரசு அறிவித்தது. யுத்த நிறுத்தம் என்பதை சாதித்தியமற்றதாக்கிய சிறீலங்கா அரசு, நோர்வேயின் வேண்டுகோளுக்கு இணங்க புலிகள் செய்த ஒருதலைபட்சமான யுத்தநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர, உலகவங்கியின் தீடீர் நிதியுதவி வழிகாட்டியது. நோர்வேயின் மத்தியஸ்துடன் கூடிய அய்ரோப்பிய தலையீட்டை, அமெரிக்கா தற்காலிகமாக தடுத்து நிறுத்தியது. இதன் மூலம் யுத்தம் மீண்டும் கொடூரமாக அரசு தரப்பினால் தொடங்கப்பட்டது. அதே நேரம் பேச்சு வார்த்தையையும், யுத்த நிறுத்தத்தையும், அமைதியையும், அமெரிக்கா நலன் சார்ந்து தொடங்குவதை புதிய நடைமுறையாக்கியுள்ளது. இந்த நிலையில் 30.4.2001 புலிகளை கனடிய தூதுவர் வன்னியில் தீடிரென சந்தித்துள்ளார். அதே நாள் நோர்வே பிரதிநிதி சந்திரிக்காவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சந்தித்தார். அதே நாள் இந்தியா புலிகள் உள்ளிட்ட சிறீலங்கா அரசை யுத்த நிறுத்தம் செய்யும் படி கோரியது. இந்த நிலமை தெளிவுபடவே அய்ரோப்பா அமெரிக்கா தனி நலன்களை சார்ந்து தனித்தனியாக இயங்குவதைக் காட்டுகின்றது. இந்தப் பேச்சு வார்த்தை மற்றும் இலங்கையில் ஏகாதிபத்தியங்கள் முகாமிட்டுள்ள தன்மை, மிகவிரைவில் ஒரு யுத்த நிறுத்தத்தையும் பேச்சு வார்த்தைகான நிலமையையும் கொண்டு வரவுள்ளது. இது முற்று முழுதாக சிறீலங்கா அரசோ, புலிகளோ தீர்மானிக்கும் விடையமாக இனியும் இல்லை. மாறாக ஏகாதிபத்திய உலகமயமாதல் நலன்களுடன் நேரடியாக தொடர்புடையதாக உள்ளது. இது சிலவேளை உலகமயமாதல் நலன்களின் அடிப்படையில் ஆழமாகப் பிளவுபட்டு அல்லது கூட்டாகவும் நடக்கும் வாய்ப்பை தனக்குள் கொண்டே உள்ளது. இனியும் இலங்கையில் ஒரு உள்நாட்டு யுத்தம் என்பது, ஏகாதிபத்திய நலன்களுக்கும் உலகமயமாதலின் மூலதன விரிவாக்கத்துக்கும் தடையாக மாறியுள்ளது. இந்த நிலையில் யுத்த நிறுத்தம் மற்றும் ஏகாதிபத்தியம் சுரண்டுவதற்கான அமைதி, கூட்டான ஏகாதிபத்திய தலையிட்டுடன் நடக்கும் வாய்ப்பு மற்றும் ஆக்கிரமிப்பு நிகழ்சி நிரலில் காணப்படுகின்றது. இக்கட்டுரை எழுதிய பின்பாக கதிர்காமர் அமெரிக்கா சென்றதும், அதேநேரம் உடனடியாக இருபகுதியையும் யுத்தத்தை நிறுத்த அமெரிக்கா கோரியுள்ளது. அத்துடன் இந்த அமைதிக்கான முயற்சியில், அமெரிக்கா தலையீடு இருக்கும் என்று தெளிவுபடவே அறிவித்துள்ளது. நோர்வே பிரதிநிதி புலிகளின் ஆலோசகர் பாலசிங்கத்தை சந்தித்துள்ள செய்தியும் வெளியாகியுள்ளது. தொடர் முயற்சிகள் தொடராக வெளிவருகின்றன.

நோர்வேயின் நிர்ப்பந்தத்தால் ஒரு தலைபட்டசமான யுத்த நிறுத்தத்தை புலிகள் நான்கு மாதமாக தொடர்ந்த போதும், அது அரசியல் ரீதியாக என்ன விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. புலிகளின் வரலாற்றில் ராஜதந்திர ரீதியாக முன்னேறிய ஒரு நிலையை, எப்படி புலிகளால் பேணமுடிந்தது. இங்கு இதன் பரிணாமத்தை புரிந்து கொள்கின்ற போது, புலிகளின் பலவீனம் அரசியல் ரீதியாக மீண்டும் ஒருமுறை அரங்கேறியுள்ளது தெளிவாகின்றது.

நான்கு மாத யுத்த நிறுத்தம் புலிகளுக்கு ஒரு சாதகமான தன்மையை ஏற்படுத்தியது. இது புலிகளின் குறிப்பான அரசியல் ராஜதந்திரத்தில் ஏற்படவில்லை. மாறாக ஏகாதிபத்திய தரகு

www.tamilarangam.net



கைக்கூலி சிறீலங்கா அரசு உலக மயமாதலின் முரண்பாட்டில் சிக்கி, அதில் ஏற்பட்ட ஊசாலாட்ட அணுகுமுறையினால் மட்டுமே, புலிகளின் போர் நிறுத்தம் புலிகளுக்கு சாதகமான ஒரு தன்மையைக் கொடுத்தது. அத்துடன் நான்கு மாத யுத்த நிறுத்தத்தை நோர்வேயின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கு இணங்க புலிகள் தொடர்ந்ததே, அரசியல் ரீதியாக தவறானதாகவே உள்ளது. ஒருமாத கால யுத்த நிறுத்தத்தின் பின்பு அதை முடிவுக்கு கொண்டுவராத நிலமை, இராஜதந்திர ரீதியாக புலிகளின் அரசியல் பலவீனமாகவே இருந்துள்ளது. ஏன் இந்த யுத்த நிறுத்தம் தொடர்ந்தது என்ற அரசியல் விளக்கத்துக்கு பதிலளிக்க முடியாது. நான்கு மாத யுத்த நிறுத்தம் புலிகளுக்கு ஒரு சாதகமான அரசியல் அம்சமாக மாறியது என்பது, புலிகளின் சொந்த அரசியலால் அல்ல. மாறாக உலகமயமாதலுக்குள் இருந்த முரண்பட்டால் இது ஏற்பட்டது. ஆனால் எதிர் காலத்தில் அப்படி இருக்காது என்பதை, இதன் ஊடாக அவதானத்துக்கு உள்ளாக்க முடிகின்றது. இதை இன்றுகூட புலிகள் புரிந்து கொள்ளமுடியவில்லை. சிறீலங்கா அரசு ஒரு யுத்த நிறுத்தத்தை செய்திருப்பின், நிலமை தலைகீழாகியிருக்கும். சிறீலங்கா அரசு, அமெரிக்க அய்ரோப்பிய முரண்பாட்டில் இன்று அமெரிக்கா சார்பு நிலையை பூர்த்திசெய்ததுள்ளது. சிறீலங்கா அரசு உலகமயமாதலில் தனது கைக்கூலித் தனத்தை பூர்த்தி செய்து தனது விசுவாசத்தை தெரிவித்த நிலையில்தான், அரசு புலிகளிடம் இராஜதந்திர ரீதியாக தோல்வியைச் சந்தித்தது.

ஆனால் சர்வதேச ரீதியாக உள்ள முரண்பாட்டில் தெளிவான ஒரு நிலையை எடுத்தபடி, மறுபடியும் புதிதாக சிறீலங்கா அரசு இராஜதந்திர ரீதியான பலப்பரீட்சையில் ஈடுபடத் தயாரகின்றது. அதே நேரம் புலிகள் இந்த யுத்த நிறுத்தத்தை அரசியல் மற்றும் இரஜதந்திர ரீதியாக, தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை உயர்த்துவதில் பயன்படுத்துவதில் சரியாக கையாண்டர்களா எனின், இல்லை என்பதே தெளிவான பதிலாகும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை வென்றெடுக்கும் பாதை என்பது, எந்தளவுக்கு இராணுவ ரீதியாக யுத்தத்தை சரியாக தொடர்வது முக்கியத்துவமுடையதோ அந்தளவுக்கு அரசியலிலும் முக்கியத்துவமுடையது. இராணுவரீதியாக பயிற்சி, உளவு, ஆயுத சேகரிப்பு, யுத்ததந்திர வடிவங்கள் என்று விரிவான கல்வியும் பயிற்சியும் எந்தளவுக்கு முக்கியமானதோ அதே போன்று,

அரசியலிலும் சுயநிர்ணயத்தை விரிவாக்கி விளக்கி அணிதிரட்டுவதும் அவசியமானதாகும். அரசியல் ரீதியாக தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்தின் அவசியம், சுயநிர்ணயம் என்றால் என்ன, தேசியத்தின் உள்ளடக்கம் என்ன, இன்று உலகமயமாதலின் விரிவாக்கம் எப்படி தேசியத்துக்கு எதிராக வளர்ச்சி பெறுகின்றது, ஏகாதிபத்தியம் எப்படி போராட்டத்தை அழிக்க முனைகின்றது என்ற விரிவான தளத்தில் அரசியல் கல்வி போதிக்கப்பட்டிருக்க வேண்டும். இது சொந்த அணிகளுக்கும், மக்களுக்கும் இதன் மீதான தெளிவை புகட்டுவதன் ஊடாக நடைமுறையில் மக்களை செயலில் இறங்க முன்தள்ளியிருக்க வேண்டும். இதில் இருந்து சர்வதேச ரீதியாக பிரச்சாரத்தை உந்தித் தள்ளியிருக்க வேண்டும். இந்த சர்வதேச பிரச்சாரம் என்பது அரசுகளிடம் மட்டும் வேண்டுகோள் விடுவதில்ல, மனுக்கள் கொடுப்பதில்லை. மாறாக சர்வதேச மக்களிடம் சுயநிர்ணய உள்ளடகத்தை விரிவாக்கி, இதற்கு எதிராக அவர்களின் சொந்த அரசுகள் எப்படி அடக்கு முறையை கட்டவிழ்த்து விட தயாராவதை அம்பலம் செய்து, ஆதாரவு தேடியிருக்க வேண்டும்

இன்று உலகம் ஒரே குடையின் கீழ் உலகமயமாதல் எல்லைக்குள் விரிவாகி வருவதை இனம் கண்டு கொள்ள முடியாத தேசிய விடுதலைப் போராட்டம் என்பது, தேசிய இன உள்ளடக்கத்தையே புரிந்து கொள்ளவில்லை என்பதையே காட்டும். உலகமயமாதல் தேசிய எல்லை கடந்து தேசிய பொருளாதாரத்தை சிதைத்து, மொழியை அழித்து, பண்பாட்டுக் கலாச்சார கூறுகளை சிதைத்து எல்லை கடந்த ஆட்சிகளை உருவாக்கி வருகின்றது. இந்த நிலையில் எமது தேசியம் எதை பாதுகாக்க விரும்புகின்றது. எதை விடுவிக்க எதைப் பாதுகாக்க விரும்புகின்றது. நாம் சுயநிர்ணயம் என்று எதைக் கருதுகின்றோம். இந்தக் கேள்விக்கு எல்லாம் பதிலாளிக்காத போராட்டம் எதை பெற்றுத்தரும். சந்திரிக்கா என்ற நபரையோ, சந்திரிகாவைச் சுற்றியுள்ள அரசையோ, சிங்கள இனவெறி இயந்திரத்தை மட்டும் எதிரியாக காண்பதன் மூலம், இவர்களிடம் இருந்து எதை மீட்க விரும்புகின்றோம். சந்திரிகாவும், அவரின் அரசும், அரசை சுற்றியுள்ள இனவெறி இயந்திரமும் தமிழ் மக்களுக்கு எதிராக தம்மை நிலைநிறுத்தி சிங்கள தேசியத்தை பாதுகாக்கவில்லை. மாறாக அவர்கள் தமிழீழம் உள்ளிட்ட இலங்கையை, ஏகாதிபத்திய உலகமயமாதலிடம் விற்றுவிட்ட நிலையில், எமது போராட்டம் சிங்கள இனவாத அரசிடமிருந்து எதை மீட்டு எடுக்கவுள்ளது.

www.tamilarangam.net



புலிகள் இராணுவ ரீதியாக வரையறை செய்யும் எல்லைக்குள் ஒரு தனி அரசை தமிழனின் தலைமையில் நிறுவுவதன் மூலம், எந்த தேசிய அபிலசைகளை நாம் பெற்றுக் கொள்ள விரும்புகின்றோம். சிறீலங்கா அரசு போன்றோ அல்லது உலகில் உள்ள மூன்றாம் உலக ஏகாதிபத்திய கைகூலி அரசுகள் போன்று, தேசியத்தை உலகமயமாதலிடம் விற்றுவிடும் அரசுகளையா? நாம் கோரிப் போராடப் போகின்றோம்! அதுவா எமது தமிழீழத் தாகம். இதையா தமிழ் மக்கள் கோருகின்றனர். இதுவா தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கை. சுயநிர்ணயக் கோரிக்கை பற்றிய புலிகளின் விரிந்த பார்வை இன்மையே, தமிழ் மக்களின் அரசியல் ரீதியான போராட்டத்தை வளர்தெடுப்பதிலும், சர்வதேச ரீதியாக மக்களின் ஆதரவை திரட்டுவதிலும் பிரதான தடையாக உள்ளது. இதனால் இந்தப் போராட்டம் அடுத்த கட்டத்துக்கு முன்னேற முடியாத தடையாக மாறியுள்ளது.

உலகமயமாதல் உலகளவில் அனைத்துத் தேசியக் கூறுகளையும் ஈவிரக்கமின்றி அழிக்கின்றது. இது பண்பாடு கலாச்சாரத்தையும் பொருளாதார ரீதியாக அனைத்தையும் ஈவிரக்கமின்றி அழித்தொழிக்கின்றது. இதற்கு எதிரான போராட்டம் உலகளவில் வளர்ச்சி பெறுகின்றது. உலகமயமாதலுக்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்திய நாடுகளிலேயே எழுச்சி பெற்று வருகின்ற நிலையில், அப் போராட்டத்துடன் ஏன் எமது போராட்டத்தை அடையாளம் காணக்கூடாது, காட்டக்கூடாது. ஏன் அவர்களின் போராட்டத்துடன் எம்மை இணைத்துக் கொள்ளக்கூடாது. சிறீலங்கா அரசு கூட உலகமயமாதலின் விரிவாக்கத்தில் கைக் கூலியாக செயற்படுகின்றது. இந்த நிலையில் உலகமயமாதலுக்கு எதிரான சர்வதேசியப் போராட்டம் சிறீலங்கா அரசுக்கு எதிரானது அல்லவா. பொதுவான சர்வதேசியப் போராட்டத்தில் எம்மை இனைத்துக் கொண்டு, குறிப்பான தமிழீழப் போராட்டத்தை இனைப்பதன் ஊடாக, அவர்களையும் ஏன் இனைத்துக் கொள்ளக்கூடாது.

உலகமயமாதலை விரிவாக்கும் ஏகாதிபத்திய அரசுகள் சரி, சிறீலங்கா போன்ற கைக் கூலி அரசுகள் சரி, எமது போராட்டத்துக்கு மக்களின் சுயநிர்ணய கோரிக்கைக்கு உதவுமா? உதவும் எந்த அரசையாவது அப்படிக் குறிப்பிட்டுக் காட்டமுடியுமா? உலக அரசுகள் அனைத்தும் சிறீலங்கா அரசு சார்பாக, புலிகளுக்கு எதிராகவும், மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கும் எதிராக உள்ள நிலையில்,

www.tamilarangam.net


அவர்களை எதிர்த்துப் போராடவேண்டாமா? இதற்கு ஒவ்வொரு நாட்டிலும் அந்த அரசுகளை எதிர்க்கும் அந்த மக்களுடன் எம்மை இனம் காட்டி, அவர்களுடன் தோளோடு தோள் நிற்க வேண்டாமா? எமது போராட்டத்தை எதிர்க்கும், அழிக்க முனையும், ஆக்கிரமிக்க முனையும் அரசுகளை எதிர்க்காது நீடிப்பது இராஜதந்திரம் எனின், அந்த அரசுகளை எதிர்த்துப் போராடும் மக்களுடன் என்ன நிலையை எமது போராட்டம் கையாளுகின்றது. துரோகத்தை அல்லவா கையாளுகின்றது. இந்த துரோக நிலையை எல்லா உலக நாடுகளிலும் உள்ள போராடும் மக்கள் இராஜதந்திரம் என்று கூறி கையாளின், எமது போராட்டத்துக்கு யாருடைய ஆதாரவையும் பெறமுடியாது. இது போல் உலகில் போராடும் மக்கள் தனித்து தாம் மட்டும் போராட வேண்டுமா? இதுதான் போராடும் அரசியலில் இராஜதந்திரமா? (உலக) மக்களின் எதிரிகளை, எமது மக்களுக்கும் இனம் காட்ட மறுப்பது துரோகமல்லவா!

உலகளவில் அனைத்து அரசுகளும் தமக்கிடையிலான முரண்பாடுகளைக் கடந்து புலிகளையும், தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்தையும் அழித் தொழிப்பதில், ஒரே கரமாகி வருகின்றது. அவர்கள் தனித்து நின்று இராணுவ ரீதியாக வெற்றி பெற்றுவிட முடியும் என்பது கற்பனையானது. உலகம் அனைத்தும் ஒன்றாக மக்களின் போராட்டங்களை ஒடுக்கும் போது, நியாமான போராட்டங்கள் கூட உலகமக்களுக்கு இருட்டடிப்பு செய்யப்பட்டு அழித்தொழிப்பது உலக சனநாயகமாகவுள்ளது.. அமெரிக்கா வியட்நாம் ஆக்கிரமிப்பின் போது, 20 லட்சம் வியட்நாமியரை ஈவிரக்கமின்றி கொன்று ஒழித்தது. ஆனால் எந்த சர்வதேச நீதி மன்றமோ, சனநாயக வேடம் போடும் எந்த முதுகு எலும்பற்ற மனிதர்களோ இதை எதிர்த்து கேட்டதுமில்லை, எதிர்த்ததுமில்லை. ஆனால் வியட்நாம் மக்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்த அதேநேரம் உலக எதிரியை தெளிவாக அடையாளம் காட்டிய நிலையில், உலகமக்கள் எல்லா நாடுகளிலும் அவர்களுக்காக போராடினார்கள். சிறைகள் சென்றது மட்டுமின்றி தமது சொந்த அரசை எதிர்த்த போராட்டத்தில் தம் உயிரையும் கூட வியட்நாம் மக்களுக்காக இழந்தனர். வியட்நாமை விட்டு அமெரிக்காவை ஓட வைத்ததும், அமெரிக்காவின் கொலை வெறியாட்டத்தை உலகுக்கு வெளிச்சமிட்டு காட்டியது வியாட்நாம் மக்கள் அல்ல. மாறாக ஒவ்வொரு நாட்டிலும் அந்த அரசுகளை எதிர்த்து போரிட்ட மக்கள் தான் என்பதை நாம் புரிந்து கொள்ளத் தவறின், எமது

www.tamilarangam.net



போராட்ட தியாகங்கள் அர்த்தமற்று போவதுடன், எதிர்கால உலகமயமாதல் ஆக்கிரமிப்பு அழித்தொழிப்புகளைக் கூட எம்மால் உலகுக்கு சொல்ல முடியாத பரிதாபம் நிகழும். எமது போராட்டம் உலகமயமாதலுக்கு எதிரான அரசியல் வழிகளில் ஒன்று இணைவதும், இணைப்பதும் அவசியமான உலக வரலாற்று நிபந்தனையாகும். இதை மறுத்தால், போராட்டம் ஏகாதிபத்தியத்தால் இலகுவாக அழித் தொழிக்கப்படவும் அல்லது விலைபேசி கைக் கூலியாக்கிவிடுவதும் சமூக யதார்த்தமாகும். இதை தனிமனித விருப்பங்கள் திர்மானிப்பதில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

நோர்வே வேண்டுகோளுக்கிணங்கிய புலிகளின் நான்கு மாத யுத்த நிறுத்தம், இதையே மீளவும் எமக்கு காட்டுகின்றது. யுத்த நிறுத்தத்தை அரசியல் ரீதியாக தாமாகவே புலிகள் செய்திருப்பின் அது இதில் இருந்து வேறுபட்டவை. நோர்வேயின் வேண்டு கோள்கள் மற்றும் நிர்ப்பந்தங்கள் கூட அரசியல் ரீதியாக கையாள வேண்டி வருவது இயற்கைதான். ஆனால் எந்தவிதமான அரசியல் இராஜதந்திரமற்ற வகையில் யுத்த நிறுத்தத்தை நீடிப்பதும், நீடித்ததும் என்பது, புலிகள் மீது படர்ந்துள்ள உலகமயமாதலின் கொடூரமான கரத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இதை புலிகள் புரிந்து கொள்ளத் தவறுவதே இங்கு விமர்சனத்துக்குரியதாக உள்ளது. புலிகளின் சொந்த அணிகளே என்ன நடக்கின்றது என்பதை புரிந்து கொள்ள முடியாத சூனியத்தில் நின்றார்கள். தளத்தில் இருந்து புலிகள் ஒரு தலைபட்ச யுத்த நிறுத்தத்தை தொடர்வதில்லை என வெளியிட்ட குறிப்பிலும், சொந்த அணிகளிடையே யுத்த நிறுத்தத்தினால் ஏற்படும் ஊசலாட்டத்தை குறிப்பிடத் தவறவிலை. ஆனால் இதை அரசியல் ரீதியாக புரிந்து கொள்ளப்படவில்லை. மாறாக யுத்த நிறுத்தத்தை நீடிக்க முடியாத ஒரு காரணமாகவே இது வைக்கப்பட்டது. யுத்த சூழலுக்கு புறம்பாக, யுத்தமற்ற சூழலில் அமைப்பில் ஊசலாட்டம், தளம்பல் ஏன் நிகழ்கின்றது. இங்குதான் அரசியலின் முக்கியத்துவம் எவ்வளவு சக்தி வாய்ந்தவை என்பதை மீண்டும் ஒரு முறை வரலாறு கோடிட்டு காட்டுகின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஏகாதிபத்தியங்கள் அழித்தொழிக்க முனைகின்ற நிலையில், இதை எதிர்கொண்டு போராடவேண்டிய வரலாற்றுக் கடமையை, வெறும் இராணுவ வாதத்துக்குள் மாத்திரம் சாதிக்க முடியாது. இராணுவ வாதம் என்பது அரசியலில் இருந்து மனிதனின் சமூக உணர்வுகளை பிரிக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இது இராணுவத் தாக்குதல், ஆயுதங்கள் என்ற எல்லைக்கு அப்பால் அரசியலில் சூனியமாகின்றது. இதனால் நடைமுறையில் இராணுவ நடவடிக்கையற்ற நிலையில், அவ்வியக்கத்தையே கைவிடுவதும், போராட்ட சிந்தனையை இழப்பதும் ஒரு வடிவமாகின்றது. இராணுவ நடவடிக்கை அற்ற எல்லா நிலையிலும், புலிகளை இது மட்டுமே அரசியல் அநாதையாக்கிவிடும். ஒரு சிறந்த மக்கள் இராணுவத்தை உலகமயமாதலுக்கு எதிராக நிறுத்த வேண்டுமாயின், உலகமயமாதலுக்கு எதிரான அரசியல் புரிதல் மற்றும் நடைமுறையும் அடிப்படையானதும் நிபந்தனையானதுமாகும். இதன் மீதான தெளிவான உறுதியான சமூகப் பார்வையே, எந்த இராணுவ ஆக்கிரமிப்பையும், எந்த யுத்த நிறுத்தங்களையும், எந்த நெருக்கடிகளையும் தகர்த்துவிடும்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒரு விடயமாக பிரிட்டன் ஏகாதிபத்தியம் 14.3.2001இல், புலிகளை தடை செய்யும் பட்டியலில் இணைத்தது. இதைத் தொடர்ந்து புலிகள் இதை எப்படி எதிர் கொண்டனர் என்பதே. புலிகளின் அறிக்கையில் "ஆங்கில - தமிழ் உறவுகளில் ஒரு கறுப்பு நாளாகவும் இது அமைந்துவிட்டது" எனப் பிரகடணம் செய்தனர். பிரிட்டன் ஏகாதிபத்திய தடை குறித்த பாலசிங்கம் வழங்கிய பேட்டியில் "... பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தை இணைத்துக் கொண்டது குறித்து உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் ஆத்திரமும் கவலையும் கொண்டுள்ளனர்." என்று குறிப்பிடுகின்றார். விடுதலைப் புலிகளின் பத்திரிகையான எரிமலை மார்ச் 2001 இதழில், பிரிட்டன் தடை "தமிழ் மக்களுக்கு ஒரளவு ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவே இருந்தது. ஆனால், அது ஒரு அதிர்ச்சி அளிக்கும் விடயமாக இருந்தது என்று சொல்வதற்கில்லை" என்று புலிகள் குறிப்பிடுகின்றனர். எமது முன்னைய கொலனிய வாதிகளாகவும், உலகை அடக்கியாளும் ஏகாதிபத்தியவாதிகளாகவும் திகளும் பிரிட்டன் இன்று உலகமயமாதலை விரிவாக்கும் நாடுகளில் முன்னணி ஆக்கிரமிப்பு நாடாக அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. அண்மைய உலகளாவிய பல ஆக்கிரமிப்புகளில், பல மனித உரிமை மீறல்களையே சனநாயகமாக காட்டினர். இதன் மூலம் உலகை உலகமயமாதலுக்கு அடிமைப்படுத்தும் பிரிட்டன் ஏகாதிபத்தியத்தின் தடையை, போராடும் மக்களாகிய நாம் எப்படி எதிர் கொள்ள வேண்டும். இது ஒரு கறுப்பு நாளா! இல்லை ஒருக்காலும் இல்லை.

www.tamilarangam.net



இது ஒரு கவலைக்குரிய நாளா! ஒருக்காலும் இல்லை. இது ஏமாற்றம் அளிக்கும் நாளா! ஒருக்காலும் இல்லை. மாறாக ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மையை, மீண்டும் ஒருமுறை உலகுக்கு பறைசாற்றிய நாள் அல்லவா! இந்த உலக ஆக்கிரமிப்பின் பிரகடனத்தை பிரிட்டன் ஏகாதிபத்தியம் தமிழ் மக்களுக்கும், உலக மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை பறைசாற்றிய போது, அதை எதிர்த்துப் போராட அழைப்பு விட்டிருக்க வேண்டும். இதை விட்டவிட்டு கவலைப்படுவது என்பது, ஏமாற்றம் அளிப்பது என்பதும், கறுப்பு நாளாகி விட்டது என்பதும் தேசிய அரசியல் உள்ளடகத்தை கைவிடுவதாகும். இது மக்களின் போராட்ட உணர்வுகளையும், சுயநிர்ணயக் கோரிக்கை உள்ளடக்கிய தேசிய விடுதலைக்கான தியாகங்கள், ஏகாதிபத்தியத்தின் பொருளாதார பண்பாட்டு கலாச்சார எல்லைக்குள் நடத்தப்படுகிறதா என்ற கேள்வியை எழுப்பி விடுகின்றது. எதிரியை நாம் மீண்டும் தெளிவாக புரிந்து கொண்டதற்கும், புரிய வைத்தற்காக, அதை அவர்கள் நிர்வாணப்படுத்தியதன் ஊடாக, மீண்டும் தமிழ் மக்களுக்கு ஏகாதிபத்திய தன்மையை உணர்த்தியதற்காகவும் நன்றி தெரிவித்திருக்க வேண்டும். இந்த ஏகாதிபத்திய தடையை எதிர்த்து ஆயுதம் எந்திப் போராட அழைப்பு விட்டிருக்கவேண்டும் பிரிட்டன் சனநாயகம் பற்றி தமிழ் மக்களின் மயக்கத்தை, தடை மூலம் தெளிவாக்கியதற்கு நன்றி தெரிவித்திருக்க வேண்டும். இதை அரசியல் ரீதியாக மக்கள் முன் எடுத்துச் சென்று, ஆயிரமாயிரமாக அணிதிரள அறை கூவியிருக்க வேண்டும் ஆனால் மாறாக கறுப்பு நாளகவும், கவலைப்படுவதாகவும், ஏமாற்றமளிப்பதாகவும் அறிக்கை விட்டு இது அதிர்ச்சி அளிக்கவில்லை என்று கூறுவதை விடுத்து, இதற்கு எதிராக சட்ட நடவடிக்கையில் மூழ்கிவிடுவது என்பது, எமது தேசியத்தின் உள்ளடகத்தை சரியாக முன்னெடுக்க தவறியதாகும். இந்தத் தடை மீண்டும் ஏகாதிபத்திய நலன்களின் அடிப்படையின், புதிய ஆக்கிரமிப்பு வடிவம் தான் என்பதை விளக்கியிருக்கவேண்டும். இதற்கு எதிராக உலகு எங்கும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் புலிகள் இதை செய்ய மறுப்பது என்பது, இலங்கையில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு மறைமுகமாக துணைபோவதாகும். ஆக்கிரமிப்பு ஏற்படும் போது, அதை மக்கள் அரசியல் ரீதியாக எதிர் கொள்ளும் வலிமை அற்றவர்களாக்கி விடுவது என்பது, அரசியலற்ற எல்லா நிலையிலும் ஒரு பொதுப்பண்பாகும்.

உலகமயமாதலுக்கு எதிரான போராட்டம் உலகளாவிய நிகழ்ச்சி நிரலாக இருக்கின்ற நிலையில், அதற்கு எதிரான போராட்டங்கள் உலகு எங்கும் நடக்கின்றன. இந்த நிலையில் வருடாவருடம் புலிகள் ஜெனிவாவை நோக்கி நடத்தும் ஊர்வலத்தை, எந்த வகையில் அழைப்புவிடுகின்றனர் என ஆராயின், அது விசனத்துக்குரியதாகவே உள்ளது. 2.4.2001 இல் புலிகள் நடத்திய ஊர்வலத்தை "அமைதிப் பேரணி" என்ற அறிவித்தல் ஊடாகவே அழைப்பு விடுத்து நடத்தினர். ஏன் ஒரு ஊர்வலத்தை அமைதிப் பேரணி என்ற மீண்டும் மீண்டும் அறிவிக்க வேண்டியுள்ளது. ஏன் ஒரு ஆர்பாட்ட ஊர்வலத்தை நடத்தக் கூடாது. ஒரு ஊர்வலம் அமைதியானதா அல்லது ஆர்ப்பாட்டமானதா என்பது, எதிரி ஊர்வலம் மீது கையாளப்படும் அணுகு முறையிலேயே தங்கியள்ளதே ஒழிய, அதை வலிந்து முன் கூட்டியே கட்டுப்படுத்தி திணிப்பது அல்ல. தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டம் தொடர்ச்சியாக நெருக்கடிக்குள்ளாகி வரும் இன்றைய நிலையில், போராட்டம் என்பது அவர்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆர்ப்பட்டமாக இருக்க வேண்டும். இது அரசியலில் இருந்து அன்னியமான வன்முறையில் அல்ல, தமிழ் மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் அமையவேண்டும். அத்துடன் நடக்கும் ஊர்வலங்களில் வைக்கும் கோசங்கள், தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்துடன் தொடர்புடையதாக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும். அண்மையில் பிரான்சில் நடந்த மேதின ஊர்வலத்தில் கூட, தமிழ் மக்களின் உணர்ச்சிகளை அவர்களின் அரசியல் கோரிக்கைகளை உள்ளடக்கிய கோசங்களை வெளிப்படுத்தவில்லை.

ஊர்வலங்கள் என்பது தமிழ் மக்களின் நியாயமான போராட்டமான சுயநிர்ணய கோரிக்கைகளை முன்னிறுத்தி அதை கோசமாக்க வேண்டும். எமது தேசிய பொருளாதாரத்தை ஏகாதிபத்தியம் சிறிலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்து ஆக்கிரமிப்பதை எதிர்த்தும், எமது கலாச்சார பண்பாடுகள் அன்னிய ஊடுருவல் மூலம் சிதைக்கப்படுவதை எதிர்த்தும், சிங்கள இனவெறி அரசு ஏகாதிபத்தியத்தின் துணையுடன் தமிழ் மக்களின் மீது நடத்தும் ஆக்கிரமிப்பை எதிர்த்தும், இதற்கு சர்வதேச நாடுகள் எந்த வகையில் துனை போகின்றன என்பதை அம்பலம் செய்து, ஆர்பாட்ட ஊர்வலங்கள் நடத்தப்பட வேண்டும். இதை போராடும் மக்கள் மற்றும் இயக்கம் செய்யத் தவறுகின்ற போது, ஆக்கிரமிப்புகள்

www.tamilarangam.net


மற்றும் சமூகச் சிதைவுகள் தேசிய சனநாயகக் கோரிக்கைளைக் கூட இல்லாதாக்கிவிடும். தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை பாதுகாக்கின்ற சர்வதேசியப் போராட்டமே, புலிகளையும், புலித் தலைவர்களையும் கூட பாதுகாக்கும். இதை விடுத்த வெற்றுக் கோசங்கள் அல்ல. சரியான அரசியல் கோசங்கள் ஒட்டு மொத்தமாகவே போராட்டத்தையும் அதன் தலைமையையும் பாதுகாக்கும். இல்லாத வரை அப் போராட்டம் தோற்கடிக்கப்படுவதன் மூலம், மக்களின் உரிமைப் போராட்டமும், அதைச் சரியாக தலைமை தாங்கத் தவறிய இயக்கமும், அதன் தலைமையும் அழிக்கப்படும். எந்த நேரத்திலும் உலக ஆக்கிரமிப்பு இலங்கையில் நிகழ்கின்ற ஒரு சூழல் நிலவுகின்ற இன்றைய நிலையில், இது மேலும் ஆழமாக முக்கியத்துவமுடையானவாகும்.

எமது போராட்டம் இழைத்த தவறுகள் தான், இன்று உலகம் தழுவிய ஆக்கிரமிப்பின் எல்லை வரை கொண்டு வந்துள்ளது. உதாரணமாக சிறிலங்கா இராணுவத்தில் இருந்து 25000 பேர் ஓடியுள்ளதாக சிறீலங்கா அரசே ஒத்துக் கொள்கின்ற போது, எமக்கு சில உண்மைகள் பளிச்சென்று வெளிப்படுத்துகின்றது. சிறீலங்கா இராணுவத்தின் நாலில் ஒன்று அல்லது ஐந்தில் ஒரு பகுதி இராணுவம் ஓடியுள்ளது. இருந்தும் சிறீலங்கா இராணுவம் தொடர்ந்தும் யுத்தம் செய்ய முடிகின்றது. இங்கு தான், புலிகளின் அரசியல் தவறுகள் இந்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரத் தடையாக இருந்தைக் காட்டுகின்றது. 25000 இராணுவம் ஓடிய போதும், ஓடிச் சென்றவர்கள் தமது பின்னணிப் பிரதேசத்துக்குள் தப்பிச் சென்றதே ஒழிய, புலிகளின் முன்னணி பிரதேசத்தில் சரணடையவில்லை. புலிகள் எதிரி பற்றி சரியான அனுகுமுறையைக் கையாண்டு, எதிரியை யுத்தத்தில் வெல்வதும், மறுபுறம் சரணடைய வைப்பதை ஒரு அனுகுமுறையாக கைக்கொண்டிருப்பின், இராணுவம் முற்றாக சரணடைந்தோ அல்லது பெரும் பகுதி சரணடைந்தோ இருக்கும். சிறீலங்கா அரசு இன்று போல் ஒரு உறுதியான யுத்தத்தை ஒருக்காலும் செய்திருக்கவே முடியாது. எதிரிகளை பற்றிய புலிகளின் மதிப்பீடு, அதிகமான எதிரிகளை தொடர்ச்சியாக உருவாக்கியது மட்டுமின்றி உற்பத்தி செய்தது. தம்முடன் உடன்பாடு அற்றவர்களை அல்லது அடிபணிய மறுத்தவர்களை எல்லாம் எதிரியாக காட்டி நடத்தும் மிகமோசமான

அழித் தொழிப்பு, எதிரிகளைச் சார்ந்தும், தனியாகவும் அதிக எதிரிகளையே எமது விடுதலைப் போராட்டம் உருவாக்கியுள்ளது. இந்தத் தவறு தமிழ் மக்களின் போராட்டத்தை ஆழமாக சிதைத்து பின்தள்ளியுள்ளது. அரசியல் ரீதியாக ஒரே கோட்பாடு கொண்ட குழுக்களை தனது ஒரு பகுதியாக இணைக்கும் கனநாயக பண்புக்கு பதில், அழித் தொழிப்பு அவர்களை எதிர் நிலைக்கு தள்ளியது. இது போன்ற நடவடிக்கைகள் எமது போராட்டத்தை அதாள பாதாளத்தில் சிதைத்துள்ளது. தமிழ் மக்களின் போராடும் சுதந்திரத்தை அங்கீகரித்து அவர்களையும் இனைத்துக் கொள்ளும் போராட்டம் கையாளப்படாத வரை, உலக ஆக்கிரமிப்புகள் தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை அழித்துவிடுவது தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகிவிடும். உலகளவில் இந்த ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியங்களால் திட்டமிடப்படும் போது, குறைந்த பட்சம் அந்த ஆக்கிரமிப்பை வெளிக் கொண்டு வருவதற்கு புலிகளை விட்டால் எந்த அமைப்புகளும், புலிகளுக்கு சார்பாக இல்லை. தமிழ் மக்களிடையே கூட, தமிழ் மக்களின் போராட்டத்தை வெளிக் கொண்டுவருவதற்கு எந்த சுதந்திரமான அமைப்புகளும், புலிகளுக்கு வெளியில் இல்லை. இதுபோல் உலகளாவிய மக்கள் சார்ந்த எந்த அமைப்புகளும், புலிகளின் நிலையை வெளிக் கொண்டு வரும் நிலையில் இன்று இல்லை. புலிகள் தாங்களும், தாம் மட்டும் என்ற குறுகிய எல்லைக்குள் இருக்கின்றனர். இதற்கு வெளியில் சனநாயக மறுப்பை அடிப்டையாக கொண்டுள்ளனர். இது உலக ஆக்கிரமிப்புகளை குறைந்த பட்சம் வெளிக் கொண்டு வர முடியாத அவலம் ஏற்படும். இதனால் எமது நியாயமான உரிமைப் போராட்டத்தை அழிப்பதை சனநாயகப்படுத்திவிடும். இதை நாம் கவனத்தில் கொண்டு போராட்டத்தை சனநாயகப்படுத்தி, உலகமயமாதல் ஆக்கிரமிப்புக்கு எதிராக எம்மை ஆயுதபாணியாக்கி, உலகமக்களின் பொதுப் போராட்டத்துடன் கை கொடுக்க வேண்டிய வரலாற்றுப் பணி, போராடும் அனைத்து சக்திகள் முன் உள்ள வரலாற்றுக் கடமையாகும்.

– றயாகரன்

www.tamilarangam.net



# தமிழீழ புதிய சனநாயக கட்சியின் அரசியல் தீர்வுப் பொதி

புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும், தொழிலாளி வர்க்க தேசிய விடுதலை இயக்கமும் மிகமிகப் பலயீனமான நிலையில் இருக்கிறோம். நமது சரியான நீதியான அரசியல் கோரிக்கைகளின் பலமும், சிறந்த நடைமுறைச் செயற்பாடும் எதிர்காலத்தில் போராட்டத்தின் திசைவழியை தீர்மானிக்கவல்லது. நாம் பேச்சு வார்த்தையை, அரசியல் தீர்வை, அமைதியை, சமாதானத்தை எதிர்ப்பவர்கள் அல்ல. நமது எதிரிகளைவிட நாம் இவற்றில் தெளிவையும், உறுதியையும், நம்பிக்கையையும் கொண்டிருக்கிறோம். இது தமிழீழ மக்களுக்கும், உலக மக்களுக்கும் உணர்த்தப்பட வேண்டும், உரைக்கப் பட வேண்டும்.

நமது அரசியல் கோரிக்கைகள், மக்களின் கோரிக்கைகளாக, மக்கள் போராட்டம் மூலம் மாற வேண்டும். தமிழீழ விடுதலைக்காக இது வரை காலம் சிந்திய இரத்தத்துக்கும், செய்த தியாகங்களுக்கும், ஏற்பட்ட இழப்புகளுக்கும் உயர்ந்தபட்ச பலனை பெறுவதாக பேச்சு வார்த்தைக்கான அரசியல் அடிப்படைகள் இருக்க வேண்டும்.

சிறீலங்கா அரசை பலாத்கார ரீதியாக தோற்கடித்து, தனித்தமிழீழ அரசை உருவாக்கப் போராடி வரும் புலிகளின், நவகொலனிய தமிழீழ அரசுக்கும், தமிழீழ தொழிலாளி வர்க்க தேசிய இயக்கம் அமைக்கவுள்ள புதிய சனநாயக தமிழீழ அரசுக்கும், இடையிலான வேறுபாடு மடுவுக்கும் மலைக்குமானது. அதேபோன்று பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வுக்காக புலிகள் முன்னிறுத்துகின்ற அரசியல் - அதிகாரக் கோரிக்கைகளுக்கும். புரட்சிகர தேசபக்த இயக்கம் முன்னிறுத்தும் அரசியல் அதிகாரக் கோரிக்கைகளும் கூட வேறுபட்டிருப்பது தவிர்க்க முடியாதது. புலிகள் தொடர்ந்து போர் புரிந்தாலும் அல்லது அதிகாரப் பங்கீட்டில் சமரசப்பட்டாலும், தமிழீழ மக்களின் புதிய சனநாய

கப் புரட்சி நோக்கிய போராட்டம் தொடர்ந்து பலப்படக் கூடிய முறையில் நமது கோரிக்கைகள் இருக்கிறது. தேசநலன், மக்கள் நலன் சார்ந்திருக்கிறது. எதிரிகளை அம்பலப்படுத்தவும், அன்னியப்படுத்தவும் தேச விடுதலை, மக்கள் விடுதலை வேண்டி நிற்க்கும் போராளிகளை சனநாயக சக்திகளை, மக்களை மேலும் அய்க்கியப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

**1.** *மூன்றாவது நாட்டின், சர்வதேச நிறுவனத்தின் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடப்பது, கண்காணிக்கப்படுவதற்கு அப்பால், எந்த மூன்றாவது நாட்டின் படைகளும், சர்வதேச நிறுவனங்களின் (அய்நா அமைதிப்படை...) ஆயுதம் தாங்கிய படைகளும் சரி, ஆயுதம் தாங்காத கண்காணிப்பு படைகளும் சரி உள்நாட்டுக்குள் வரக்கூடாது.*

**2.** *திம்புக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.*

**3.** *தமிழீழத்தின் கிழக்குப் பகுதியில் முஸ்லீம் மக்களுக்கு* **'சுயாட்சி பகுதி'** *ஏற்படுத்த வேண்டும். சுயாட்சிப் பகுதியின் சிவில் நிர்வாகம், பொலிசில் முஸ்லீம்களின் பகுதி வீதப் பிரதிநிதித்துவம் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். சொந்த வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் உரிய நிவாரணங்களுடன் குறித்த கால அளவுக்குள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்.*

**4.** *சிறீலங்காவில் மலையகத் தமிழ் மக்களுக்கு ஒரு* **'சுயாட்சிப் பகுதி'** *ஏற்படுத்த வேண்டும், சுயாட்சிப் பகுதியின் சிவில் நிர்வாகம், பொலிசில் மலையகத் தமிழ் மக்களின் பகுதி வீதப் பிரதிநிதித்துவம் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். சிறீலங்காவிலும், தமிழீழத்திலும் உள்ள அனைத்து மலைய மக்களுக்கும் வாக்குரிமை, குடியுரிமை வழங்கப்பட வேண்டும். தமிழீழப் பகுதியில் வாழ்கின்ற, வாழ விரும்புகின்ற மலையக மக்களுக்கும், மலையகத்தை சேர்ந்த போராளிகளுக்கும்நிரந்தரமாக வாழ்வதற்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டும்.*

www.tamilarangam.net


**5.** சிறீலங்கா அரசு என்ற பெயர் மாற்றப்பட்டு **இலங்கை அரசு** எனப் பெயர் மீள சூட்டப்பட வேண்டும். இலங்கையில், **சிறீலங்கா - தமிழீழம்** என இரண்டு மாநிலங்கள் உருவாக்கப் பட வேண்டும், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் நாட்டின் பாதுகாப்பு (அன்னிய ஆக்கிரமிப்பு எதிராக மட்டும்) நிதி, வெளியுறவுத்துறை தவிர அனைத்தும் மாநில அரசின் கட்டுப் பாட்டில் இருக்க வேண்டும், எக்காரணம் கொண்டும் மாநில அரசை கலைக்கும் அதிகாரம், மத்திய அரசுக்கு வழங்கப்படக் கூடாது; மத்திய அரசின் நியமனங்கள், திட்டங்கள் அனைத்தும் மாநில அரசுடன் ஆலோசிக்கப்பட்டு, அனுமதியுடன் அமுல் ப்படுத்தப்பட வேண்டும்.

**6.** சிறீலங்கா இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிசு என முழுப்படையினரும் தமிழீழத்தில் இருந்து வெளியேற வேண்டும். மத்தியரசின் படைகள் எல்லாவற் றிலும் தமிழ்ப்படைப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். எல்லா இயக்கங்களின் போராளிகளும், தமிழ் மக்களும் (ஆண் - பெண்) படைப் பிரிவுகளில் இணைக்கப் படவேண்டும். (1983-இல் இருந்த நிலைமைக்கு, படைக் குறைப்பு - முகாம் குறைப்பு செய்வது முகாமுக்குள் முடக்கி வைத்திருப்பது அனுமதிக்க முடியாது.)

**7.** தமிழீழப் போராளிகளின் ஆயுதங்கள், சிறீலங்கா அரசிடமோ, மூன்றாவது தரப்பு சர்வதேசக் கண்காணிப்பு இராஜ தந்திரிகளிடமோ, நேரடியாக - தனியாக எக்காரணம் கொண்டும் ஒப்படைக்கப்பட மாட்டாது. நேரடியாக மாநில, மத்தியரசின் படைகளில் இணைக்கப்படுவதன் மூலம் மட்டும் மாற்றப்படும்.

**8.** சிறீலங்கா அரசால் 1972-களுக்குப் பின் தமிழீழப் பகுதியில் செய்யப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் குறித்த கால எல்லைக்குள், அகற்றப்பட வேண்டும்.

**9.** சிறீலங்கா அரசு, தமிழ் மக்களை - போராளிகளை அழிப்பதற்காக நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் கடன் சுமையை, தமிழீழ மக்களின் தலையில் மீண்டும் எந்த வகையிலும் சுமத்தப்படக்கூடாது.

**10.** பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம், தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைத்து தமிழ், முஸ்லீம், மலையகப் போராளிகளும், போராட்டத்தை ஆதரித்தவர்களும் என அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்; பொய்க் குற்றச் சாட்டுக்களின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டவை வாபஸ் பெறப்பட வேண்டும்.

**11.** தமிழீழப் பகுதியில் (தரையிலும் - கடலிலும்) சிறீலங்கா அரசு படைகளால், அரசு சார்பு ஆயுதக் குழுக்களால், விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகள், கண்ணி வெடிகள், பொறி வெடிகள் உள்நாட்டுக் கண்காணிப்பு குழு முன்னிலையில் உடனடியாக அகற்றப்பட வேண்டும். அதன் பின்னரே அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள் தங்கள் வீடுகளில் குடியமரவும், கடலில் மீன் பிடிக்கவும், விவசாய நிலங்களில் தொழில் செய்யவும் அனுமதிக்கப்படவேண்டும்.

**12.** தமிழீழத்தின் சிவில் அமைப்பு, பொலிஸ்துறை முழுவதும், மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தமிழீழ மாநில அரசியல் - அதிகாரத்தில், நீதித்துறையில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு கண்டிப்பாக அமுல் படுத்தப்பட வேண்டும்.

**13.** தமிழீழ அரசு அமைப்பில், மக்கள் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை எந்த நேரத்திலும் திருப்பி அழைக்கும் உரிமை அரசியல் சாசன ரீதியில் அங்கீகரிக்கப்பட வேண்டும், இதற்கான குறிப்பான தேர்தல் வடிவங்களும், முறைகளும் கண்டிப்பாக உருவாக்கப்பட வேண்டும்.

www.tamilarangam.net


**14.** தமிழீழ அரசு அமைப்பில், மக்களுக்கு தகவல் அறியும் உரிமை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழீழத்தின் வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம், அப்பகுதி மக்களின் அனுமதியுடன்தான் நிறைவேற்றப்பட வேண்டும். உள்ளூராட்சி அமைப்பு முதல் பாராளுமன்றம் வரையுள்ள அரசியல்வாதிகள் கட்சிகள், இயக்கங்களின் தலைவர்களின், சிவில் அமைப்பின் நீதித்துறை, பாதுகாப்பு துறையின் பொறுப்புமிக்க அதிகாரிகளின் வருமான சொத்து விபரங்கள் வருடம் ஒரு தடவை மக்கள் முன்வைக்கப்பட வேண்டும், பகுதி மக்கள் கேட்ப்பின் எந்நேரத்திலும் முன்வைக்கப்பட வேண்டும்.

**15.** உள்நாட்டு - வெளிநாட்டு நிதியில் இயங்கும் அரசு சாரா நிறுவனங்களின்(NGO'S) நிதி, வரவு - செலவுத் திட்டங்கள், ஆய்வு அறிக்கைகள் எல்லாம் நிறுவனம் இயங்கும் பகுதி மக்களின் பார்வைக்கு அனுமதிக்கப்பட வேண்டும். வெளிநாடுகளுக்கு - அரசுக்கு அனுப்பப்படும் அறிக்கைகள் உள்ளூர் மக்கள் கேட்டுக் கொண்டால் மக்கள் பார்வைக்கு பின்பே அனுப்பப்பட வேண்டும். தமிழீழ அரசும், மத்திய அரசும் தங்களின். சர்வதேச நிறுவனங்களின் வளர்ச்சி திட்டங்களை, அதற்கான நிதிகளை அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்ட, அரசு அமைப்புக்கள் மூலமே செய்ய வேண்டும், உள்ளூர் அரசு அமைப்பு வடிவங்களை புறந் தள்ளிவிட்டு, அரசு சாரா நிறுவனங்கள் வழியாக செயற் படுத்துவதை கண்டிப்பாக நிறுத்த வேண்டும்.

**16.** யுத்தத்தால் இடம் பெயர்ந்து இலங்கைக்குள்ளும், அகதிகளாக இந்தியாவிலும், முகாம்களில் / இடைத்தங்கல் நிலையங்களில் / வீடுகளில் வாழும் தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல குறிப்பிட்ட கால எல்லைக்குள் குடியமர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். வெளிநாட்டு வருமானம் இல்லாதவர்களுக்கு உதவிகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**17.** அரசின் வேலை வழங்கும் திணைக் களத்தில் யுத்தத்தில் அங்கவீனமான போராளிகளுக்கும், மக்களுக்கும், யுத்தத்தில் கணவனை, பிள்ளைகளை இழந்த பெண்களுக்கும், குடும்பங் களுக்கும் முன்னுரிமையளிக்க வேண்டும். தாய் - தந்தையை இழந்த சிறுவர்களுக்கும், தனியாக வாழ வேண்டிய நிலையி லுள்ள பெண்களுக்கும், பராமரிக்க யாரும் இல்லாத வயதானவர்கள், கால்கை இழந்தவர்களுக்கும் அரசின் நேரடிப் பராமரிப்பகங்கள் கண்டிப்பாக உருவாக்கப்பட வேண்டும்.

**18.** யுத்தத்தால் ஆண் - பெண் விகிதாச்சாரங்களில் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. கணவனை இழந்த பெண் களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கில் உள்ளது. இதைக் கணக்கில் கொண்டு திருமணச் சட்டத்தில் மாற்றம் செய்யப் பட வேண்டும்; உலக மக்களை அச்சுறுத்தி வரும் எய்ட்ஸ் நோயும் தமிழீழப் பகுதியில் அதிகரித்து வருகிறது; நோயை தடுப்பதற்கான விழிப்புணர்வுப் பிரச்சாரத்துடன், அரசு திருமணத்துக்கு முன்பே மருத்துவச் சான்றிதழ் முறையை சட்ட ரீதியாக, பதிவுத் திருமண வழியாக அறிமுகம் செய்ய வேண்டும்.

**19.** தமிழீழத்தின் தொழில்நுட்பக் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் (அரசு - தனியார்) இலங்கையிலும், இந்தியா விலும் அகதி முகாம்களிலுள்ள மாணவர்களுக்கும், இளைஞர்கள் - யுவதிகளுக்கும் 50% (அகதி முகாமின் விகிதாச்சாரா முறையில்) இட ஒதுக்கீடு கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.

**20.** இந்தியாவில் அகதி முகாம்களில் உள்ள தமிழீழ அகதி கள், சிறப்பு முகாம் மற்றும் சிறைகளிலுள்ள போராளிகள் மிகக் குறுகிய காலத்தில், தமிழீழப் பகுதிகளில் குடியமர ஏற்பாடு செய்ய வேண்டும். வெளிநாடுகளில் உள்ள குடியுரிமை இல்லாத தமிழீழத்தவர்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நாடு திரும்ப தமிழீழ அரசு ஆவண செய்ய வேண்டும்.

www.tamilarangam.net


**21.** தமிழீழ மக்களின் சேமிப்பை பேணவும், மூலதனத்தை சமூக வளர்ச்சிக்கு ஒழுங்கமைக்கவும், "**தமிழீழ மக்கள் வங்கி**" கண்டிப்பாக உருவாக்கப்பட வேண்டும். புலிகளின் வங்கி, அப்படியே தமிழீழ மக்கள் வங்கியாக மாறவேண்டும். அன்னியநாட்டு வங்கித் தொழில் தமிழீழத்தில் அனுமதிக்கப் படக் கூடாது.

**22.** தமிழீழப் பகுதியில் இருந்து வசூலிக்கப்படும் வரிகளில் பெரும் பகுதி தமிழீழ மாநில அரசே பெற்றுக் கொள்ளும்.

**23.** தமிழீழ மக்கள் அனைவருக்கும் கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு, வீடு அடிப்படை அரசியல் சாசன உரிமை யாக்கப்பட வேண்டும். வீடு இல்லாத குடும்பங்களுக்கு வீடும், நிலம் இல்லாதவர்களுக்கு விவசாயக் காணியும் மாநில அரசால் உடனடியாக, கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.

**24.** நீண்ட யுத்தத்தால், தமிழீழப் பகுதியின் விளை நிலம், காடு, நீர் நிலைகள், காற்று மண்டலம் என அனைத்தும் கடுமையான சுற்றுச் சூழல் பாதிப்புக்கு உட்பட்டுள்ளது. அரசின் புதிய பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மேலும் சுற்றுச் சூழலை மாசுபடுத்தாத முறையில் இருக்க வேண்டும்; பகுதி மக்களின் சுற்று சூழல் பதுகாப்புக்கு எதிரான திட்டங் களை அரசு உருவாக்கக் கூடாது, யுத்தத்தால், யுத்தப் பகுதி மக்களின் உடல் ஆரோக்கியம், மனநிலை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அரசு கட்டாய இலவச மருத்துவ சேவை வழங்குவதுடன், சுகாதாரத் துறையில் விசேட பிரிவு ஏற்படுத்தி மக்களின் மனநலம், உடல் நலத்தை சீரமைத்து வளர்க்க முன்னுரிமையளிக்க வேண்டும்.

**25.** தமிழீழத்தில் விவசாயத்தை மட்டும் நம்பி, சிறு விவசா யத்திலும், கூலி உழைப்பிலும் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக் கும், உளவுத் தொழிலை மட்டும் நம்பியுள்ள நிலமற்ற கூலி உழைப்பாளர்களுக்கும், விவசாய உற்பத்திக்கு உகந்த காணி

கள் நிலப்பகிர்வு மூலம் உடனடியாக வழங்கப்பட வேண்டும். காணி உரிமை மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால், நிலப்பங்கீடு அடிப்படையானது. கிராமப் புறத்திலும், நகர்ப் புறத்திலும் நில உச்சவரம்புச் சட்டம், கண்டிப்பாக அமுல் படுத்தப்பட வேண்டும்.

**26.** தமிழீழத்தின் உணவுத் தேவையை நிவர்த்திக்கும் முதலீட்டுத் திட்டங்களுக்கு முன்னுரிமையும் மானியமும் அளிக்க வேண்டும்; விவசாயத்திலும், மீன் பிடியிலும் உணவு பதனிடும் தொழிலுக்கும் முக்கியமாக முதலீட்டை திருப்ப வேண்டும். தமிழீழப் பகுதியின் கரையோர - ஆள்கடல் மீன் பிடிப்பில் தமிழீழ மீனவர்களுக்கே முழு உரிமை இருக்க வேண்டும். அன்னியர்களின் மீன் பிடிப்புக்கு தடை விதிக்க வேண்டும்; கட்டுமர, விசைப்படகு மீன் பிடியாளர்களுக்கு கூடுதலான கடல் மைல் தூரம் ஒதுக்கப்பட வேண்டும்; தமிழீழத்தின் சிறிய, நடுத்தர தொழில்கள் கூட்டுறவு மயமாக்கப்பட வேண்டும் கூட்டுறவு முறை ஊடாக உற்பத்தியில் நவீன தொழில்நுட்பமும், சிறந்த விசேட விநியோக முறையும் ஒழுங்கமைக்கப்படுவது அடிப்படையானது. இதனை அரசே நேரடியாக பொறுப்பு எடுத்து செய்ய வேண்டும்.

**27.** தமிழீழ தொழிற்துறை, விவசாயத்துறை, நிதி, சேவைத் துறைகளின் வளர்ச்சிக்கும், புதிய உருவாக்கத்திற்கும் ஆன தொழில் உரிமங்கள், அரசின் ஊக்க உதவிகள். தமிழீழ தேசியத் தொழில் முனைவோருக்கு முதலிடம் வழங்கப் பட வேண்டும்; தமிழீழத்தில் வாழத் தமிழர்களின் (NRT) முதலீடுகள், உள்நாட்டு அத்தியாவசிய பாவணைப் பொருள் உற்பத்தியில் ஊக்குவிக்கப்பட வேண்டும், விவசாய - மீன் பிடி, தொழிற்துறை உற்பத்தியில், வியாபாரத்தில் உள்நாட்டு நடுத்தர - தேசியத் தொழில் முனைவோரை பாதுகாக்கும், பொருளாதார வணிகக் கொள்கை அடிப்படையானது. பொதுத்துறை (அரசு) நிறுவனங்கள் தனியார்மயமாக்கப் படக்கூடாது. உரிய முறைகளில் கண்டிப்பாக மறுசீரமைக்கப் பட வேண்டும்.

www.tamilarangam.net



**28.** இலங்கை நாட்டின் பாதுகாப்பு, நிதி, வெளியுறவுத் துறை என்பன மத்தியரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற அதே வேளை, பாதுகாப்பு, வெளியுறவு, நிதி மற்றும் வெளிநாட்டு தொழில், வணிகக் கொள்கைகளில் மத்தியரசு, தமிழீழ மாநில அரசின் நலனுக்கு எதிரான முடிவுகளை எடுத்தால் தமிழீழ மாநில அரசு அவற்றை மாநிலச் சட்டமன்றம் மூலம் நிராகரிக்கும் உரிமை கண்டிப்பாக இருக்க வேண்டும். WTO இன் உலக வர்த்தக அமைப்பின் உடன்படிக்கையினை தமிழீழ மாநில அரசு ஏற்றுக் கொள்ளாது, சிறீலங்கா அரசின் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக இரத்தம் சிந்திப் போராடி வரும் தமிழீழ மக்கள் தமிழீழத் தேசியத் தொழில்களை, வணிகத்தை நசுக்கும் WTO இன் கொள்கைக்கு எதிராக தொடர்ந்து போராடும்.

**29.** வெளிநாட்டு முதலீடுகள், கனரகத் தொழிற் துறை உள்கட்டமைப்பு - அறிவியல் தொழில்நுட்ப துறைகளில் அனுமதிக்கப்படலாம். வெளிநாட்டு முதலீடுகளின் இலாபத் தில் 75% மீண்டும் உள்நாட்டு உற்பத்திக்கு திரும்ப முதலீடு செய்யப்பட வேண்டும், அன்னிய நேரடி முதலீடுகள் (FDI) கூட்டு முதலீடுகள் (FJI) 50 ஆண்டுகள் திரும்பப் பெற முடியாத சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கு தடையான வெளிநாட்டு முதலீடுகள், உலகமயமாக்கல் திறந்த பொருளாதாரக் கொள்கைகள், நவீன மயமாக்கல் என அனுமதிக்கப்படாது. வெளிநாட்டு முதலீட்டை கட்டுப்படுத் தும் முழு உரிமையும் தமிழீழ அரசிடம் இருக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்தியை, வணிகத்தை பாதிக்கும் ஏற்றுமதி இறக்குமதி (EXIM) கொள்கை, அன்னியச் செலவாணியை ஈட்டுவது மட்டும் நோக்கிய கொள்கை அனுமதிக்கப்படக் கூடாது.

**30.** அரசுதுறை - தனியார்துறை (சிறுதொழில் - பெருந் தொழில்) என எல்லா உற்பத்தி - வணிக - சேவைத் துறை களிலும் தமிழீழத் தொழிலாளர்களின் வேலை நேரம் 6 மணி நேரம் என சட்ட ரீதியாகப்பட வேண்டும். தொழிலாளர்

தேவைக்கும் - இருப்புக்கும் இடையில் சமனிலை பேணப் படவேண்டும். தொழிலாளர்களின் தொழிற்சங்கம் அமைக் கும் உரிமை அடிப்படை உரிமையாக்கப்பட வேண்டும். பொலிஸ் மற்றும் படைத்துறைகளில் கூட தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும். போராட்ட முறைகள் மட்டும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். 18 வயதுக் குட்பட்டவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதை தடை செய்யும் இன்றைய அரசு, குழந்தைத் தொழிலாளர்கள் முறையை கண்டிப்பாக தடை செய்து அமுல்படுத்த வேண்டும்.

**31.** தமிழீழ தொலைத் தொடர்பு சாதனத்துறை, மற்றும் ஊடகவியல் துறையிலும் (பத்திரிகை - வான் ஒலி, ஒளி, இணையம்) அன்னிய முதலீடுகளை அரசு கட்டுப்படுத்தும், ஊடகவியல் துறையில், மக்கள் விரோத மூடப்பழக்க வழக்க, சீரழிவுக் கலாச்சார விளம்பரங்கள், படங்கள் - சீரியல்கள், அழகி - அழகன் போட்டிகள் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு போன்ற பந்தய முறைகள் தடை செய்யப்பட வேண்டும். அனைத்து துறைகளிலும் அறிவியல் தொழில்நுட்ப பார்வைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

**32.** தமிழீழத்தில் அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப் படுவதுடன் உயர் கல்வி வரை கட்டாயக் கல்வி, அரசியல் சாசன முறை ஊடாக அமுல்படுத்த வேண்டும். ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை தமிழ் மொழியே எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் பயிற்று மொழியாக இருக்க வேண்டும். சிங்களம், ஆங்கிலம் மொழிப்பாடமாக இருக்க வேண்டும். பல்கலைக் கழக கல்விக்கு ஆங்கிலம் பயிற்று மொழியாக தற்காலிகமாக இருக்க வேண்டும், ஆனால் போர்க்கால முயற்சியில் உலக அறிவுஅனைத்தையும் தமிழில் படிப்பதற்கான ஏற்பாட்டுக்கு, விசேட துறை கட்டமைக்கப்பட்டு - நிதி ஒதுக்கீடு செய்து மொழி பெயர்ப்பும், வெளியீடும் செய்யப்பட வேண்டும். தமிழீழத் தில் கல்வி நிறுவனங்கள் எல்லாம் மதநிறுவனங்களின் கட்டுப்

www.tamilarangam.net



***பாட்டில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். கல்வி முறையில் இருந்து மதப்பாடம் அகற்றப்பட வேண்டும். கல்வி நிறுவனம் நேரடியாக அரசு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். (மதப்பாடம் மத நிறுவனங்களில் மட்டும் கற்றுக் கொள்ள லாம்.)***

***33. தமிழீழ மாநில அரசு, மதச்சார்பற்ற அரசாக இருக்க வேண்டும். மத, சாதி நிறுவனங்களுக்கு அரசு எவ்வகையிலும் உதவி செய்யக் கூடாது. அன்னிய நாடுகளில் இருந்து நிதி பெறுவது கட்டாயமாக தடுக்கப்பட வேண்டும். கல்வி - தொழில் - வணிக நிறுவனங்களில் மதச்சடங்குகள், மதப் பழக்க வழக்கங்கள், கோவில்கள் அனுமதிக்கப்படக் கூடாது. மத நிறுவனங்களின் மதமாற்ற நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் தடை செய்யப்பட வேண்டும். மத, சாதி, பிரதேச பெயரிலான அரசியல் கட்சிகள், சமூக சேவை நிறுவனங்கள் தடை செய்யப்பட வேண்டும்.***

இலங்கையில் இனப் பிரச்சனை தீரவும், அரசியல் தீர்வு ஏற்படவும் தமிழீழ புதிய சனநாயக கட்சி முன் வைத்துள்ள இக்கோரிக்கைகளுடன் இணக்கம் ஏற்படும். இலங்கையிலுள்ள (தமிழீழம் - சிறீலங்கா) மற்றைய கட்சிகள், முன்னணிகள், இயக்கங்கள் வெகுசன அமைப்புகளுடன், இக்கோரிக்கைகளை கூட்டாக பிரச்சாரம் செய்யவும், இதற்காக கூட்டுப் போராட்டங்களில் ஈடுபடவும், தமிழீழ புதிய சனநாயக கட்சி வெளிப்படையாக அறைகூவல் செய்கின்றது.

இலங்கைக்கு வெளியே உலகளவில் எந்த நாடுகளிலும் தமிழீழ மக்களின் தேசத்தின் நலனுக்கான இக்கோரிக்கைகளை அங்கீகரிக்கும் அந்நாட்டு மக்கள் அமைப்புகளுடன், அந்த நாடுகளில் உள்ள தமிழீழ அகதி / புலம் பெயர்ந்த அமைப்புகளுடன், மற்றும் அந்நாட்டு அகதி / வெளிநாட்டு அகதி அமைப்புகளுடன் கூட்டுச்சேர்ந்து (அய்க்கியப் பட்டல்ல) பிரச்சாரம் ஆதரவுப் போராட்டங்கள் செய்ய, அந்நாடுகளிலுள்ள தமிழீழ புதிய சனநாயக கட்சியின்

www.tamilarangam.net



வெளிநாட்டு ஆதரவுக் கிளைகள் வெளிப்படையாக அறை கூவல் செய்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் - போரில் தமிழீழ மக்களும், குறிப்பாக தொழிலாளர்களும், விவசாயிகளும், நடுத்தர வர்க்க மக்களும் மிக அதிகளவு தியாகம் செய்து வருகிறார்கள். வாழ்வா - சாவா என அரசு கட்டுப்பாட்டுப் பகுதி / புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், அரசின் பொருளாதார, மருத்துவ தடைகள் மத்தியில், கல்வி - தொழில் நெருக்கடியில் தேசத்தை விட்டு வெளியேறாது. உயிர் பிழைத்து வாழ்கிறார்கள். தமிழீழ விடுதலை யுத்தத்துக்கு நேரடியாக - மறைமுகமாக உயிராதாரமாக விளங்கி வரு கிறார்கள். உயிரைக் காப்பதற்காக இலட்சம் மக்கள் இந்தி யாவில், வெளிநாடுகளில் அகதிகளாகவுள்ளனர். தமிழீழ உழைக்கும் மக்களின் வாழ்வில் ஒரு முன்னேற்றத்தை, பேச்சு வார்த்தை — அரசியல் தீர்வு ஏற்படுத்த வேண்டும். இக் கடமையை நிறைவேற்றாத இராணுவத் தீர்வோ, அரசியல்த் தீர்வோ பெரும்பான்மை தமிழீழ மக்களுக்கு செய்யும் வரலாற்றுத் துரோகமாகும். மக்களின் தேசத்தின் நலனில் - முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட அனைத்து தமிழீழ அரசியல் சக்திகளும், கட்சிகளும், வெளியீடுகளும் தேசநலன் - மக்கள் நலன் என்ற இலக்கில் இத்தீர்வுப் பொதி திட்டத்தின் அடிப்படையில் கூட்டிணைந்து போராட வருமாறு அறை கூவல் செய்கிறோம்.

*புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளே, இக்கோரிக்கைகளை எட்டுத் திக்கும் பரப்புங்கள், மக்களை அணி திரட்டுங்கள். கூட்டுப் போராட்டங்களை நடத்துங்கள்.*

மத்திய குழு

தமிழீழ புதிய சனநாயகக் கட்சி

N D P T

# அரசியல் தீர்வுப் பொதி முன்னிறுத்துவது சுயநிர்ணயமா? தனியரசா?

தமிழ் மக்கள் மீதான தேசிய இன ஒடுக்குமுறை, இன அழிப்பாகவும், நில ஆக்கிரமிப்பாகவும், இனக்கலவரங்களாக சிறீலங்கா சிங்கள பௌத்தப் பேரினவாத அரசால் திட்டமிட்டு நடத்தப்பட்டது. தேசிய இன ஒடுக்குமுறை உச்சநிலையை அடைந்ததால் **தேசிய சுயநிர்ணய உரிமை** அடிப்படையில் தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் போராட்டத்தினை சில இயக்கங்கள் முன்னெடுத்தன. ஆயுதப் போராட்டம் மூலம்தான் தனித் **தமிழீழ அரசை** அமைக்க அவை உறுதி பூண்டன. 1977 தேர்தலில் **வட்டுக் கோட்டை தீர்மான** முடிவான தனித்தமிழீழக் கோசத்தை முன் வைத்து TULF அமோக வெற்றிப் பெற்றது. ஆனால் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்கள் தனித் தமிழீழப் போராட்டத்திற்கான ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன.

1983 ஆடி தமிழ் இனப் படுகொலை உள்நாட்டு மக்களிடமும், உலக மக்களிடமும் தனித் **தமிழீழ அரசு** அமைக்கப் போராடிய ஆயுதப் போராட்ட இயக்கங்களின் போராட்டத்துக்கு அங்கீகாரத்தை வழங்கியது. இந்திராகாந்தி தலைமையிலான இந்தியரசு எல்லா வகையிலும் இவ்வியக்கங்களை ஊக்குவித்தது பழைய கதை.

இங்கு முக்கிய விடயம் என்னவெனில் **தேசிய சுயநிர்ணய உரிமை** அடிப்படையில் தனிநாடு - தனிஅரசு கோரிப் போராடிய இயக்கங்கள், தமிழீழத் தனியரசு, சோசலிச அரசாக இருக்கும் என்றன; சிறீலங்கா அரசில் இருந்து தனியாகப் பிரிந்து தமிழீழ அரசு உருவாக்குவது மட்டுமல்ல, சிறீலங்கா அரசு முதலாளித்துவ அரசாக இருக்கும், தமிழீழ அரசு சோசலிச அரசாக இருக்கும் என வேறுபடுத்தி பேசினர், எழுதினர்.

www.tamilarangam.net


ஆனால் 1985-இல் இந்தியரசு முன்னிலையில், பேச்சு வார்த்தை என சிறீலங்கா அரசு முன் வந்தபோது 5 பெரும் இயக்கங்களும் TULF-ம் கூட்டாக ஒரே நிலையில் திம்புக் கோரிக்கைகளை முன்னிறுத்தின; திம்புக் கோரிக்கைகளைக் கூட J.R. அரசு ஏற்றுக் கொள்ள மறுத்த நிலையில் சமாதானப் பேச்சு முறிவடைந்தது. அன்றிலிருந்து தமிழீழ இயக்கங்கள் மீது இந்தியரசு தனது நிர்ப்பந்தங்களை பிரயோகிக்கத் தொடங்கியது. இறுதியில் 1987-இல் J.R.ம் - ராஜீவ்-ம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு, தமிழீழ இயக்கங்களை அவ்வொப்பந்த அடிப்படையில், சிறீலங்கா அரசுடன் சமரசப்பட வைத்தது. புலிகள் தவிர தமிழீழம் கோரிய மற்றைய இயக்கங்கள், தமிழ் மக்களின், சுய நிர்ணய உரிமையைக் கூட (திம்புக் கோரிக்கைகள்) கைவிட்டு, தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு துரோகம் செய்தனர். இதுவும் பழைய கதை.

தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரிந்து சென்று தனியரசு அதுவும் சோசலிச தமிழீழ அரசு அமைப்பது பற்றி திட்டங்கள், கொள்கை முழக்கங்கள் வெளியிடப்பட்ட போதிலும், தனித் தமிழீழ அரசின், அரசு அமைப்பு பற்றி தெளிவான அரசியல் சாசனக் கொள்கை இயக்கங்களிடம் இருக்கவில்லை; உள்நாட்டுக் கொள்கை, வெளியுறவுக் கொள்கை என பொதுவாகப் பேசிய போதும் அது குறித்த ஆழமான தெளிவு தலைமைகளிடம் இருக்கவில்லை; மத்திய குழு உறுப்பினர்களே, தமிழீழ அரசு எப்படி இருக்கும்(?) எனக் கேட்டால், சோவியத் அரசு மாதிரி, கியூபா அரசு மாதிரி என ''மொடல்கள்'' பற்றிப் பேசினர்.

சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சிறீலங்கா அரசுடன் ஒன்றுபட்டு இருக்கும் போது, தமிழீழ மாநில அரசின், அரசியல் அதிகாரத்தில் எப்படி மக்கள் பங்கு கொள்வார்கள், அரசின் வடிவம் எவ்வாறு இருக்கும், மாநில அரசின் அரசியல், பொருளாதார கொள்கைகள் யாரால் தீர்மானிக்கப்படும், தமிழீழ மாநில அரசுக்கு மேல் சிறீலங்கா அரசு மத்திய அரசாக திகழுமா, அல்லது தமிழீழ மாநில அரசும், சிறீலங்கா மாநில அரசும் இணைந்து ஒரு மத்திய அரசை உருவாக்குமா, மாநில அரசுகளின் உரிமைகள், மத்திய அரசின் உரிமைகள் என்ன; அதன் தனியதிகாரங்கள் எப்படி செயல்படும் என்பன போன்ற முக்கியமான அரசியல் அதிகாரம், அரசு வடிவம் குறித்த கொள்கையில் ஒரு தெளிவான பார்வை இருக்கவில்லை. ஒவ்வொரு தலைவர்களும் தமக்குத் தெரிந்தமாதிரி பேசினர்.

www.tamilarangam.net


இதனால்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு தமிழீழ தனியரசுக் கொள்கையையும் (சோசலிச அரசு) கைவிட்டனர். குறைந்த பட்சம் சுயநிர்ணய உரிமையைக் கூட கைவிட்டு, துரோகிகளாக மாறி சிறீலங்கா அரசுடன் பாராளுமன்றத்தில், முன்னாள் பாராளுமன்றப் பாதைத் துரோகிகளான TULF உடன் இந்த ஆயுதப் போராட்டப் பாதை துரோகிகளும் கைகோர்த்துள்ளனர். இதுதான் துரோகம் என்பது.

சிறீலங்கா அரசு, இராணுவத் தீர்வை முன்னிறுத்தும் போது தனி நாடாக, பிரிவது தனியரசு பற்றிப் பேசுவதும், சிறீலங்கா அரசு பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு என முன் வரும்போது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தால், சிறீலங்கா அரசுடன் சேர்ந்து வாழ்வதுப் பற்றி பேசுவதும் வழமையான ஒன்றாகிவிட்டது. கேள்வி என்னவெனில் சிறீலங்கா அரசு, திம்புக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டால், (அரசியல் கோரிக்கைகள்) அடுத்து நமது அரசியல் அதிகாரம், அரசு வடிவம் பற்றிய கோரிக்கை என்ன? இது பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளும் இராஜ தந்திரிகள் மட்டும் முடிவு செய்ய வேண்டிய விடயமா? அல்லது வெளிப்படையாக மக்களும் அறிந்திருக்க வேண்டிய, தீர்மானிக்க, அங்கீகரிக்க வேண்டிய அம்சமா?

திம்புக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டால் சரி. அரசியல் அதிகாரம், அரசு வடிவம் என்பது சிறீலங்கா அரசு எப்படி இயங்குகின்றதோ அதே முறையில்தான் தமிழீழ மாநில அரசும் இயங்குமா? போராட்டத்தின் யுத்தத்தின் தீர்மானகரமான சக்தியாக விளங்கும் புலிகளிடம் இதுபற்றி எத்தகைய கொள்கை இருக்கிறது? அவர்களிடம் ஆவணமாக இது இல்லாமல் இருக்கலாம். ஆனால் 1991 முதல் 1995 வரை யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்த போதும் 1996 முதல் இன்று வரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னியிலும் புலிகள் யுத்த நிலைமைகளுக்கும் உகந்த முறையில் ஒரு அரசு வடிவத்தை அமுல்படுத்தி வருகிறார்கள். யுத்தம் முடிந்தபின் புலிகள், ஒரு சோசலிச அரசு வடிவத்தை அல்லது வேறு ஒரு வகையான சிவில் சமூக வடிவத்தை, அமுலுக்கு கொண்டு வருவார்கள் எனக் கனவு காணவேண்டியதில்லை. ஒரு விடுதலை இயக்கம் தனது கட்டுப்பாட்டுப் பகுதியில் அமுல்படுத்தி வருகின்ற அரசியல் அதிகார வடிவம்தான், அது எதிர்காலத்தில் கடைப்பிடிக்கப் போகும் அரசு வடிவம் என்பதில் சந்தேகம் வேண்டியதில்லை.

www.tamilarangam.net

இங்கேதான் முதலாளித்துவ தேசிய இன விடுதலை இயக்கத்துக்கும், தொழிலாளி வர்க்க தேசிய விடுதலை இயக்கத்திற்குமான முக்கியமான வேறுபாடு வெளிப்படுகின்றது. **அரசியல் அதிகாரம், அரசு வடிவம்** பற்றிய கண்ணோட்டத்தில் இரண்டு வர்க்கங்களும் வேறுபட்ட அரசு வடிவங்களை, அரசியல் அதிகார முறைகளை, அரசியல் சாசன உரிமைகளை, சட்ட உரிமைகளை முன்னிறுத்துவதில், மக்களிடம் வெளிப்படையாக முன் வைப்பதில் வேறுபடுகின்றன.

சிறீலங்கா அரசில் இருந்து பிரிந்து தனியாக தனியரசாக அமைக்கப் படுகின்ற **தமிழீழப் புதிய சனநாயக அரசின்** அரசியல் அதிகாரமுறை, அரசு வடிவம் எப்படி மக்களின் - தேசத்தின் உரிமைகளை உறுதிப்படுத்துவதாக இருக்குமோ, அதே அரசு வடிவமும், அரசியல் அதிகார உரிமைகளும் தான், **சுயநிர்ணய உரிமை** அடிப்படையில் சிறீலங்கா அரசுடன் கூட்டாக இருக்கப் போகும், **தமிழீழ மாநில அரசின்** அரசியல் அதிகாரமாக, வடிவமாகவும் இருக்க வேண்டும். வேறுபாடு என்னவெனில் தனியரசு அமைக்கப்படும் போது ஒரு நாட்டுக்கு இருக்கக் கூடிய அத்தனை சர்வதேச உரிமைகளும் நேரடியாக தமிழீழ அரசு பெற்றுக் கொள்கிறது. சுயநிர்ணய உரிமையை சிறீலங்கா அரசு அங்கீகரிக்கும் போது, சுயநிர்ணய அடிப்படையில், **கூட்டாக வாழும்போது, ஏற்படும் எல்லாவித நன்மைகளும் கருதி**, மத்திய அரசின் கைகளுக்கு செல்கின்ற சில உரிமைகளை மாநில அரசு விட்டுக் கொடுக்கின்றது. இதன் அர்த்தம், மாநில அரசுகளை மீண்டும் நசுக்கும் வகையில், மாநிலத்தின் உரிமைகளை பறிக்கும் வகையில் மத்தியரசு நடந்து கொள்ள முடியாதபடி அரசியல் சாசன உரிமைகள் வரையறுக்கப்பட வேண்டும். இதையும் மீறி மத்தியரசு நடந்து கொள்ளுமானால் அரசியல் சாசன ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட **சுயநிர்ணய உரிமை** அடிப்படையில் மீண்டும் தமிழீழ மாநில அரசு பிரிந்து தனியரசு அமைக்க முடியும். இத்தகைய ஒரு இயங்கியல் உறவில்தான் **சுய நிர்ணய உரிமை** அடிப்படையில் இன்னோர் தேசிய இனத்துடன், தேசிய அரசுகளுடன் இணைந்து கூட்டாக வாழ்வது பற்றியும், முடியாதபோது பிரிந்து சென்று தனியரசு அமைப்பது பற்றியும் தொழிலாளி வர்க்க சித்தாந்த அரசியல் வழிகாட்டுகிறது.

**தனியரசு** அமைக்கும்போது சோசலிச / புதிய சனநாயக அரசியல் அதிகார, அரசு வடிவத்தை முன் வைப்பதாகவும், **சுயநிர்ணய உரிமை** அடிப்படையில் கூட்டாக வாழும்போது மாநில அரசு, அத்தகைய அரசியல் அதிகார வடிவத்தை, மாநில அளவில் கூட கைவிட்டு விடுவது என்பதே அடிப்படையில், முதலாளித்துவ அரசு அமைப்பு முறையுடன் சமரசப்படுவதாகும்.

www.tamilarangam.net



இங்கு மையான கேள்வி என்னவெனில், ஒரு முதலாளித்துவ அரசு வடிவத்தை கொண்ட மாநில அரசும் இன்னொரு புதிய சனநாயக அரசு வடிவத்தை கொண்ட மாநில அரசும் கூட்டாக இணைந்து ஒன்றை ஒன்று அங்கீகரித்துக் கொண்டு, ஒரு மத்திய அரசை நிறுவி ஒரு நாடாக இயங்க முடியுமா? என்பதே, ஒரு முதலாளித்துவ நாடும், சோசலிச / புதிய சனநாயக நாடும் அக்கம்பக்கமாக தனி நாடுகளாக இருக்கும் போதே ஏற்பட்ட பிரச்சனைகளை வரலாற்றில் பார்த்திருக்கிறோம். முதலாளித்துவ அரசியல் அதிகார வடிவத்தை முன்னிறுத்துகின்ற இரண்டு மாநில அரசுகள் கூட்டாக இணைந்து ஒரு நாடாக இயங்க முடியும். தேசிய இன விடுதலைப் போராட்டத்தில், தொழிலாளி வர்க்க அரசியலை முன்னிறுத்துகின்ற, அரசியல் இயக்கம் ஒன்றில் தனியரசாகப் பிரிந்து, சோசலிச / புதிய சனநாயக அரசை நிறுவ முடியும். அல்லது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தை தனது தலைமையில் முன்னெடுத்து போராடிய படியே, ஒடுக்கும் / மற்றைய தேசிய இனங்களின் தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கத்தின் விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் நோக்கில் பரஸ்பரம் செயற்படவேண்டும். இப்போராட்ட நிகழ்ச்சிப் போக்கில் இரண்டில் ஒன்று நடக்கும். ஒன்று. இரண்டு தேசிய இன தொழிலாளிவர்க்க இயக்கங்களும் தங்களின் உள்நாட்டு - உலகப் பொது எதிரிகளை தூக்கி எறிந்து, சுயநிர்ணய உரிமையை அரசியல் சாசன ரீதியில் அங்கீகரித்து ஒரு மத்திய அரசை நிறுவும், சோசலிச / புதிய சனநாயக நாடு உருவாகும் இரண்டு. ஒடுக்கப்படும். தேசிய இன தொழில்லாளி வர்க்கத்தின் தலைமையில் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டம், உள்நாட்டு - உலக நிலைமைகளின் சாதக நிலைமைகளைப் பொறுத்து, சுயநிர்ணய அடிப்படையில் தனியரசாக பிரிந்து தனிநாடு அமைக்க முடியும்.

இதுதான் தொழிலாளி வர்க்கம், தேசிய இன விடுதலைப் போரையும், சர்வதேசியப் புரட்சியையும் இணைக்கின்ற இயங்கியல் அணுகுமுறை. எனவே தமிழீழத் தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கம் இந்தப் பாதையில் முன்னேறும் நோக்கில், சிறீலங்கா அரசுடன் ஆன பேச்சு வார்த்தைக்கு தனது அரசியல், அதிகாரத் தீர்வுப் பொதியை முன் வைக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் திம்புக் கோரிக்கைகளை முன்னிறுத்துகின்றனர்.

தமிழீழ புதிய சனநாயகக் கட்சியும் திம்புக் கோரிக்கைகளை முன்னிறுத்துகின்றனர்.

www.tamilarangam.net


தமிழீழ மக்களின் மத்தியிலுள்ள எல்லா வர்க்கங்களும் திம்புக் கோரிக்கையை வலியுறுத்துவதால், தொழிலாளிவர்க்க அரசியல் இயக்கம், திம்புக் கோரிக்களை கைவிடவேண்டும் என்றோ அல்லது திம்புக் கோரிக்கையுடன் மட்டும் நிறுத்திக் கொண்டால் போதும் என்ற முடிவுக்கு வரவேண்டியதில்லை. அதற்கு அப்பால் தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கம் முன்னிறுத்த வேண்டிய அரசியல் அதிகார உரிமைகள், அரசு வடிவம் பற்றிய கோரிக்கைகளையும் மக்களிடம் வளர்த்தெடுக்க வேண்டும். புலிகள் தொடர்ந்து போராடினாலும், புலிகள் இயக்கம் சமரசம் அடைந்ததாலும், தொடர்ந்து தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கம் தனது தலைமையை நிறுவ முடியும். நிரந்தரப் புரட்சிக்கான தர்க்க நியாயம் மக்களால் அங்கீகரிக்கப்படும்.

—தமிழரசன்



சுவீடனின் 'கோதன்பெர்க்' நகரில் நடந்த அய்ரோப்பிய (EU) அமெரிக்க மாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம்.

www.tamilarangam.net



க(வி)தை

# பாலஸ்தீனமே!

அம்மாவின் கடிதம்:
கடிதம் முழுவதையும்
கண்ணீரால் வரைந்திருந்தாள்.
உற்சாகம் தருவதாய்
ஒரு வரி கூட இல்லை.

தென்றல் தன்னைத் தீண்டும் போதெல்லாம்
சிலிர்த்து நின்ற முற்றத்து வேப்பமரம்
கிளைகள் முறிய
தன்னையும் சாய்த்துக் கொண்டதாம்.

காணி எல்லைக்கு காவல் நிற்கும்
சீமைக் கிழுவை, பூவரசு
அணிலும் கிளியும்
அகமகிழ கனியுமிழும்
கறுத்த கொழும்பான் மாம்ரமும்
பூக்கவும் காய்க்கவும் மறந்து
பொய்த்துப் போய் விட்டதாம்

மொழுமொழுப்பாய் குட்டிகள் ஈன்று
குலை தள்ளி நிற்கும்
வாழைக் குடும்பம்
எரிந்து, கருகி
எல்லாம் நாசம்.

சீறியும் குரைத்தும்
சீண்டி விளையாடும்
பூனையும் நாயும்
போன திசை தெரியாதாம்
புலம்புகிறாள் அம்மா.

www.tamilarangam.net


கவலை மை தோய்த்து
அம்மா தன் கனத்த நெஞ்சோடு
எழுதிய இன்னும் வரிகளில்

பசு பொழிந்த பாலிலே. வி'ம் இருந்து
அபி'க நைவேத்தியம் உண்டவர் அனைவரும்
இறந்ததால்
அம்மன் கோவில் நீலகண்ட சுவாமிகள்
கோவில் கிணற்றுக்குள்
உயிரைப் போக்கி சிவபதம் சேர்ந்ததாகவும்
விசாரணைக்காக உடலம் அமெரிக்காவுக்கு
விமானத்தில்
அனுப்பப்பட்டதாகவும் செய்தி.

எங்களுக்கெல்லாம்
எழுத்தறிவித்த இறைவன்
வாத்தியார் மயில்வாகனார்
சித்தப்பிரமையேறி
வெற்றுடம்போடு திரிவதாகவும்
மாடுகள் இனி கன்றீனாது என்றும்
நெல்விதைத்தால் இனி நெருஞ்சிதான்
முளைத்தெழும்பும் என்றும்
புலம்பியபடி திரிகிறாராம்.

நாட்டு நடப்பெல்லாம்
இப்படி தலைகீழானதென்று
என்னை கவலைக்குள் தள்ளி வைத்த
இக்கடிதத்திற்கு நான் எழுதிய பதில்
இது மீண்டும் துளிர்விடும்
பாலஸ்தீனமே!
அஞ்சாதீர்கள்... அம்மா

– சுகந்தன்

www.tamilarangam.net



# அய்ரோப்பாவில் புலம் பெயர்ந்த தமிழர்களின் எதிர்காலம்???...

இலங்கையில் இருந்து தமிழீழப்போர் காரணமாக வெளியேறி அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழர்களில் பலர் அவ்வவ் நாடுகளிலேயே நிரந்தரமாக வாழத் தொடங்கி விட்டனர். அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ இலங்கையின் சிறுபான்மை தேசிய இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள், தாம் குடியேறிய நாடுகளிலும் சிறுபான்மை இனமாகவே வாழ வேண்டியுள்ளது. இதனால் அந்நாட்டு அரசுகள் தமிழரையும் தமது நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களில் ஒன்றாகவே கருதும் பட்சத்தில், எல்லா நாடுகளிலும் உள்ளது போல சிறுபான்மை இனத்தவரின் பிரச்சனைகளுக்கு தமிழரும் முகம் கொடுக்க வேண்டும்.

எல்லோரையும் விட புதிதாக வரும் அகதிகளின் நிலை மிகவும் பரிதாபம். ''முகவரியில்லாதவர்கள்'' எனக் கூறப்படுவதற்கு ஏற்றவர்களாக வாழும் இவர்களை இந்த நாடுகளில் ''சிறுபான்மை இனத்தவர்'', ''வெளிநாட்டவர்'', ''குடியேறிகள்'' என்ற எந்தப் பிரிவுக்குள்ளும் சேர்க்கப்படுவதில்லை. இவர்களுக்கு அகதி அந்தஸ்து அல்லது நிரந்தர வதிவிட அனுமதி கிடைத்த பின்னர் தான் மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ''சட்டத்தின் முன்பு எல்லோரும் சமம்'' என்ற அரசியல் நிர்ணயச் சட்டத்தின் முதல் வசனம் இந்தப் புதிய அகதிகள் விஷயத்தில் மீறப்படுகின்றது. சட்டச்சலுகைகள் குறைக்கப்பட்டு அல்லது சட்டத்தை அரசுக்கு சாதகமாக மாற்றிக் கொள்வதால் பாதிக்கப்படும் இவர்கள் அதிகபட்சம் நாட்டை விட்டு வெளியேற்றுவதில் போய் முடிகின்றது. அய்ரோப்பிய அரசுகள் தமது அடக்குமுறையை தற்போது அகதிகளில் இருந்து ஆரம்பித்துள்ளதையே இது எடுத்துக் காட்டுகின்றது. உள்ளூர் மக்கள் ஏன் இதைப் பற்றி வாய் திறப்பதில்லை? அதற்குக் காரணம் அய்ரோப்பிய அரசுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கையாளும் பிரித்தாளும் சூழ்ச்சி தான். இந்நாட்டு தொழிலாளி வர்க்கமும், ஒடுக்கப்பட்ட மக்களும் தமது உரிமைகளுக்காக - உலக மக்களுக்காக வீதியில் இறங்காத வரை மேற்கத்திய அரசுகளின் மனிதாபிமான முகமூடி கிழியாது... வெளியில் தெரிய வராது.

உள்ளூர் மக்கள், அதாவது வெள்ளையின அய்ரோப்பியர், சுதேசிகளாக ஒரு பிரிவாகவும்; உலகம் முழுவதிலும் இருந்து வந்து இந்த நாடுகளில் குடியேறி வாழும் பல்லின மக்கள் வெளிநாட்டவர் என்ற இன்னொரு பிரிவாகவும் வகுக்கப்பட்டுள்ளனர். புதிதாக வரும் அகதிகள் இதில் எந்தப் பிரிவிலும் சேர்க்கப்படாமல் ''தீண்டத்தகாதவராக'' உள்ளனர். இவ்வாறாகஅய்ரோப்பாவில் நவீன சாதி சமுதாயம் அமைக்கும் முறை வெளிநாட்டுக் குடியேறிகளை என்றென்றும் கட்டுப்படுத்தி தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் நோக்கிலேயே அய்ரோப்பிய மைய அரசுகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதைப் பற்றி அரசிடம் யாராவது கேள்வியெழுப்பினால், எமது சமுதாயம் அப்படியிருக்கின்றது என மக்கள் மீது பழியைப் போட்டு தப்பிக் கொள்வார்கள். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளை நிறத் தோலுடைய யூதர் மற்றைய அய்ரோப்பியர் ஆகியோரே வெளிநாட்டுக் குடியேறிகளாகவிருந்தனர். இவர்கள் மிக விரைவிலேயே தாம் குடியேறிய நாடுகளின் மொழி, கலாச்சாரம் என்பனவற்றை உள்வாங்கிக் கொண்டதால் இவர்கள் இன்று சுதேசிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்! இரண்டாம் உலகப் போரின் பின்னர் குடியேறியவர்கள் குறிப்பாக ஆசியர், ஆப்பிரிக்கர் இலகுவில் வித்தியாசம் காணக்கூடிய தோல், நிறம், மொழி, மதம், கலாச்சாரம் என்பனவற்றை கொண்டிருந்ததால் வெளிநாட்டவர் என்ற பிரிவுக்குள் தள்ளப்பட்டு இன்று வரை அந்நிலை நீடிக்கின்றது. மேலும் உள்ளூர் ''சுதேசி'' மக்கள் தெற்காசிய ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வருபவர்களை ''கறுப்பர்கள்'' என வெகுசன மொழியில் அழைப்பதால் இந்த வகுப்புப் பிரித்தல் இன்னும் இலகுவாகின்றது. அய்ரோப்பாவில் நிலவும் இத்தகைய சமூகக் கட்டமைப்பானது புதிய நாசிகளின் நிறவாத அரசியலுக்கு வழி வகுத்துக் கொடுக்கின்றது. ஜேர்மனியிலும், பிரிட்டனிலும் அம்மணமாக வெளிப்படுகிறது. இதையிட்டு இங்கே மேற்கொண்டு அலசப்படவில்லை.

அய்ரோப்பிய நாடுகளுக்கு வந்த தமிழீழத் தமிழர்கள் அகதி அந்தஸ்து, நிரந்தர வதிவிட அனுமதி, தொழில் புரிய அனுமதி போன்ற ஏதாவதொரு அனுமதிப் பத்திரம் பெற்றோ அல்லது குடும்ப

www.tamilarangam.net



இணைப்பு / மீள் இணைப்பு என்ற திட்டத்தின் கீழ் வந்து சேர்ந்தவர் களாகவோ உள்ளனர். மற்ற நாடுகளில் இருந்து வரும் வேற்றினத்தவர் களுக்கும் இது பொருந்தும். நான் முன்பு குறிப்பிட்டபடி தமிழீழத் தமிழரும் வெளிநாட்டுக் குடியேறிகள் என்ற பிரிவுக்குள்ளேயே அடக் கப்படுகின்றனர். ஆகவே மொத்தமாக சிறுபான்மையினம் என அழைக்கப்படும் இம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் யாவும் அநேகமாக ஒரே மாதிரியானவை. விளங்கக் கூறின் இவர்கள் உள்நாட்டு வெள்ளைக்காரர் செய்ய விரும்பாத, தரங்குறைந்த தொழில் களையே செய்கின்றனர். இதனால் முதலாளிகளுக்கும் குறைந்த ஊதியம் கொடுக்க முடிகின்றது. இவர்களின் பிள்ளைகள் யாவும் ''கறுப்புப் பாடசாலைகள்'' என அழைக்கப்படும் தரங்குறைந்த, குறைந்த வருமானம் பெறுபவர்களின் பிள்ளைகள் படிக்கும், அரசுப் பாடசாலைகளிலேயே படிக்கின்றனர். மேற்குறிப்பிட்ட உதாரணங்கள் புலம் பெயர்ந்த தமிழரும் அய்ரோப்பிய சமூக அமைப்பில் மிகக் குறைந்ததும் இழிவானதாகவும் கருதப்படும் உழைக்கும் வர்க்கத்தில் வந்து சேர்ந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றன. இவர்கள் இவ்வாறு அய்ரோப்பிய வர்க்க அமைப்புக்குள் வந்து சேர்ந்ததற்கு உலகமயமா தலும் (Globalisation) ஒரு காரணம். இதையிட்டு பின்னர் வருவோம். அதற்கு முன்பு நவீன வர்க்க அமைப்பு முறை எப்போது உருவானது எனப் பார்ப்போம். தமிழ் அகதிகள் தற்போது ஏன் திருப்பி அனுப்பப் படுகிறார்கள் என்பதற்கும் விளக்கம் தரும்.

1945-ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்த போது, அது அய்ரோப்பாவில் பேரழிவுகளை விட்டு விட்டுச் சென்றது. அய்ரோப்பிய அரசுகளின் முதல் பிரச்சனையாக அழிவிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது. போர் பல கோடி மக்களை பலி கொண்டதால் மனிதவளப் பற்றாக்குறை ஏற்பட்டது. மறுபக்கத்தில் நிதி உதவியைப் பற்றி கவலைப்பட வேண்டியிருக்க வில்லை. ஏனெனில் ''மார்ஷல் உதவி'' என்ற திட்டத்தின் கீழ் அமெ ரிக்கா அய்ரோப்பிய நாடுகளுக்கு பல கோடி டொலர்களை நிதியுதவி யாக வழங்கியது. இந்த மார்ஷல் உதவித் திட்டமே பின்னர் ஐ.எம்.எஃப் (IMF) தோன்றக் காரணமாகவிருந்தது.

இவ்வாறு நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட அய்ரோப்பிய நாடுக ளுக்கு இருந்த அடுத்த பிரச்சனை, தமது பொருளாதார கட்டுமானப் பணிகளுக்கு தேவையான வேலையாட்களை எங்கேயிருந்து பெறுவது என்பதே. குறைந்த கூலிகளில் வேலையாட்களைப் பெறுவதற்காக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

குறிப்பாக துருக்கியுடனும், மொரோக்கோவுடனும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இவ்வாறாக பல்லாயிரக்கணக்கான துருக்கி, மொரோக்கோ ஒப்பந்தக் கூலியாட்கள் மேற்கு அய்ரோப்பிய நாடுகளுக்கு வந்தனர். இவர்கள் மிகக் கடின வேலைகளான கட்டிடங்கள் எழுப்புதல், சாலைகள் அமைத்தல், துப்பரவாக்கும் தொழில் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இத்தகைய வேலைகளை கடினமானதாகவோ அல்லது இழிந்ததாகவோ கருதியதால் உள்ளூர் மக்கள் இந்தத் தொழில்களை செய்ய விரும்பவில்லை. இந்த நிலை இன்று வரை நீடிக்கின்றது.

ஒப்பந்தக் கூலிகளின் உதவியினால் அய்ரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் வளர்ந்தது. இவை விரைவிலேயே பணக்கார நாடுகள் என்ற ஸ்தானத்தை அடைந்தன. அடுத்து வந்த தசாப்தங்களில் பொருளாதார வளர்ச்சிக்கு ஈடுக்கட்ட இன்னுமின்னும் மனிதவளம் தேவைப்பட்டது. இந்த மனித வளத்தைப் பெற்றுக் கொள்வது எப்படி? என்று யோசித்தவர்களுக்கு மூன்றாம் உலக நாடுகளில் இருந்த அகதிகள் கண்ணில் பட்டனர்.

முதலில் மேற்கு அய்ரோப்பிய நாடுகள் அகதிகளை வரவேற்று அங்கிகரிக்கும் திட்டம் ஏன்? எப்போது? உருவானது என்பதைப் பற்றி சிறிது மேலோட்டமாக பார்த்து விட்டு வருவோம். இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்பு அய்ரோப்பாக் கண்டம் இரு துருவங்களாக பிரிந்தது. மேற்கில் முதலாளித்துவ நாடுகள், கிழக்கில் சோஷலிச நாடுகள். இதில் மேற்கு அய்ரோப்பிய முதலாளித்துவ நாடுகள் தம்மை ''சுதந்திரமான ஜனநாயக'' நாடுகள் என அழைத்துக் கொண்டன. அவை கிழக்கு அய்ரோப்பிய சோஷலிச நாடுகளை ''சுதந்திரமற்ற சர்வாதிகார'' நாடுகள் என அழைத்தன. இதனடிப்படையில் சோஷலிச சர்வாதிகார நாடுகளில் அடக்கப்பட்டு சுதந்திரம் மறுக்கப்பட்ட மக்கள்; அங்கிருந்து தப்பி வந்து மேற்கு அய்ரோப்பாவில் தஞ்சம் புகுந்து சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் எனக் கூறியே எதிர்ப்புரட்சிகர சமூக சக்திகளை (அகதிகளை) வரவேற்கும் முறை ஆரம்பமாகியது. அவர்கள் எதிர்பார்த்தபடியே பல்லாயிரக்கணக்கில் கிழக்கு அய்ரோப்பாவில் இருந்து வெளியேறி தஞ்சம் புகுந்த அகதிகளுக்கு சகல வசதிகளும் அளிக்கப்பட்டன. இவ்வாறு அகதிகளுக்கு தஞ்சம் அளிக்கும் முறையை தமது உலக அரசியல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகவே கையாண்டனர்.

இருப்பினும் சோஷலிச நாடுகளின் அகதிகளுக்கு மட்டுமே தஞ்சமளிப்பது என்ற நடைமுறை எழுதப்படாத சட்டமாகவே இருந்து வந்தது. இந்நாடுகள் இதை பகிரங்கமாகச் சொன்னால் பாரபட்சம் காட்டுவதாக தம் மீது குற்றச்சாட்டு எழும் என்ற அச்சமும் இருந்தது. இந்நிலையில் எதிர்பாரா விதமாக மூன்றாம் உலக நாடுகளில் இருந்தும் உள்நாட்டு யுத்தங்களால் அகதிகள் வரத் தொடங்கினர். இவர்களில் பலர் முன்னாள் அய்ரோப்பிய கொலனிகளில் இருந்து தமது கொலனித்துவ எசமானர்களின் நாடுகளுக்கே வந்தனர். உலகில் கொலனித்துவம் முடிவுக்கு வந்த பின்னர் அந்த நாடுகளில் எழுந்த அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் உள்நாட்டுப் போர்களை தோற்றுவித்தன. இதனால் தமது முன்னாள் கொலனிகளில் இருந்து வரும் மக்கள் தமது நாடுகளில் தஞ்சம் கோர உரிமை உண்டு என ஏகாதிபத்திய அரசுகள் நன்றாகவே புரிந்து வைத்திருந்தாலும்; அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், புதிதாக ''அகதிகள் பிரச்சனை''யை உருவாக்கி விட்டனர். இந்த அரசியல் இன்று வரை நீடிக்கின்றது. ஏதோ வேண்டாத விருந்தாளிகளாக தமது நாடுகளுக்குள் நுழைந்து விட்டாலும், இந்தப் ''பல்லின அகதிகளையும்'' தமது பொருளாதார தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் என மேற்கு அய்ரோப்பிய அரசுகள் கண்டு கொண்டன. மேலும் மேலும் தொழிலாளர்கள் தேவைப்பட்ட, இன்றுவரை கீழ்த்தர வேலைகள் என கருதப்படும் துப்பரவாக்கல் பணி, தோட்ட வேலை என்பனவற்றில் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் தொழிலாளர் பற்றாக்குறையை தீர்த்துக் கொண்டன. இதில் ஒரு வித்தியாசம் என்னவெனில் முன்பு ஒப்பந்தக் கூலிகளை அழைத்து வந்த போது அவர்களின் பயணச் செலவுகளையும் பொறுக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்தப் ''புதிய கூலிகள்'' தாமாகவே வருகின்றனர். அகதிகளை வேலை செய்ய அனுமதிப்பது தமது பொருளாதார நன்மை கருதியே என்பதை புரிந்து கொள்ள கீழ்வரும் உதாரணம் போதும் என நினைக்கிறேன்: நெதர்லாந்தில் அண்மைக் காலம் வரை தஞ்சம் கோரி விட்டு அங்கீகாரத்துக்காக காத்திருக்கும் அகதிகள் வேலை செய்ய முடியாது என்ற தடை அமுலில் இருந்தது. இரு வருடங்களுக்கு முன்பு பூந்தோட்டங்களிலும், பழத்தோட்டங்களிலும் வேலைக்கு அபரிதமான தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனை ஈடுகட்ட அகதிகளை வேலை செய்ய அனுமதி வழங்குமாறு தோட்ட முதலாளிகள் அரசிடம் கோரினர். அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அரசாங்கம், 3 மாதங்கள் (இது அநேகமாக பழம் பிடுங்கும் காலம்) அகதிகள் வேலை செய்யலாம் என அனுமதி வழங்கியது.

www.tamilarangam.net

இந்த அய்ரோப்பிய நாடுகளில் இருக்கும் வசதி மற்றும் வேலை வாய்ப்புகளை கேள்விப்பட்டு மேலும் மேலும் புதிய அகதிகள் படையெடுக்கலாம். இவர்கள் அநேகமாக வறிய நாடுகளிலிருந்தே வருவதால் இது இன்னும் சாத்தியம். இந்நிலையில் இந்த ''அகதிகள் படையெடுப்பை'' கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். அதற்கு என்ன செய்வது? என்ற கேள்விக்கும் அய்ரோப்பிய அரசுகள் தயாராவிருக்கின்றன. இதற்கும் ஒரு உதாரணம் காட்டலாம். சுவிட்சர்லாந்தில் 1990 ஆண்டு வரையில் வந்த அகதிகளில் எவரையும் திருப்பியனுப்பாமல், அதே நேரம் தகுந்த விசாரணையோ, முடிவோ எதுவுமில்லாமல் வைத்திருந்தனர். சுவிஸ் அரசின் இந்த ''தாராள மனப்பான்மையை'' எண்ணி வியந்து கொண்டிருந்தவர்களுக்கு வந்தது அதிர்ச்சி. 1990-ற்கு பின்பு வந்த அகதிகள் உடனுக்குடன் விசாரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டனர். இந்த அதிர்ச்சி வைத்தியம் பலன் தரவே, அந்த நாட்டிற்கு செல்லும் அகதிகளின் தொகை குறைந்தது. ஏன் இந்த மாற்றம்? சுவிட்சர்லாந்து முழுவதும் பரவலாகக் காணப்படும் உணவகங்களில் அகதி உழைப்பாளர்கள் குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு (சட்டப்பூர்வமாக) சுரண்டலுக்குள்ளாகுகின்றனர். இருப்பினும் எண்பதுகளின் இறுதியில் உருவான பொருளாதாரத் தேக்கம் வேலையற்றோர் விகிதத்தை அதிகரித்ததுடன், தொழிலாளர் குறைப்புச் செய்ய வேண்டிய தேவையேற்பட்டது. தனது நாடு பொருளாதாரச் சிக்கலில் சிக்கித் தவிக்கையில் புதிதாக அகதி உழைப்பாளிகளை இறக்குமதி செய்ய சுவிஸ் அரசு தயாரில்லை. இதற்கு, விஷயம் தெரியாது நாட்டுக்குள் நுழைந்த புதிய அப்பாவி அகதிகள் பலியாகினர்.

இவையெல்லாவற்றையும் விட இன்னொரு பிரச்சனையும் மேற்கு அய்ரோப்பிய நாடுகளுக்கு உண்டு. அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் நிரந்தரமாக இங்கேயே தங்கி விடுவார்கள். இவர்களின் இனமும் வருங்காலத்தில் பல்கிப் பெருகி விடும். இப்படியே போனால் அய்ரோப்பிய நாடுகள் பல்லினக் கலாச்சாரம் கொண்ட நாடுகளாக மாறி விடும். இந்தப் பிரச்சனையை தீர்க்க இவர்கள் கையாளும் அரசியல் பயங்கரமானது. புதிய நாஸிகளை கொம்பு சீவி விடுவதே அது. ஜெர்மனியில் வளர்ந்து வரும் நாஸிஸ பயங்கரவாதத்தை ஜெர்மன் அரசு கண்டும் காணாதது போல் இருக்கின்றது. இப்போதைக்கு இந்தப் பிரச்சனை அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தாலும்; எதிர்காலத்தில் பொருளாதாரப் பிரச்சனை மோசமடையும் காலத்தில் வெளிநாட்டவர் மீது நாஸிஸ பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படும். அப்போது தான்

www.tamilarangam.net


புலம்பெயர்ந்த தமிழர்களும் தமது எதிர்காலம் பற்றி தவிர்க்க முடியாமல் சிந்திக்கும் நிலைமை ஏற்படும்.

புலம் பெயர்ந்த தமிழரிடம் தம்மைப் பற்றிய உணர்வு இன்று வரை எழாததற்கு காரணம் என்ன? உலகில் பொதுவாக தற்போது மொழி, இன உணர்வுகள் மேலோங்கியிருப்பதைக் காணலாம். இயல்பாகவே ஒரே மொழி பேசுவோர், ஒரே கலாச்சாரத்தை கொண்டோர், ஒரே தேசியத்தையுடையோர் ஒத்துப் போவது வழக்கம். இதில் தமிழரும் விதிவிலக்கல்ல. இந்த மொழி, தேசிய உணர்வுகள் கடந்த 200 வருடங்களுக்குள் உருவானவை என்பது பலருக்குத் தெரியாத விடயம். அதற்கு முன்பு மத உணர்வுகளே மேலோங்கியிருந்தன. அநேகமான தேசியங்கள் மொழியடிப்படையில் ஒன்றுபடுகின்றன. இந்த தேசியத்தையும், மொழியையும் வளர்ப்பதில் கலாச்சார நிறுவனங்கள், மற்றும் தொடர்பூடகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. ஆனால் இந்த ஊடகங்கள் இதற்கு மேலே போவதில்லை. இந்த ஊடகங்கள், கலாச்சார நிறுவனங்கள் என்பனவற்றின் முக்கிய நோக்கம் பணம் சம்பாதிப்பதாகும். சமூக அக்கறையல்ல. இதனால்தான் சினிமாவைப் பற்றி அலசும் நேரத்தில் நூற்றில் ஒரு பங்கைத் தானும் அகதிகள் பிரச்சனையைப் பற்றி அலச ஒதுக்குவதில்லை. இவை ஊட்டும் போதையில் மயங்கிக் கிடக்கும் மக்கள் தமக்கு வரும் / வரப் போகும் பாதிப்புகளைப் பற்றி கவலைப்படுவதில்லை. அய்ரோப்பிய மொழியறிவு அதிகமில்லாத தமிழ் மட்டுமே தெரிந்த மக்கள் தகவல்களைப் பெறுவதற்கு இந்த தொடர்பு ஊடகங்களையே தங்கியிருக்க வேண்டிய பரிதாபம், அய்ரோப்பிய அரசியலைப் பற்றிய அறியாமையை ஏற்படுத்தி விடுகின்றது. கடலின் நடுவே உள்ள தனித் தீவுகள் போல வாழும் இவர்கள் தங்களைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அதிகம் அறியாதவராகவே உள்ளனர். இதுவே புலம் பெயர்ந்த தமிழர்கள் தமது அகதி வாழ்க்கை என்ன என்பதை அறியாதிருப்பதற்கு காரணம்.

ஆனால் இந்த நாடுகளில் வளரும் பிள்ளைகள் தமது சூழல் என்னவென்பதை ஓரளவேனும் அறிந்துள்ளனர். புலம் பெயர்ந்த நாட்டிலும் சாதி அமைப்பை பாதுகாக்க விரும்பும் சில பெற்றோர் தமது சொந்தப் பிள்ளைகளிடையே பரிகசிப்புக்கு ஆளாகின்றனர். இதே பிள்ளைகள் நாளை நமது அகதி நிலை பற்றியும் இடித்துரைப்பார்கள். இது ஒருபுறமிருக்க, மறுபுறம் நிறவெறியால் பாதிக்கப்படும் தமிழர்கள் வேறு வழியின்றி அய்ரோப்பாவின் முற்போக்குச் சக்திகளின் ஆதரவைத் தேட வேண்டி நேரிடும். இப்போது மெல்ல மெல்ல உருவாகி வரும்

இந்த நிலை, இனி வருங்காலத்தில் பெரிதாக வளரும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இதையே ஒரு சிலர், புலம் பெயர்ந்த மக்களை நாளை வரவிருக்கும் புரட்சியின் சேமிப்புச் சக்திகள் எனக் குறிப்பிடுகின்றனர். மக்கள் அரசியலைப் பற்றிக் கொள்வதில்லை, அரசியல் மக்களைப் பற்றிக் கொள்ளும்.

அடுத்து வரும் காலங்களில் புலம் பெயர்ந்த தமிழ் மக்களை போராட்டத்தை நோக்கி தள்ளி விடும் உந்து சக்தியாக வறுமை இருக்கும். இந்நாடுகளில் வறுமை எங்கே இருக்கின்றது எனக் கேட்பவர்களுக்கு ஒரு உதாரணம். வேலையில்லாமல் சமூக நல ஊதியம் பெறுபவர்கள் அல்லது மிகக் குறைந்த வருமானம் பெறு பவர்கள் யாவரையும் வறியவர்களாகவே அய்ரோப்பிய அரசாங்கங்கள் கணக்கெடுக்கின்றன. இவர்கள் பொதுவாக உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவினால் கஷ்டப்படுகின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் பாவித்த பொருட்கள் விற்கும் கடைகளை நாடிச் செல்வது வறுமையின் அறிகுறி. சிலர் நினைப்பது போல தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி மற்றும் கார் ஆகியவற்றின் உபயோகம் பணக் கார அந்தஸ்தைக் காட்டும் ஆடம்பரப் பொருட்களாக இந்நாடுகளில் பார்க்கப்படுவதில்லை. நுகர்பொருள் கலாச்சாரத்தை அடிப்படை யாகக் கொண்ட பொருளாதாரம் அனைவரும் இவற்றை வாங்கிப் பாவிக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றது. இதற்காக குறைந்த வருமானம் பெறும் சாதாரணக் குடிமகனும் வாங்கக் கூடியவாறு கடன் வழங்குதல், தவணை முறையில் பணம் செலுத்துதல் போன்ற "நிதி உதவிகள்" செய்யப்படுகின்றன. இந்த மாயவலையில் சிக்கி பொருட் களை வாங்கிக் குவித்தவர்கள் பின்னர் நிரந்தரக் கடனாளியாகப் போன வர்கள் ஏராளம். சிலர் சாகும் வரை கடன் வழங்கிய வங்கிகளுக்காக உழைக்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பல புலம் பெயர்ந்த தமிழரும் இந்த நுகர் பொருள் கலாச்சாரத்துக்கு அடிமையாக வுள்ளனர் என்பது இரகசியமல்ல.

"உலகமயமாதல்" ஏழை நாடுகளில் மட்டுமல்ல, பணக்கார நாடு களிலும் புதிய ஏழைகளை உருவாக்குகிறது. உதாரணத்திற்கு இன்று பல ஜெர்மனிய பன்னாட்டுக் கொம்பனிகள், ஜெர்மனியில் உற்பத்திச் செலவு அதிகம் என்பதால் அங்கே தமது தொழிற்சாலைகளை மூடி விட்டு, அயல்நாடான போலந்தில் தொழிற்சாலைகளை திறந்து அங்கே குறைந்த ஊதியத் தொழிலாளரை வைத்து உற்பத்திச் செலவு களை குறைத்துக் கொள்கின்றன. இதனால் ஆயிரக்கணக்கான ஜெர்ம

www.tamilarangam.net



னிய தொழிலாளர்கள் வேலையிழந்தனர். இப்படி வேலையற்ற மக்கள் காலப்போக்கில் வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட முடியாததால் ஏழை களாகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் கோபத்தை புதிய நாஸிகள் வெளிநாட்டுத் தொழிலாளருக்கும், அகதி களுக்கும் எதிராகத் திசை திருப்பி விடுகின்றனர். புதிய நாஸிகள் மட்டு மல்ல தற்போதைய அரசாங்கங்களும் இதனால் அரசியல் ஆதாயம் பெறுகின்றனர். புதிய நாஸிகளுக்கு தங்கள் பக்கம் ஆட்களை சேர்த்து விட்ட திருப்தி; அரசாங்கத்திற்கோ உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழி லாளர்களை பிரித்து விட்ட திருப்தி. இந்த நிலை எவ்வளவு தூரத்திற்கு வளர்ச்சியடையப் போகின்றது என்பதிலேயே புலம் பெயர்ந்த தமிழரின் (நிச்சயமற்ற) எதிர்காலமும் தங்கியுள்ளது. மக்கள் மேலும் இன ரீதியாகப் பிளவுபடின், அது மீண்டும் பாஸிஸ கொலைகளுக்கே இட்டுச் செல்லும். அய்ரோப்பிய தொழிலாளர்கள் பாஸிஸ திசை திருப் பல்களுக்கு மயங்காது தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தின் பக்கம் உறுதியாக நிற்பின், அவர்களுடன் வெளிநாட்டுத் தொழிலாளர்களும் வர்க்க அடிப்படையில் இணைந்து போராடுவர்.

மேற்கத்திய ஏகாதிபத்திய அரசுகளின் ''அகதிக் கொள்கை'' இவற் றுக்கும் அப்பால் நவகொலனிய நாடுகளில் நடக்கும் தேசிய விடு தலைப் போராட்டங்களில், ஏகாதிபத்திய எதிர்ப்பற்ற சமூகப் போக் கையும் தற்காலிகமாக உருவாக்கியுள்ளது. ஏகாதிபத்திய அமைப்புக்கு விசுவாசமான ஒரு கணமும் பிரிந்து வாழ முடியாத சமூக சக்திகளை (தொழிற்துறை முதல் NGO சமூக சேவை வரை) நவகொலனிய நாடு களிலும், புலம் பெயர்ந்தவர்கள் மத்தியிலும் உருவாக்கியுள்ளது. ஏகா திபத்தியத்தின் அகதி மனிதாபிமானக் கொள்கை. போராட்டக்களங் களிலுள்ள முதலாளிய - குட்டி முதலாளிய இயக்கங்கள், மிதமிஞ்சிய தேசிய உணர்வை வெளிப்படுத்தி ஏகாதிபத்திய சார்பை மறைக் கின்றன. புரட்சிகரமான தொழிலாளி வர்க்க தேசபக்த சக்திகளே தமது தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தொழிலாளி வர்க்க சர்வ தேசியக் கண்ணோட்டத்தில் முன்னெடுக்க முடியும். இன்றைய ஏகாதி பத்திய உலகின் பொருளாதார, அரசியல் பண்பாட்டு நிலைமைகளை புரிந்து உலகு தழுவிய அளவில் தமது சொந்த தேசங்களின் விடுதலை யையும் சர்வதேச தொழிலாளி வர்க்கப் புரட்சியையும் ஒன்றிணைக்க முடியும். சொந்த தேசிய இன முதலாளித்துவத்தின் பாதையை தோற்கடிக்க முடியும்.

ஏற்கனவே அய்ரோப்பாவில் வர்க்க வித்தியாசம் இன வித்தியாசமா கவும் உள்ளது. இது எப்படி ஏற்பட்டது என்பதை ஆரம்பத்திலேயே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுட்டிக் காட்டியுள்ளேன். அதாவது உலக யுத்தத்திற்கு முன்பு ஏழைத் தொழிலாளராகவிருந்த அய்ரோப்பிய மக்களின் கீழ் மட்ட வர்க்க நிலை யுத்தத்தின் பின்னர் மத்தியதர வகுப்பாகியது. ஏழை விவசாயிகள் அரசு மானிய உதவியால் பண்ணைகளின் உரிமையாளரானார்கள். கல்வியறிவில்லாத மக்களுக்குக் கூட அதிக சம்பளத்துடன் வேலை வாய்ப்பளிக்கப்பட்டது. இத்தகைய மாற்றத்தால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறுதான் வர்க்க வித்தியாசம் இன ரீதியாக மாறியது. இந்த வித்தியாசத்தை அப்படியே வைத்திருக்க அரசு பலவாறும் முயல்கின்றது. இவற்றில் ஒன்றுதான் ''கறுப்பு/வெள்ளை''ப் பாடசாலைகள். அதாவது அதிக வருமானம் பெறும் (பெரும்பான்மையாக வெள்ளைக்கார அய்ரோப்பியர்) பெற்றோர் தமது பிள்ளைகளை சிறந்த கல்வித் தரம் வாய்ந்த, அதிக பணம் கேட்கும், தனியார் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். இவை **"வெள்ளைப் பாடசாலைகள்"** என அழைக்கப்படுகின்றன. குறைந்த வருமானம் பெறும் (பெரும்பான்மையாக பல்லின வெளிநாட்டுத் தொழிலாளர்கள்) பெற்றோர் தமது பிள்ளைகளை அரசுப் பாடசாலைகளுக்கே அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம். இவை **"கறுப்புப் பாடசாலைகள்"** என அழைக்கப்படுகின்றன. அய்ரோப்பாவில் அரசு தவிர்ந்த அனைத்துத் துறைகளும் தனியார்மயப் படுத்தப்பட்டு வரும் காலத்தில் இது போன்ற பிரிவினைகள் இன்னும் அதிகமாகலாம்.

கடந்த 50 வருடங்களாக அய்ரோப்பாவில் ''வர்க்கச் சமரசம்'' நிலவுகின்றது. அதாவது வர்க்க முரண்பாடுகள் வளர்ந்து மோதாமல் தடுக்கப்பட்டு அனைத்து வர்க்கங்களும் சமாதானமாக வாழும் வகை செய்யப்பட்டுள்ளது. ''**நலன்புரி அரசின்**'' நோக்கமும் இதுதான். ஆனால் வரவிருக்கும் அய்ரோப்பிய ஒன்றிய அரசு (EU) இதுவரை மக்கள் அனுபவித்து வந்த சலுகைகளை ஒன்றன் பின் ஒன்றாக பறிக்கவிருக்கின்றது. இதனால் மக்கள் உழைப்பை தவிர இழப்பதற்கு எதுவுமற்ற ஏழைகளாகும் போது வர்க்க முரண்பாடுகளும் விரிவாகும். இதனால் பெருமளவில் வெளிநாட்டவரை கொண்ட உழைக்கும் வர்க்கம் பாதிக்கப்படும். இத்தகைய நிலையில் புலம் பெயர்ந்த தமிழ் மக்களும் உழைக்கும் வர்க்க அரசியலுக்குள் தள்ளப்படுவதை யாராலும் தவிர்க்க முடியாது, தடுக்க முடியாது.

**— யூரேசியன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ அகதிகளைப் புறக்கணித்த உலகத் தமிழ் இனி 2000

2000-ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 1,2,3, திகதிகளில் சென்னை நகரில், அட்லாண்டிக் ஹோட்டலில் சரிநிகர் (சேரன்) - காலச்சுவடு அறக்கட்டளையும் இணைந்து "தமிழ் இனி 2000" உலகத்தமிழ் இலக்கியக் கூட்டத்தை நடத்தி முடித்தனர். இதன்பின் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியத் துறையில், ஈழத்து எழுத்தாளர்களுடன் "போரும் இலக்கியமும்" என்ற பெயரில் பேராசிரியர் வீ. அரசு ஒரு சந்திப்பையும் நடத்தினார்.

இந்த உலகத் தமிழ் இலக்கிய அரங்கான, தமிழ் இனி, புதுமைப் பித்தன் அரங்கு, கைலாசபதி அரங்கு என இரண்டு அரங்குகளில் மூன்று நாட்கள் நடந்தது. 45 அமர்வுகளில் 8 நாடுகளில் இருந்து வந்தவர்கள் தமது கருத்துக்களை முன் வைத்தனர். 1000 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். அரங்குகளில் படிக்கப்பட்ட கட்டுரைகள், ஆய்வுக் குறிப்புகள் 50 பிரதி முதல் 150 வரை விற்பனையாகியது. 25,000 ஒளி நகல்கள் (xerox) எடுக்கப்பட்டது. தமிழ் இனி முடிவில் 50 புதிய வெளியீடுகளுக்கான உடன்படிக்கைகள் நடந்தேறியது. 5 இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் விற்பனையாகியது மிகப் பெரிய உலகு தழுவிய திட்டமிடல் tamil-ini-2000 -org மூலம் தமிழ் இனி 2000 நடந்து முடிந்தது.

இந்தத் தமிழ் இனியில், இலங்கையில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் 25-க்கும் மேற்பட்ட தமிழீழ பிரதிநிதிகள் அரங்கின் அமர்வுகளில் பல தலைப்புகளில் பேசினர். கட்டுரை சமர்ப்பித்தனர். புலம் பெயர்ந்த இலக்கியம், அகதி இலக்கியம், தமிழீழப் போர்க்கள இலக்கியம் இவற்றுக்கு இடையிலான ஒற்றுமைகள், வேற்றுமைகள், பரஸ்பரம் பிரிக்கமுடியாத உறவுகள் குறித்து திட்டவட்டமான வெளிப்படுத்தல்கள் இருக்கவில்லை. தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட தமிழ் இனி 2000-இல் தமிழ்நாட்டில் அகதி முகாம்கள், சிறப்பு முகாம்கள், முகா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மிற்கு வெளியே இருப்போர் இலட்சக்கணக்கான அகதிகளின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சனைகள் பற்றியோ **தமிழீழ அகதி இலக்கியம்** பற்றியோ பேசப்படவில்லை. உலகத் தமிழ் இலக்கியவாதிகளின், அரங்கின் 45 அமர்வுகளில் ஒன்று கூட இதற்கு ஒதுக்கப்படவில்லை.

தமிழ்நாட்டு அகதி முகாம்களில் இருந்து, கையெழுத்து சிறு வெளியீடுகள் வருகின்றன. அகதிகளின் உரிமைக்காக குரல் கொடுக்கும் அமைப்புகள் இருக்கின்றன. அகதிகள் மத்தியில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், அறிவாளிகள் இருக்கிறார்கள். ''ஈனத் தொழில்'' என்ற அகதி பற்றிய நாவலைப் படைத்த செ. கணேசலிங்கம் சென்னையில் தான் இருக்கின்றார். அமர்வில், இலங்கை, இந்தியாவில் உள்ள தமிழீழ அகதிகள் பற்றிப் பேசப்படவில்லை. ஒரு தலைப்பு இல்லை, அகதிகள் மத்தியில் இருந்து அகதிகள் பிரச்சனை பற்றிப் பேசக்கூடியவர்கள், கட்டுரை முன் வைக்கக் கூடியவர்கள் அழைக்கப்படவில்லை. இதுதான் தமிழ் இனி 2000.

அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்குச் சென்ற தமிழீழ அகதிகளின் மத்தியிலுள்ள சில அறிவு ஜீவிகளின் அரசியல் இலக்கிய போக்குகளே, இங்கு விளம்பரப்படுத்தப்பட்டது. அவர்களின் பொருளாதாரப் பலம் இதற்கு ஒரு முக்கிய காரணம் அவர்கள் **அகதி அரசியல் - அகதி இலக்கியம்** பற்றி அக்கறை கொள்வதில்லை, அய்ரோப்பாவில் தலித் இலக்கியம், பெண்ணியம் பேசுபவர்களில் கூட சிலர், தங்களை அகதிகளாக ஏற்றுக் கொள்வதில்லை. அந்தளவுக்கு **அகதி என்றால் அநாகரீகமாக** பார்க்கப்படுகிறது. **புலம் பெயர்ந்தவர்கள் புலம் பெயர் அரசியல் - இலக்கியம்** இந்த நாகரீகப் பெயரில்தான் தங்களை வெளிப்படுத்துகின்றனர்.

இந்தப் புலம் பெயர் அரசியலும், இலக்கியமும் அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளில் மட்டுமல்ல. இந்தியாவிலும் கொடி கட்டிப் பறக்கிறது. தமிழீழ அகதிகளின் அரசியலை - இலக்கியத்தை இது மூடி மறைக்கிறது. புலம் பெயர் அரசியல் - இலக்கியம் என்ற பெயரில் இலங்கையிலும், இந்தியாவிலும் அய்ரோப்பிய / அமெரிக்காவில் வாழும் அகதிகளின் **அகதி அரசியல்** மூடி மறைக்கப்படுகின்றது. புகலிட வாழ்வில் தாங்கள் கற்றுக் கொண்ட மேற்கத்திய 'அனார்கிய அரசியலைக் கலாச்சாரத்தை' தங்களின் பொருளாதார மேலாண்மையைக் கொண்டு தமிழீழ மக்களின் மேல் மட்டுமல்ல. உலகத் தமிழ் மக்கள்

www.tamilarangam.net



மேல் திணிக்க முயல்கிறது. உலகமயமாதலின் விளைவு இலங்கை - இந்தியா போன்ற நாடுகளிலும் ஒரு அனார்க்கிய, அரசியல் கலாச்சா ரப் போக்கும் உருவாகியுள்ளது. இவர்களுக்கு இடையில் ஒரு உலகக் கூட்டும் உருவாகி வருகிறது.

எவ்வாறு மேற்கத்திய நாடுகளின் மீது ஒரு மோகம் பரவலாக திட்ட மிட்டு விதைக்கப்பட்டதோ, அதற்கு மக்கள் பலியாக்கப்படுகிறார் களோ அதேபோல நமது நாடுகளின் தமிழ் அரசியல் - இலக்கிய வட்டத்திலும், புலம் பெயர்ந்த தமிழர்களுடன், அவர்களின் அரசியல் - இலக்கிய போக்குகளுடன் உறவு வைத்துக் கொள்வதிலும், அவர்க ளுடன் கூட்டத்தில் பேசுவதிலும், இலவசமாக வெளிநாடு போய் வரு வதிலும் தோழர்களுக்கும் கூட ஒரு மோகம் இருக்கிறது. அவர்களது வெளியீட்டில் எழுதுவதிலும் கொஞ்சம் பணம் சேர்ப்பதில் கூட புலம் பெயர்ந்தவர்களின் ÷ பணமதிப்பு பலதையும் செய்கிறது.

தமிழ் இனியின் திட்டமிட்ட மூன்று நாள் அமர்வுகளிலும் பார்வை யாளர்களாக கலந்து கொண்ட, தமிழ்நாட்டில் உள்ள தமிழீழ அகதிகள், அகதி அரசியல் - இலக்கியத்தில் அக்கறையுள்ள சிலர், தமிழ் இனியின் ''அகதிகளின் இலக்கிய''ப் புறக்கணிப்பை புரிந்து கொண்டபோதும், குறைந்த பட்சம், இலங்கையில், அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளில் இருந்து வந்திருந்த தமிழீழத்தவர்களிடம் தங்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தி, தமிழ்நாட்டு அகதிகள் நிலமை பற்றி, தமிழ் இனி முடிந்தபின், (அரங்கிலோ - புல்வெளியிலோ) கூடிக் கலந்துரையா டலாம் என வேண்டுகோள் விடுத்தனர். பொறுப்புள்ள சரிநிகர் நபர்கள் 'அவரைக் கேளு - இவரைக் கேளு' என்றனர். வேறு சிலர் கூட்டம் முடிந்த சந்தோசத்தில் மூழ்கும் ஹோட்டல் சமாச்சாரங்களில் மட்டும் அக்கறை காட்டினர். வேறு சிலர், தமிழ்நாட்டு இலக்கியச் செல்வர்க ளுடன் ஊட்டி, பெங்களூர் செல்வதற்கு ஆன பயணத் தயாரிப்புக் களில், காது கொடுத்து கேட்க நேரம் இன்றி இருந்தனர். ஒரு சிலர் மட்டும், ''ஏன் தம்பி இவங்களிட்ட கேட்கறீங்க, இவங்கள் **Project Work** பண்ணிற ஆளுக, அகதிகளைப் பற்றி பேசினா, அதுலயும் காசு வரும் என்றா வருவாங்க'' நீங்க நேரத்தோட வீட்டுக்குப் போங்க தம்பி' என்றனர்.

தமிழ் இனி 2000-க்கு முன்பும், பின்பும் தமிழ் இனி தொடர்பாக தமிழ்நாட்டு சிறு பத்திரிகைகளும், தினசரிகளும் செய்தி வெளியிட்டு இருந்தன. அதேவேளை நிறப்பிரிகை இதழ் 10 தமிழ் இனி தொடர்பாக

வேறு ஒரு கண்ணோட்டத்தை வெளியிட்டது. இதற்கு 30 இலட்சம் ரூபா வரை செலவழிக்கப்பட்டதாகவும் எழுதியது (படிக்கவும் நிறப்பிரிகை 10-வது இதழ்) இதற்கு காலச்சுவடு 32வது இதழில் கண்ணன் என்பவர் தமிழ் இனி பற்றி விலாவாரியாக விளக்கம் எழுதியுள்ளார். கூடவே ''ஞாபகமறதி'' என 5 குறிப்புகளையும் முன் வைத்துள்ளனர். அறிவாளிகள், புலமையாளர்களின் கோல்மால்களை கோடிட்டுள்ளது.

காலச்சுவடு தாங்கள் நிதி நிறுவனங்களிடம் தமிழ் இனி நடத்த நிதி கேட்டதை ஒப்புக் கொண்டுள்ளனர். அமெரிக்காவிலுள்ள ''விளக்கு'' நிறுவனத்திடம் கேட்டதை ஒப்புக் கொண்டு அதற்கு 'பரிசு' நியாயம் கூடக் கூறியுள்ளனர். அவர்கள் தங்களின் வரவு - செலவை வெளிப்படையாக வெளியிடுவோம் எனக் கூறுவதால் - வெளிவந்தபின் வாசகர்கள் புரிந்து கொள்ள வழி பிறக்கும்.

தமிழ் இனி 2000-ல் இருந்து நிறப்பிரிகை தான் ஒதுங்கி நிற்பதற்காக கூறிய பல காரணங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. (ஆனால் நிறப்பிரிகை ஆசிரியரின் சூழ்ச்சிகள் பற்றிய காலச்சுவட்டின் குறிப்புகளும் கணக்கில் எடுக்கப்படவேண்டும்) நிறப்பிரிகையின் நுண் அரசியல் - இலக்கிய சிந்தனையானது தமிழ் இனியின் 'மெகா கும்ப மேளாவை' புறக்கணிப்பதாக எழுதியுள்ளது. இதே நிறப்பிரிகை 1994-இல் திருச்சியில் புலம் பெயர்ந்தோர் மாநாட்டை நடத்தியது. அதில் பல நாடுகளின் புலம் பெயர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டு அகதிகளின் பிரச்சனை பேசப்பட்டது. மலர் வெளியீட்டில் கூட தமிழ்நாட்டு அகதிகளின் அரசியல் பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சனை தொடர்பான கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. (இந்தளவுக்குக் கூட தமிழ் இனியில் அகதி பிரச்சனை பேசப்படவில்லை)

அரசியலிலும் - இலக்கியத்திலும் சிறு முயற்சிகள் மட்டும்தான் சரி, மெகா முயற்சிகள் தவறு என, சிறிது பெரிதில் இருந்து சரி - தவறை தீர்மானிப்பதை விட எதுவாக இருந்தாலும் குறிப்பிட்ட காலத்தில் அடிதட்டு மக்கள் சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளை, இருப்புக்கான சமூகத் தேவையை வலியுறுத்தும் நோக்கில் கலந்துரையாடல், பேச்சு, எழுத்து, மாநாடு, வாசிப்பு, மீள் வாசிப்பு இருக்கிறதா? இல்லையா, தேசிய இனம், மொழி, தலித், பெண், கறுப்பர்,... என ஒடுக்கப்படும் பிரிவுகள் அனைத்திலும் உள்ள தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை எதிர்காலம் பற்றிய கேள்வியுடன் விடயங்கள் ஆய்வு செய்யப்பட

www.tamilarangam.net



வேண்டும். இதில் நுண்ணியல் ஆய்வும், பேரியல் ஆய்வும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத அளவுக்கு இணைந்திருக்கிறது. இதில் ஒன்றை ஒன்று நிராகரிப்பது என்பது உலகமயமாதலின் முழுத் தோற்றத் தையும், அதன் பகுதித் தன்மைகளின் விசேட பண்புகளையும் அறிய முடியாத ஆய்வு நிலைக்கு இட்டுச் செல்லும்.

இன்று உலகமயமாதலின் போக்கை எதிர்த்து நிற்கும் சக்திகளிடம் இந்த இரண்டு ஆய்வுமுறைகளையும், எதிர் எதிர் முனையில் நிறுத்து வதன் மூலம், உலகமயம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயல்கின் றது. சமூக விஞ்ஞானம் குறித்த கல்வி முறைக்குள் இவ் எதிர் புதிரான ஆய்வு முறையை திட்டமிட்டே மேற்கத்திய பல்கலைக்கழகங்கள் புகுத்துகின்றது. பிரித்தாளும் சூழ்ச்சியை சிந்தனை முறைக்குள்ளேயே புகுத்தி விடுகின்றனர். சுரண்டல் முறையை, சமூக ஆதிக்கத்தை நியா யப்படுத்தும் உள்ளூர், உலக அறிவாளிகள் இதைச் செய்கின்றனர்.

காலச்சுவடு, கண்ணன் வெளிநாட்டு நிதிநிறுவனங்களிடம் பணம் வாங்கியது பற்றிய தன்னிலை விளக்கத்தில் ''சேரனும் - தானும்'' எடுத்த முடிவை தெரியப்படுத்தியுள்ளார். (இதழ் 32, 46-வது பக்கம்) அதன்பின்னர் "FCRA' பற்றியும் விளக்கமளிக்கிறார்.

எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை இது. சரிநிகர் என்ற பத்திரிகை 'மேர்ச்' (merj) என்ற N.G.O. அமைப்பின் வெளியீ டாகும். மேர்ச்சுக்கு வருகின்ற பணம் முழுக்க முழுக்க வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் பணம், (நிதி நிறுவன பணத்தில் அரசு பணமும் + தனியார் பணமும் இருக்கிறது) மேற்கு நாடுகளின் இந்நிதி நிறுவ னங்கள் மூலமே அந்நாட்டு அரசுகளும், ஏகபோக நிறுவனங்களும், மூன்றாம் உலகநாடுகளில் தங்களின் ஆதிக்கத்தை சுரண்டலை தொடர் வதற்கான, சமூக அடிப்படைகளை நிறுவுகின்றன. வெறும் புனர் வாழ்வு - புனரமைப்பு, நலன் புரி வேலைகளில் மட்டுமல்ல; அரசுக ளுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கும், அதேவேளை புரட்சிகர மக்கள் போராட்டங்களை திசை திருப்பும், நிர்ப்பந்தம் கொடுக்கும், ஊடகங் களையும் நடத்துகிறது. எதிர்புரட்சி அறிவு ஜீவிகளையும், அரசியல் இயக்கங்களையும் கூட இந்நிதி நிறுவனங்கள் உருவாக்குகின்றன. (PLOT இயக்கத்தில் இருந்த சேர்ளி கந்தப்பாவும், அவரது ஜெர்மனிய மனைவி மொனிக்காவும் 'மோர்ச்'இல் முக்கிய நபர்கள் என்பதை மறந் திருக்க மாட்டார்கள்) இது காலச் சுவட்டுக்கு தெரியாதா?

எனவே சரிநிகரும், சேரனும் போடுகின்ற திட்டங்கள் அவர்களுக்கு பின்னால் இருக்கின்ற ''மேர்ச்'' NGO அமைப்பின் அதற்கு பின்னால் இருக்கின்ற உலக நிதி நிறுவனங்களின், (Funding Agencies) கண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

களுக்கும், கரங்களுக்கும் அப்பாற்பட்டதாக இருக்க முடியாது. சேரன் ஒரு உலகம் சுற்றும் வாலிபனாக இருப்பதும் இந்தப் பின்னணியில்தான்.

மக்கள் தங்களது பிரச்சனைகளை தீர்க்க, அரசியல் இயக்கமாக நிறுவனமாவதை எதிர்த்து வரும், சேரன். கடந்தகால தமிழீழப் போராட்டத்தினூடாக அரசியல் உணர்வு பெற்ற முன்னணிச் சக்திகள் அமைப்பாகாது காயடித்து வரும் சித்தாந்தவாதி - கவிஞன் சேரன். தான் வேலை செய்யும் கனடியப் பல்கலைக்கழகமும் அது சார்ந்த கனேடிய அரசும், அவருக்கு பணமும் விசாவும் வழங்கிக் கொண்டிருக்கும் NGOக்களும், நிதி நிறுவனங்களும், ஏகாதிபத்திய அரசுகளும் ஒரு கட்டமைப்பின் கீழ்த்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது தெரியாமலா அவர்களுடன் கைகோர்த்துக் கொண்டுள்ளார். மக்கள் விடுதலைக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடும் அரசியல் அமைப்பு வடிவங்கள், கட்டமைப்புகள் தவறானது எனக் கூறும் சேரனால் ஏகாதிபத்தியமும், உலகநிதி நிறுவனங்களும் உலக மக்களை சுரண்டி ஒடுக்கி வரும் அதிகார கட்டமைப்புத்தான் எனக்கூறி அதைத் தகர்க்க முன் வருவாரா? பாரதியார், புதுமைப்பித்தன் இவர்களின் வரலாற்று தொடர்ச்சியாக கற்பிதம் செய்யப்படும் காலச்சுவடு சுந்தரராமசாமி அதிகார மையங்களை தகர்க்கும், கட்டமைப்பு கல்வி முறையை எதிர்க்கும் ஆன்மா அண்மையில் கனடா வந்திருந்தார். ரொறன்டோ பல்கலைக்கழகத்தின் - தெற்காசிய அமைப்புக்கான விருதைப் பெற்றார். அந்தளவுக்கு சேரன் - ரங்கசாமி போன்றோர் உள்ளூர் அதிகார மையங்களை தகர்த்து குறிப்பாக புரட்சிகர மக்களின் அரசியல் அதிகார அமைப்புக்களை தகர்த்து, உலக அதிகார மையங்களை நிறுவும், காப்பாற்றும் அதற்கான உலகப் பல்கலைக் கழகங்களின் சதி முயற்சிகளுக்கு துணை புரிகின்ற அறிவு சீவிகள் - அரசியல் - இலக்கியவாதிகள். இந்த அறிவாளிகளை புரிந்து கொள்ள முடியாத நிலையில் 'காலம்' போன்ற கனடிய வெளியீடுகள் புலம் பெயர் வெளியீடுகள்.

கட்டமைப்பு எதிர்ப்புக் கலகக்காரர்களே! முதலில் நிலவும் அரசுக் கட்டமைவை தகருங்கள், அந்தக் கட்டமைப்பை சாதுரியமாக பாதுகாத்தபடி புரட்சிகர மக்கள், நிறுவனமயப்படுவதை எதிர்த்து அழித்து, எதிர்ப்புரட்சியின் பக்கம் செல்லாதீர்கள்.

தமிழ் இனி 2000-இல் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் சமூகத்தின் மீது மக்கள் மீது உண்மையான அக்கறை இருப்பின், இந்தத் தலைவர்கள் மீது விழிப்பாக இருங்கள்.

— சுனிதா

www.tamilarangam.net



# தமிழ் இனி 2000 இலக்கிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

## தீர்மானம் ஒன்று

இலங்கைத் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் கடந்த பல தசாப் தங்களாகத் தமது அரசியல் உரிமைக்காகவும் வாழ்வுரிமைகட்காகவும் நடத்திவரும் போராட்டத்தின் நியாயத் தன்மையானது எல்லாவித அர சியல் கருத்து வேறுபாடுகளுக்கும் அப்பால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அவர்களது இந்த உரிமைகளுக்கான கோரிக் கைகள் நியாயப்பூர்வமான முறையில் அணுகப்பட்டு அவர்களின் அபி லாசைகள் பூர்த்தி செய்யப்படும் வகையிலான ஒரு அரசியல் தீர்வு உட னடியாகக் காணப்பட வேண்டும்.

அங்கு வெடித்துள்ள சிவில் யுத்தம் காரணமாக நாளுக்குநாள் உயிர் அழிவும் சொத்தழிவும் அதிகரித்து வருவதையும், நோயும் வறுமையும் நிச்சயமற்ற எதிர்காலமும் கொண்ட ஒரு சந்ததி அங்கு உருவாகி வருவ தையும் கவனத்தில் கொண்டு அதனை தடுத்து நிறுத்துவதற்கான உட னடியானத் தீர்வு ஒன்றைக் காணுமாறு நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

## தீர்மானம் இரண்டு

இலங்கையின் சிவில் யுத்தம் காரணமாக உள்நாட்டிலும் இந்தியா விலும் பிற வெளிநாடுகளிலும் தஞ்சம் புகுந்து அகதிகளாக வாழும் இலங்கையைச் சேர்ந்த அகதிகளுக்கு ஐ.நா. சபையில் அங்கீகரிக்கப் பட்ட அகதிகளுக்குரிய சகல உரிமைகளும் அவர்கள் வாழும் நாடு களின் அரசாங்கங்களால் வழங்கப்பட வேண்டும்.

அகதிகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உடன்பாட்டில் (1951) இந்தியா கையெழுத்திட வேண்டும் எனவும் இந்தியாவில் வாழும் ஈழத் தமிழ் அகதிகளை சிறப்பு முகாம்களில் அடைப்பதைக் கைவிட்டு அவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்க வேண்டுமெனவும் நாங்கள் கோருகிறோம்.

இந்தியா, ஐ.நா.வின் உடன்பாட்டில் கையெழுத்திடாத போதிலும் ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் (U.N.H.C.R.) நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கிறது. இந்தியாவில் அனுமதி பெறாமல் நுழையும் அகதி ஒருவரை ஐந்து ஆண்டுகள் வரை சிறையில் அடைக்க வெளிநாட்டவர் சட்டம் (1946) வழிவகுக்கிறது. இது மாற்றப்பட வேண்டும். சித்திரவதை மற்றும் குரூரமான தண்டனைகளுக்கு எதி

ரான ஐ.நா.வின் உடன்படிக்கையில் இந்தியா 1997-இல் கையெழுத்திட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் பிரிவு 3-இன் படி இதுல் கையொப்பமிட்ட நாடுகள் அகதி ஒருவரை அவர் விருப்பமின்றித் திருப்பி அனுப்ப முடியாது. ஆனால் இந்த விதியும் இந்தியாவால் மீறப்படுகிறது. அதுமட்டுமின்றி U.N.H.C.R. பிரதிநிதிகள் அகதிகளை நேரடியாக அணுகுவதையும் இந்தியா தடுத்து வருகிறது. இது போன்ற தடைகளும் நீக்கப்பட வேண்டுமெனக் கோருகிறோம்.

### தீர்மானம் மூன்று

மரண தண்டனை முறையை முற்றாகக் கைவிடும்படி இந்தியா மற்றும் இலங்கை அரசுகளை நாங்கள் வற்புறுத்துகிறோம். போராளிக் குழுக்களும் மரண தண்டனை விதிப்பதை நிறுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

உலகெங்கும் 108 நாடுகள் மரண தண்டனை விதிப்பதைக் கைவிட்டுள்ளன. இந்தப் புத்தாயிரமாவது ஆண்டில் மரண தண்டனையை உலக நாடுகள் அனைத்தும் ஒழித்து விட வேண்டுமென ஐ.நா.சபையும் வேண்டுகோள் விடுத்துள்ளது. குற்றங்களைத் தடுக்கக்கூடியதாக மரண தண்டனை செயல்படவில்லை என்பதை 1998 மற்றும் 1996 ஆகிய ஆண்டுகளில் ஐ.நா. நடத்திய ஆய்வுகள் தெளிவாக்குகின்றன. இந்த ஆண்டில் இதுவரை இந்தியாவில் எவரும் தூக்கில் ஏற்றப்படவில்லை. இது தொடர்பாக மனித உரிமை அமைப்பினரும் அறிவு ஜீவிகளும் விடுத்த கோரிக்கைகளை இந்திய அரசு மதித்து வருவது கண்டு இந்திய அரசை நாங்கள் பாராட்டுகிறோம். அதேவேளை மரண தண்டனை முறையை சட்டத்திலிருந்து முழுதுமாக நீக்கிவிடும்படி நாங்கள் வற்புறுத்துகிறோம். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆயுத குழுக்கள் முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள மரணதண்டனை விதித்து வருகின்றன. இந்த ஜனநாயக விரோதப் போக்கினைக் கைவிடுமாறு ஆயுதக் குழுக்களையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

### தீர்மானம் நான்கு

தமிழ்வழிக் கல்விக்காகத் தமிழக அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளை நாங்கள் வரவேற்கிறோம். இதில் நீதிமன்றங்கள் தலையிடாதபடி அரசியல் அமைப்புச் சட்ட பாதுகாப்பினைப் பெறுவதற்கான முயற்சிகளைத் தமிழக அரசும் மத்திய அரசும் மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்துகிறோம். இது மட்டுமின்றி மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட அனைத்து உயர்கல்வியும், தமிழ் வழியில் கொண்டுவரப்பட்ட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

www.tamilarangam.net


தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவம் / பொறியியல் போன்ற உயர்கல்வியில் விகிதாச்சார ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். பெரும் வணிக நிறுவனங்களாக செயல்படும் தனியார் கல்விக் கூடங்கள் தேர்ச்சி விகிதத்தை உயர்த்தி காண்பிக்கும் பொருட்டு +2 பாடங்களை இரு ஆண்டுகளிலும் நடத்துதல், காப்பியடிக்க அனுமதித்தல் போன்ற வழிமுறைகளை கையாளுகின்றனர். ஆசிரியர்களும் தங்களிடமுள்ள தவறான மதிப்பீட்டின் காரணமாக ஆங்கில வழியிலுள்ள விடைத்தாள்களுக்கு கூடுதல் மதிப்பெண்களையும் தமிழ் வழியிலுள்ள விடைத்தாள்களுக்கு குறைவான மதிப்பெண்களையும் போடுகின்றனர். பெரும்பாலான தமிழ்வழிப் பள்ளிகளில் போதிய ஆசிரியர், போதிய கண்காணிப்பு இன்றி மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். ஏழை மாணவர்கள் தனிப் பயிற்சி (டியூசன்) பெறுவதும் சாத்தியமில்லை. இதனால் மருத்துவம் / பொறியியல் போன்ற உயர்கல்வியில் இவர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை. 1995-96ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் ஆங்கில வழியில் படித்த மாணவர்கள் 77% தமிழ்வழியில் பயின்றவர்கள் 23%. ஆனால் மேல்நிலை கல்வியில் தமிழ் வழியில் பயில்பவர்கள் 80.7%. ஆங்கில வழியில் படிப்பவர்கள் 19.3% மட்டுமே. சுமார் 81% இடங்கள் பெற வேண்டிய தமிழ்வழிக் கல்வி மாணவர்கள் 23% மட்டும்தான் பெற முடிந்துள்ளது. இந்த ஏற்றத்தாழ்வு நீங்க இடைக்கால ஏற்பாடாக தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப விகிதாச்சார ஒதுக்கீடு மருத்துவம் / பொறியியல் படிப்புகளில் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

**தீர்மானம் ஐந்து**

இன்று உலகின் பல நாடுகளிலும் பிரசுரிக்கப்படும் தமிழ் நூல்களையும் இதழ்களையும் தமிழகத்தில் பெற இருந்துவரும் நடைமுறைச் சிக்கல்களை நீக்க அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இந்தியாவிற்கு வெளியே பிரசுரிக்கப்படும் தமிழ் நூல்களை அரசு நூலகத்துறை தனி நிதி ஒதுக்கி வாங்க வேண்டும்.

**கையெழுத்திட்டோர்:**

**கண்ணன், சேரன், சுந்தர ராமசாமி, நா. கண்ணன், ஆ.இரா. வேங்கடாசலபதி, சுசீந்திரன், இந்திரன், சாருநிவேதிதா, ரவிக்குமார், மனுஷ்ய புத்திரன், வே. வசந்திதேவி, அ. அருண்மொழி, இன்குலாப், சித்திரலேகா, மௌனகுரு, இராசேந்திரசோழன், சி.எஸ். லக்ஷ்மி, செல்வி திருச்சந்திரன்.**

# துப்பரவுத் தொழிலாளர்களின் முதுகில் பன்னாட்டு நிறுவனங்கள்

துப்பரவாக்கல் தொழில் என்பது உலகில் இன்றியமையாத தொழிலில் ஒன்று. இது இல்லாவிட்டால் உலகமே நாற்றம் எடுக்கும். இந்தத் தொழிலை மூன்றாம் உலக நாடுகள் எவ்வண்ணம் ஒழுங்கமைத்துள்ளது என்பதையும், முதலாளித்துவ நாடுகளில் இது எந்த வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் கவனத்தில் கொள்வோமானால் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் போன்று உள்ளது.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மாநகர சபையால் இத்துப்பரவு செய்யும் தொழில்கள் ஒழுங்கமைக்கப்பட்டு வந்தன. இதை ஒரு நிறுவனப்படுத்தி செய்வதை விடுத்து சாதியை மையமாகச் கொண்டே இதை இயக்கி வந்தனர். இந்தத் தொழிலைச் செய்யும் தொழிலாளர்கள் தீண்டப்படாதவர்களாகக் கணிக்கப்பட்டனர். அத்துடன் இவர்களுக்கான ஒரு சங்கத்தை சரியாக இயங்க விடவோ அல்லது இவர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்யவோ எவரும் முன் வருவதில்லை. இதற்கு மற்றவர்களால் கூறப்படும் விளக்கங்கள் இவங்களுக்கு எதற்கு சங்கம்? என்ன செய்யப் போகிறார்கள் என்ற பார்வையில் உதாசினப் படுத்துவதும் இவர்களை தொழிலாளர்களாக ஏற்கவும் மறுக்கின்றனர். ஏன் எந்த வேலையும் இன்றி வீட்டில் ஒருவர் இருந்தாலும் அவர் துப்பரவு செய்யும் வேலைக்குச் செல்ல மாட்டார். இந்த வேலையைச் செய்பவர்கள் பலராலும் ஒடுக்கப்பட்டவர்களாகவே காணப் படுகின்றனர்.

இதை வெளிநாடுகளில் எடுத்துப் பார்த்தால் இது நிறுவனமயப்படுத்தப்பட்டு செயற்படும் ஒரு தொழிலாக மாறியுள்ளது. இங்கு ஒவ்வொரு வேலைக்கும் அதற்கான உபகரணங்கள் கொடுக்கப்படுவதுடன் இன்று இதை செய்து வரும் கம்பெனிகள் அதிக லாபம் பெறும்

www.tamilarangam.net



கம்பெனிகளாக மாறியும் வருகின்றன. இருந்த போதும் இங்கும் ஒடுக்கப்பட்டவர்களாலேயே அதாவது இந்தச் சமூகத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்டவர்களாலேயே அதிகமான அளவில் மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது இந்நாடுகளில் உள்ள வெள்ளையருக்கு கறுப்பு வெளிநாட்டவர்கள் என்றுமே புறக்கணிக்கப்பட்டவர்களே. அத்துடன் இந்த வேலையைச் செய்பவர்களை இவர்கள் (இலங்கை இந்தியாவைப் போல்) இழிதொழில் செய்பவர்களாகவே பார்க்கின்றனர். ஆனால் இத்தொழில் நிறுவனமயப்படுத்தப்பட்டதால் இப்பார்வையானது இங்கு உடைந்து போகின்றது. அதுமட்டுமல்ல பொருளாதார அளவில் கவனத்தில் கொண்டால் மற்றவர்களுக்கு சமமான பொருளாதாரத்தை இவர்களும் பெறுவதால் சமூக ஒடுக்க முறையின் அளவு குறைகின்றது. இருந்த போதும் வேலையில் தொழிலாளர்கள் மேல் முதலாளிகளின் ஒடுக்குமுறையின் அளவு மிகவும் அதிகமாக உள்ளது இந்நாடுகளில். இலங்கையில் ஒடுக்கும் சாதியை சேர்ந்தவர்கள் பலர் ஆண்கள் - பெண்கள் வெளிநாட்டில் வெள்ளையர் வீடுகளில் - தெருக்களில் இவ்வேலையை செய்கின்றனர்.

காரணம் அதிகமான தனியார் நிறுவனங்கள் இத்தொழிலை எடுத்து நடத்துவதால் (அதற்காக அரசு என்றால் வித்தியாசம் இல்லை) இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் பல விதங்களில் ஒடுக்கியும், திணித்தும் வேலைசெய்ய வைப்பார்கள். இதற்கு உதாரணங்களுடன் இவர்களின் வளர்ச்சி பற்றியும் கீழே சற்று ஆராய்வோம்.

இன்றைய உலகில் அனைத்தையும் தன்வசப்படுத்தி கொண்டு வரும் எல்லை கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் தமது தொழிற்பாட்டினை துப்பரவு செய்யும் வேலைகளிலும் காட்டத் தொடங்கியுள்ளது. அதாவது உலகம் தனக்குள் எல்லாவற்றையும் கொண்டு வர முயற்சிக்கின்ற அதேவேளை உலகில் மூன்றாம் உலக நாட்டின் அனைத்து விடையங்களையும் இந்த ஏகாதிபத்திய நாடுகளே தீர்மானிக்கின்றது என்பது ஒருவிடயமாகிறது. இதைப் பற்றி முழுமையாக ஆராயாது அதன் ஒரு விடயத்தை மாத்திரம் இங்கு ஆராய முற்படுகின்றேன். உலகில் இன்றியமையாத ஒரு விடயம் துப்புரவு செய்தல் இதை எவ்வாறு இந்த ஏகாதிபத்திய நாடுகள் குறைந்த நேரத்தில் கூடிய வேலையை வாங்குகின்றன வென்றும் அதேவேளை நவகொலனிய நாடுகளில் தமது பல்தேசியக் கம்பெனிகளை வைத்து துப்பரவு செய்யும் வேலையை எவ்வாறு தம்வசப்படுத்தி வருகின்றன என்பது பற்றியும் ஆராய முற்படுகின்றேன்.

www.tamilarangam.net


இதனடிப்படையில் இன்றைய பல்தேசியக் கம்பெனியாகிய ISS என்ற கம்பெனியும் அதன் செயற்பாடுகளையும் எடுத்து ஆராய முயல்கிறேன். அதாவது இக்கம்பெனியின் தலைமை அலுவலகம் டென்மார்க்கில் உள்ளது அது ஒரு சிறிய கம்பெனியாக ஆரம்பிக்கப் பட்டு முதலில் டென்மார்க்கின் ஒரு சில இடங்களில் துப்பரவு செய்யும் வேலையைத் தொடங்கியது. இத்துப்பரவு செய்யும் வேலை எனப்படும் போது கடைகள் கழுவுதல், கம்பெனிகள் கழுவுதல் போன்றவற்றையே மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் வளர்ச்சி என்பது முற்று முழுமையான சுரண்டலிலேயே அடங்கியுள்ளது. அதாவது இதில் தொழில்புரியும் அனைவரும் மிகக் குறைந்த நேரத்தில் கூடிய அளவு வேலை செய்ய திணிக்கப்படுவதுடன் அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை மறுப்பதன் மூலம் இவர்கள் வளர்ச்சியுற ஆரம்பித்தனர். இந்த வளர்ச்சி என்பது உலகின் குளிர்பானத் துறையை தனக்குள் கொண்டு வர முயற்சிக்கும் கொக்கோக் கோலாவைப் போன்று தன்னையும் உருவாக்கியது.

இதில் தொழில் புரியும் தொழிலாளர்களை வேலை எனும் பெயரால் கசக்கிப் பிழிவதுடன் அதிகூடிய நேர வேலையை குறைந்த நேரத்தில் செய்விப்பதன் மூலம் தான் அதிகலாபம் பெறுகின்றது. தொழிலாளர்களுக்கு சம்பளத்தை கணிசமான அளவு அதிகமாகக் கொடுத்து அவர்களை மற்றைய கம்பெனிகளிலும் விட தான் அதிகம் சம்பளம் கொடுக்கும் ஒரு நிறுவனம் என்று ஒரு பெயரை தனக்கு நிலை நாட்டி தொழிலாளர்களை தன்வசம் இழுக்கின்றது. இது எவ்வாறு நடைபெறுகின்றது என்ற நாம் ஆராய்வோமாயின் ஒரு முழுமையான ஏமாற்று, பித்தலாட்டமும், சுரண்டலும் நிறைந்த விடையமாகும். அதனால்தான் பல லட்சம் இலாபத்தை பெறுகின்றது. உதாரணமாக ஒரு மனிதன் ஏழரை மணிநேரம் செய்யக்கூடிய வேலையை இவர்கள் கம்பெனிகளிடம் ஒப்பந்தம் செய்யும் போது இது ஒன்பது மணிநேர வேலை (இது கூடலாம். குறையலாம்) எனக் கூறி அதற்கான ஒரு குறிப்பிட்ட விலையைக் கொடுத்து ஒப்பந்தம் செய்வார்கள். பின்னர் அவ்விடத்தை துப்பரவு செய்ய ஒருவரை நியமிக்கும் போது அவருக்கு கொடுக்கப்படும் மணித்தியாலங்கள் நிச்சயமாக நாலரை மணிநேரமாக இருக்கும் இவ்வாறு அரைவாசி நேரத்துக்கு அவரிடம் கொடுத்து வேலை வாங்குவார்கள். அப்போது இவர்களுக்கு 100% அபரிதமாக இலாபமாகக் கிடைக்கும். அதில் ஒரு சிறிய தொகையை தொழிலாளிக்கு பிச்சை போடுவதைப் போல சம்பளத்தில் உயர்த்தி இருப்பார்கள். ஆனால் அத்தொழிலாளர்களுக்கு ஒருவித சலுகையும் (இங்கு சலுகை என நான் குறிப்பிடுவது ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என இந்த முதலாளித்துவ அரசு களால் ஒருசில வரைமுறைகள், சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன அவைகளையே) கொடுக்காது ஏற்கனவே சலுகைகள் எனும் போது அங்கு ஒன்றும் கிடையாது. ஆனால் அதிக நேரம் வேலை செய்தால் மேலதிக வேலை ஊதியம் கொடுக்க வேண்டும். அவைகளையும் கொடுக்க மறுக்கின்றது.

குறிப்பாக அய்ரோப்பாவில் இந்நிறுவனத்தில் அதிகமான வெளி நாட்டவரே வேலை பார்க்கின்றனர். தமது நாடுகளில் யுத்த நிலை மையின் காரணமாக தஞ்சம் கோரிய இவர்கள் முன், **வேலை இல்லாத் திண்டாட்டம்** என்பது ஒரு நாளந்தப் பிரச்சனையாக உள்ளது. இதை தனக்கு இலாபமாகப் பயன்படுத்தி இந்த நிறுவனம் அதிகமான வெளி நாட்டவரை வேலையில் அமர்த்துகின்றது. அவ்வாறு அமர்த்துபவர் களில் பலருக்கு அந்நாட்டு மொழி சரியாக கதைக்க இயலாதவர்களாக இருப்பார்கள். இதுவும் இவர்களுக்கு ஒரு சாதகமான விடையம். அதாவது தாம் எது செய்தாலும் அதை எதிர்த்து கேள்வி கேட்க மாட்டார்கள் என்பதுடன் இங்கு வரும் வெளிநாட்டவரைப் பற்றி இந்தக் கம்பெனிக்கு மிகவும் நன்றாகத் தெரிவதால் இவர்கள் எந்த வேலையைக் கொடுத்தாலும் மறுக்காது வேலை செய்வார்கள். காரணம் இவர்கள் இந்த வேலையை விட்டால் வேறு வேலை எடுப்பது கடினம் என்பதும் இவர்களுக்கு தெரியும். ஆதலால் வெளி நாட்டவர்கள் எதிர்த்து பேசாது தாம் கொடுக்கும் வேலையை செய்வார்கள் எனவும் இவர்கள் அறிந்துள்ளனர்.

இதைவிட அதிகமான வேலை இடங்களில் இவர்களை மேற்பார்வை செய்பவர்களாக இந்நாட்டவர்கள் இருப்பதுடன் ஒரு சில இடங்களில் வெளிநாட்டவரும் உள்ளனர். அவ்வாறு உள்ள வெளி நாட்டவர்கள் கோடாரிப் பிடியைப் போல அதாவது தன் இனத்தை அழிப்பதற்கு உதவுவது போல இவர்கள் இயங்கி வருகின்றனர். தான் எடுக்கும், லாபத்தில் இடைநிலையில் இருக்கும் தலைமை ஊழியர் களுக்கு கொடுக்கின்றது. கொடுப்பதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தில் இருந்து பிரித்து எடுக்கின்றது. சாதாரண ஊழியர்களில் இருந்து அதிக ஊதியம் பெறுபவர்கள் மூலதனத்தைக் கொண்ட எசமா னர்களுக்கு சாதகமாக நடந்து கொள்கின்றனர். ஆதலால் வெளிநாட்ட வர்களின் அனைத்துப் பிரச்சனைகளும் இவர்களுக்கு நன்கு தெரிந் துள்ளது.

இவ்வாறு தொழிலாளர்களின் முதுகின் மேல் சவாரி செய்யும் இவர்கள், தாம் கொடுத்த நேரத்தில் ஒரு தொழிலாளி வேலையை முடிக்காது சற்று நேரம் அதிகமாக செய்தால் கூட அதற்கு இவர்கள் ஊதியம் கொடுப்பதில்லை. மாறாக அத்தொழிலாளி இலவசமாகவே செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறான்.

இதன் வளர்ச்சி இன்று மூன்றாம் உலக நாடுகளில் உள்ள துப்பரவு தொழிலை தனக்குள் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ளது. இந்தியாவிலும் குறிப்பாக தற்போது சென்னை மாநகர துப்பரவு தொழிலை சிங்கப்பூரில் உள்ள (ஜெர்மன் கம்பெனி) நிறுவனம் செய்து வருகின்றது. இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு முறையான மாதச்சம்பளம் வழங்கப்படுவதில்லை. அடிக்கடி உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடைபெற்று வருகின்றது. கடந்த சட்டமன்ற தேர்தலில் கூட தி.மு.க. அரசு மீது இந்த நிறுவனத்தினூடான ஒப்பந்தம் பற்றி எதிர்க் கட்சிகளால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ISS ஏற்கனவே தனது கிளை களை ஆப்பிரிக்க கண்டத்தினுள் பரப்பி உள்ளது. தற்போது கடந்த 5 வருடத்திற்குட்பட்ட காலப்பகுதியில் இது ஆசியக் கண்டத்தை நோக்கி தனது பார்வையைத் திருப்பியுள்ளது. அதற்கு ஒரு உதாரண மாக இலங்கையில் கொழும்பு மாநகர சபையால் துப்பரவு செய்து வந்த கொழும்பு மாநகரத்தை தற்போது இந்தக் கம்பெனி ஐ.எஸ்.எஸ். அவான்ஸ் என்ற பெயரில் துப்பரவு செய்து வருகின்றது. ஒரு சில நவீன உபகரணங்களைப் பாவிப்பதன் மூலம் மக்கள் கவனத்தையும், கம்பெனிகளின் கவனத்தையும் தன்பக்கம் இழுத்த இவர்கள் விமான நிலையம், வங்கிகள் போன்ற வற்றையும் கழுவும் பணியில் இறங்கியுள்ளனர்.

மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் ''தனியார்மயம், நவீனமயம், உலகமயம்'' என்ற பெயரில் துப்புரவு செய்யும் தொழிலைக் கூட அந் நிய நாடுகளின் கம்பெனிகளுக்கு தாரை வார்த்துள்ளார்கள். துப்பரவுத் தொழிலில் பல்தேசியக் கொம்பனிகள் புகுத்தியுள்ள நவீன சாதனங்க ளும், நவீன உடுப்புக்களும் தொழிலாளி வர்க்கத்தின் மேலதிக சந்தை இருப்பும் சாதி முறையிலான வேலைப் பிரிவினையை தகர்த்து வருகி றது. ஆனால் இந்தக் கடை நிலை தொழிலாளி வர்க்கம் விழித்துக் கொண்டு புரட்சிகர அரசியல் வழி அமைப்பாக்கப்படும்போது மட்டுமே சுரண்டல் அமைப்பும், அந்நிய ஆதிக்கமும் தகர்க்கப்படும்.

— **வினோதன்**

www.tamilarangam.net



திரு கார்லீப்டென்ட் எழுதிய **'வன்முறை எழுத்து'** என்ற கட்டுரைக்கு புதிய சகாப்தம் ஆசிரியர் குழுவால் எழுதப்பட்ட குறிப்பும் **'வன்முறை எழுத்து'** கட்டுரையும் இங்கு வெளியிடப்படுகின்றது.

தேசபக்தன்
ஆசிரியர்குழு

# வன்முறை எழுத்து

## (சாருநிவேதிதாவின் பின் நவீனத்துவ குரல்)

போன அம்மாவில் உரைகற் பகுதியில் இலக்கியம், பின் நவீனத்துவம் இவைகளின் ''வாதி''யாய் அடையாளம் காணப்படும் சாருநிவேதிதா தன்னையும் தன் அய்ரோப்பிய கூட்டுக்களையும் மையப்படுத்தி பாதுகாப்பு வலையத்தை அமைத்தபடி ஒரு அதிகாரவகைப்பட்ட எழுத்து வருகை தந்திருக்கிறார். யாராலும் கேள்வி கேட்கப்பட முடியாத புதியதான புனிதக் கருத்தியல் அதிகார மையத்தைக் கட்டியமைக்க முயன்றிருக்கிறார். விவாதம் என்பது மனிதர்களின் அறியும் சக்தியுடனான மோதல் கலகம் என்ற சாதாரண புரிதலுக்குக்கூட தன்னைச் செலவு செய்யாத சிந்தனைச் சிக்கனம். ஆனால் அவரின் பின்நவீனத்துவ விசாரணைக்கு மட்டும் உயர்ந்த அதிகாரத்தொனியோடு கூடிய அதிதீவிர ஆர்ப்பாட்டங்களோடு வெளிப்படும் உரிமை, சமர் ரயாகரனின் அரசியல் மற்றும் இலக்கியப் பிரதிகளின் மேலான வாசிப்புக்கு புறப்பட்டவர் அந்த வாசிப்பையும் விமர்சன வேலிகளையும் தாண்டிக் கடந்து அப்பாலுக்கும் அப்பால் நீண்ட நெடுந்தூரம் பயணித்து தீவிரமான மனித வெறுப்பைக் கொட்டியிருக்கிறார். தன் எழுத்து மூர்க்கத்தால் பின்நவீனத்துவத்தின் கற்பையும் புனிதங்களையும் காப்பாற்ற போராடியிருக்கிறார். பின் நவீனத்துவங்கள் தாமே பிரகடனப்படுத்திக் கொண்டே ''மற்றதாய் இருக்கும் உரிமையையும்'' ''படைப்பாளி இறந்துவிட்டான்'' என்று சொல்லி பிரதியை தம் விருப்புக்கு சுயங்கெட்டு ஏற்ப வாசிப்பையும் கைவிட்டமையின் மூலம் தம் மரபுகளோடும் பின்நவீனத்துவ ஒழுக்க விதிகளோடும் தாமே முரண்பட்டுக் கொள்கிறார். இங்கு சாருநிவேதிதா வெளிப்படையாக மல்லுக்கு நிற்கின்றார். பின்நவீனத்துவம் ஏற்க

னவே இலக்கியம் பற்றிய அறிவும் சிந்தனையும் ''தெரிதா மற்றும் பூக்கோவுக்கு முன்பு இருந்தது கிடையாது இருண்ட காலங்களே நில வின என்பதாய் வீங்கி முட்டித் திரிந்தது. காலத்துக்குக் காலம் இவை வெவ்வேறு வடிவங்களில் பெயர்களில் நிலவியே வந்துள்ளன என்ற வரலாற்று அரிச்சுவடி பின்நவீனத்துவத்தின் பிரதிநிதியாக கட்டுடை டைக்கக் கிளம்பியவர்களுக்கு எட்டாமற் போனது யாவும் பெருங்க தையாடல் என்பவர்கள் மறுதலையாக பின்நவீனத்துவம் மட்டுமே ''முழு உண்மை'' என்ற ஒருதலைச் சார்பான தத்துவங்களில் மாட்டு பட்டுக் கொண்டனர். அதிகாரத்தை எதிர்ப்பதாய் கத்திக் குழறுபவர் களின் இறுதி விருப்பங்களும் புதிய அதிகாரங்களை புதிய மையங் களை நிறுவுவதற்கே என்பதற்கான எழுத்துச் சாட்சியத்தை சாரு நிவேதிதா எமக்குக் காட்டித் தருகின்றார். பின்நவீனத்துவத்தை சந்தேகிப்பது அதனிடம் வெற்றிடங்கள் போதாமை உண்டு என்று சந்தேகிப்பது பின்நவீனத்துவத்தின் தனி உரிமையான வாசிப்புச் செய்யும் உரிமையை மற்றையோர் அபகரித்துக் கொள்வது அவர்களின் எழுதப்படாத மரபுகளின் படி கடுங்குற்றமாகும். மீறின் யமுனா ராஜேந்திரன், ரயாகரன் போன்றோருக்கு நடந்ததே நடக்கும். நீங்கள் வார்த்தைகளால் முகத்தில் அறையப்படுவீர்கள். மாபெரும் சிந்தனைக் கருவூலமான பின்நவீனத்துவத்தை எதிர்த்த கடுங்குற்றத்துக்காக இதே ரயாகரனுக்கு ''நீ செத்துப்போ'' என்று அறம்பாடி கல்வெட்டுப் பாடிய தெல்லாம் பழம் சங்கதியாய் இருக்க, புகலிடத்துக்கு அம்மாமூலம் சாருநிவேதிதா தரும் செய்தி எச்சரிக்கை. பின்நவீனத்துவத்தின் விரிந்த கன்ற பன்முகப்பார்வையின் வீச்சோடு எவ்வாறு வெளிப்படுகிறது? சாருநிவேதிதா ரயாகரனை எப்படிச் சங்காரம் செய்கிறார் பாருங்கள்?'' எங்கள் எழுத்துப் பிடிக்கவில்லையானால் பேசாமல் உங்களதை பொத்திக் கொண்டு போங்கள்'' இதை நாம் எழுத்துக் காடைத்தனம் இழிவுபடுத்தும் வன்முறை சார்ந்த எழுத்து என்று சொன்னால் சமூகத் திலே வன்முறையும் காடைத்தனமும் மையங்கொண்டு இருக்கவில் லையா? அதையே நாம் பிரதிபலிக்கின்றோம். எழுத்திலே காட்டித்தரு கின்றோம் என்று எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க் வைப்பார்கள் அல்லது அச்சொற்களை சரியாய் வாசிப்புச் செய்யவில்லை. அச்சொற்கள் வெளிப்படுத்தாதவைகளை வாசிப்புச் செய்ய வேண்டும் என்பார்களோ? (உதாரணமாய் நாய் என்பது யானை அல்ல பூனை அல்ல மரை அல்ல என்ற வகையில்) தற்போது புகலிடத்தில் பல்வேறு வகையான அரசியல் இலக்கியப் போக்குகுள் நடப்பில் நிலவுகின்றன. அவை பல்வேறுபட்ட வித்தியாசமான மனித அனுபவங்கள் வர்க்கப் பார்வைகள் அவற்றின் தேவைகளின் விளைவு. இவைகளிடையே ஒரு

www.tamilarangam.net



சுதந்திரமான வாதிடலுக்கான களம் என்பது மிகவும் நீண்ட போராட்டம் ஒன்றினூடு பெறப்பட்டது. தம்மை சகல இடத்திலும் வன்முறையால் வலுக்காட்டாயமாய் நிறுவிக் கொள்ளும் ஒற்றைக் கருத்தியல் போக்குகளால் நீண்ட காலம் பாதிக்கப்பட்டு நொந்து கெட்டுப் போனவர்கள் நாங்கள். இன்றைய பின்நவீனத்துவப் போக்காளர்கள் அதிகாரக் கருத்தியல்களை தகர்க்கப் போவதாய் சொல் எறிந்து வெளிக்கிட்டது சரிதான். ஆனால் இதே அதிகாரக் கருத்தியலை மட்டுமல்ல நேரடியான உடல் ரீதியான வன்முறைகளை, கொலைகளை புகலிட எழுத்துக்கள் மீண்டும் சந்தித்தும் போராடியும் தான் உயிர் தப்பியுள்ளது. மோசமான குழு வாதத்தாலும், அதிர்ச்சி அளிப்பதையும், சொற்சாகங்களிலும் நம்பிக்கை கொண்ட இன்றைய பின்நவீனத்துவம் அய்ரோப்பியச் சூழலோடு புகலிடப் பிரச்சினைகளோடும் போதிய பழக்கமற்ற சில பின்நவீனத்துவக் குருவானவர்களால் தமிழ் நாட்டிலிருந்து வழிநடத்தப்படுகிறது. இப்படியாக புகலிட பின்நவீனத்துவத்துக்கு புதிய கட்டளையிடும் வழிநடத்தும் அதிகார மையங்கள் தமிழ் நாட்டில் உருவாகின. புகலிடத்தின் கடந்த காலத்தில் மாற்றுச் சிந்தனைகட்கு எதிரான கொலைகள், ஆட்கடத்தல், முகமூடித் தாக்குதல்கள், இருட்டடிப்பு இரும்புக் கம்பியடி, தொலைபேசி மிரட்டல், நேரடி மிரட்டல், பத்திரிகைகள் மேலான பயமுறுத்தல், வன்முறை என்பன நடைபெற்ற போதிலும் இவைகட்கெதிராக எந்தத் தமிழ் நாட்டு பின்நவீனத்துவ வீரவான்களும் எதிர்ப்புக் காட்டியது, பேசியது, பறைந்தது கிடையாது. அவர்களின் புகலிட வருகைகளிலும் இவை பற்றி தொகை தொகையாய் பலபத்துப் பேர்களால் கதைகள் சொல்லப்பட்ட போதிலும் அவற்றிற்கெதிராக அவர்களின் எந்த எழுத்தும் பேச்சு மூச்சுக் காட்டியதில்லை. புகலிட எழுத்தின் மேலான வன்முறைகளைக் கண்டித்தது கிடையாது. மாறாக இவைகளில் சிக்குப்படாமல் கருத்து வெளியிடாமல் தப்புவதை அவர்கள் திட்டமிட்டுச் செய்தார்கள். ஆகவே புகலிட எழுத்துக்கள் தமிழ் மக்களுக்காகவே பிறவி எடுத்துள்ளதாய் சொல்லப்பட்ட இயக்கங்களின் வன்முறைக்கெதிராய் தன்னந்தனியே விடப்பட்டன. இவை சற்றுத் தணிந்து புகலிட எழுத்துக்கள் சற்று மூச்செடுக்க முயற்சிக்கும் வேளையில் இன்று ஆயுதமற்ற எழுத்து வன்முறை அதற்குச் சமமான கருத்தியல் பயங்கரவாதம் ஊகத்தையும், சந்தேகத்தையும் அடிப்படையாய் கொண்ட தனிமனிதர்களைச் சண்டைக்கிழுக்கும், அவமானப்படுத்தி மனோவியல் வதைக்குள்ளாக்கி அழிக்கும் எழுத்துப் பரப்பிலிருந்து துடைத்தெறிய முயலும் போக்குகள் வளர்கின்றன. ''தலையெடுக்க விடக் கூடாது'' என்ற வன்மத்துடன் இவை வெளிப்படுகின்றன. இவை ஒருவகை

எழுத்துச் சர்வாதிகாரமாய் எந்தவித மனிதக் கூச்சமுமற்று தம்மை அறிவிக்கின்றன.

தம்மையும் தம் சிந்தனையையும் கேள்வி நியாயங்களுக்கு அப்பாற்பட்ட புனித பீடங்களுக்கு நகர்த்தும் முயற்சிகள் நன்கு திட்டமிடப்பட்டு குழு அடிப்படையில் இயங்குகின்றன. இவர்கள் தம் கருத்தை சோதனை செய்யும், வாசிப்புச் செய்யும் உரிமைகளை மறுப்பதோடு ஒன்று குவிக்கப்பட்ட புதிய அதிகார கருத்தியல் மையங்களை தம்மை அறியாமலே படைக்கின்றனர். அதன் ஊழியர்களாக அதன் கட்டளைகளை சிரமேற் கொள்பவர்களாக, மோசமான கருத்தியல் ஏகபோகத்தையும் தீவிரவாதத்தையும் வெளிப்படுத்துகின்றனர். தம்மை நிறுவிக் காட்டி எதிர்க் கருத்துக்களை துவம்சம் செய்ய முடியாத நிலையில் ஒற்றைக் கருத்தியல் உலக்கைகளை தூக்கி வருகின்றார்கள். தனி மனிதர்களை இகழ்வதும் அவமானப்படுத்தும், பழித்து மனமுடைய வைத்து எழுத்துக்களிடமிருந்து துரத்த முயல்வதும் தீர்வாகி விடுகின்றது. இதனால் கருத்து முரண்படுபவனை அரசியல் எழுத்தால் துடைத் தெறிவதை விடுத்து "நீ மரணமடையக் கடவாய்" என்று கல்வெட்டெழுதும் எழுத்துக் கொடுமைகளை மரணத்தை ஞாகபமூட்டி வதைத்துக் கொல்லும் கொடூரமான தந்திரங்களாக இவை இழிகின்றன. எழுதுபவனை தனிப்பட்ட முறையில் எள்ளி நகையாடி, அவனின் இருப்பை கேள்விக்குள்ளாக்கி உடல் ரீதியான அழிவை ஞாபகமூட்டி சிதைத்துச் சிதறடிக்கும் போக்குக்கு ஒப்படைக்கும் நிலை இது பயங்கரவாதமே எழுத்துப் போர்வையிலான வன்முறையே.

இப்போ பின்நவீனத்துவத்துக்காக வாதிட வந்துள்ள சாருநிவேதிதா செய்வதென்ன? 'சமர்' ரயாகரனை முறையாக எதிர்கொள்ள முடியாமையை ஈடுகட்ட மொழியாடல்களோடு சாதசத் தன்மை காட்டுகின்றார். அரசியலில் நுண்ணிய உண்மைகளை கண்டறிய பலமற்ற நிலையில் விளிம்பு மனிதர்கள் பற்றிய பிரமிப்புகளை ஊட்ட முயல்கின்றனர். ரயாகரன் சோலிசத்தின் பல்துறை சார்ந்த புரிதலை தன் ஸ்ராலினிச வாசிப்புக்கு ஏற்ப வகைப்படுத்துகின்றார். சமூகவியலின் இயக்கமற்ற முரட்டுத் தன்மையதான சோசலிசம் பேசுகின்றார். இலக்கியம் பற்றிய சோலிசத்துக்கு முரணான கோணலான கருதுகோள்களை வெளியிடுகின்றார் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் பின் நவீனத்துவக் கட்டுடைப்பு ஜோதியில் கலக்கும் அருகதையுடையவராய் காட்சி தரும் சாரு நிவேதிதா, ராயகரனின் ஸ்ராலினிச சோசலிசத்தை, உண்மையான சோசலிச சிந்தனையிலிருந்து பிரித்துக் காட்டி,

www.tamilarangam.net



விளக்கி வேறுபடுத்தி அரசியல் மோட்சமடையும் வழியுமற்று நிற்கிறார். ரயாகரன் எழுத்தை அரசியல் ரீதியில் தீர விசாரிக்கும் தகமை யற்றபோது சொற்களோடும் மொழியோடும் வித்தை காட்டப் போய்விடுகின்றார். பின்நவீனத்துவத்தால் ஏதோ பிரபஞ்ச தரிசனமே நிகழ்த்திக் காட்டப் போவதாய் பிரமிப்பூட்டியவர்கள் இவ்வாறாக ஏது மற்றுப் போயினர். அய்ரோப்பியச் சிந்தனை உலகு வெகுகாலம் முன்பாகவே பின்நவீனத்துவ சிந்தனைகளை உதறிவிட்டுப் போய்விட் டது. அதன் இன்றைய அடையாளங்களையும் மிச்ச சொச்சங்களையும் கண்டறிய ஒரு அரசியல் பார்வையுள்ள நபர் கூட மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும். அய்ரோப்பிய சமூகத்தின் ஒரு காலத்திய ஒரு பகு தியின் வர்க்கப் பிரிவின் முரண்பாடுகளை இயல்புகளை சொல்ல எழுந்த சிந்தனை அது தன் உதிரிச் சிந்தனைகளின் பகுதியான பார்வையின் குறைபாடுகளுக்கு ஏற்ப அவையின் குறுகிய கால வாழ்வு முடிந்துவிட்டது. மரணம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

அதை அய்ரோப்பிய சமூகத்தின் பொருளாதார நிலைகளை வாழ்வியல் போக்குகளை ஒருபோதும் எட்டாத இந்தியச் சமூக நிலை மைகட்கு பொருத்திவிட முயல்கின்றனர். பின்நவீனத்துவத்தின் மொழி மற்றும் மனித உளவியல் சார்ந்த ஆய்வுத் தன்மைகளை இலக் கியப் போக்குக்கு அப்பாலும் அதோடு சம்பந்தப்படாத ஏனைய அறி வுத்துறைகட்கும் விரிவுபடுத்தி சர்வமயப்படுத்தி விடுகின்றார்கள். அது அரசியல் முன்பு நிராயுதபாணியாய் நிற்கின்றது. பின்நவீனத்துவம் தன் எல்லைகளைக் கடக்கும்போது அது சுமையாகவும் கோளாறான தாகவும், காலப் பொருத்தமற்றதாயும் ஆகி விடுகிறது. இதை இந்தப் போக்காளர்கள் ஒப்புவது கிடையாது. எதிர்விளைவுகள் விமர்சனங்கள் வரும்போது தம் எழுத்துக்களில் பூரண நம்பிக்கையற்ற நிலையில் அதன் கருத்தியலில் முழுமையில் ஏற்படும் சந்தேகங்கள், சங்கடங்கள் தம் அரசியல் அரைமயக்க நிலையை மறைக்க உடல் வன்முறைக்கு முன்பான மொழி ரீதியான வசைச் சொற்களாய் வன்முறைக்கு முன்பான முன் அறிவித்தலாய் ஆகிவிடுகின்றது. நாம் நாகரீகமாக எழு துங்கள் என்றால், அய்யய்யோ! நாங்கள் விளிம்பு மனிதர்கள் உங்கள் நாகரீகத்தை கண்டறியோம்! கேட்டறியோம்! என்று தம்மை தம் மத்திய வர்க்க இருப்பை மறைக்க வீரிடுவார்கள். வெறித்தனம் காட்டும் மட்டம் வரை செல்வார்கள். நாங்கள் பஞ்சைப் பராரிகள். இங்கிதத்தையும் பண்பாட்டையும் அறியோம் என்று தம் உண்மை இருப்புக்கு மறைப்பிடுவார்கள். இந்த முடக்குவாதம் நாடகத்தனம் வழக்கமான தந்திரமே, பின்நவீனத்துவ உபாயமே அதிர்ச்சியளிப்பது.

சொற்ப சண்டித்தனம் விடுவது. கருத்தை சிதறச் செய்து விவாதத்தில் சிந்தனையை ஒன்று குவிப்பதை விலக்கி வேறு தளங்களுக்கு இட்டுச் சென்று தப்பிக்கின்றனர். இவர்களின் சுயங்கள் அதிகாரத்துவ மொழியான ஆங்கிலம், தம் ஆங்கில மொழிப் பெருமையிலும் மேற்கத்தைய கலைச் சொற்களின் மொழி பெயர்ப்புக்களின் கடாட்சத்திலும் மறைந்து கொள்கின்றன. இவர்கள் உண்மையில் எந்த அய்ரோப்பிய மைய்வாதம் பற்றிக் கூச்சல் இடுகின்றார்களோ அதே அய்ரோப்பிய மையச் சிந்தனைகளாலேயே சிறை செய்யப்பட்டுள்ள துர் அதிஸ்டத்தை உணர்வதில்லை. தம் சொந்த சுதேசியத்தோடு போதிய ஆழமற்ற நிலையில் இந்திய மரபுகளை பிராமணியம், இந்து சமயம், இவைகட்கப்பாலும் மேலும் பின்நோக்கிச் சென்று காண முடியாத நிலையில் இவர்கள் அய்ரோப்பிய மெய்யியலைச் சரணடைவது தவிர்க்க முடியாததே. பின்நவீனத்துவ இன்றைய தமிழ்நாட்டு வாசிப்பாளர்கள் ஆங்கிலம் கற்ற நகர்ப்புறம் சார்ந்த தேசிய உலக விவகாரங்களோடு ஓரளவு பரீட்சயமுள்ள சாகசப் புனைவுகளிலும் துணிச்சல் வாதத்திலும் நம்பிக்கையுடைய நடுத்தர வர்க்கம் சார்ந்த போக்கு மட்டுமே. இது சாதாரண தலித்தியத்தையே நகரங்கட்கு வெளியேயான ஒடுக்கப்பட்ட மக்களையோ விளிம்பு மனிதர்களையோ கடைசி மட்டும் தன் வர்க்கப் பொருத்தமின்மையால் எட்ட முடியாது.

இந்தக் கூட்டத்தின் பிரதிநிதியான சாருநிவேதிதா அரசியலின் உடலுக்குள் ஊடுருவ முடியாத நிலையில் சித்தாந்தப் பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு விடாத எச்சரிக்கையோடு இலக்கியத்தில் தொடங்கி பின்புறத்தால் கள்ளப் பாதையால் சோசலிசம் பேச முனைகிறார். சோசலிசம் பற்றிய விளக்கங்களில் சிக்குவதைவிட சோசலிசத்தையும், பாசிசத்தையும் சமப்படுத்தி விடுவதின் மூலம் இந்த தப்பித்தல் நிகழ்கிறது. அரசு வகைப்பட்ட சோசலிசம், ஸ்ராலினிசக் கட்சி, அதிகாரம் இவைகளைப் பற்றிய புதிய வாசிப்புச் செய்து பழைய வாசிப்பின் குறைபாடுகளை உடைத்து அதிசயங்கள் எதையும் நிகழ்த்தவில்லை. சாருநிவேதிதாவின் சோசலிசம் பற்றிய வாதம் இங்கு வெளிப்படையாகி விடுகின்றது. எனவே சொந்த முதலாளிய சிந்தனையையும் பின்நவீனத்துவ மொழியாடல்களின் உதவி ஒத்தாசையோடு நிதானமான ஆழமான வாசிப்புக்குப் பதில் தம் இரண்டும்கெட்டான் சுயத்திற்கு ஏற்ப சொற்களை ஏவிவிட்டு ஆத்திரமூட்டி சோசலிசத்தை இழிவுபடுத்தும், சோசலிசத்தையும், நாசிசத்தையும் ஒரே குணாம்சமுள்ளதாய் வடிவமைக்கும் போக்கு, பின்நவீனத்துவம் மேலான வெறி. காலத்தின் முடிவுற்ற புள்ளியில் ஒடுங்கக் கோரும் சூனியவாதச் சூத்திரங்களின் பின்

www.tamilarangam.net



நவீனத்துக்கே உரிய முறையில் முதலாளியப் பிரச்சாரத்துக்கு போய்ச் சேருகிறார். இவர்களின் பின்நவீனத்துவக் ''கட்டுடைப்புக் காரியங்கள்'' எங்கே போயின. ஏன் இவர் உலகின் முதலாவது சோசலிசப் புரட்சியின் சகல அம்சங்களையும் அதற்கு விதிக்கப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு நிபந்தனைகளை, அது தோன்றி வளர்ந்து மடிந்த நிலைகளை ஏன் பன்முக வாசிப்புச் செய்யவில்லை? உளவியல் சார்ந்த அரசியல் மழுங்கிய தனிமனிதவாதச் சிந்தனைகள் புடைசூழ நாசிசமும், சோசலிசமும் இரண்டும் சமம் எனும் திமிர். முதலாளியம் நேரடியாகவே சோசலிசத்தை பாசிசத்தோடு அணிகட்டிவிட சாருநிவேதிதா பின்நவீனத்துவத்தின் துணையோடு மாற்று வழிகளில் செய்கின்றார். ஆனால் அவரின் ஆவணங்கள் முதலாளியத்திலிருந்து திருடப்பட்டவைதான். ஸ்ராலின் காலக் கொடுமைகள் பற்றிய கட்சி மற்றும் அரசு வைக்கப்பட்ட அதிகாரம், சோவியத்தின் அன்றைய விவசாயக் குணாம்சம், தொழில் மயப்படுத்தப்படாத நிலை இவைகளை நின்று நிதானித்து விளக்கத் தெரியாதபோது ஒற்றைக் கருத்தியலை சரணடைகிறார். புரட்சியின் பாதகமான அம்சங்களை மட்டுமே, அழிவுகளை மட்டுமே தூக்கிப் பிடிப்பதும் மற்றய அம்சங்களை பேச மறுப்பதும் தான் பின்நவீனத்துவத்தின் கட்டுடைப்போ. ஸ்டாலின் கால மனிதக் கொடுமைக்கும் அப்பால் சோவியத் புரட்சி சாதித்த மில்லியன் கணக்கான மக்களின் நல்வாழ்வு, சமூகப் பெறுமானங்கள், உழைக்கும் மக்களின் சாதனைகள், பாசிசத்தை முறியடித்து உலகின் பெரும்பகுதியை விடுவித்த தியாகம் என்பன சாருநிவேதிதாவின் வாசிப்புக்குள் வரவில்லை. மாறாக பாசிசத்தோடு சோடி சேர்த்து விடும் ஆத்திர அவசரம்தான் தெரிகிறது. இது அரை நூற்றாண்டு காலமாய் முதலாளியம் பிரச்சாரப்படுத்தி வரும் சந்தர்ப்பவாதக் கருத்தியல்தான், குட்டி முதலாளிய மனிதாபிமானம் பேசிக் கொண்டு சோசலிசம் முழுவதையும் சர்வாதிகாரக் கருத்தியல் மூலமாக்குவது முதலாளித்துவ பிரசங்க முறைதான். வழக்கமாய் பின்நவீனத்துவம் மதிப்பிடும் சோசலிசத்தின் கட்சியமைப்பு அதுகோரும் வரலாற்று ரீதியான அதிகாரம். சிறு குழுக்களின் பிரிவுகளின் பொது அடையாளத்தை பொதுமைப்படுத்திவிடல் என்ற அடிப்படையில் கூட விமர்சனத்தின் போக்கில் கூட விளக்குமளவு பலமற்ற நிலையில் சாருநிவேதிதா அதிதீவிரப் பிரேமைகளில் மூழ்கி விடுகிறார். இவரின் தகர்ப்பு நிகழ்வதான நினைப்பு வெறும் சொற்களின் மீதான பிரேமையே.

கிட்லர் 90 லட்சத்தை அழித்தான். ஸ்டாலின் காலம் 60 லட்சத்தை அழித்தது என்று சாருநிவேதிதா முதலாளித்துவக் கணக்கு வழக்குச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சொல்கிறார். ஜேர்மனிய மூலதனம் முட்டிய இரண்டாம் உலகயுத்தம் பலிகொண்ட உலகமக்கள் தொகை 50 மில்லியன். முழு அய்ரோப்பா விலும் ஜேர்மனியப் பாசிசம் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்திய தொகை யூத மக்களை உள்ளடக்கி 20 மில்லியன் ஆகும். ஸ்டாலின் காலத்தில் புரட்சியைப் பாதுகாக்க உள்நாட்டு வெளிநாட்டு விரோதி களை எதிர்த்துப் போரிட்டு மடிந்த புரட்சியாளர்கள் மற்றும் மக்கள், ஸ்டாலினால் கொல்லப்பட்ட போல்சுவிக் கட்சியின் தலைவர்கள், செம்படையின் தளபதிகள், இடதுசாரி அறிஞர்கள், கட்சியின் உறுப்பி னர்கள், பொதுமக்கள், தொழிலாளரின் எதிர் அணிகள், விவசாயிகளை இவர்களோடு புரட்சியின் எதிரிகளான 14 நாடுகளைச் சேர்ந்த கூலிப் படைகள், விரோதிகள், உள்நாட்டு வெண்படையினர், வேலை முகாம் களில் மடிந்தோர் என்று மடிந்தவர் தொகை 30 மில்லியன் ஆகும். புரட் சியை எதிர்த்துப் போரிட்ட உள்நாட்டு வெளிநாட்டு விரோதிக ளையும், ஏகாதிபத்திய கூலிப் படைகளின் அழிவையும் சேர்த்துக் கூட்டிக் கணக்குக் காட்டுவது வழக்கமான முதலாளியத் தந்திரம். இதையே சாருநிவேதிதாவும் பேசுகின்றார். இதில் ஒன்றரை மில்லியன் போல்சுவிக் கட்சியின் தலைவர்கள் உட்பட பெருந்தொகையான கட்சியின் ஊழியர்களாவர். ஸ்டாலினிசம் புரட்சியின் எதிரிகளை மட்டுமல்ல உண்மையான கட்சியின் முன்னணி வீரர்களையும், கொம்யூனிஸ்டுகளையும், உறுதிமிக்க பழைய போல்சுவிக் புரட்சியா ளர்களையும் கொலை செய்தது. உயர்ந்த கொம்யூனிச நடைமுறைக ளையும் ஒழுக்கங்களையும் உடைய புரட்சியாளர்கள் கொல்லப்பட் டது பற்றி சாருநிவேதிதா மட்டுமல்ல ரயாகரன் கூட பேசுவது கிடை யாது. சாருநிவேதிதாவிடம் இருப்பது விசமத்தனமும் திரிப்பும், நேர்மையின்மையும்தான்.

சாருநிவேதிதாவின் பின்நவீனத்துவ அருள்வாக்கு தொடர்கிறது. அரசியல் விடலைத்தனம் முத்திப் போன நிலையில் இப்படி எழுது கிறார். ''நாசிசத்தை உயர்த்திப் பிடிக்கும் படைப்புகளும் சமூகம் சார்ந்த வைதான்.'' இங்கு இவர் உபயோகிப்பது ஒரு மயக்கமான சொல்லாடல். வர்க்கங்கட்கு அப்பாலான பின்நவீனத்துவ சட்டதிட் டங்கட்கு உட்பட்ட சொல்லாட்சிதான். நாசிசத்தை உயர்த்திப் பிடிக்கும் படைப்புக்கள் யாரால் எந்த வர்க்கத்துக்கு சேவை செய்யப் படைக்கப்பட்டன? அவைகளின் அரசியல் இலக்குகள் என்ன? என்ற பல்துறைக் கேள்விகளை எழுப்பி சாருநிவேதிதான் தன் அறிவையும் நேர்மையையும் நாட்டியிருக்கா விட்டாலும், பின்நவீனத்துவம் அனு மதித்திருக்கின்ற கட்டுடைப்பு எல்லைகளிலாவது உலாவியிருக்

www.tamilarangam.net



கலாம். பாசிசக் கருத்தியலின் அடிப்படைகள் மக்களிடம் இருந்தது. நிலவியது என்று கட்டுடைப்பு வாதிகள் கருதுவோர்களேயானால் அம்மக்களைத் தாங்கும் சமூக அமைப்பு விசாரணை செய்யப்படல் வேண்டும். அதன் இறந்த காலத்தையும், நடப்பையும், எதிர்காலத்தையும் விடைபகரும்படி கோர வேண்டும். இவைகளை தனியே மரபுகளிடமும், தொல்படிவக் கருத்தியல்களின் தொடர்ச்சியில் தொங்கிக் கொண்டு அரசியல் சமூக அடிப்படைகளை கைவிட்டுவிட்ட நிலையில் இவை குறைபாட்டுப் பார்வையாகி விடுகின்றது. பாசிசக் கருத்தியல்களின் பின்புறம் இயங்கிய பொருளாதார இராட்சதத் தொழிற்துறைக்கு சந்தையும், மூலப் பொருட்களும் தேடி புதியவளம் மிக்க செல்வாக்கு மண்டலங்களையும் பிரதேசங்களையும் தேடி அலைந்த ஜேர்மனிய மூலதனமே பாசிசத்தை ஊட்டி வளர்த்தது. மூலத்தை விட்டு பகுதிக் காரணிகளில் தொத்திக் கொள்வதே பின்நவீனத்துவங்களின் பழக்க வழக்கம்.

சோசலிச எழுச்சி தோன்றுவதற்கான வரலாற்று நியாயத்தை அதன் சமூகத் தேவையை விளங்காதவர்கள். சோசலிசத்தின் பெயரால் ஏற்பட்ட தவறுகட்கு ஆகச் சோசலிசச் சிந்தனையையே ஒதுக்க முடியும் என்று திருவுளங் கொள்வார்களேயானால் அதே தவறுகளை மனித அழிவுகளை காரணம் காட்டி நாம் சகல போராட்டங்களையும், மனித எழுச்சிகளையும் நிராகரிக்க முடியாதா?

இலங்கையில் தமிழ் மக்களின் தேசிய எழுச்சி சிங்களப் பெரும் தேசியவாதத்தை எதிர்க்கவென்று புறப்பட்டு சாதாரண சிங்கள மக்களையும், முஸ்லிம் மக்களையும் அழித்து அவர்களை எதிரியாக்கிக் கொண்டு தம் சொந்த மக்களையும் அடக்கி நிற்கிறது. இங்கு குறுகிய தமிழ் தேசியவாத இயக்கங்களின் அரசியல் இராணுவ வெறித்தனங்களைக் காரணம் காட்டி முழுத்தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போரின் எழுச்சியின் அடிப்படைகளை மறுக்க முடியுமா? புறக்கணிக்க முடியுமா? ஒட்டுமொத்தப் பிரச்சினையை மறந்துவிட்ட பகுதியான கிளைக் காரணங்களில் நிபந்தனைகளில் உறங்கிப் போய்விடலாமா? தலித் மக்களிடையே தமிழ்நாட்டில் பலபத்துச் சாதி இருக்கிறபடியால் இந்தியா முழுவதும் அவர்கள் 1070 சாதியாய் கூறுபட்டும், பிளந்தும் கிடக்கிறபடியால் இவர்கள் அடிக்கடி தம் பொது எதிரியை இலக்கை மறந்து, தம்மிடையே முட்டி மோதி அடிபட்டு வெட்டுக் குத்துப் பட்டுக் கொண்டிருப்பதால் பிராமணியத்தோடு இரத்தக் களரியான யுத்தத் தொடர்ச்சிக்கு சாத்தியம் இருப்பதாலும் தலித் விடுதலை

தேவையில்லை தலித் என்ற சொல்லே பெருங்கதையாடல் தான் என்று உதறிவிடலாமா? ஏன் சாருநிவேதிதா பேசும் விளிம்பு மனிதர்களான பிச்சைக்காரர்கள், திருடர்கள், கைதிகள், நாடோடிகள், அன்னியர்கள், பைத்தியக்காரர்கள், அலிகள் இவர்களிடையே முரண்பாடும் ஏற்றத் தாழ்வும் சுயம்பேணும் அவாவவும் இருக்கிறபடியால் ஒன்றை ஒன்று எதிர்க்கின்ற படியால் இந்த மனிதர்களுக்கு சமூக விடிவு வேண்டாம் என்று சொல்லி ஓடிவிடலாமா? சகலதையும் துறந்துவிட்டு மனிதச் சுரண்டலையும், அரசு அடக்குமுறைகளையும் நிற, இன, மத பிராந்திய வேறுபாடுகளையும், பெண் விடுதலையையும், வர்க்க வேறுபாடுக ளையும் பிராமணியத்தையும் மறந்துவிட்டு மனிதகுல விடுதலையை பெருங்கதையிலிலும் கற்பிதங்களின் வரிசையிலும் இருத்திவிட்டு, தலித் விடுதலையை சிறுகதையாடல்கள் வரிசையிலும் இருத்திவிட்டு விளம்பு மனிதர்களின் தத்துவமே சரணமென்று காலத்தின் முடிவுற்ற தன்மையில் கரைந்து போகலாமா?

சாருநிவேதிதாவின் அரசியல் மற்றும் தத்துவ பின்துணையற்ற சுயத்துக்கு ஓய விருப்பமில்லை மீண்டும் அறிவிக்கிறார்!

''நாங்கள் பிச்சைக்காரர்கள், அலிகள், பைத்தியக்காரர்கள், அலி களால் எந்தச் சமூகமாவது அழிந்திருக்கிறதா?'' இப்படியாக தன்னையும் அய்ரோப்பிய நண்பர்களையும் எம்மிடம் அறிமுகப் படுத்தி இரங்கக் கோருகின்றார். எம்மைப் போன்றவர்களால் எந்தத் தீமையும் இல்லை என்று அழுது முறையிடுகின்றார். உண்மையில் அவரும் அவரின் புகலிடக் கூட்டாளிகளும் இரங்கத்தக்க நபர்களா? பிச்சைக்காரர்களா? அலிகளா? நாடோடிகளா? விலாசமற்றவர்களா? இதை ஏற்கும்படி நிர்ப்பந்திப்பது ஏன்? அதன்மூலம் இவர் சொல்லும் செய்தி என்ன? எம் புத்திக்கு எட்டிய வரையில் இவர்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களும், பல்வேறு பலபத்துப் பேறுகளும் பெற்று வாழ்பவர்கள்தான். எம்தேச விளிம்பு மனிதர்களைவிட பல.மடங்கு உயர்ந்த வாழ்வும், சமூக அந்தஸ்தும் வாய்க்கப் பெற்றவர்கள்தான். பின்நவீனத்துவத்தால் பிரபஞ்சத்தையே இரட்சிக்க வல்லவர்களாய் காட்டும் இவர்கள் தமக்குத் தாமே இவ்வாறு இரங்கற்பா பாடுவதேன்? இந்தப் பூமிப்பரப்பில் தாம் மட்டுமே தன்னந்தனியே விடப்பட்டுள் ளதாய் ஏன் இந்த அறிமுகங்கள்? சுயம் தொலைத்த சுயபரிதாபக் கூத்துகள், இதுவரை விளிம்பு மனிதர்கட்காகப் பேசியும், எழுதியும், வாதாடியும் வந்தவர்கள் எப்படித் தாமே.விளிம்பு மனிதர்களாக அவதாரம் எடுத்தனர்? விளிம்பு மனிதர்களை இரட்சிக்கப் போவதாய்

www.tamilarangam.net



சொற்களின் அணிவகுப்பை நடாத்தியோர், தம் அனாதரட்சகர் கோலத்தை துறந்து தம்மைத்தாமே விளிம்பு மனிதர்களாக்கிக் கொண்டு உண்மையான விளிம்பு மனிதர்களின் இடங்களைக் கைப்பற்றிக் கொண்டதேன்? என்று நியாயமாய் கேட்கலாம். இவர்கள் நிகழ்த்தியுள்ள அதிசயங்கள் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தைகள், பின்நவீனத்துவ நடுத்தர வர்க்கத்தின் நாயகர் நாயகிகளது அரசியல் சித்து விளையாட்டுக்குரியதாகும். தம்மை விளிம்பு மனிதர்களாக பாவனைகள், பாசாங்குகள் செய்து கொண்டு தம்மைச் சூழவுள்ள மனிதர்களையும் சமூகத்தையும் கனவுப் பொருளாக்கிக் கொண்டு உளவியல் சார்ந்த மாயை மயக்கங்களில் புகுந்து கொள்கின்றார்கள். இவர்கள் தமக்குள்தாமே அடைக்கலாம் புகுந்து கொள்வதும் தம்மைச் சுற்றி வார்த்தையாடல்களில் சொல் அலங்காரங்களில் புனைவுகளை சிருஷ்டித்துக் கொள்வதும் சுய இரக்கம் ஒருபுறமும் அசட்டுத் துணிச்சல் மறுபுறமுமாய் இவர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். இது மதில் மேற் பூனையான, எதையும் பாரம் எடுத்துவிடாத, சமூகப் பொறுப்பற்ற, தான் மட்டுமே தப்பிப் பிழைப்பதற்கு வழிதேடும் குணமாகும்.

தீவிரமான கோரிக்கைகளை கொண்டவர்களாகவும், அரசியல் பிடிவாதம் கொண்டவர்களாயும், கட்டுக்கடங்காதவர்களையும் தென்படும் இவர்களின் வெளித்தோற்றம் இவர்களது அரசியல் இயலாமையின் நிறைவின்மையின் வெளிப்பாடுதான். அதிதீவிரவாதம்தான் இவர்களது. அரசியல் மூலதனமாய் இருக்கும். அதை முன்நிறுத்தி ஆர்ப்பாட்ட அட்டகாசங்கள் செய்வார்கள். யதார்த்தத்தில் அரசியல் சமூக கொதிநிலைகள் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப இவர்கள் நடவடிக்கைகள் ஏறு இறங்கு முகமாக இருப்பதை யதார்த்தத்தை நிராகரிக்கும் இந்த அகநெருக்கடிகளை முதன்மைப்படுத்தி இயங்கும் இவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. தனிமனித வக்கிரங்கள், பாலியல் ஒடுக்குமுறைக்கு எதிரான குரல் என்ற பெயரில் ஆணாதிக்க ஆபாசங்களைக் கொட்டல், அலட்சியம், பரபரப்பு மூட்டல் இவைகள் தம்மை அனைவரையும் கவனிக்கச் செய்யும் உத்தியாகவும் வெளிப்படுகின்றன.

சாருநிவேதிதா அவர்களே!

கஞ்சித் தண்ணியும், பள்ளிப் படிப்பும், வீடு வாசலும் இல்லாமல் சமூகத் தீட்டாய், அன்னியர்களாய் தள்ளி வைக்கப்பட்டுள்ள உண்மையான விளிம்பு மனிதர்களை எம் நாட்டில் நாம் மிகமிக நன்றாக

அறிவோம். இங்கு அய்ரோப்பாவில் விளிம்பு மனிதச் சிந்தனை தோன்றி மடிந்த இடத்தில் தம்மை விளிம்பு மனிதர்களாக அடையாளம் காட்டிக் கொள்ளும் அற்ப சொற்ப மனிதர்களை, உங்கள் தமிழ் நாட்டு பின்நவீனத்துவ இரவல் ஆசான்களின் ''மேக்கப்'' போடலுக்கும் அப்பால் நேரடியாக அவர்களோடு வாழ்ந்து பெற்ற அனுபவத்தினூடு அறிவோம். நாங்கள் அன்னியர்கள், அகதிகள், கறுப்பர்கள் என்பதால் எம்மை விளிம்பு மனிதர்களாக்கிக் கொண்டு இங்கு வாழும் மக்களோடும், சமூக விடுதலைச் சக்திகளோடும் எம் உறவுகளைத் துண்டித்துக் கொண்டு எம்மை மென்மேலும் தனிமைப்படுத்தி குறுங் குழுவாதப் போக்குள் சிறைப்பட்டு சிக்கி அழியவும் பொது எதிரிக்கெதிராய் தன்னந்தனியே நின்று கொள்ளையிலே போகவும் நாம் விரும்பவில்லை. எம் சுயங்கள் தனித்துவங்கள் மேலான உண்மையான ஆக்கிரமிப்பாளர்களை, நாம் பின்நவீனத்துவம் ஓதும் ''எல்லோருக்குமான உண்மை பொதுநீதி அறம் இல்லை'' என்ற புதிய பெருங்கதையாடலுக்கு அரசியல் புரட்டுகட்கு அப்பால் அறிவோம். உண்மையான விளிம்பு மனிதர்களின் இடத்தையும், குரலையும் இவர்கள் பலவந்தமாய் அபகரித்துக் கொள்வதும், அத்துமீறிப் புகுந்து கைப்பற்றிக் கொள்வதும் நேர்மையான செயலல்ல. விளிம்பு மனிதர்களுக்கு மாற்றீடாக தம்மைக் காட்டி எம்மை நம்பக் கோருவது மோசடித்தனமானது. தம்மை விளிம்பு மனிதக் கூட்டத்துள் பலவந்தமாய் திணித்துக் கொள்ளும் இவர்கள் உண்மையில் விளிம்பு மனிதர்களை தம்மையங்களைச் சுற்றி அணி வகுக்கவும் ஈர்க்கவும் முயல்கிறார்கள் என்பதைக் காண்பது சிரமமல்ல.

''அலிகளால் எந்தச் சமூகமாவது அழிந்திருக்கிறதா? அலிகளின் வரலாற்றில் எந்த வதை முகாமாவது இருந்திருக்கிறதா?'' இது சாருநிவேதிதாவின் வெற்றிகரமான வாசிப்பு. ஏன் அலிகளால் நாடோடிகளால் கொலை செய்ய முடியாதா? கொலை செய்தது கிடையாதா? சமூகத் தீமைகளில் ஈடுபட முடியாதா? இந்த மனிதப் பிறவிகளும் இந்தச் சமூக அமைப்பில்தானே வாழ்கிறார்கள். தாம் வாழும் சமூகத்தின் அத்தனை குறைகளும், மனிதக் கொடுமைகளும் அவர்களிடம் மட்டும் எவ்வாறு இல்லாமல் போகும். இவைகளிடமிருந்து தனித்தொதுங்கி எந்த மனிதர்களாலும் வாழ்ந்துவிட முடியுமா? விளிம்பு மனிதர்களால், புனிதர்களாக மாசுமறவற்ற மனித ஜீவிகளாக அடுத்த மனிதனுக்கு துன்பம் விளைவிக்காத அப்பாவிகளாய் வாழ்ந்திட முடியுமா?

www.tamilarangam.net



நாம் அனைவருமே வாழ்வின் நெருக்கடிகளில் உருச்சிதைந்து, மனிதம் சிதைந்து சின்னாபின்னம் அடைந்துவிட்ட மனிதர்தாம்.

சுரண்டலை நிர்வகிக்கும் அதுசார்ந்த கருத்தியலைப் பேணி வளர்க்கும், நோய்ச் சமூகத்தில் எந்த மனிதப் பிரிவும், குழுவும், வர்க்கங்களும் மனித இழிவுகட்கு ஆட்படுவதிலிருந்து தப்பிக்க முடியாது. வாய்ப்புக் கிடைக்கும் போது அலிகளும், நாடோடிகளும், பிச்சைக்காரர்களும், கைதிகளும், திருடர்களும் வதை முகாம்களை உருவாக்க முடியும். சரித்திரத்தில் இத்தகையோர் கொடூரமான அரசுகளை உருவாக்கி இருக்கிறார்கள். சமூகத்தின் புறக்கணிப்பு, அவமானப்படுத்தும் தன்மை, சுரண்டல், வன்முறைக் குணம், பொருளாதார சமமின்மை காரணமாக விளிம்பு மனிதர்களிடம் அடிமைத்தனம், பணிவு என்பவை மட்டுமல்ல ஏனையவர்களை விட கோபமும், முரட்டுத்தனமும் நீதிகோரி தாறுமாறாய் வெளிப்படும். ஆனால் இவை தம் கையில் அதிகாரங்கள் கிட்டும்போது கடந்தகால மனித இழிவுகட்கு வஞ்சம் தீர்க்கும் உணர்வாகவும் வெளிப்படும். இவை வரைமுறையற்ற மனிதக் கொடூரங்களாகவும் உருவாகும் என்பதற்கு வரலாற்றுச் சாட்சியம் உண்டு. கிட்லரும், முசோலினியும், இடிஅமீனும் விளிம்பு மனிதர்கள்தான். சமூகத்தின் அடிமட்டத்தில் உதிரி வர்க்கங்களிடமிருந்து மிதிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டு சமூக வாய்ப்புகள் அற்று இருந்து வரலாற்று விபத்தால், பாசிசத்துக்கும் முதலாளியத்துக்கும் தொண்டு செய்யப் போனவர்கள்தான். அதை வழி நடாத்தியவர்கள்தான். கிட்லர் நாடோடியாகவும், சமபாலுறவாளனாகவும், தன் யூதக் கலப்புச் சம்பந்தமாய் தாழ்வுணர்ச்சிச் சிக்கலும் கொண்டிருந்தவன்தான். முசோலினி தம் உணவுக்காக திருட்டு நடாத்தும் உதிரி வர்க்கப் பின்புலத்திலிருந்து வந்தவன்தான். பின்பு இவர்கள் இருவரும் தம் விளிம்பு மனித அடையாளங்களோடு துறந்து விட்டு பாசிசத்தின் தலைமைக்குச் செல்லவில்லையா? செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகனாய் உதிரிப் பாட்டாளி வர்க்கத்திலிருந்து பிறந்து வந்த ஸ்ராலின் பின்பு உழைக்கும் மக்களின் முதல் மனித எழுச்சியை சிதைக்கவில்லையா? அன்று சோவியத் யூனியனை சூழ இருந்த ஏகாதிபத்திய முற்றுகைகள், உள்நாட்டு தொழில் வளர்ச்சியடையாத பிற்போக்கான விவசாயச் சமூகக் குணாம்சமும், சமூகத்தில் தனித்து அலட்சியப்படுத்தி விடப்பட்ட உதிரி வர்க்க உளவியலும், அதன் சகிப்பற்ற மூர்க்கமும் காரணமாகும். ஒரு புதிய அமைப்பிலும் பழைய சமூகத்தின் கட்டுமானமும் கருத்துக்களும் ஒரு குறிப்பிட்ட

www.tamilarangam.net


காலம் வரை ஆதிக்கம் செலுத்துவதும் மனித குணாம்சங்களை வழி நடத்துவதும் தவிர்க்க முடியாததே. அதிஉயர்ந்த அரசியல் சித்தாந்த நடைமுறையும் ஒழுக்கமும் மட்டுமே இவற்றை வெல்லும் போராட் டத்தின் முதல் நிபந்தனைகளாகும். இவைகளைப் பெறத் தவறிய ஸ்ரா லினிசம் கொடூரமும், ஆதிக்க மனோபாவமும் கொண்ட ஸ்ராலின் என்ற விளம்பு மனிதரின் இயல்புகள் சோவியத் புரட்சியின் உலக நம்பிக்கையைச் சிதைத்து புதிய அதிகார வர்க்கத்தை நிறுவ துணைக் காரணமாகிவிட்டது. ஸ்ராலின் மிகக் கடுமையானதும் சகிப்புத் தன்மையுடனும், ஆழ்ந்த மனிதாபிமானத்துடன் கூடியதுமான சித்தாந்த வழியை கைவிட்டமைக்கு ரஷ்யப் புரட்சி சந்தித்த சகிக்க வொணாத நெருக்கடிகள் மட்டும் காரணமல்ல. அது நடத்திய வாழ்வா சாவா என்ற போராட்டம் மட்டும் காரணமல்ல. புரட்சியின் தலை மையை கையகப்படுத்திக் கொண்ட ஸ்ராலினின் சொந்த விளிம்பு மனிதக் குணமும் காரணமாகும். மக்களின் கருத்துக்கள் சமூக உள வியல் என்பன புதிய சமூக அமைப்பில் அதன் சமூக பொருளாதார அர சியலின் விளை பொருளாக மாற ஒரு வரலாற்றுக் காலம் தேவைப் படும். அதுவரை பழைய சமூகத்தின் கருத்துத் தொடர்ச்சியை மக்களின் உளவியல் தொடர்ச்சியை அழித்துவிட முடியாது. சமூக வளர்ச்சியின் வேகமே இதை நிர்ணயிக்கும் சக்தியாக இருக்கும். இங்கு பின்நவீனத் துவம் எல்லாக் கருத்துகட்கும் தோற்றம். வளர்ச்சி, இறப்பு உண்டு. சாகாதவை எதுவும் இல்லை என்பதை சமூக இயக்கவியல் போக்கில் புரியப் பலமற்றபோது அது மாறா நிலைவாதப் போக்குகளிடம் சரண டைகிறது. இவர்கள் சமூக கருத்தியல்களை சாகாவரம் பெற்றவைக ளாக வரையறுத்து விடுகின்றனர். சமூகத்தின் வளர்ச்சி விதிகள் பற்றிய அக்கறையற்ற இவர்கள் சமூகக் கருத்துக்கள் மாறுவதும், சிதைவதும், வளர்ச்சியடைவதையும், புதுப்பிக்கப்படுவதையும் அச்சமூகத்தின் சுரண்டும் வர்க்க நலன்கள் அதற்கு அனுசரணையான கருத்துக்கள் யாவுக்கும் அடிப்படையாய் இருப்பதையும் காண மறுத்து மரபில், தொல் கருத்துக்களின் எச்சங்களை மிச்ச மீதிகளை தேடப் போய்விடு கின்றனர்.

இறுதியாக, பெண் விடுதலை பேசும் சாருநிவேதிதா மறுபக்கம் **''என் ஆண் குறிதான் என் சமூகம் என்பேன்''** என்று தன் ஆணாதிக் கத்தை நாட்டிக் காட்டுகின்றார். தன் முரண்பட்ட போக்குகளையும் பின்நவீனத்துவ பலவீனங்களையும் நிரூபிக்கின்றார். ஒருவரை வெறி கொண்ட நிலை அனைவரையும் அசட்டை செய்யும் பொருட்படுத்தாத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போக்கு, பாலியல், பாலுறுப்பு சம்பந்தப்பட்ட சொற்களை அதிர்ச்சி யூட்டும் தன்னை கவனிக்கத் தூண்டும் உத்திக்கு பயன்படுத்துவது இவை சாருநிவேதிதாவிடம் மிகுதி. இவைகட்கு எதிர்க் கலாச்சாரம் கலகம் என்று பெ்பயர் சூட்டடப்படுகின்றது. பாலியலை சர்வமயப் படுத்தி பாலியலூடாக உலகைப் பார்க்கும் பழைய காலங் கடந்த பிராய்டிசப்பார்வை எப்பவோ கப்பல் ஏறிவிட்ட கருத்தியல்தான். அதை தூசி தட்டி முதன்மைப்படுத்தி அதில் தொங்குகின்றார். பின்நவீனத்துவம் மேற்கத்திய கலாச்சார நெருக்கடியின் பிறப்பே. அரசியல் இயலாமை கொண்ட உதிரி வர்க்கங்களின் பெருமூச்சு, இரண்டாம் உலகயுத்தம் ஏற்படுத்திய மனித அழிவுகள் ஸ்ராலினிசம் மேலான அவநம்பிக்கை, அரசியற் போக்கிடமற்ற நிலை, குடும்பம், மற்றும் சமூக உறவுகளில் ஏற்பட்ட இடைவெளி, வளர்ச்சி பெற்று வந்த இயந்திர மயமாக்கல், இவைகளின் விளைவாகவே பின்நவீனத்துவம் நகர வாழ்க்கையின் உதிரி வர்க்கத் துயரங்களோடு படைக்கப்பட்டது. நகர வாழ்வின் தனிமை, விரக்தி Dackel கலாச்சாரம் (பெரும்பாலும் தனியே இருப்பவர்களால் வளர்க்கப்படும் ஒரு இனநாய்) போட்டி என்பவற்றோடு, மேலைத் தேய முதலாளியத்தில் மொழி மலிவு எழுத்துகட்கும், விளம்பரத்துக்கும் பயன்படும் நிலைக்கும் இறங்கிப் போய் விட்டதைக் கண்ட மொழியியல் துறை சார்ந்தவர்களின் ஆத்மசாந்தி சிந்தனைகள் தோன்றின. இவை இலக்கியப் பரப்புகளில் ஊடுவின. அரசியலைத் தீண்ட முயன்றன. இவை முழுமையாக அய்ரோப்பாவில் விரல்விட்டு எண்ணத்தக்க நகரங்கட்கும் பகுதியான மாணவர்கள், வேலையற்றவர்கள் மற்றும் உதிரி வர்க்கங்களின் சிந்தனையாகும். இதை அரசியல் சோர்வுக்கும் அவநம்பிக்கைக்கும் உள்ளாகியுள்ள தமிழ்நாட்டு நகர்ப்புறம் சார்ந்த நடுத்தர வர்க்கமும், கல்வித் துறை சார்ந்த குட்டி முதலாளிய புத்தி ஜீவிகளும் சிக்கெனப் பிடித்திருப்பது புரிந்து கொள்ளக் கூடியதே. ஸ்ராலினிசத்தை மார்க்சியமயமாக்கும் சமர் ரயாகரனை எதிர்கொள்ள பின்நவீனத்துவ இலக்கியத் தளங்களில் இரை மீட்டுத் திரியும் சாருநிவேதாக்களால் பின்நவீனத்துவ இலக்கிய டப்பாக்களால் முடியாது.

**கார்லீப்னெக்ட், ஜெர்மனி.**

நன்றி:
அம்மா 2000 பிரான்சு

www.tamilarangam.net


# 'வன்முறை எழுத்து' வாசிப்புக்கு பின் ஒரு கேள்வி?

தமிழீழ குட்டி முதலாளிய தேசிய விடுதலை இயக்கங்களில் இருந்த, சமூக விடுதலையை நேசித்து இயக்கங்களில் செயற்பட்ட போராளிகள். இயக்கத் தலைமைகளின் சந்தர்ப்பவாத அரசியலாலும் சுத்த இராணுவப் போராட்டங்களால்; அதிகார வெறி கொண்ட சக இயக்க - உள்ளியக்கப் படுகொலைகளால், மக்கள் மேலான அராஜக நடவடிக்கைகளால் இயக்கங்கள் சிதைந்த போது — திசை விலகிய போது தலைமைகளின் தவறுகளை சுட்டிக் காட்டியவர்களும், தாமாகவே ஒதுங்கிக் கொண்டவர்களும் விசேடமாக அய்ரோப்பிய - அமெரிக்க நாடுகளுக்கு சென்று தஞ்சமடைந்த பின், தமது பொரு ளாதார வாழ்நிலை வதிவிடப் பாதுகாப்பு என்பதை ஓரளவு உறுதிப் படுத்தும் நிகழ்ச்சிப் போக்கில் தமது தாய்ச்சமூகம் பற்றிய கண்ணோட் டங்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர். ''அகதி'' என்ற அடையா ளத்தை மறுக்கும் இவர்கள் ''புலம் பெயர்ந்தவர்கள்'' புலம் பெயர் அர சியல், இலக்கியம் என்ற பெயரில் தங்களை தமிழ் மக்கள் முன் - உலக மக்கள் முன் அடையாளப்படுத்துகின்றனர். அய்ரோப்பிய, அமெரிக்க ஏகாதிபத்திய நாடுகளின் அகதிக் கொள்கை, குடிவரவுக் கொள்கை களின் உலக பொருளாதார அரசியல் அதிகாரப் பின்புலங்களை புரிந்து கொள்வதற்கு அக்கறை எடுப்பதை விட தங்களின் அடுத்த சந்ததியின் எதிர்காலம் பற்றி சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் முக்கியத்துவம் அளிப்பதை விட; தமதும் - உறவினர்களதும் பொருளாதார அகதி வாழ்க்கையைத் திடப்படுத்துவ தற்கு முன்னுரிமை கொடுக்கின்றனர். சிலர் பொழுது போக்காக அரசியல், இலக்கிய முயற்சிகளிலும் ஈடு படுகின்றனர்.

தமிழீழப் போராட்டத் தலைமைகளின் சமரசம், திசை விலகல், சுத்த இராணுவ கண்ணோட்டப் போராட்டம் இவற்றுக்கான காரணங் களை சித்தாந்த அரசியல் போக்கை நடைமுறைப் பிரச்சனைகளை பொறுப்புணர்வுடன் பரிசீலிப்பதற்கு - விவாதிப்பதற்கு பதில் பின் நவீனத்துவ மற்றும் அனார்க்சிய சிந்தனைகளை மேலோட்டமாக முன்னிறுத்துகின்றனர். இந்தியாவில் தமிழ்நாட்டில் பின் நவீன தத்து வத்தை தமிழில் தாங்கிப் பிடிப்பவர்களை (மக்கள் போராட்டங்களில் இருந்து அந்நியப்பட்டு நிற்கும் அறிவு சீவிகளை அய்ரோப்பிய நாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


களுக்கு வரவழைத்து தமது பீயர் (Beear) இலக்கியம் பற்றி பேசிப் புளங்காகிதம் அடைந்து வருகின்றனர். கடந்த காலங்களில் தாம் சார்ந்த குட்டி முதலாளிய இயக்கத் தலைமைகளின் உடல் வன்முறை அராஜக நடவடிக்கைகள், தமது எழுத்திலும் விவாதங்களிலும் சந்திப்புகளில் வெளிப்படுத்தும் இவர்களால் இதற்கான அரசியல், சமூக, பொருளா தார பண்பாட்டு விடயங்களை கண்டறிய முடியவில்லை.

இவர்களின் தவறான சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் மாற்றான புரட்சிகர மார்க்சிய சிந்தனையை கொண்டுள்ளவர்கள், சிறந்த அணுகுமுறை மூலம் விமர்சிக்கவும் சிந்திக்கவும் மாற்றான புதிய போராட்ட முறையை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய கடமை மார்க்சியவாதிகளுக்கு உண்டு. இதை இக்கட்டுரையாளர் செய்திருக் கின்றார். அறிவுபூர்வமாக தங்களை பரிசீலிக்கும் - விவாதிக்கும் பின்நவீனத்துவ முகாமில் நிற்கும் சமூக அக்கறையுள்ள நண்பர்கள் மார்க்சியத்தின் முன்னேறிய பார்வையின் பக்கம் வருகிறார்கள் - வருவார்கள்.

மார்க்சியத்தை வளர்ப்பதில் அக்கறை காட்டுபவர்கள் கட்டுரை யாளர் உட்பட, ஒவ்வொரு சிந்தனை முறையிலும் உள்ள தவறுகளை சுட்டிக் காட்டி சரியான கருத்தின் பக்கம் நின்று விவாதிக்கும் போது அவற்றின் தனித்துவ அம்சங்களை கவனிக்க வேண்டும். மார்க்சிய சித்தாந்தத்தின் வளர்ச்சி பற்றியும் பொதுவுடைமைக் கட்சிகளின் தலை வர்களின் தவறுகள் - சரி பிழைகள் மற்றும் அகிலத்தின் பிரச்சனை களை தனியாகவும்; மார்க்சியத்துக்கு எதிரான சித்தாந்தங்கள் தலை மைகளின் சரி - தவறுகளை வேறுவேறாகவும் விவாதிப்பதன் மூலம் மட்டுமே குறிப்பான பிரச்சனைகளை குறிப்பான வழிகளில் தீர்க்கவும் - வளர்க்கவும் முடியும் என்பதை கட்டுரையாளர் கவனத்தில் கொள்வது நல்லது.

தலைவர்களை அவர்களின் தலைமைப் பண்புகளுக்காக அவர் களின் பெயர்களுடன் இசங்களாக பெயர் சூட்டி மார்க்சியர்கள் அணுகுவதில்லை. ''மார்க்சியம் - **லெனினியம்**'' என்பதன் வரலாற்று ரீதியான சமூக பொருளாதார அரசியல் - தத்துவ உள்ளடக்கம் என்பது மிக மிக ஆழமான புரிதலைக் கொண்டது. **ஸ்டாலினிசம் - ட்ரொஸ்கிசம் - காஸ்ரோயிசம்** என்பதெல்லாம் இத்தலைவர்களின் தீவிர ஆதரவாளர்களின் புளங்காங்கிதமே

தவிர மார்க்சிய அணுகுமுறையல்ல. ஸ்டாலின் தவறுகளுக்கான கோட்பாட்டு ரீதியான சித்தாந்த அரசியலை அதற்கான சமூக பொருளாதார பண்பாட்டுக் (சமூக உளவியல்) காரணங்களைப் பற்றி ஆய்வு செய்வது ஒரு வகை. ஸ்டாலின் நடைமுறைத் தவறுகளை முன்னிறுத்தி பட்டியல் இடுவது தனிமனித உளவியல் பற்றிப் பேசுவது இன்னோர் வகை. ஸ்டாலின் இடத்தில் சோவியத் தலைமையில் ட்றொட்ஸ்கி இருந்திருந்தால் அல்லது இல்லாத போதும், இளம் சோவியத் எதிர்கொண்ட கோட்பாட்டுப் பிரச்சனைகளுக்கு ட்றொட்ஸ்கியின் பார்வை என்னவாக இருந்தது? ட்றொஸ்கி நாடு கடந்து வாழ்ந்த போதும் மூன்றாவது அகிலம் மூலமாக சோவியத் கட்சியின் அல்லது ஸ்டாலின் தவறுகளுக்கு எதிராக அவரின் தத்துவப் போராட்டம் எப்படி இருந்தது? (சோவியத் புரட்சிக்கு பின்பு மூன்றாவது அகிலத்துடன் இருந்த பல கட்சிகளுடன் முன்பே நேரடித் தொடர்பு வைத்திருந்தவர்) சோவியத் கட்சியின் 22-வது கொங்கிரஸின் திட்டவட்டமான திரிபுவாதக் கொள்கை மாற்றத்துக்கு எதிராக உலக கொம்யூனிச இயக்கத்தின் (ICM) முன் மாவோவும் சீனக் கட்சியும் முன் வைத்த ''மாபெரும் விவாதத்தின்'' சித்தாந்த அரசியல் மீது நான்காவது அகிலத்தின் நிலைப்பாடுகள் என்ன?

ஸ்டாலினிசம் - ட்றொஸ்கிசம் என எதிர்ப்பு முகாம்களில் நின்று நடைமுறைத் தவறுகளை முதன்மைப்படுத்தி கோட் பாட்டுப் பிரச்சனைகளை இரண்டாம் பட்சமாக்குவது அல்லது மறைப்பது என்பது இந்த ஏகாதிபத்திய காலகட்டத்தில் மார்க்சியத்தை வளர்க்க உதவாது. உலக சோசலிசப் புரட்சியை மீண் டும் நடைமுறைப்படுத்த - விரிவுபடுத்த நிரந்தரப் புரட்சி தத்துவத்துக்குப் பயன்படாது. கட்டுரையாளர் இதைக் கவனத்தில் கொண்டு ஸ்டாலின் - ட்றொஸ்கி பற்றிய பிரச்சனையை தனியாக முன் வைத்து அணுக விவாதிக்க முன்வர வேண்டும்.

*நன்றி - புதிய சகாப்தம்*

*ஆசிரியர் குழு*
*புதிய சகாப்தம்*

# பேச்சு வார்த்தையும் சுதேசிய நிலைப்பாடும்

பேச்சுவார்த்தை பற்றி தற்பொழுது மும்மரமாக பேசப்பட்டு வருகின்றது. அதேவேளை யுத்த முனைப்பும் முடுக்கப்பட்டு இருக்கின்றது. தற்பொழுது எல்லோரும் ஒல்லாந்தர் காலத்தில் வன்னியில் இருந்து வரும் யானை மற்றும் உற்பத்திப் பொருட்களிற்கு வரி அறவிடுவதற்காக உருவாக்கப்பட்ட சோதனைச் சாவடியும், 1970 ஆண்டு உள்நாட்டு பொருட்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்காக உருவாக்கப்பட்டதும், பின்னர் நடைபெற்ற சிங்கள இளைஞர் புரட்சியை தடுப்பதற்காகவும், தமிழ் தேசியத்தின் உரிமையை அடக்குவதற்காகவும் விஸ்தரிக்கப்பட்ட ஆனையிறவு இராணுவ முகாமின் விழ்ச்சியுடன் தற்பொழுது முழு தமிழ் மக்கள் பிரதேசங்கள் அனைத்தும் விடுவிக்கப்பட்டு விடும் என்ற ஒரு மாயை ஏற்பட்டுள்ளது. விடுதலை பெற்ற பிரதேசங்கள், விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள், முழு நாடு விடுதலை பெற்ற பின்னர் ஒரு தேசம் எவ்வகையான பொருளாதார திட்டங்களை மேற்கொள்ளும், இதன் மூலம் எந்த வகையான மக்கள் பிரிவினர் நலன் பெறுவர் என்பதில் இருந்து ஒரு நாட்டின் பொருளாதாரக் கொள்கை எப்படி அமைய வேண்டும் என்பதே முக்கிய நிபந்தனையாகின்றது. இவற்றிற்கு உத்தரவாதமாக விடுதலை இயக்கம் எத்தகைய பாதையை கொள்கின்றது என்பதைப் பொறுத்தே ஒரு விடுதலை இயக்கத்தை ஆதரிக்க வேண்டுமா? இல்லையா என்பது பற்றி முடிவு எடுக்க முடியும். அதன் பொருட்டே விடுதலை இயக்கத்தின் செயற்பாடு அமைந்து கொள்ளும். மீண்டும் இங்கு வலியுறுத்தும் போக்கானது தமிழ், சிங்கள, மலையக, முஸ்லீம் மக்கள் அனைவரினதும், ஒடுக்கப்படும் மக்கள் பொருளாதார சுரண்டல் அனைத்திலிருந்தும் விடுவிக்கும் நோக்கில் அமைந்த தீர்வினை போராடும் விடுதலை அமைப்பு வகுத்துக் கொள்ளுமா என்பது பற்றியதேயாகும்.

www.tamilarangam.net

விடுதலைப் புலிகள் பெற்ற (ஆனையிறவு) வெற்றி வரவேற்கப்பட வேண்டியதே. இத்துடன் ஒரு யுத்தத்தில் ஒரு பகுதியினர் பின்வாங்குவது யுத்த களத்தின் புவியியல் நிலமைகள், பலம் பலவீனம் போன்றவற்றில் தங்கியிருக்கின்றது. இருப்பினும் இந்த வெற்றி, மற்றும் இறந்த போராளிகள் அனைவரையும் இந்த நேரத்தில் நினைவு கொள்ள வேண்டியது நியாயமாகும். ஆனாலும் நவீன ஆயுதங்கள், விண்வெளிப் படங்கள், உளவு விமானங்கள் போன்றவை ஆட்சியாளர்கள் வைத்திருப்பதனால் இன்றைய காலத்தில் முகாமை வைத்துக் கொள்வது எவ்வளவுகாலம் எனத் தீர்மானம் பெறுகின்றது. (அதீத ஆதரவாளர்கள் இந்தக் கருத்தை விமர்சிப்பர் களத்தில் போராடும் போராளிகள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வர்.) அத்துடன் இன்றைய காலத்தில் ஒரு திறந்த வெளிச் சிறையைக் கொண்டதாகவும், (பாலஸ்தீனம், தற்கால யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை போன்று) வைத்திருப்பதே உகந்ததாகவும், அத்துடன் நகரக் கூடிய இராணுவ தளங்களைக் கொண்டதாகவும் அமைத்து கொள்வது. அதாவது தேவையான போது இராணுவ தளபாடங்களை நகர்த்துவதன் மூலம், பாதுகாத்துக் கொள்ள முடியும். இதன் பொருள் திறமை மறுக்கப்படுவதல்ல. இன்றைய யுத்தத்தின் வெற்றியில் சர்வதேச அரசியலின் பங்கு எவ்வளவு இருக்கின்றது என்பதை ஆராய்ந்து பார்ப்பதும் அவசியமாகின்றது.

இன்று முதலாளித்துவ சீனா•ஒரு புறம் மறுபுறம் அமெரிக்காவுடன் சேர்ந்து யப்பான், அய்ரோப்பிய ஒன்றியம் ஒரு புறம் என முதலாளித்துவ சந்தைக்காக போட்டியிடுகின்றன. இந்தச் சந்தைப் போட்டியில் சீனம் மெதுமெதுவே தனது சந்தையை பிடிக்கும் தந்திரோபாயத்தை மேற்கொள்வதாக கருத்து முன வைக்கப்படுகின்றது. இதற்கு அடிப்படையாக பாகிஸ்தானில் நடத்தப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு, பாகிஸ்தானிய உயர்படை அதிகாரி இலங்கை விசயம் போன்றவையும், மற்றும் சந்திரிக்கா மீது நடத்தப்பட்ட கொலைத் தாக்குதல் என்பது போன்ற அறிகுறிகளை வைத்துக் கருத்து முன்வைக்கப்படுகின்றது. இதற்கு இடையில் இலங்கை ஆட்சியாளர் எந்தப் பக்கம் சார்கின்றனர் என்பதும், போராடும் இயக்கம் எந்தப் பக்கம் சாய்கின்றது என்பது பற்றி அவதானிக்க வேண்டியது மேற்குலகத்திற்கு அவசியமானதாகும்.

www.tamilarangam.net


சிறீலங்கா அரசை மேற்குலகம் தனது பக்கம் வைத்துக் கொள்வது போலவே போராடும் அமைப்பையும் தனது பக்கம் வைத்துக் கொள்ள மேற்குலத்தின் அறிவுறுத்தல்கள் முயற்சிகள் பின்னால் இருக்கும் எனவும் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இஸ்ரேல் நாட்டின் உதவி மூலம் சிறீலங்கா அரசாங்கத்தை தன்வசம் கொண்டு வரும், இராணுவ தளத்தை அகற்றுவதன் மூலம் புலிகளை மக்களிடத்திலும், மேற்குலத்திடமும் புலிகள் விழுந்து விடவும் வழி அமைக்கப்பட்டிருக்கின்றதா எனவும் சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கின்றது. தற்பொழுதைய நிலையில் நோர்வே தலையிட்டிருப்பதால் புலிகள் நோர்வேயின் பார்வையில் தற்பொழுது இருக்கின்றது எனவும் பேசப்படுகின்றது.

இஸ்ரேல் நாட்டின் உதவி என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை பாதகமானது, ஆனால் நோர்வே நாடு இலங்கையின் இனப்பிரச்சனையில் மத்தியத்துவம் வகிக்க இருப்பதனால் இஸ்ரேல் நாட்டின் தலையீட்டை தவிர்த்துக் கொள்ள முடியும் என்ற கருத்தும் தமிழர் பக்கம்இருக்கின்றது. இவற்றை பல விதத்தில் நிராகரிக்க முடியும்.

1. இஸ்ரேல் நாடு முதலாளித்துவ நலனைப் காப்பதும்

2. உலகின் எந்தச் சக்திகளுக்கும் அடங்கி நடக்காத நாடாகும். அமெரிக்கா நிர்ப்பந்தித்தால் கூட அவர்கள் கேட்கப்போவதில்லை.

எனவே நோர்வேயின் நிர்ப்பந்தத்தின் மூலம் இஸ்ரேல் நாட்டின் தலையீட்டை தடுத்து நிறுத்த முடியும் என்பது வெறும் பகல்கனவேயாகும். அத்தடன் முதலாளித்துவ நலனைப் பாதுகாத்துக் கொள்கின்ற உற்ற நண்பனை இழக்க விரும்பாது என்பதில் தர்க்க நியாயம் இல்லை.

சமூக சனநாயகக் கொள்கையைக் கொண்ட நோர்வே அரசாங்கத்தின் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களே பேச்சுவார்த்தை முயற்சியை மேற்கொள்கின்றனர். இவர்கள் முதலாளித்துவ நலனைப் பாதுகாப்பவர்கள் என்பது தெரிந்த விடயமே. ஆனால் இவர்கள் முயற்சியை மேற்கொள்கின்ற போது

தமது பொருளாதார நலனுக்கு எதிராக செயற்படமாட்டார்கள் என்பதில் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. ஆனாலும் பேச்சுவார்த்தை முயற்சிக்கு மத்தியத்துவம் வகிக்க முன்வந்த பகுதியினர் முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு எதிராக போராட்ட அமைப்பு தொடர்ந்து செயற்படுமா என்பதே எழும் கேள்வியாகும். அத்துடன் மேற்குநாடுகளின் சுலோகமான மனித உரிமை, சனநாயகம் என்ற கருத்துக்கு எதிராக போராட்ட இயக்கம் உலகளவில் செயற்படுமா?

இலங்கையில் பேச்சுவார்த்தையில் மத்தியத்துவம் வகிக்கும் சமாதானப் பிரியர்கள் யூக்கோஸ்வாவியா மீது குண்டு மழை பொழிவதற்கு உதவியாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேபோல் மேற்குலகம் கொடுக்கின்ற அழுத்தங்களுக்கு இசைந்து கொடுக்காத பட்சத்தில் எல்லாவிதமான மாற்று நடவடிக்கையையும் எடுப்பார்கள் என்பதில் இயக்கமும் மக்களும் எவ்வளவு தெளிவாக இருக்கின்றார்கள் என்பதில் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது. அமைதிப்படை என்ன செய்யும் என்பது பற்றி எமது மக்களுக்கு நிறையவே அனுபவம் இருக்கின்றது. ஆனால் வெள்ளை நிற அமைதிப்படை வந்தால் அப்படிச் செய்யாது என்ற எண்ணம் இருக்கும் என்றால் அது மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறான விடயங்களில் மக்கள் விளிப்பாக இருக்க வேண்டும் என்பதில் விடுதலை இயக்கம் அக்கறை கொள்ளல் வேண்டும்.

பாலஸ்தீனம், இஸ்ரேல் ஆகிய நாடுகளின் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் எவ்வாறு ஒருவருக்கொருவர் உற்ற நண்பர்கள் ஆனார்கள் என்பதையும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். இரண்டு மக்கள் குழுக்களின் பிரதிநிதித் தலைவர்கள் உறுப்பினர்கள் குடும்ப நண்பர்கள் ஆனார்கள். ஒருவருக்கொருவர் சிறந்த நண்பர்களாகி அவ்வவ் இனங்களின் உயர் குடி அந்தஸ்துக்கு ஏற்றவாறாக நடந்து கொள்கின்றனர். இவர்களிடையே இனம், மொழி, மதம் என்ற பேதங்களை விட்டுவிட்டு தொழில் கூட்டாளிகள் ஆகியிருக்கின்றனர். பேச்சுவார்த்தைக்கு வருபவர்களை விலைக்கு வாங்கவும் தயங்கமாட்டார்கள் என்பதும் பாலஸ்தீன அனுபவங்களில் இருந்து பெறமுடிகின்றது.

www.tamilarangam.net



எந்த வகையான தீர்வை முன்வைப்பர் என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. முன்னாள் விடுதலை இயக்கங்கள் ஆட்சியாளர்கள் பக்கம் இருந்தாலும், அவர்கள் திம்புக் கோரிக்கையை முன்வைக்கின்றனர். விடுதலைப் புலிகள் இக்கருத்தில் தற்பொழுது வரை உறுதியாக இருக்கின்றனர். ஆனால் இன்றைக்கு வெள்ளையர் தேசங்கள் தலையிட்ட நிலையில் இருந்து புலிகள் தொடர்ந்தும் உறுதியாக இருப்பார்களா என வரலாறுதான் தீர்மானிக்கும். வெள்ளையர் தேசங்கள் எமது மக்களிடையே இருக்கின்ற பிளவுகளான சாதி, பிரதேசம், இனவெறி (முஸ்லீம் மக்கள் மீதான தாக்குதல்கள்) மதம் போன்றவற்றை காட்டி எமக்கு இதுதான் சரியான தீர்வு என முன்வைக்கும் நிலையையும் எதிர்த்து நிற்க வேண்டும். எம்மிடம் இருக்கின்ற வர்க்க பேதம் இல்லாமல் போக்குகின்ற முடிவினை நோக்கி செயற்படுத்த வேண்டியதே ஒரு மக்கள் விடுதலை இயக்கம் செய்ய வேண்டியதாகும்.

இன்றைய நிலையில் மேற்கின் உதவியுடன் பிரச்சனை தற்காலிகமாக தீர்க்கப்பட்டு அது உருவாக்கிக் கொள்ளும் பொருளாதாரத் திட்டம் மக்களின் பிரச்சனையை போக்கக் கூடியதாக இருக்க முடியுமா? அவ்வாறு ஒரு பொருளாதார திட்டத்தை எவருடைய உதவியும் இன்றி மேற்கொள்ள முடியுமா என்பதே கேள்வியாகும். முன்னர் சுதேசியம் எனக் குறிப்பிட்டது கடந்த கால வரலாற்றில் வெள்ளையர் உடையை அணிந்து கொள்வதில் கலாச்சாரத்தில் மூழ்கி இருக்கக் கூடாது என்பது மாத்திரம் அல்ல. ஒரு நாடு சொந்த நாட்டின் தேவை கருதி திட்டமிட்ட பொருளாதாரத்தை மேற்கொள்ளவது, உற்பத்தி சாதனங்களை அரசுடமையாக்குவதா, தனியார் மயமாக்குவதா என்பது பற்றிய முடிவுகள், உற்பத்தி செய்கின்ற பொருளுக்கு விலையை நிர்ணயிப்பது போன்ற விடயங்களில் அன்னியத் தலையீடு இல்லாமல் செயற்படுத்தக் கூடிய நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இவைகள் ஒரு விடுதலை இயக்கத்திற்கு ஏற்படும் எதிர்காலச் சவால்களாகும்.

அன்னியர் உள்ளே நுழையக் கூடாது என்று புத்த பிக்குமார் போராடுகின்றனர். இவர்கள் போராட்டம் கோட்பாட்டு ரீதியில் சரியானதாகும். இதனை புரிந்து கொள்ள தோழர் சண்முகதாசனின்-

ஒரு "கம்யூனிசப் போராளியின் அரசியல் நினைவுகள" என்ற புத்தகத்தில் அவர் எழுதியவற்றில் கவனிப்போம்.

பல நாடுகளில் சிறுபான்மை தான் மொழி உரிமைகளை அல்லது மற்ற உரிமைகளைப் பெரும்பான்மையிலிருந்து பாதுகாக்கப் போராடுவது வழக்கம், ஆனால் சிறீலங்காவில் ஒரு சிறுபான்மை சமூகம் ஆபத்துள்ளாக்கும் என்று அஞ்சி ஒரு பெரும்பான்மை அதன் மொழியைப் பாதுகாக்கப் போராட்டம் நடத்தியது. இந்தச் சிக்கலான பிரச்சினைகைளப் புரிந்து கொள்ள நாம் சிங்கள பெரும்பான்மை ஏன் சிறுபான்மை போல நடந்து கொண்டது என்பதற்கான பிரத்தியேகக் காரணங்களை ஆராயவேண்டும்.

இதற்கான காரணங்கள் பல. முதலாவதாக புராண காலத்தில் தென் இந்தியாவிலிருந்து நடந்த தமிழ்ப் படையெடுப்புகள் பற்றிய நினைவு. சிங்களவர்கள் இதனை மறக்கவில்லை. துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்கும் இடையிலே நடைபெற்ற யுத்தம் பற்றி எந்தப் பள்ளி மாணவன் அறியமாட்டான்? அநுராதபுர பொலனறுவ இடிபாடுகளைப் பார்க்கச் செல்வோரின் மனங்களில் அடுத்தடுத்த தென் இந்தியப் படையெடுப்புகளால் சிங்கள நாகரீகத்தின் மகிமைகள் அனைத்தும் அழிக்கப்பட்டன என்ற எண்ணம் தவறாமல் ஏற்படும்.

இரண்டாவதாக பிரித்தானிய ஏகாதிபத்தியம் தமது பெருந்தோட்டங்களில் வேலை செய்ய கடந்த நூற்றாண்டில் தென் இந்தியாவிலிருந்து சுமார் 10 இலட்சம் தமிழ்த் தொழிலாளர்களை இங்கே கூட்டிவந்து கண்டிப் பிரதேசத்தின் மத்தியில் அவர்களைக் கொட்டிக் குவித்தார்கள். இவ்வாறு அவர்களும் இலங்கை- இந்தியப் பிரச்சனையை உருவாக்கினார்கள். இது வகுப்புவாதச் சச்சரவுகளுக்கான இன்னொரு காரணமாகும்.

மூன்றாவதாக, மி'னரி நடவடிக்கை காரணமாக வடக்கில் உள்ள தமிழர்களுக்குக் கிடைத்த கூடுதலான கல்வி வசதிகளால் அவர்கள் தமது மக்கள் தொகை விகிதாச்சாரத்திலும் பார்க்கக் கூடுதலாக அரசாங்க சேவையிலும், தொழிலர் துறைகளிலும் இடம் பெற்றார்கள்.

1929 - 1931 உலக பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் சிங்கள மத்திய தர வர்க்கத்தினர் மத்தியில் வேலையின்மை ஒரு கடுமையான பிரச்சினையாகி அவர்கள் பெரும் எண்ணிக்கையில்

www.tamilarangam.net



அரசாங்க சேவையில் சேர்ந்த போது தமிழர்கள் அங்கு நன்கு அரண் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

பொருளாதாரப் பிரச்சினைகள் தான் மொழி நெருக்கடியின் அடிப்படையாக இருந்தன. 1956-க்கு முன், ஆங்கில மொழியறிவு அரசாங்க சேவையில் சேருவதற்கு அனுமதிப் பத்திரமாக இருந்தது. இதனால் தமிழர்கள் சிங்களவர்களுடன் போட்டி போட, திறமையாக போட்டி போட முடிந்தது. வேலையின்மையால் நிர்ப்பந்திக்கப்பட்டு சிங்களவர்கள் சிங்களம் மட்டும் உத்தியோகபூர்வமான மொழியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அப்பொழுது அரசாங்க சேவையில் அவர்களுடைய வாய்ப்புகள் பெரிதாகும். தொழிற்துறை மயமாகாத இலங்கை போன்ற நாட்டில் அரசாங்கம் தான் மிகப்பெரிய முதலாளி, அத்துடன் அரசாங்க சேவைதான் பலன் தரும் தொழிலாகும். மொழிச் சமர் என்பது உண்மையில் சிங்கள-தமிழ் மத்திய தர வர்க்கங்களின் அரசாங்க வேலைகளுக்கான சமராகும். இதனால் தான் பொருளாதாரப் பரிகாரம் தவிர வேறு எந்தப் பரிகாரமும் இதனைத் தீர்க்க முடியாது.

நான்காவதாக, தமிழ், பாக் ஜலசந்திக்கு அப்பால் வாழும் 5 கோடியே 50 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களால் பேசப்படும் மொழி, இந்தப் பிராந்தியத்தில் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை (தமிழ்நாட்டில் இலங்கையிலும் உள்ள மொத்த மக்களையும் சேர்த்தால்) சிங்களம் பேசுவோருடன் ஒப்பிட்டால் அது 5:1 ஆகும். ஆகவே கலாச்சாரத்தில் தமிழர்கள் தங்களை விழுங்கி விடுவார்கள் என்ற பயம் சிங்களவர்கள் மத்தியில் இருகின்றது.

ஐந்தாவதாக, சிங்களத்திலும் பார்க்க தமிழ் பழைய மொழி, உலகின் வேறு பல பாகங்களிலும் தமிழ் மொழி பேசுவோர் உண்டு. இதனால் சிங்களவர் மத்தியில் ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டுள்ளது.

இந்த வரலாற்று உண்மைகளைப் புரிந்து கொள்ளாமல் இலங்கையில் மொழிப் பிரச்சினையைப் புரிந்து கொள்ள முடியாது.... *(124-125)*

இவ்வாறு இலங்கையின் இனப் பிரச்சனை பற்றி பார்த்திருந்தார். அதில் முக்கிய விடயம் பற்றி போராட்ட (பெரும்) இயக்கங்கள்

அக்கறை கொண்டதாக வரலாறு காட்டவில்லை என்பதை தற்பொழுதும் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக பெரும்பான்மைத் தேசிய இனம், சிறுபான்மைத் தேசிய இனத்திற்கு எதிராக பாதுகாப்பு வலையத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கின்ற அச்சத்தை போக்கி, நம்பிக்கையை உருவாக்க வேண்டிய நிலை தமிழர்கள் பக்கத்திலும் இருக்கின்றது. எனவே இது ஒரு இனத்திற்கு உரித்தான கடமை அல்ல மாறாக இது இரண்டு பக்கத்தில் இருக்கின்ற முன்னேறிய பிரிவினருக்கு ஆன கடமையாகும்.

மீளவும் விடயத்துக்கு வருவோம். புத்த பிக்குக்களின் வெளியார் எதிர்ப்பு உணர்வினை எந்தச் சக்திகள் வரவேற்கின்றன. மாறாக குறுகிய அரசியலைக் கொண்டவர்கள் வெறுமனே இவர்களின் இனவுணர்வை முன்னிறுத்தி புத்த பிக்குமார்களின் கருத்தை பயன்படுத்துகின்றனர். புத்த பிக்குக்களின் அடிப்படைக் கருத்து பிற்போக்குத் தனமானது தான். ஆனால் இவற்றிற்கு மாற்றீடாக கருத்தைக் கொண்டவர்கள் குறுகிய இனவாதத்தை அடிப்படையாக கொண்டு சிந்திக்காமல், குறுகிய இனவாதச் சிந்தனையை அம்பலப்படுத்தியும் அனைத்து தேசிய இனங்களின் அய்க்கியத்திற்காக போராடுவதன் மூலமே உண்மையான அமைதியைக் கொண்டு வரமுடியும்.

அதேவேளை அன்னியப்படைகள் நுழைவது எந்த மக்களைப் பொறுத்த வரையிலும் இறைமையை பாதிப்பதாகும். எனவே இங்கு வெள்ளைத் தோல் மாத்திரம் வேறுபாடாக நடக்கும் எனக் கொள்வது யானை தனது தலையில் மண்ணை அள்ளிப் போடுவது போல்தான் ஆகும். அத்துடன் இலங்கை மக்களிடையே ஏற்பட்டிருக்கும் பரஸ்பர நம்பிக்கையின்மை, கொலனித்துவத்தின் போது ஏற்பட்ட வடுக்கள், சுரண்டும் வர்க்கத்தினரால் ஏற்பட்ட வடுக்கள் என்பவற்றை போக்க எவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை அலசி ஆலோசிக்க வேண்டியதே அனைத்து தேசிய இனங்களில் உள்ள முற்போக்குச் சக்திகளிடமும் உள்ள கடமையாகும்.

(மேலே எழுதப்பட்டவை பல மாதங்களுக்கு முன்னர் எழுதப்பட்டது) இன்று புலிகள் யுத்த நிறுத்தத்தினை மேற்கொண்டிருந்தனர். ஆனாலும் பிரதியீடாக யுத்தத்தை

www.tamilarangam.net



நிறுத்துவதற்கு சிறீலங்கா அரசால் முடியவில்லை முடியப்போவதும் இல்லை. ஆனாலும் இந்த நிலை மேற்குதேசங்கள் எதிர்பார்த்தவை தான். இந்த யுத்த நிறுத்தச் சோதனை சிங்கள இனமதவாதிகளுக்கு வைத்த பரிசோதனையாகும். அதாவது பேச்சுவார்த்தை பற்றிய நிலையில் பாலஸ்தீனத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு, பேச்சுவார்த்தை மூலம் தீர்வை முன்வைக்கும் போது எவ்வாறான மாற்று நடவடிக்கை வரும் என்பதை மேற்கு தேசங்கள் முன்கூட்டியே படித்துக் கொள்கின்றன. அடுத்தது என்ன தந்திரோபாயம் எடுப்பார்கள் என பொறுத்துத் தான் பார்க்க வேண்டும்.

"புரிந்துணர்வு (MOU) உடன்பாடு" (அன்ரன் பாலசிங்கம் -ஈழமுரசு 15-21 02.2001) என்று கொள்ளப்படும் அணுகுமுறைக் கோட்பாட்டைத் தான் முன்னர் குறிப்பிட்டிருந்தது. புரிந்துணர்வு உடன்பாடு மக்களின் அபிலாசைகள் மீது அமைதல் வேண்டும். நோர்வேயின் முயற்சியை நடுநிலை கொண்டதாக கணிப்பது சர்வதேச அரசியல் நிலையை எமது மக்கள் ஏற்றுக் கொள்ளும் நிலையை தோற்றுவித்துவிடும். நோர்வே அரசின் முயற்சி நடுநிலையாக இருக்கமாட்டாது. இவர்கள் ஏகாதிபத்திய நோக்க அடிப்படையில் இருந்துதான் அவர்களின் முயற்சி அமைகின்றது.

தடைசெய்யும் முயற்சி அமெரிக்காவின் பின்னால் செல்லும் பிரித்தானியாவின் நிலைப்பாடாகும். பிரித்தானியா புலிகள் பற்றிய நிலைப்பாட்டில் மாத்திரம் அல்ல. ஈராக் விடயத்திலும், அமெரிக்காவின் நிலைப்பாட்டையே பின்பற்றுகின்றனர். பிரித்தானிய நிலைப்பாடு புலிகளை பாதிக்க மாட்டாது எனக் கூற முடியாது. மேற்கு நாடுகளில் புலிகளின் பிரதிநிதியாக செயற்படும் உயர்வர்க்கத்தவர்களை ஓதுங்கவைத்துவிடலாம். வெளிநாட்டில் புலிகளுக்காக வேலைசெய்பவர்களின் தியாகம் குறிப்பிட்ட வரையறைக்குள் மாத்திரம் தான் இருக்கும். இந்த வர்க்கத்தினர் தமது தியாகத்தை போராட்ட களத்தில் இருக்கும் போராளிக்கு ஈடாக கண்ணை மூடிக் கொண்டு ஒப்பிட்டுக் கொள்ளலாம். ஆனாலும் இவர்களின் தாய்நாட்டுப் பற்று இந்த வர்க்கத்தினரின் தேவையை அடையும் வரையில் தான். மேற்கு நாடுகளில் உள்ளவர்கள் தங்களின் மேற்கு நாட்டு வதிவிட உரிமையை தாய்நாட்டுக்காக இழக்கமாட்டார்கள்.

www.tamilarangam.net


இவர்களின் ஒரு பகுதி ஐ.நாவின் (U.N.) வருகையை ஆதரிப்பது, பேச்சுவார்த்தை மீது அதீத நம்பிக்கை கொள்வது இடம் பெறலாம். இலங்கை மக்கள் ஒன்றும் இஸ்ரேல் நாட்டவர் போல் அல்ல. அமெரிக்கா, பிரித்தானியாவின் பலத்திலும், மத்திய கிழக்கில் பணம்படைத்த கூட்டத்தின் முகவராக செயற்படும் இஸ்ரேல் நாட்டின் நிலை வேறாகும். இனப்படுகொலை பற்றி கொசவோ, பொஸ்னியா போன்ற பிரதேச மக்களின் உரிமைபற்றிக் பேசிக் கொண்ட மேற்குலகம். பாலஸ்தீனர்கள் மீது 67-க்கு பின் விமானத் தாக்குதல் நடத்தப்படுவது ஒரு யுத்த நிலை என்பதையும், பாலஸ்தீனர்களை அழிக்கும் முயற்சி என்பதையும் ஏற்றுக் கொண்டதாக இல்லை.

பாலஸ்தீனர்கள் அமைதிப்படையை அழைக்கின்றனர் ஆனால் இஸ்ரேல் அதனை எதிர்க்கின்றது. இங்கு இஸ்ரேல் தனது எதிரிகள் அமைதிப்படை என்ற பெயரில் தமது தேசத்தில் நுழைந்து விடுவர் என்ற நிலைப்பாடு காரணமாகலாம். அத்துடன் அமெரிக்கா சமாதானப்படைபற்றி ஆர்வம் எடுக்காது. ஏனெனில் தனது கட்டுப்பாட்டினுள் அமைந்து கொண்ட தனித்த இராணுவம் பாலஸ்தீனத்தில் நிலைநிறுத்தப்பட மாட்டாது என்பதால் போலும்.

இதே வேளை இந்திய பிராந்திய அரசும் தலைவர் பிரபா மீது பிடிவிராந்தும் பிறப்பித்துள்ளது. இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் தமது அனுசரணை இல்லாமல் ஆயுதப் போராட்டம் நடத்துவது பிழையானது என்ற கோட்பாட்டைக் கொண்ட மேற்குலகத்தின் நிலைப்பாட்டை பின்பற்றுகின்றது. போராட்டத்தில் தவறுகள் இடம் பெறும் போது இயக்கத்துக்கு சொந்த மக்கள் தண்டனை கொடுப்பது என்ற இறைமையை மறுதலிப்பதுடன் பலம் பொருந்திய தேசங்கள், அல்லது சர்வதேச நீதிமன்றம் தண்டனை கொடுப்பது என்ற நிலையை சுட்டி நிற்கின்றது. இன்றைய உலகம்.

இவ்வாறான பலயீனமான நிலையில் இருக்கின்ற வறிய தேசத்துமக்கள் தமது உரிமையை வென்று எடுப்பதற்கு உலக சகோதர மக்கள் இனங்களை அணைத்துக் கொண்டு அடம்பன் கொடி போல திரண்டு நிற்பதன் மூலமே வெற்றி பெற முடியும்.

– சங்கரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தத்தில் யுரேனியத்தின் கொடூரம்

அய்ரோப்பிய செய்திச் சாதனங்கள் அனைத்திலும் யுரேனியத்தினால் ஏற்படும் பாதிப்புப் பற்றி தொலைத் தொடர்பு சாதனங்கள் அறிவித்தன. யுரேனியத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி இன்று வெள்ளையர் தேசத்தவர்களின் சிப்பாய்கள் தமது குமுறல்களை வெளிப்படுத்துகின்றனர். பத்திரிகைகள் பலவாறான செய்திகளை எழுதிக் கொள்கின்றனர். யுரேனியம் சம்பந்தப்பட்ட நிகழ்வில் அமெரிக்கா,பிரான்ஸ், பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் ஒருபக்கமும் மற்றைய அயரோப்பிய நாடுகள் ஒரு பக்கமும் இருக்கின்றன.

குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகள் யுரேனியத்தின் எதிர்விழைவு பற்றிய குறிப்பு எதுவும் தமக்கு தரப்படவில்லை என மற்றைய நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. இதனால் மேற்குறிப்பிட்ட நாடுகள் தமது படைவீரர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு மற்றைய நாடுகளின் படைவீரர்கள் பாதிப்புப் பற்றி அக்கறைப்படவில்லை என எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதப்பட்டன. விடயத்தினை தெரிந்து வைத்திருந்த நாடுகள் செய்தியை மறைத்துக் கொண்டதினால், உணவுகள் விடயத்தில் தமது வீரர்களுக்கு குண்டு வீசப்பட்ட இடத்தில் விழைந்த மரக்கறிகளை தமது வீரர்கள் மாத்திரம் உண்டிருக்கக் கூடும் என பத்திரிகைகள் எழுதிக் கொண்டன.

நேட்டோவின் (NATO) செயலாளர்நாயகம் (George Robertson) ஜோர்ச் றொபெட்சன் கூற்றுப்படி 9.3 தொன் எடையுடைய யூரேனியம் உள்ளடக்கிய குண்டு வீசப்பட்டுள்ளது. மொத்தம் 31000 rounds 30mm தலா 300 கிராம் எடையுடையாதாகும்.

இங்கு யுரேனியத்தின் காரணமாக ஏற்படும் தாக்கம் பற்றிப் பார்ப்போம். யுரேனியம் மக்களை பலவாறாக தாக்கும்.

1. தூசி ஊடாக பரவுகின்றது.

2. பயிர்ச் செய்கை நிலத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படுமானால் அந்த இடத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவினை உண்ணுகின்ற போது பரவும்.

3. குண்டுத் தாக்குதலின் பின்னர் ஏற்படும் மிகுதிப் பொருட்களை நினைவுச் சின்னமாக எடுத்துச் செல்வதன் மூலம் பரவும்.

4. சிறுவர்கள் விளையாட்டுப் பொருட்களாக பயன்படுத்தும் போது பரவும்.

மேற்கு நாடுகளின் தாக்குதல்களால்

1. பயிர்ச் செய்கை நிலங்கள்,

2. ஆறுகள், குளங்கள், ஏரிகள், குடிநீர்க் கிணறுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

3. தொழிற்சாலைகள்

4. இடங்களுக்கு இடையிலான தொடர்பு வழிகள் தாக்குதலுக்கு உள்ளாகியது. இதன் காரணமாக மக்களின் வாழ்வே சூனியமாகியது.

5. பிறக்கும் பிள்ளைகள் குறைபாடுகளுடன் பிறக்கின்றன. (Down syndrom)

6. படைவீரர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

மக்கள் வறுமையில் வாடும் நிலை ஏற்பட்டது. இன்றைய நிலைக்குக் காரணம் சதாம் குசைனின், மிலோசவிச் என இன்றைக்கு மேற்குலகம் கூறுகின்றது. உண்மையில் இவ்வாறான சர்வாதிகாரிகள் ஒரு தனியான செயற்பாட்டிற்கு காரணம் எனக் கொள்ளமுடியாது. இவர்களை உருவாக்கிய பொருளாதார அமைப்பே காரணமாகும். பொருளாதார அமைப்பை பாதுகாத்துக் கொள்வதற்கான தனது நண்பன் என்ற ரீதியில் மேற்குலகம் இவர்களுக்கு உதவி செய்தது.

www.tamilarangam.net


ஆனாலும் இன்று உலக நாடுகள் பலவற்றை தமது நோக்கங்களுக்காக ஆளுமைக்குள் கொண்டு வந்துள்ளனர். பிராந்தியங்களின் செல்வாக்குக் கருதி அந்தந்த பிரதேசங்களில் தேசங்கள் சுயநிர்ணய உரிமை பெறுவது, தேவையான போது சுதந்திர தேசங்கள் பெயரில் உருவாக்குவது இன்று பலம் பொருந்திய நிதிமூலதனத்தைக் கொண்ட நாடுகளின் வாடிக்கையாகிவிட்டது. (முன்னர் ஐ.நாவின் பெயரைப் பாவித்து கொரியாவினுள் நுழைந்தனர்.)

பிரச்சனைகள் நடந்து கொண்டிருக்கின்ற தேசங்களில் சனநாயகத்தை நிலைநிறுத்திக் கொள்ளவும், மனித உரிமையை பாதுகாத்துக் கொள்ளவும் ஐ.நாவின் (U.N.) தலைமையிலான படைகளை அனுப்பி மனித உரிமைகளையும், உயிர்ப்பலிகளையும் நிறுத்த வேண்டும் என கோரிக்கை விடுகின்றன. அத்துடன் ஐ.நா மூலமாக எல்லாவற்றையும் செய்யலாம் என நம்பிக்கை கொள்கின்றனர்.

உதாரணத்திற்கு ஒரு சில கணக்கைப் பார்ப்போம், மிலோசவிச், இலங்கை அரசு, சதாம், இந்தோனேசிய அரசு, மக்களை கொல்லுகின்றனர் என வைத்துக் கொள்வோம். உதாரணத்திற்கு இந்தோனேசிய அரசு (500 000 பொதுவுடமைவாதிகள், ஆதரவாளர்கள் என சுகர்ட்டோ அரசு கொன்று குவித்தது 1966 களில்) கிழக்குத் திமோர் மக்களுக்கு செய்த கொடுமைகள், போட்ட குண்டுகளின் பாதிப்பு, இலங்கை அரசு இலங்கை மக்கள் பிரிவினரிடையே செய்த குண்டு வீச்சுத் தாக்குதல்கள், அதன் விளைவுகளையும், ஏகாதிபத்திய நாடுகள், ஐ.நா சபையின் உதவியுடன் நடைபெற்ற சனநாயக மீள் நிறுத்தம் செய்யும் (ஈராக், யூக்கோஸ்லாவியா) போராட்டத்தில் எவ்வளவு சேதாரம் என கணக்குப் போட்டுப் பார்த்தால் மக்கள் திகைக்கும் அளவிற்கு இருக்கும். இது அமெரிக்கா, வியட்நாமில், ஈராக்கில், யூக்கோஸ்லாவியாவில் செய்த சேதம் அதைவிட அதிகமானதாகும். போராட்டம் நடைபெறுகின்ற தேசத்தில் ஒடுக்குமுறை அரசு கொலை செய்யுமானால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை பொருளாதார ரீதியாக பாதிக்கின்றது. பாதிப்பு சங்கிலி வட்டம் போல் தொடர்கின்றது. ஆனால் ஏகாதிபத்தியங்கள் வீசிய குண்டு வீச்சில் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு நிரந்தர இடைஞ்சலாக உருவாகின்றது.

இவ்வாறாக நிரந்தர ஊனம் உள்ள சமூகமாக ஆக்க வேண்டிய தேவை ஏகாதிபத்தியங்களுக்கு உண்டா? ஆம் நிச்சயம் வெள்ளையர்கள் அல்லாத தேசத்தவர்களை இவ்வாறு அழித்துக் கொள்வது நவீன மல்தூசரின் (சனத்தொகையே உலகின் பசி பட்டினிக்கு காரணம் எனக் கொள்கின்றது) கொள்கையாகும். உலகில் நடைபெற்ற யுத்தங்களில் உயிரியலில் தொடர்ச்சியான பாதிப்பு அணுவில் இருந்து பெறப்படும் கதிர் அலை, மற்றும் காடுகளை அழிக்கவென வியட்னாமில் (தற்பொழுது கொலம்பியாவில் வீசப்படுகின்றது) வீசிய குண்டு வகை போன்றவற்றால் ஏற்படுவது போல் இல்லை. பெரும் அழிவைக் கொண்ட ஜேர்மனியில் இவ்வாறான உயிரியல் ரீதியான பாதிப்பு இன்றைய காலத்தைப் போல் இல்லை. ஆனால் மீளவும் ஜேர்மனியை (துருக்கிய தொழிலாளர்கள்) கட்டமைத்தனர். இங்கு இரண்டு யுத்தங்களுக்கும் மாற்றம் இருக்கின்றது. இந்த யுத்தத்தில் பாவிக்கப்பட்ட ஆயுதங்களிலும் மாற்றம் இருக்கின்றது. ஏன் வரலாற்றில் நடைபெற்ற யுத்தங்கள் அனைத்திலும் மனித சமுதாயம் அழிந்து தான் இருக்கின்றது. அத்துடன் பொருளாதார உறவுகள், சமூக உறவுகளும் சிதைந்து தான் இருக்கின்றன. (ஒரு மனிதனை கொல்லும் போது அவன் இறக்கின்றான். ஆனால் குறையுடைய மனிதர்களை உருவாக்கிய பின்னர் குறையுள்ள சமூகம் மீண்டும் மீண்டும் உருவாக்கப்படுகின்றது உதாரணத்திற்கு வறுமை எவ்வாறு சங்கிலித் தொடர்போல் தொடர்கின்றதோ அதே போல்தான்.) ஆனாலும் உயிரியில் ரீதியான பாதிப்பை மனித சமுதாயம் அடைந்தது இன்றைய காலத்தில் தான்.

யுத்தத்தில் பாவிக்கப்படும் உயிரியல், இரசாயனவியல் ஆயுதங்களால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். உயிரியல் ரீதியாக எமது மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றால் எமது தேசமானது அதனை சமாளித்துக் கொள்ள தொழில் நுட்ப ரீதியாக, பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையவில்லை. இவற்றை கட்டுப்படுத்தவும் எமது தேசங்களில் வசதிகளும் இல்லை. யுத்தத்தின் பாதிப்பைப் பற்றிக் கூறுவதால் போராட்டங்களை மறுதலிக்க முடியாது. இங்கு போராட்டம் என்பது வாழ்வதற்காக போராடுவதாகும். போராடும் போது அழிக்கப்படுவதற்கு எதிரானது பாதுகாப்புப் போராட்டம் இது நீதியானது. ஆனால் போராட்டங்களை மழுங்கடிப்பதற்கு எதிராக நடத்தப்படும் அடாவடித்தனங்கள், தாக்குதல்கள் இவைகள் நீதியற்றவை.

www.tamilarangam.net



இங்கு அன்னியச் சக்திகளை வரவழைத்து, அவர்கள் சமாதானத்தை நிலைநிறுத்துவர் எனக்கூறி ஒரு நாட்டினுள் நுழைந்து கொள்கின்றனர். பின்னர் ஆயுதக்குழுக்களை, அரசை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு ஆயுதரீதியாக அடிபணிய வைக்கின்றனர்.. இதனால் ஏற்படும் பாதிப்புப் பற்றித் தான் அலசப்படுகின்றது. யுத்தம் என்பது மனித குலத்தினிடையே வர்க்கங்கள் தோன்றிய பின்னர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.உழைக்கும் மக்கள் அதிகாரத்தினை முழுமையாக கைப்பற்றிய பிற்பாடுதான் யுத்தங்கள் ஒழிக்கப்படும். யுத்தத்தை வெறுப்பது என்பது போராட்டத்தை எதிர்ப்பது என்பதாகாது. அழிவை நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக எந்த விலையும் கொடுக்க முடியாது, அதாவது போராட்டத்தை காட்டிக் கொடுத்து சரணடைய முடியாது. நீதியான முறையில் தான் அழிவுகள் நிறுத்தப்பட வேண்டும்.

## யுரேனியம்

யுரேனியம் என்பது இயற்கையில் இருந்து கிடைக்கப்பெறுவதாகும். இது அணுஆயுத, அணு மின்ஆலை போன்றவற்றை இயக்கப் பாவிக்கப்படுவதாகும். இதற்கு பாவிக்கப்படும் யுரேனியத்தினால் ஏற்படும் இரசாயன மாற்றத்தினால் எற்படும் வடி அல்லது கழிவாகும். இதனை ஆங்கிலத்தில் Depleted uranium (DU) என்க் கூறுவார்கள். இதில் ஏற்படும் சக்திவாய்ந்த கழிவை அல்லது வடியை Uranium 235 இதிலும் இருந்து பெறப்படும் கழிவில் இருந்து உருவாக்கப்படும் Uranium 238 இது 40 வீதம் கதிர் அலை குறைவானதாகும். 1970 களில் கழிவுகளில் இருந்து கனரக, மற்றும் சக்தி வாய்ந்த குண்டுகள் தயாரித்து பாவிக்க முடியும் என அமெரிக்க விஞ்ஞானிகள் முடிவிற்கு வந்தனர். யுரேனியத்தைக் கொண்டு பாவிக்கப்படும் குண்டுகள் வெடிப்பதில்லை. ஆனால் எரியும் தன்மை கொண்டது, இது காற்றில் தூசி மாதிரிப் பரவக் கூடியது. யூரேனியமானது பாண் அல்லது (bread) ரொட்டியில் வெண்ணெய் (Butter) தடவினால் எவ்வாறு கசித்து போகுமோ அதேபோல் கனரக வாகனங்களை ஊடறுத்துச் சென்று கனரக கவசவாகனத்தை எரிக்க வல்லது.

50 பிரான்ஸ் நாட்டு இராணுவ வீரர்களை பரிசோதித்த பின்னர் வெளியிட்ட பிரான்ஸ் நாட்டு ஆய்வுக் குழுவினர் யூரேனியத்திற்கும், இரத்தப்புற்று நோய்க்கும் சம்பந்தம் இருப்பதாக தெரியவில்லை

www.tamilarangam.net



என தெரிவித்துள்ளனர். இவ்வாறான முடிவினை ஐ.நாவின் (U.N.) உலக சுகாதார நிறுவனம் (WHO) தெரிவித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால்,

7 ஸ்பெயின் நாட்டவரை புற்றுநோய் தாக்கியுள்ளது.
1 ஜேர்மனியரை புற்றுநோய் தாக்கியுள்ளது.
6 இத்தாலியர் இறந்துள்ளனர்.
1 நோர்வே நாட்டவரை புற்றுநோய் தாக்கியுள்ளது.
பெல்யியத்தில் 9 நோய் தாக்கப்பட்டவர்களில் 5 இறந்துள்ளனர்.

## ஈராக் தடையின் விளைவுகள்

சர்வதேச எதிர்ப்புக்களையும் மீறி ஈராக் மீது சர்வதேச சமூகம் என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்ட தடையால் மக்கள் மடிந்து கொண்டு இருக்கின்றனர். சர்வதேச சமூகம் ஏற்படுத்திக் கொண்ட தடையென அமெரிக்காவாலும், பிரித்தானியாவினாலும் பிதற்றப்படும் தடையினால் பாதிக்கப்படும் மக்கள் பற்றி ஆங்காங்கே சில தொடர்புச் சாதனங்கள் பேச முற்பட்டிருக்கின்றன. சர்வதேச சமூகம் விதித்த தடைக்கே சர்வதேச சமூகம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது தான் வேடிக்கை.

இதில் ஒரு திருப்புமுனையாக UNICEF கவனம் செலுத்தியதை கவனத்தில் கொள்ள வேண்டும். யுனிசெவ் (UNICEF) இனுடைய சில தரவுகளை இங்கே தரப்படுகின்றது.

1990-க்கு பின் பிறந்த ஒவ்வொரு 20 சிசுக்கள் ஐந்து வயது அடைவதற்கு முன்னர் இறக்கின்றனர்.

ஒவ்வொரு 8 பிள்ளைகள் வயது முதிர்வதற்கு முன்னர் இறங்கின்றனர். குடிநீர் பற்றாக்குறை, உணவு, மருந்து வகை போன்ற காரணங்களால் மடிகின்றனர்.

தென் ஈராக் பகுதியில் புற்றுநோய் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

1 நாளுக்கு 300 குழந்தைகள் வீதம் வருடத்திற்கு 73 000 குழந்தைகளை காவு வாங்குகின்றது.

www.tamilarangam.net



யுனிசெவ்வின் கருத்துப்படி 3 இல் 2 வீதமானவர்களை உணவு, மருந்துத் தடையில்லாத பட்சத்தில் காப்பாற்றிருக்க முடியும் எனக் கருதுகின்றது.

இவ்வாறாக கருத்துக்களை முன்வைக்கின்ற போதிலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் பக்தாத் பிரதிநிதியான Beate Schweizer என்பவர் தடையினால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

பிரான்ஸ், சீனா, ரஷ்யா தடைக்கு எதிராகவும், பிரித்தானியாவும் அதன் எஜமானன் அமெரிக்காவும் தடைக்கு ஆதரவாக உள்ள ஐ.நா பாதுகாப்புச் சபையின் அங்கத்துவ நாடுகளாகும்.

Iren Denis Haliday 1998 பின்பகுதியில் Hans Von Sponeck 2000 போன்ற ஐ.நா உதவிப் பிரிவுத் தலைவர்களாக செயற்பட்டவர்கள் தடையால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர் என எதிர்ப்புத் தெரிவித்து பதவியில் இருந்து விலகியுள்ளனர்.

எண்ணைக்கு (oil for food and medisin) மாற்றாக உணவு, மருந்து என்ற ஒப்பந்தத்தை மேற்பார்வை செய்தும் தற்போதைய தலைவராக இருந்து Jutta Burghart பதவி விலகியுள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் கவலை கொண்டுள்ளது. ஐ.நாவின் தலைவர் கவலை தெரிவித்துள்ளார். அத்துடன் தடையை விலக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் (சர்க்கரை நோய்) சலரோகம், இருதய நோய், ஈரல், சிறுநீரகம் ஆகியவற்றிற்கான மருந்துகள் தட்டுப்பாடாக இருப்பதாக தெரிவித்துள்ள கோபி அன்னன், தடையினால் தடுப்புமருந்து போடும் திட்டமும் இத்தடையினால் பாதிக்கப்படுவதாக கூறியுள்ளார். ஐ.நாவின் ஒப்புதலுடன், ஐ.நா எடுத்த தீர்மானத்தின் மூலம் தான் நடவடிக்கை எடுத்ததாக அமெரிக்காவும், பிரிட்டனும், தொலைத் தொடர்பு சாதனங்களும் கூறுகின்றன. ஆனால் இன்று ஐ.நாவில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா, பிரித்தானியாவுடன் சேர்ந்த சில நாடுகளைத் தவிர மற்றைய நாடுகள், ஏன் கோபி அன்னன் உட்பட தடையை ரத்து செய்யவே கோருகின்றனர். ஐ.நா தடையை ஏற்படுத்த முடியுமானால் ஏன் அதனை தளர்த்த இந்த ஐ.நாவினால் முடியவில்லை. இதனை தடுப்பது அமெரிக்கா, பிரித்தானியா ஆகியன எண்ணை மேல் கொண்ட நலனே. எண்ணை வளநாடுகள் தடையைப் பயன்படுத்தி விலை அதிகரிப்பின் மூலம் தமது கல்லாப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பெட்டியை நிரப்புகின்றனர். இதனால் உற்பத்தி செய்யும் நாடுகளின் நாணய வருவாய் அதிகரிக்கின்றது.

பத்திரிகையாளரான (The Guardian - Maggie O'Kane) மகி என்பவர் துறைமுக (Basra) நகரானவில் 3 மடங்காக (Down Syndrom) டவுன் சின்ரம் என்ற குறைபாடு உடைய பிள்ளைகள் பிறந்திருக்கின்றன. இவை மாத்திரம் அல்ல புதிய உடல் உறுப்புக்கள் வளர்ந்தும், உடல் உறுப்புக்கள் சில பகுதி வளராமலும் பிள்ளைகள் பிறந்திருக்கின்றன. இவ்வாறான நிகழ்விற்கு காரணம் பணம் படைத்த தேசங்களின் பணத்தின் மீதான உலக ஆசையே, ஆதிக்கமே.

## பரிசோதனைக் குழுக்களின் முடிவுகள்

உண்மையாக யுரேனியத்தினால் தான் புற்றுநோய் போன்றன வருகின்றது என பல பரிசோதனைக் குழுக்கள் யுரேனியத்தால் வரும் பாதிப்புக்கள் பற்றி ஆய்ந்து அறிக்கைகள் சமர்ப்பித்தனர். இதில் முதலில் பிரான்ஸ் நாட்டின் ஆய்வுக்குழுவின் அறிக்கையின் படி சிற்பாய்களின் புற்றுநோய்க்கு யுரேனியம் காரணம் இல்லை என அறிவித்திருந்தது.

இதேபோல் ஐ.நா உலக சுகாதார நிறுவனமும் புற்நோய்க்கு யுரேனியம் காரணமாகாதென தெரவித்திருந்தது.

SHAPE என்ற நேட்டோவின் விஞ்ஞான பரிசோதனை நிறுவனம் (institution) பல நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்க யுரேனியம் பற்றிய தகவல்களை வளங்க மறுத்துவிட்டதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

ஜேர்மன் தலைவர் (Gerhard Schroder) கெர்காட் ஸ்ரோடர் மற்றும் போர்த்துக்கல் நாட்டுத் தலைவர் (Antonio Guteress) அந்தோனியோ நேட்டோவினுடைய எந்த வித விளக்கத்திலும் நம்பிக்கை கிடையாது எனவும் தெரிவித்தனர்.

ஐ.நா சூழல் நலப் பிரிவைச் சேர்ந்த (Klaus Topfer) கிளவுஸ் இதயசுத்தியற்ற ஆய்வு முறைகளையும், எந்த இடத்தில் (கொசவோ) யுரோனியம் உள்ளடக்கிய குண்டு வீசப்பட்ட உண்மையான இடத்தின் தரவுகள் கொடுக்கப்படவில்லை எனவும் விமர்சித்திருந்தார்.

3 எழுத்தாளர் எழுதிய (Uranium Appauvri: La Guerre Invusible :- Fredric Loore (Bel) Roger Trilling (USA) Martin Meissonnier (Fr) கற்புலனாகாப் போர் என்ற புத்தகத்தில் (The Independent) பத்திரிகையில் வெளியாகியது) (Kenneth Becon) கெனத் என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பென்ரகன் பேச்சாளரை மேற்கோள் காட்டி எழுதப்பட்ட குறிப்பில் யுரேனியமானது கவசவாகனத்தை தகர்ப்பதற்காக பாவிக்கப்பட்ட ஆயுதத்தில் (Plutonium) புளூட்டேனிய நச்சு படிந்துள்ளது என்றும், இது அணுவாயுத (Pandacan in Kentucky) நிலையத்தில் ஏற்பட்டது என்றும் தெரிவித்திருந்தார். அத்துடன் எறிகுண்டில் யுரேனியம் படிந்துள்ளதை சுவீஸ் நாட்டில் உள்ள பரிசோதனை நிலையத்தில் பரிசோதித்தும் உறுதிப்படுத்தினர்.

யுரேனியம் வெளியிடும் கதிர் நேரடியாக தோலின் மூலமாக செல்வதில்லை. ஆனால் தூசிவடிவமாக மனிதரினுள் நுழைகின்றது. இதனால் மனிதர் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதனால் ஈரல், நுரையீரல், இதயத்தில் பாதிப்பு, நரம்புத் தளர்ச்சி ஏற்படும் அத்துடன் இரத்தக் கலங்களும் பாதிப்படையும். இதனால் நுரையீரல் புற்றுநோய், இரத்தப் புற்றுநோய் என்பன உருவாகும்.

யுரேனியத்தால் உருவாகும் பாதிப்புப் பற்றி உலக மக்களில் ஒரு பகுதியினரே தெரிந்து வைத்துள்ளனர். அதேபோல் பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களும், ஆயுதங்களை கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகளும், ஆளும்வர்க்கமும் தெரிந்து வைத்திருக்கின்றனர்.

ஆளும் வர்க்கத்தின் பிடியில் இருக்கின்ற ஒடுக்குமுறை தொடர்புச் சாதனங்கள் சாதாரண மக்களுக்கு யுரேனியத்தினால் ஏற்படும் பாதிப்புப் பற்றி அறிய, அழிவிற்கு துணைபோகும் அறிவு இடம் கொடுப்பதில்லை. இன்று பல பரிசோதனைகள் மூலம் யுரேனியமானது புற்றுநோய் அல்லது பால்கன் (Balkan Syndrom) நோய் அறிகுறிக்கு காரணம் இல்லை என முடிவுகள் அறிவிக்கின்றன. இந்நோய்க்கான காரணமாக யுரேனியம் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய காரணியாக இல்லை என்பதே பரிசோதனை நிலையங்களின் கருத்தாகும்.

இரசாயனத்தின் தாக்கம் பற்றி 1955- ·1970 வரையில் அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும் மனிதரில் பரிசோதிக்கப்பட்டுள்ளது. இது பற்றிய விபரணப்படத்தினை Discovery Chanel , Deadly Experiments என்ற பெயரில் ஒளிபரப்பி இருந்தது. அதில் அமெரிக்காவில் மான்கெற்ரன் (Manhatten Project) திட்டத்தின் 6000 இறந்தவர்களின் உடலை பரிசோதித்துள்ளது. அமெரிக்காவில் Mannhatten project, Sunshine project என்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் Mannhatten project புளூட்டினத் திரவம் ஊசி மூலம் செலுத்தப்பட்டது. Sunshine project MdhJ (Iron radioactiv) அயன் திரவத்தை ஊசி மூலம் செலுத்தியது.

பிரித்தானியாவில் 390 குழந்தைகள் கருவறையில் இருக்கின்ற போதே (Sodium redioactiv, Iron radioactiv) சோடிய கதிரலை செலுத்தினர். இதே போல இறந்த சிறார்களின் உடல் பாகங்களை உறவினர்களின் ஒப்புதல் இன்றி துண்டித்து பரிசோதனை செய்ய உபயோகித்தனர். இவ்வாறான பரிசோதனையில் (Coventry) பிரித்தானியாவில் பாகிஸ்தான், இந்தியர்களிடையேயும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. பிரித்தாம் (Pritam) என்ற பெண்மணியும் அடங்கும் இவரைப் போன்று 20 பேருக்கு சப்பாத்தியில் திரவங்கள் கலந்த சப்பாத்திக் (உணவு) கலவை கொடுக்கப்பட்டது. இங்கு முழு விபரணப்படத்தின் உள்ளடக்கத்தை இங்கு எழுதவில்லை. இனி விடயத்துக்கு வருவோம்.

யுரேனியத்தின் தாக்கம் காரணம் இல்லை என அறிவிப்பவர்கள் பரிசோதனை நடத்துவதற்காகவே இவ்வாறான ஆபத்தான இரசாயன திரவங்கள் அடங்கிய-குண்டுகளை வீசி விழைவுகளை ஆராய்வதற்கு நடத்தியிருக்க மாட்டார்கள் என ஏன் கொள்ள முடியாது? யுரேனியமே காரணமெனக் கொள்ள பிரதிநிதித்துவப்படக் கூடியதாக இல்லை என காரணம் கூறும் பரிசோதகர்கள் இன்று வீசப்பட்டதின் தாக்கத்தை இன்னும் 50 வருடங்களின் பின்னர் தணிக்கை செய்யப்பட்ட ஆவுணங்களை (பெரும் தேசங்கள் அரச பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட செய்திகளை 50 வருடங்களின் பின்னர் வெளியிடுவர் இதனையே இங்கு குறிப்பிடப்படுகின்றது) வெளியிடும் வரும்வரை நாம் தெரிந்து கொள்ளாது இருந்து விடுவோம் இறந்தும் விடுவோம்.

ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற போது நேட்டேவும் சரி, அய்ரோப்பாவும் (Euro controll) சரி தமக்கிடையே (ஏன் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் துருக்கிய போராளிகளின் உண்ணாவிரதமே அய்ரோப்பிய தரத்தின் கீழ் அமைந்து கொண்ட சிறை சீர்திருத்தத்தின் காரணமாகும்.) தரக்கட்டுப்பாடை கொண்டுள்ளது. இந்த நிறுவனங்களின் முடிவிற்கமையவே ஆயுதங்கள் வடிவமைக்கப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு நாட்டின் அரசியல் தலைவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் மாதிரி தமது கருத்துக்களை தெரிவிக்கின்றனர். இதனால் எல்லா நாடுகளிலும் ஒரே தரமுடைய ஆயுதங்கள் உற்பத்தி செய்கின்றனர். ஒவ்வொரு ஆட்சியாளர்களும் முன்வந்து தமக்கு தெரியாதது போல் காட்டிக் கொள்வது தமது இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காகும். எதிர்ப்புக் குரல்களை நேட்டோ, அய்ரோப்பிய அரசியல், இராணுவ வட்டம், உற்பத்தி நிறுவனங்கள் ஆகியவை எதிர்ப்புக்குரல்களை பரஸ்பர ஒத்துழைப்புடன் ஏற்றுக் கொண்டு இவர்கள் நாடகமாடுவர். பயங்கரமான புதிய நோய்களை கொண்டு வரும் எனத் தெரிந்து

www.tamilarangam.net



உலகை ஆட்டிப்படைக்கவும், தனது நாட்டில் சிப்பாய்கள் படைகளில் சேருவதில் ஏற்படும் தட்டுப்பாடை தவிர்த்துக் கொள்ளவும், மரபுயுத்த முறையை தவிர்த்து தொழில் நுட்பத்தின் மூலம் யுத்தத்தினை நடத்தவும் இவ்வாறான புதிய ஆயுதங்களை செய்கின்றனர்.

## வானத்தைப் பார்த்தல்

தடையை ஆதரிக்கும் பகுதியினர் தமது வாதங்களுக்காக சதாம் ஒரு உலகத்தின் விரோதி எனச் சொல்லிய பாடத்தையே திரும்பவும் கூறிக் கொள்கின்றது. மேலும் 23 மில்லியன் மக்களுக்கு எண்ணை மாற்றுத் திட்டத்தின் மூலம் பெறப்படும் பணமானது போதுமானது என்றும், அதில் இருந்து பெறப்படும் நிதியானது ஈராக்கின் அயல் நாட்டில் உள்ள மக்களின் தேவையை விட 3 மடங்கு அதிகமானது என பிரித்தானிய வெளிவிவகார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பொதுவான பரிசோதகர்கள், அவதானிகளின் கருத்தின் படி ஈராக் பயங்கர ஆயுதங்களை வைத்துக் கொள்ளவோ, தயாரித்துக் கொள்ளவோ தற்பொழுது முடியாது எனத் தெரிவிக்கின்றனர்.

இந்தக் தடையால் சர்வாதிகாரியை (எதிர்க்கட்சிகளுக்கு 4 மில்லியன் டொலர் கொடுத்துள்ளது) ஒழிப்பதற்காகவும், மத்திய கிழக்கு மக்களை பாதுகாக்கும் நோக்கத்திற்காகவும் தடை மேற்கொள்வதாக கூறப்படுகின்றது. இதனால் பாதிக்கப்படுவது ஒரு நாட்டின் எதிர்காலச் சந்ததியினர் ஆகும். இந்தச் சிறார்கள் தாயின் வயிற்றில் இருக்கின்ற போதே போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டனர். உலகத்திற்கு வந்தபின்னர் நச்சுக் காற்றை சுவாசிக்கின்றனர், சிறுபிராயத்தில் வேளைக்கு உணவு கிடைக்காமல் வாடுகின்றனர். பஞ்சத்தைப் போக்க படிப்பை இடைநடுவில் விடுகின்றனர். வயிற்றுப் பசியைப் போக்க சிறுவயதில் தமது உழைப்பை விற்பதற்காக செல்கின்றனர். தனிமனித சுதந்திரம், சிறுவர் உழைப்பு ஆகியவற்றை ஒழிப்பதற்காக போராடும் பணம் படைத்த நாட்டின் ஆட்சியாளர்கள் எவ்வாறு சிறுவர்கள் உழைப்பை விற்பதற்கு வருகின்றனர் என்பதை பார்க்க மறுத்து காகிதத்தில் திட்டங்களை நிறைவேற்றுகின்றனர். குழந்தைகள் தினம்... என உலக தினங்களை கொண்டாடும் NGOக்கள் கூட இப்பிரச்சனையை பேசுவது இல்லை.

அண்மையில் திறந்த பொருளாதார சந்தையை ஏற்படுத்தும் பொருட்டு கூட்டப்பட்ட மாநாட்டில் (கியூபாவை சாடும் முகமாக முதலாளித்துவ பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகளைத் தான் இங்கு குறிப்பிடுகின்றனர்.) சனநாயகத்தை பின்பற்றும் நாடுகள் தான் இக்கூட்டமைப்பில் பங்குபற்ற முடியும் எனத் தீர்மானம்

நிறைவேற்றினர். சனநாயகத்தை பின்பற்றுவதாகவும், தனிமனித சுதந்திரத்தை பேண வேண்டும் எனில் (ஈராக்கின் அழிவில் எண்ணை விலை ஏற்றத்தின் மூலம் பெறப்படும் லாபத்தை கொண்டே தமது தேசிய சேமிப்பை பெருக்குகின்றனர்) சிறுவர்கள் பாதிக்கப்படுவது மட்டும் சனநாயகத்தின் கொள்கை முரண்பாடு அல்லவா?

உள்நாட்டில் நடைபெறும் பிரச்சனைகளை தீர்த்து வைக்கும்படி மேலை நாடுகளை நோக்கி கோரிக்கை விடப்படுகின்றது. இவர்கள் வந்து பிரச்சனை நடக்கும் தேசங்களில் எல்லாவகை பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பதன் மூலம் கோரிக்கை விடும் சக்திகள் தாம் ஏதோ பெரும் பிரச்சனைக்கு தீர்வை முன்வைத்து விட்டார்கள் போன்று கோரிக்கை விடுத்துவிடுவர். அதேவேளை பணம்படைத்த நாடுகளின் வரவை எதிர்பார்ப்பவர்கள் அமெரிக்கா இராணுவ நடவடிக்கை எடுத்தாலும் ஏகாதிபத்திய விஸ்தரிப்பு, எதிர்ப்பு என்கிறார்கள். அமெரிக்கா கவனம் செலுத்தாவிடின் மனித உரிமை மீது அக்கறை செலுத்தவில்லை என அமெரிக்கா மீது குற்றம் சாட்டுவதாக கருதப்படுகின்றது. இந்தக் கருத்தைக் கொண்டவர்கள் அமெரிக்காவை உதாரணமாக, இலச்சினையாக காட்டுவர். அமெரிக்காவே உலகின் பாதுகாவலனாக எதிர்பார்ப்பது சாதாரண மக்களின் பார்வையாகும். (இது ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி கொண்ட மக்களிடையே மாறுபடும்) ஆனால் இந்தப் பார்வை மாற்றப்பட வேண்டும். அமெரிக்காவை பாதுகாக்கவல்ல தொலைத் தொடர்புச் சாதனங்களும் தொடர்ந்தும் குரல்கொடுக்கின்றன.

இந்த நிலையில் சர்வதேசியப் பாதை என்னவாக இருக்க வேண்டும் என்றால் ஒரு உள்நாட்டு மக்கள் கூட்டம் சண்டை பிடித்துக் கொண்டு இருக்கும் போது அந்நாட்டின் மீது இரக்கம் கொண்டு தனது நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்திற்காக நுளைந்து கொள்ளும் நிலையில் நாடுகளில் தலையிடவோ, படைகளை அனுப்புவதை ஏற்றுக் கொள்ளவோ கூடாது.

போராடும் தேசத்து மக்களைப் பொறுத்தவரை மக்களை தங்கி நிற்பதும், அந்நிய சக்திகளை தேச எல்லைக்குள் அனுமதிக்கவோ கூடாது. போராடும் தேசத்து மக்களும், ஒடுக்க முற்படும் நாட்டின் நட்புசக்திகளையும் இணைத்து சொந்த சுரண்டும் வர்க்கத்தையும், அவர்களைப் பாதுகாக்கும் அந்நிய தேசத்தின் பணம் படைத்த நிறுவனங்கள், ஒடுக்குமுறை இயந்திரத்தை எதிர்த்துப் போராட வேண்டும்.

இலங்கையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் அனைத்து உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டும். அங்கீகரிப்பதன் மூலம்

www.tamilarangam.net



பொரும்பான்மை, சிறுபான்மை இனங்கள் ஒன்று சேர்ந்து அன்னியச் சக்திகளை எந்தக் காரணம் கொண்டும் எமது தேசத்தில் காலடி எடுத்து வைப்பதை தடுக்க வேண்டும்.

– நந்தினி




ஒஸ்லோ (OSLO) ஒப்பந்தத்தை மீறி வளரும் பாலஸ்தீன மக்களின் புதிய எழுச்சிப் போராட்டம்.

# அமெரிக்கச் சிறையில் அரசியல் கைதிகள்

அமெரிக்காவில் அரசியல் கைதிகள் பற்றிய தகவல்கள் அதிகமாக வெளிஉலகுக்கு வருவதில்லை. ஆனால் மரண தண்டனைகள் விதிக்கப்படும் பொழுது சிறு சலசலப்பு எழும். ''அம்னெஷ்டி இன்ரநாஷனல்'' கூட இந்த விஷயத்தில் அமெரிக்காவை கண்டிக்கத் தவறுவதில்லை. இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் மும்மியா அபு ஜமாலும் ஒருவர். கறுப்பினத்தை சேர்ந்த முன்னாள் பத்திரிகையாளரான மும்மியா, 20 வருடங்களுக்கு முன்பு ஒரு கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார். இவர் எழுபதுகளில் அமெரிக்காவில் இயங்கிய கறுப்பின தீவிரவாதக் குழுவான ''கரும்புலிகள்'' (Black Panthers) கட்சியின் உறுப்பினராவார். கறுப்பின மக்களை வெள்ளையின பொலிஸாரின் நிறவெறித் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க இந்த "Black Panthers" அமைப்பு உருவாக்கப்பட்டது. இவர்கள் தமது அரசியல் கொள்கையாக மாவோயிசத்தை கடைப்பிடித்தனர்.

இந்த ஆயுதமேந்திய கரும்புலிகள் அமைப்பை சீர்குலைக்க அமெரிக்க உள்நாட்டு உளவு நிறுவனமான FBI கடும் முயற்சிகளை எடுத்தது. இந்தக் கட்சியின் உறுப்பினர் சிலர் பொலிசாரினால் சண்டைக்கு வலிந்து இழுக்கப்பட்டு கொல்லப்பட்டனர். மற்றையோர் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டனர். எஞ்சியிருந்தோர் தலை மறைவு வாழ்க்கைக்கு தள்ளப்பட்டனர். இவ்வாறே மும்மியாவும் ஒரு பொலிஸ்காரரை சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்ட மும்மியாவை விடுவிக்கக் கோரி அமெரிக்காவெங்கும் மும்மியா ஆதரவுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இவர்கள்

www.tamilarangam.net



மும்மியா பற்றிய தகவல்களை மக்களுக்கு தெரிவிப்பதன் மூலம், அமெரிக்கச் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தனர். இவ்வாறே நெதர்லாந்திலும் ஒரு மும்மியா ஆதரவுக் குழு அமைக்கப்பட்டது. இவர்கள் அமெரிக்க தூதுவராலயம் முன்பு செப்டம்பர் மாதம் 4-ம் திகதி ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்துவது என முடிவெடுத்தனர்.

அமெரிக்க தூதுவராலயத்திற்கு முன்னால் போராட்டம் என்று சொன்னாலே பரபரப்படையும் நெதர்லாந்துப் பொலிசார் அன்றைய ஊர்வலத்திற்கு பாதுகாப்பு கொடுக்க மறுத்து விட்டனர். சுமார் 500 பேரளவில் பல தேசிய இனத்தவரையும் உள்ளடக்கியிருந்த இந்த ஊர்வலம் அமெரிக்க தூதுவராலயத்தை அண்மித்ததுமே கதவுகள் இழுத்து மூடப்பட்டன. இதனால் மனு கையளிக்க வந்து ஏமாற்றமடைந்த ஊர்வலத்தினர் தூதுவராலயக் கட்டிடம் மீது முட்டைகளை வீசினர்.

உடனே எங்கிருந்தோ ஓடிவந்த பொலிஸ் அவ்வளவு பேரையும் சுற்றி வளைத்தனர். கூட்டத்தில் சிலரை கைது செய்ய எத்தனிக்கவே மற்ற வர்கள் தடுத்தனர். இதைத் தொடர்ந்து பொலிஸ் அடக்குமுறை பொலிஸ்காரர்கள் உடனே கையிலிருந்த லத்திக் கம்புகளால் கண்மூடித் தனமாக அடிக்க ஆரம்பித்தனர். கூட்டம் சிதறியோடியது. அன்று மொத்தம் ஆறுபேர் கைது செய்யப்பட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட இருவருக்கெதிராக பொலிஸ் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளது. அவர்கள் மீது இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. ஒன்று கட்டிடம் மீது வன்முறை பிரயோகித்தமை. இரண்டு, கைது செய்வதை எதிர்த்தமை.

மேற்குலக நாடுகளின் ஜனநாயக முகமூடி கிழிந்து வருவதை இத்தகைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

— கலை

# புரட்சிகர கட்சியை கட்டும் போராட்டத்தில் பெற வேண்டிய தெளிவு

''சமர்'' இதழ் 26-இல் ''இலங்கையில் ஒரு புரட்சிகரமான சர்வ தேசியத்தை நிறுவும் போராட்டத்தில் ஏற்படும் திசை விலகல்கள் மீது'' என்ற தலைப்பில் தமிழீழ புதிய சனநாயக கட்சியின் பிரகடணம். அதன் வெளிப்படையான 15 அரசியல் நிலைப்பாடுகள் மீது ஒரு பெரிய விமர்சனத்தை சமர் வைத்திருந்தது. அவ்விமர்சனம் மீதான நமது கண்ணோட்டத்தை - பதிலை இந்த தேசபக்தன் இதழில் தொடக்கியுள்ளோம், கட்சியின் இரண்டு தோழர்கள் இப்பணியை பொறுப்புடன் செய்யத் தொடங்கியுள்ளனர், சமர் 26-வது இதழ் தேவைப்படும் வாசகர்கள் தேசபக்தன் முகவரிக்கு எழுதவும்.

ஆசிரியர் குழு
தேசபக்தன்

முதலாவதாக சமரின் முழு விமர்சனத்திலும், ''தமிழீழ புதிய சனநாயக கட்சியை'' (NDPT) ஒரு கொம்யூனிசக் கட்சியாக கருதிக் கொண்டும், புதிய சனநாயகப் புரட்சி வேலைத் திட்டத்தை, புரட்சிப் போராட்டத்தை ஒரு ''முன்னணியின்'' பெயரில்தான் முன்னெடுக்க முடியும், ''கட்சியின்'' பெயரில் செய்யக் கூடாது என தீர்மானித்துக் கொண்டு, அவ்வாறு கட்சியின் பெயரில் முன்னெடுப்பதைக் கூடத் திரிபுக்கான போக்கு என்ற பார்வையில் முழு விமர்சனத்தையும் எழுதித் தள்ளியுள்ளது.

தமிழீழ புதிய சனநாயக கட்சி தன்னை எப்படி வரலாற்று ரீதியாக புரிந்து வெளிப்படுத்துகிறது என்பதை வாசகர்களுக்கு தெளிவுபடுத்தி விட்டு, பின் விமர்சனத்துக்கான பதிலை தொடங்குகிறோம்.

மனிதகுல வரலாற்றின் ஒரு கட்டத்தில் நிலப்பிரபுத்துவ சமூக ஆட்சி அமைப்பு முறையை எதிர்த்து முதலாளித்துவம் சனநாயகப் புரட்சியை நடத்தி, தேசிய அரசுகளை நிறுவி, முதலாளித்துவ சர்வாதிகார அரசுகளை உருவாக்கியது; முதலாளித்துவம் வரலாற்று வளர்ச்

www.tamilarangam.net


சிக்கு முற்போக்குப் பாத்திரம் வழங்கிக் கொண்டிருந்தவரை முதலாளித்துவத்தின் தலைமையிலான தேசிய சனநாயகப் புரட்சிகளை உலகத் தொழிலாளி வர்க்க இயக்கம் ஆதரித்து வந்தது, அதனால்தான் தேசியப் பிரச்சினையின் முதல் கட்டம், முதலாளித்துவத்தின் தேசியக் கோரிக்கையாக இருந்ததுடன், முற்போக்கானதாகவும் இருந்தது, முதலாளித்துவத்தின் இந்த முற்போக்கான தன்மையை ஆதரித்த தொழிலாளி வர்க்க இயக்கம், பின்னர் முதலாளித்துவ அரசுகளை வீழ்த்தி சோசலிசப் புரட்சி நடத்தி தொழிலாளி வர்க்க சர்வாதிகார அரசை நிறுவும் கொள்கையை முன்னிறுத்தி - நடைமுறைப்படுத்தியது.

வரலாற்றின் ஒரு கட்டத்தில் சில நாடுகளில் நிலப்பிரபுத்துவ முறையை தகர்த்து, தேசிய அரசுகளை அமைத்து, முற்போக்கு பாத்திரம் வழங்கிய முதலாளித்துவம் மூலதன குவிப்பின் வளர்ச்சியில் ஏகாதிபத்தியமாக வளர்ந்தது. ஏகாதிபத்திய அரசுகள் உலகில் ஏனைய நிலப்பிரபுத்துவ மன்னர் அரசுகளை, மற்றும் அதற்கு முந்திய சமூக அமைப்பில் இருந்த மக்கள் சமூகங்களையும், தேசிய அரசுகளையும் கூட ஆக்கிரமிப்புப் போர்கள் மூலம் கைப்பற்றி, ஒன்றுக்கு மேற்பட்ட மன்னர் ஆட்சிகளையும் பலவந்தமாக இணைத்து கொலனிய நாடுகளை உருவாக்கியது, மனிதகுலத்தின் இயல்பான, தேசங்களின் சுதந்திரமான வளர்ச்சியை தடுத்து நிறுத்தி, வரலாற்றில் பிற்போக்குப் பாத்திரத்தை முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக மாறியபின் வழங்கத் தொடங்கியது; இன்றுவரை இது தொடர்கிறது.

ஏகாதிபத்திய கொலனிய முறைக்கு, ஆக்கிரமிப்புக்கு உள்ளான நாடுகளில், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசியப் புரட்சியையும், உள்நாட்டு நிலப்பிரபுத்துவ முறைக்கு எதிரான சனநாயகப் புரட்சியையும், உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கத்தால் (முதலாளித்துவம் வரலாற்று ரீதியாக முற்போக்கு பண்பை இழந்து விட்டதால்) நிறைவேற்ற முடியாது, என்பதை கணிப்பிட்ட தோழர் லெனின், தேசிய சனநாயகப் புரட்சிக் கடமைகளையும் தொழிலாளி வர்க்கம் தனது தலைமையில் செய்ய வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை, உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு தெளிவுபடுத்தினார். முதலாளித்துவ - ஏகாதிபத்திய நாடுகளின் சோசலிசப் புரட்சியும், கொலனிய நாடுகளின் தேசிய விடுதலைப் புரட்சியும் (நேரடியான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு இருந்ததால் தேசிய விடுதலை இயக்கங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்டே செயற்பட்டன) உலக சோசலிசப் புரட்சியின் இரு போக்குகள் என்றார்.

ஏகாதிபத்திய கொலனிய கட்டத்தில் எல்லா நாடுகளிலும் முழுமையான கொலனிய ஆக்கிரமிப்பு மட்டும் இருக்கவில்லை. சில நாடு

www.tamilarangam.net


களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஏகாதிபத்தியங்கள் அக்கம் பக்கமாக பகுதி பகுதியாக ஆக்கிரமித்து இருந்தன, சில நாடுகளை ஒரே ஒரு ஏகாதிபத்தியமே தனது முழுக் கொலனியாக ஆக்கிரமித்து இருந்தது. சில நாடுகளில் ஒரு பகுதியை ஏகாதிபத்தியம் ஆக்கிரமித்து இருக்க, மறுபகுதி நிலப்பிரபுத்துவ ஆட்சிக்குள் இருந்தது.

சீனாவின் ஒரு பகுதி நிலப்பிரபுத்துவ - யுத்தப் பிரபுக்களின் ஆட்சியிலும், மறுபகுதி யப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் கீழும் (அரைநிலப்பிரபுத்துவ - அரைக் கொலனிய முறை) இருந்தது.

தோழர் மாஓவும் சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியும், நிலப்பிரபுத்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக போராடிக் கொண்டிருந்த, சீன தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் தலைமைகளிடம், தேசிய சனநாயகப் புரட்சிக் கடமையை ஒப்படைக்காமல், மார்க்சிய - லெனினியத்தை ஆழமாகப் புரிந்து, சீனத்தின் குறிப்பான நிலைமைகளுக்கு பொருத்தியது. நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையும், உற்பத்தி உறவுகளும் தீர்மானகரமான போக்காக - விவசாய வர்க்கமே பிரதான சக்தியாக இருந்த சீன நாட்டில், வரலாற்று வளர்ச்சியின் எதிர்காலத்தை புரிந்து தொழிலாளி வர்க்க சித்தாந்த அரசியலை முன்னிறுத்தி (இன்று தமிழீழத்தில் தொழிற்சாலைகள் தொழிலாளிகள் அதிகம் இல்லை எனக் கூறி தொழிலாளி வர்க்க அரசியலை, கட்சியை நிராகரிப்பவர்களுக்கு) சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் நிலப்பிரபுத்துவ - ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட சீன நாட்டின் அனைத்து வர்க்க சக்திகளையும் (தேசிய முதலாளித்துவம் உட்பட) ஒன்றிணைக்கக் கூடிய **''புதிய சனநாயக புரட்சித் திட்டத்தை''** முன்வைத்து **சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி**, புதிய சனநாயக வர்க்கங்களின் நலன்களை முன்னிறுத்தும் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்ததுடன் தொழிலாளி வர்க்க அரசியல் தலைமையை நிறுவி உறுதிப்படுத்தும் கீழ் **இருந்து கட்டப்படும் அய்க்கிய முன்னணிக்** கொள்கை உத்தியை கட்சியே தனது தலைமையில் நேரடியாக அமுல்படுத்தியது. தனியாக செயற்பட்ட தேசிய முதலாளித்துவ கட்சியுடன் (சண்யாட்சன், சியாங்சேக் தலைமை) **கொம்யூனிஸ்ட் கட்சி மேலிருந்து கட்டும் அய்க்கிய முன்னணிக்** (யப்பானிய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு முன்னணி) கொள்கை உத்தியையும் நடைமுறைப்படுத்தியது.

உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கும், குறிப்பாக கொலனிய நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கங்களுக்கும், சீனப் புரட்சியின் வெற்றியும் ''புதிய சனநாயகப் புரட்சி வேலைத் திட்டமும்'' முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பாக மாறியது, பழைய வகைப்பட்ட சனநாயகப் புரட்சிக்கு பதிலாக, புதிய வகைப்பட்ட சனநாயகப் புரட்சியின்

www.tamilarangam.net



வெற்றியும் - வளர்ச்சியும் மனித குலத்துக்கு தொழிலாளி வர்க்க தலைமையில் நிருபித்து காட்டப்பட்டது.

ஏகாதிபத்தியமானது 1-வது உலக யுத்தத்தின் பின், ஏகாதிபத்திய முறைக்கு சவக்குழி தோண்டிய - சோவியத் சோசலிச அரசையும், சோசலிசப் புரட்சிக்கான போராட்டங்களையும், கொலனிய முறைக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டங்களை, புதிய சனநாயகப் புரட்சிப் போரையும் எதிர் கொண்டிருந்தது. கூடவே ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான உள் முரண்பாடுகளும் சந்தைப் போட்டிகளும் 2-வது உலக யுத்தத்தை சந்திக்க வேண்டிய நிலைமைக்கு உலக அரசுகளை தள்ளியது.

ஏகாதிபத்தியங்களுக்கு இருந்த ஒரே வழி முதலில் தங்களுக்கு இடையில் உலகச் சுரண்டலை, சந்தையை பங்கீட்டுக் கொள்வதில் ஒரு புதிய சமரச வழியைக் காண்பது. அடுத்து கொலனிய முறைக்கு எதிராக போராடும் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அரசியல் சக்திகளுடன் கொலனிய முறையை (சுரண்டல் வடிவம் மட்டுமல்ல) புதிய வழிகளில் தக்க வைக்கும் புதிய சமரச கூட்டுச் சுரண்டல் அமைப்பு முறையை முன்வைத்தது. இதுவே ஏகாதிபத்திய **புதுக் கொலனிய** (நவ கொலனிய) முறை எனப்படுகிறது. ஏகாதிபத்திய கொலனிய முறைக்குள் இருந்த ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் புதிய சனநாயகப் புரட்சி வெற்றி பெறாத அனைத்து நாடுகளின், தேசிய முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் அரசியல் தலைமைகளும் தாங்கள் எதிர்த்துப் போராடிய குறித்த ஏகாதிபத்தியத்துடன் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலக ஏகாதிபத்திய அமைப்புடன் சமரசம் செய்து அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டன. இத்தகைய நாடுகள் எல்லாவற்றையும், உலக ஏகாதிபத்தியமானது தனது **புதிய கொலனிய** முறைக்கு இரையாக்கிக் கொண்டது. இதற்கு இரையாகிய நாடுகள் எல்லாவற்றையும் புதுக் கொலனிய நாடுகள் என அழைக்கப்படுகிறது. மீண்டும் இயல்பான வளர்ச்சி மறுக்கப்பட்ட இந்நாடுகளை முதலாளித்துவ அறிஞர்கள் "வளரும் நாடுகள்" என்கின்றனர். இக்கண்ணோட்டத்தை தொழிலாளி வர்க்க இயக்கம் ஏற்றுக் கொள்ளாது. **புதுக்கொலனிய நாடுகள் வளர்ச்சி** மறுக்கப்பட்ட **நாடுகள்** என அணுகுகிறது. ஏகாதிபத்தியத்தின் பழைய கொலனிய முறைக்கும், புதிய கொலனியல் முறைக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை புரிந்து கொள்ள முடியும். கொலனிய ஆட்சி அமைப்பு முறைக்கும் ஆண்ட வர்க்கங்களின் பண்புகளுக்கும், புதுக் கொலனிய அரசு ஆட்சி அமைப்பு முறைக்கும் ஆளும் வர்க்கங்களின் பண்புகளும் வேறுபட்டவை. உலக ஏகாதிபத்திய முறையை அனுசரித்த அதன் போக்குக்கு உட்பட்ட சில

நாடுகளின் கலப்புப் பொருளாதார முறை, சோவியத் - சீனப் பாணியிலான அரசு நடத்தைகள் கூட தரகு - அதிகார வர்க்க முதலாளித்துவமும் - பெரும் நிலவுடைமை வர்க்கங்களே இப்புதுக் கொலனிய நாடுகளின் ஆளும் வர்க்கமாகும். புதுக் கொலனிய நாடுகளில், முறையில்முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையும், உற்பத்தி உறவுகளும், சமூகப் பண்புகளும் சமச்சீரற்ற முறையில் ஒவ்வொரு நாடுகளிலும் நிலவி வருகிறது. ஆனால் ஏகாதிபத்திய முறைக்கு உட்பட முதலாளித்துவப் போக்கே தீர்மானகரமாக இருந்து வந்தது - வருகிறது.

உலக ஏகாதிபத்தியம் தனது புதுக் கொலனிய முறையை செயற்படுத்தும் முறையிலேயே உலகு தழுவிய, உலக நாடுகளை இணைத்த உலக நிறுவனங்களை உருவாக்கியது. 2-வது உலக யுத்தத்தின் பின் அய்நா சபையும், (U.N.) அதன் துணை நிறுவனங்களும் IMF. W.B. உலக நிதி நிறுவனங்களும் உருவாகின. இன்று WTO-வும், புதுக்கொலனிய நாடுகளை மிக மிகவும் சாதுரியமாக உலக ஏகாதிபத்திய முறைக்கு இசைவான முறையில் இரையாக்கி வளர்த்து வருகின்றன; ஏகாதிபத்தியச்சுரண்டலுக்கு உதவும் வகையில், நிதித்துறை தொழிற்துறை, விவசாயத் துறை, பண்பாடு என்பன, வேகமாக முதலாளித்துவமயமாக்கப்பட்டு சேவைத் துறை, பண்பாடு என எல்லாம் இன்று வேகமாக மாறி வருகிறது, முதலாளித்துவக் குண இயல்புகள் எல்லாம் ஏகாதிபத்திய போக்குடன் சங்கமமாகி வருகிறது.

கொலனிய கட்டத்தில், நிலப்பிரபுத்துவத்தை, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வந்த - நின்ற தேசிய முதலாளித்துவத்தின் போக்கு, புதுக்கொலனிய கட்டத்தில் தரகு முதலாளித்துவப் போக்காக மாறிவிட்டது. அன்று அன்னிய மூலதனங்களுடன் இணைக்கப்படாது இருந்த உள்நாட்டு முதலாளித்துவத்தின் பண்புகள் அழுத்தமான தேசியத் தன்மையை வெளிப்படுத்தியது; புதுக் கொலனிய முறையில், நாடுகளில் உள்ள உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கம், மூலதனம் அன்னிய மூலதனத்தின் செயற்பாட்டுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டு வருகிறது. எனவே அன்றைய சீன தேசிய முதலாளித்துவம் பற்றிய பண்புகளில் இருந்து இன்றைய புதுக் கொலனிய நாட்டு தேசிய முதலாளித்துவத்தின் பண்புகளை வேறுபடுத்தி பார்க்க வேண்டியுள்ளது. ஏகாதிபத்திய புதுக் கொலனிய முறை என்பது ஏகாதிபத்திய உள்முரண்பாடு இல்லாத முறையல்ல.

புதுக் கொலனிய நாடுகளின் தேசியப் பிரச்சினை, தேசிய இனப் பிரச்சனைகளை முதலாளித்துவக் கோரிக்கைகளாக மட்டும் குறுக்கி விட முடியாது என்பதையும் பார்க்க வேண்டும். கூடவே தேசிய இன விடுதலைக்காகப் போராடும், உக்கிர யுத்தம் புரியும் இன ஒடுக்குமு

www.tamilarangam.net



றைக்கு எதிரான எல்லா இயக்கங்களையும், ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலை இயக்கமாக பார்க்க முடியாது. ஒட்டுமொத்த உலக ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட உள்நாட்டு முதலாளித்துவ சக்திக ளையே தேசிய முதலாளித்துவ சக்திகளாக - தேசிய விடுதலை இயக்க மாக கருத முடியும், குறித்த ஒரு கட்டத்தில் குறிப்பிட்ட ஒரு ஏகாதிபத் தியத்தை, அன்னிய ஆக்கிரமிப்பை மட்டும் எதிர்க்கும் சக்திகளை, தேசிய முதலாளித்துவ சக்தியாக கருத முடியாது, அந்த குறித்த காலத் துக்கு மட்டும் அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பை, ஆக்கிரமிப்பு எதிர்ப்பை, இன ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பை போராட் டத்தை, ஆதரிக்கவும் மேல் இருந்து தற்காலிக அய்க்கிய முன்னணி கட்டிப் போராடவும் முடியும், ஒட்டுமொத்த உலக ஏகாதிபத்திய எதிர்ப்பு, இன ஒடுக்குமுறை எதிர்ப்பு நிலை கொண்ட தேசிய முதலா ளித்துவ அரசியல் சக்திகளுடன், ஒரு நீண்ட கால அய்க்கிய முன்ன ணியை மேல் இருந்து கட்டிப் போராட முடியும். போராட வேண்டும். இந்த அடிப்படை நிலைப்பாடுகள் தொழிலாளிவர்க்க புதிய சனநாயக சக்திகளுக்கு கட்சிக்கு மிக அவசியமானது. புதுக் கொலனிய நாடு களில் உள்நாட்டு அரசையும், ஆளும் வர்க்கங்களையும், உலக ஏகாதி பத்தியங்களையும், விரிவாதிக்க அரசுகளையும் தூக்கி எறிந்து, ஒரு புதிய சனநாயக அரசை நிறுவப் போராடும் தொழிலாளி வர்க்க இயக் கமானது, கட்சியானது, மேற்கண்ட எதிரிகளுக்கு எதிரான அனைத்து உள்நாட்டு வர்க்க சக்திகளை அய்க்கியப்படுத்தும் ஒரு புதிய சனநாயக வேலைத் திட்டத்தை முன்வைத்து, தொழிலாளி வர்க்க சித்தாந்த அர சியல் தலைமையை. சமரசமற்ற, தூர நோக்குள்ள தலைமையை கட்ட வேண்டும். கீழ் இருந்து கட்டும் இவ்அய்க்கிய முன்னணிக் கொள்கையை, முன்னிறுத்தும் வடிவத்தின் பெயர், கொம்யூனிஸ்ட் கட்சியின் பெயரிலா, முன்னணியின் பெயரிலா புதிய சனநாயக கட்சி பெயரிலா.... என்பதை அந்த அந்த அரசியல் இயக்கங்களே தீர்மா னித்துக் கொள்ள வேண்டும்; அதன் பெயரில் இருந்து திரிபுவாதமா - புரட்சியா எனத் தீர்மானிப்பதைவிட அவ் அரசியல் இயக்கத்தின் கொள்கை உள்ளடக்கம். புதிய சனநாயக வர்க்கங்களின் நலன்களை, அரசியல் கோரிக்கைகளை பிரதிபலிக்கிறதா என ஆய்வு செய்து வளர்ப் பதே நமது குறிக்கோளாக, தொழிலாளி வர்க்க அரசியலை உறுதிப்ப டுத்துவதாக இருக்க வேண்டும். தமிழீழ புதிய சனநாயகக் கட்சி இந்த நோக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழீழ புதிய சனநாயக கட்சி ஒரு கொம்யூனிஸ்ட் கட்சியுமல்ல, கொம்யூனிஸ்ட் கட்சிக்கு மாற்றான கட்சியுமல்ல. ஆனால் புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சியின் உலக வரலாற்றுத் தேவையை நிராகரிக்காத கட்சி என்பதில் தெளிவாகவுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## இனி சமரின் விமர்சனத்துக்கு வருவோம்

*''1983-இல் எப்படி பல்வேறு இயக்கங்கள் உருவானதோ, அதற்கு எப்படியான ஏற்ற சூழல் இருந்ததோ, அதையொத்த 'கட்சி'ப் பிரகடனங்கள் புதிய போக்காகியுள்ளது. 'கட்சி'ப் பெயரிலான பிரகடனங்கள் புரட்சியை பெயரிலான பிரகடனங்கள் புரட்சியை ஏற்படுத்தி விடுவதில்லை'', ''இலங்கையில் ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியை உருவாக்குவதற்கும், ஒரு முற்போக்கு தேசிய முன்னணியை உருவாக்குவதற்கு முன், குறைந்த பட்சம் சில அடிப்படையான அரசியல் நிலைமைகளை பூர்த்தியாக்கியிருக்க வேண்டும்.'' இது சமரின் வாதம்.*

"NDPT" தமிழீழ புதிய சனநாயகக் கட்சியின் பிரகடணம் சமர் குறிப்பிடுவது போல், **''எடுத்தோம் கவிழ்த்தோம்''** பாணியில் செய்யப்பட்டதல்ல. 1983-ல் உருவான 25-க்கும் மேலான இயக்கங்கள் போல், தமிழீழ சமூகத்தில் இருந்த மற்றய இயக்கங்களின் கொள்கைகளை, திட்டங்களை படிக்காமல், மற்றய இயக்கத்துக்கும் — தங்களுக்கும் இடையில் அடிப்படையான மூலோபாய விசயங்களில் முரண்பாடு - உடன்பாடு தெரியாமல், தியாகம் (சாவதற்கு) தயரான நபர்களும், சில ஆயுதங்களும் கிடைத்ததால் உருவாக்கப்பட்ட இயக்கங்கள் போல், **தமிழீழ புதிய சனநாயக கட்சியோ**, ஏன் **தமிழீழ மக்கள் கட்சி** கூட அப்படி உருவாக்கப்படவில்லை, பிரகடனம் செய்யவில்லை என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

**''இயக்கம், முன்னணி''** எனப் பெயர் வைத்துக் கொண்டதால்தான் தங்கள் ''இயக்கம், முன்னணிகள்'' திசை விலகின. சமரசம் அடைந்தன. சிதைந்தன என்பதற்காக இப்பெயர்களுக்கு மாற்றாக **''கட்சிப்''** பெயர்ப் பிரகடனங்கள் செய்யக் கிளம்பிய புரட்சியாளர்கள் அல்ல நாங்கள். தமிழீழ விடுதலையை சாதிக்க கிளம்பிய ''கட்சிகள், முன்னணிகள், இயக்கங்கள்'', இவை அனைத்தும் இருந்தும், உயிரை பணயம் வைத்து போராட முன்வந்த ஆயிரம் ஆயிரம் ஆண் - பெண் போராளிகள் யுத்தத்தில் தியாகிகளான போதும், குடும்பத்தை, ஊரை, நாட்டை விட்டு, நடு வீதிக்கு போராளிகளே தள்ளப்பட்ட நிலை, சொல்ல முடியாத இழப்புகளை மக்கள் சந்திக்கும் காலத்தில், மக்களை போராட்டத்தில் இருந்து அன்னியப்படுத்திய நிலை, உலகம் முழுவதும் புழுக்கள் போல் அகதிகளான போதும் போராட்டத்தின், வெற்றியின், இலட்சிய எதிர்கால வாழ்வின் மீது அன்று இருந்த நம்பிக்கை தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் அவநம்பிக்கை அதிகமாகிவிட்டது.

போராட்டத்தை முன்னெடுத்த அனைத்து அரசியல் அமைப்புகளின், தலைமைகளின், சிந்தனைக்கும் - செயலுக்கும், காரணமாக

www.tamilarangam.net



இருந்த சித்தாந்த 'அரசியல் பார்வைகளை, அமைப்பு கண்ணோட்டங் களை, இவ்அரசியல் அமைப்புக்களின் தோல்விக்கான, முன்னேற முடியாமல் இருப்பதற்கான வரலாற்று ரீதியான சமூகக் காரணங்களை ஒவ்வொரு துறையிலும், எங்களால் முடிந்தளவுக்கு பரிசீலித்து வந்தி ருக்கிறோம். தொடர்ந்தும் மறுபரிசீலனை செய்வோம். தமிழ்ச் சமூ கத்தில் இருந்து ஆயுதப் போராட்டம் நடத்திய - நடத்தும் இயக்கங்கள், முன்னணிகளை பற்றி மட்டுமல்ல. தொழிலாளி வர்க்கத்தின் விடுதலை - சமூகப் புரட்சி பற்றி அக்கறையுடன் செயற்பட்ட - செயற் படும் இலங்கை கொம்யூனிஸ்ட்டு கட்சிகள், ட்ரொஸ்கிய கட்சிகள் M.L. கட்சிகளின், சிதைவுககள் தோல்விகளுக்கான - சமரசங்களுக்கான சித்தாந்த அரசியல் அமைப்புக் கூாரணங்களையும், தேசிய - சர்வ தேசிய மாற்றங்களையும் நாங்கள் பரிசீலனை செய்துள்ளோம். செய்கிறோம். செய்வோம்.

இத்தகைய நீண்டதொரு சித்தாந்த அரசியல் போராட்ட தொடர்ச் சியில் இருந்தவர்கள் நாங்கள். மேற்கண்ட அரசியல் அமைப்புகளின் வரலாற்றுத் தொடர்ச்சி மூலம் வந்தவர்கள் நாங்கள். அவ் அரசியல் அமைப்புக்களுக்குள் உள் அமைப்புப் போராட்டம், நடத்தியவர்கள். இதற்காகவே இவ் அரசியல் அமைப்புத் தலைமைகளுக்கு தோழர் களை உயிர்ப் பலி கொடுத்தவர்கள் நாங்கள். உயிர்ப் பலி எடுக்காத அமைப்புகள், கட்சிகள் கருத்துப் போராட்டம் நடத்திய தோழர்க ளுக்கு மனோவியல் சித்திரவதை செய்து, மயிர் பிளக்கும் விவாதம் நடத்தி மயிர் புடுங்க வைத்தார்கள், அத்தகைய மயிர் புடுங்கிகள் நாங்கள். கற்பை உடலில் மட்டும் எதிர்பார்த்து, உள்ளத்தை களங்கப் படுத்தி - நாசம் செய்த கயவர்களின் பிடியில் இருந்து தப்பியவர்கள் நாங்கள்.

இவற்றுக்கு காரணமான தலைமைகளின் சித்தாந்த அரசியலை மட்டும் நாங்கள் மாற்றி புரட்சிகர அரசியலை மட்டும் முன்வைக்க வில்லை. அமைப்பு கட்டப்பட்ட முறையிலுள்ள தவறுகள், ஊழியர் களை உருவாக்குவதில், மக்கள் முன் செயற்பட வைப்பதில், வளர்த் தெடுப்பதில், தலைமைக்கு உயர்த்துவதில், முக்கியமாக தலைமையை கட்டியமைப்பதில், சக அமைப்புக்களுடன் உறவைப் பேணுவதில், பகுதியளவில், நாடு தழுவியளவில் கூட்டுப் போராட்டங்களை நடத் துவதில், தற்காலிக - நீண்ட கால அய்க்கிய முன்னணிகளை கட்டிப் போராடுவதில், சக அமைப்புக்களை அய்க்கியப்படுத்துவதில் கடந்த காலத் தவறுகளை கண்டறிந்து, புதிய மாற்று வழிமுறைகளை முன்வைத்து கடந்த 15 ஆண்டுகளாக செயற்பட்டு வந்த ஒரு அரசியல் இயக்கத்தின் முன்னோடிகளின் வளர்ச்சியின், ஒரு கட்ட வெளிப் பாடுதான் தமிழீழ புதிய சனநாயகக் கட்சி NDPT. (''தமிழீழ புதிய சன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நாயகக் கட்சியின்'' உருவாக்கத்துக்கு முந்தைய வளர்ச்சிக் கட்டங்கள், பற்றிய குறிப்பு கட்சி பிரகடணத்தின் பின் வெளிவந்த 2000, தைமாத தேசபக்தனில் உள்ளது:)

தமிழீழ புதிய சனநாயக கட்சியின் உருவாக்கம், பிரகடணம் தமிழீழ புதிய சனநாயகப் புரட்சிக்கான அரசியல் அடிப்படைகளையும், போராட்டத்தை முன்னெடுப்பதற்கான அமைப்பு அடிப்படைகளையும் கொண்டே வெளிவந்தது. 15 அரசியல் நிலைப்பாடு என்பது தேசபக்தனில் வெளிப்படையாக வந்துள்ளது. வெகுசனங்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளோம்.

சமர் விமர்சனத்தின் 1-வது இலக்க அம்சமாக குறிப்பிடுவது.

*ஏகாதிபத்திய பொம்மை சிங்கள இனவாத அரசு இன அழித்தொழிப்பையும், புலிகளின் வலது இனவாதப் பிற்போக்கையும், இலங்கை நிலைமையில் குறிப்பாக கவனத்தில் கொண்டே கட்சிப் பிரகடணம் செய்யப்பட வேண்டும். அதாவது இலங்கையில் ஒரு கட்சி கட்டப்படும் வடிவமும், இந்தியாவில் ஒரு கட்சி கட்டப்படும் வடிவமும் முற்றாக வேறுபட்டவை. இந்தியாவில் 1960-களில் ஏற்பட்ட நக்சல்பாரி எழுச்சியின் தோல்விகள், அதன் மீதான அரசியல் விவாதம் பல கட்சிகளை உருவாக்கியது. இது சரியான அரசியல் மார்க்கத்தை தனித்தனியான அரசியல் அணி திரட்டல்களில் இருந்து, நடைமுறை யூடாக நிறுவி ஒன்றுபட்ட கட்சியை நோக்கி முன்னேறும் அரசியல் நடைமுறையை, இந்தியாவின் குறிப்பான புரட்சிகர சூழல் ஏற்படுத்தியுள்ளது. அதாவது பல குழுக்கள் தனித் தனியாக உருவாகி, அதில் இருந்து ஒன்றுபட்ட கட்சியை வந்தடையும் நிலைமை அங்கு காணப்படுகின்றது. இது 1960-களில் ஏற்பட்ட எழுச்சி, தோல்வியில் ஏற்பட்ட அனுபவ ரீதியான நடைமுறை ஊடாக, தத்துவார்த்த ரீதியில் முரண்பாடுகள் உருவான போது, அங்கு இவ் உருவாக்கம் சட்டபூர்வ, சட்ட விரோத நிலைமைகள் ஊடாக பல கட்சிகள் வந்தடைந்தது. ஒரு கட்சியில் இருந்து புரட்சிகர முரண்பாட்டை அடிப்படையாக கொண்டு பல கட்சிகள் உருவாகுவதும், அதில் இருந்து ஒரு ஒரே கட்சியை நோக்கி மீள முன்னேறுவதும் என்ற நடைமுறை காணப்படுகிறது.*

*இந்த நிலைமை இலங்கைக்கு பொருந்துமா? இலங்கையில் நிகழும் இனவாத யுத்தமும், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர தொடர்ச்சியின்மையும் அதிகளவுக்கு பாதகமாகவுள்ளது. அத்துடன் சட்ட பூர்வமான அனைத்து செயல் களமும் பாசிச வன்முறைக்கும், படுகொலைக்கும் உள்ளாவதால், சட்ட விரோதமான செயல் வடிவம்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டுமே மாற்றுப் பாதையாக உள்ள போது, கட்சி கட்டப்படும் வடிவம் முற்றாக மாறானது.

சிறீலங்கா அரசின், புலிகளின் பிற்போக்கு அம்சங்களை கவனத்தில் கொண்டே கட்சிப் பிரகடணம் செய்யப்பட வேண்டும் என்கிறது. ஒரு புரட்சிகர கட்சி தனது அரசியல் அமைப்பு கொள்கைகளை வகுப்ப தற்கு முன் அரசின் தன்மைகள் பற்றி தனியாகவும், புலிகளின் போக்கு பற்றி தனியாகவும், தமிழீழத்தின் ஏனைய சமரச அரசியல் கட்சிகள் இயக்கங்களின் பிற்போக்கு குறித்தும் ஆய்வு செய்வது அடிப்படையா னது. கூடவே தமிழீழப் பகுதியில் உள்ள புரட்சிகர சனநாயக சக்தி களின் நிலையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால் ஒரு புரட்சிகர கட்சி உருவாவதையும், அது மக்கள் மத்தியில் நிலை கொள்வதையும், மிக மூர்க்கமாக புலிகள் நசுக்க முற்ப டுவார்கள். அரசும், அரசு சார்பு தமிழ்த் தலைமைகளும் கூட இதற்கு தடையாக இருப்பார்கள். ஒரு புரட்சிகர கட்சி நாட்டின், குறிப்பான பகுதிகளில் கட்சியை நசுக்க முற்படும் சக்திகளின் குறிப்பான போக்குகள், பலம் - பலவீனம்... என பலவற்றை கவனத்தில் கொண்டு, கட்சியின் செயற்பாட்டை, முழுக்க இரகசியமாகவா அல்லது வெளிப்படையாகவா அல்லது அரை இரகசியமாகவா என்பதை தீர்மானிக்க வேண்டும்; கட்சி ஊழியர்கள் எத்தகைய வடிவங் களில் தங்களை மக்களிடம் வெளிப்படுத்தி வேலை செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும், ஆனால் தாங்கள் வாழும் பகுதி களில் மக்களுடன் - அவர்களின் குறைந்தபட்ச சனநாயக அரசியல் - பொருளாதார - வாழ்வுரிமைக் கோரிக்கைகளுக்கான - செயற்பாடுக ளுடன் இயங்குவதற்குப் பதிலாக மக்களுடன் தொடர்புகள் இன்றி இருப்பதும், புரட்சிகர சக்திகள் என தங்களுக்குள் பரஸ்பரம் ஏற்றுக் கொண்ட 10 பேருக்குள் மட்டும் இரகசியக் குசுகுசு அரசியல் பேசு வதும், வெளியீடுகளில் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவது மட்டுமே நடந்து கொண்டிருக்கிறது. இத்தகைய செயற்பாடுகளுடன் நிறுத்திக் கொள்ளும் நிலையானது குறிப்பிட்ட காலத்தின் பின், மக்களின் மேல் புரட்சிகர இயக்கச் செயற்பாட்டின் மேல் இருக்கின்ற நம்பிக்கையை படிப்படியாக அரித்து தின்று விடுகிறது; இறுதியில் 'காசுக்கு சமூக சேவை, பணத்துக்கு அரசியல் செய்யும் NGO திட்டத் துக்கு பலியாகிறார்கள். அல்லது குடும்பத்தை பராமரிப்பது என்ற ஒரே இலட்சியத்தில் மூழ்குகிறார்கள்.

இன்றைய ஏகாதிபத்திய சமூகமும், அரசுகளும், அதிகார வடிவங் களும் தங்களுக்கு எதிராக புரட்சி செய்வது பற்றி நிறையப் பேச, எழுத விடுகின்றது. ஆனால் இச்சமூக அமைப்புக்கு எதிராக ஸ்தாபன மயப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

படுவதை, மக்களை புரட்சிகர முறையில் அமைப்பாக்குவதை மட்டும் குறிவைத்து கவனிக்கிறது. திசை திருப்ப முயல்கிறது பல வழிகளில். அதேவேளை தனி இயக்க சர்வாதிகாரப் பாதை கொண்ட இயக்கங்கள் மக்களை ஸ்தாபனமயப்படுத்தும். முன்னணியாளர்களை, அமைப்பை அழித்தொழிக்கிறது.

தமிழீழப் பகுதியிலும் இது வெளிப்படுகிறது. சிறீலங்கா அரசை எதிர்த்துப் போர் புரியும் புலிகள், தங்களின் குறி இலக்கை தாக்குவதில் உலகில் பிரசித்தமானவர்கள் என்பது உண்மை, தங்களின் அரசியலுக்கும் அமைப்புக்கும் எதிரான அரசியல் தலைவர்களை, உள்நாட்டில் மட்டுமல்ல அன்னிய நாடுகளிலும் மிக சாதுரியமாக புகுந்து அழித்தொழிப்பார்கள் என்பதை கச்சிதமாக நிறைவேற்றி வருகிறார்கள். வெடி குண்டாலும், துப்பாக்கியாலும் மட்டுமல்ல கத்தியால் வெட்டியோ, கழுத்தை நெரித்தோ அழிக்கவும் முயல்வார்கள். இத்தகைய கொலைத் தேர்ச்சி பெற்ற ஒரு சமூகத்தில், இயக்கங்களுக்கு மத்தியில் புரட்சிகர இயக்கத்தை கட்டுவது என்பது மிக மிகு தேர்ச்சியை, முதிர்ச்சியை, பொறிமுறையை வேண்டி நிற்கிறது.

முற்போக்குப் பத்திரிகைகள் வெளிவருவதை தடைசெய்த, எரித்த, எழுத்தாளர்களை கொலை செய்த நமது நாட்டு இயக்கங்கள், இப்போது பத்திரிகை வெளி வருவதை, ஆண்டுக்கு ஒரு சந்திப்புக்கள் நடத்துவதை, கூடிக் கலைவதை அனுமதிக்க பழகிவிட்டார்கள். ஆனால் ஸ்தாபன மயப்படுவதை அனுமதிக்க மாட்டார்கள்; அல்லது அத்தகைய ஸ்தாபனங்கள் உள்ளே புகுந்து தமது வழிக்கு இசைவாக செயற்படுத்த முனைவார்கள். ஆனால் இத்தகைய நெருக்கடிகள், தடைகள், அழிப்புக்களுக்கு மத்தியிலும் உள்நாட்டில் மட்டுமல்ல. உலகளவில் தமிழீழ மக்கள் வாழும் தளங்களில் இருந்து விழிப்புணர்வை உலகு தழுவிய எல்லாவகை அரசியல் போக்குகளிலும் இருந்தும் மக்கள் பெற்று வருகிறார்கள். அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. "குண்டான் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருந்தவர்கள்" என அழைக்கப்பட்ட நமது சமூகம், அரசினதும், இயக்கங்களின் நிர்ப்பந்தங்கள், நெருக்குதல்களால் உலகம் முழுவதும் சிதறியுள்ள அவலம் உண்மைதான். இதன் மறுபக்கம் "உலகத்தில் குதிரை ஓட்டும்" சக்தியை சமூக வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பெற்றிருக்கிறது என்ற உண்மையை மறுக்க முடியாது. மறைக்க முடியாது.

எனவே அரசின் - புலிகளின் மட்டுமல்ல, அழித்தொழிப்பு இயக்கங்கள் எல்லாவற்றின் அடக்குமுறையையும், அதற்கு அப்பாலும் தமிழீழ மக்கள் வாழுகின்ற உலக நாடுகளின் நெருக்குதல்களையும் மீறி, வளர்ந்து வரும் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளை

www.tamilarangam.net



உலகளவில் ஒன்றிணைக்க - அவர்களுக்கு, அவர்கள் வாழும் தளங்களில் மக்களின் விடுதலைக்காக போராடும் ஆற்றலை வழங்கக் கூடிய அரசியல் - அமைப்பு வழிகாட்டுதலை செய்வதற்கு புரட்சிகர அரசியல் வெளியீடும், அவர்களை புரட்சிகரமான முறையில் அமைப்பாக்க புரட்சிகர கட்சியும் மிக மிக அவசியமானது.

ஆகவே ''இயக்கம், முன்னணி'' என்ற பெயர்களில் பிரகடணம் செய்தால் தவறில்லை. ''கட்சியின்'' பெயரில் பிரகடணம் செய்தால் தவறு எனக் கருதுவது சரியான பார்வையல்ல. சட்டவிரோதமானது என்பது வேறு. இரகசியமானது என்பது வேறு. சட்டபூர்வமான வேலை என்பது வேறு. வெளிப்படையான வேலை என்பது வேறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்; புரட்சிகர இயக்கத்தின் தொடர்ச்சி இன்மையை களைய வேண்டுமெனில், சட்டபூர்வமானதும் வெளிப்படையானதுமான வேலைகளுள் மட்டும் முடங்கிப் போவதற்க்கு தயாரான தலைமையை மாற்றி சட்டவிரோதமான, இரகசியமான வேலைகளுக்கும் தயாரான தலைமைய நிறுவ வேண்டும், சட்டபூர்வமானதும் சட்டவிரோ்தமானதும், வெளிப்படையானதும் - இரகசியமானதும் என அனைத்து வழிகளையும் ஒரு புரட்சிகர கட்சி செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதை முதலில் கொள்கை வழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்; எந்த நேரத்தில், எந்த இடத்தில் - நாட்டில், எந்த முறையைப் பின்பற்றுவது என்பது குறிப்பான சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு முடிவு எடுக்க வேண்டும்.

எனவே ஒரு கட்சியின் குறிப்பிட்ட கால வேலை முறையில் இருந்து மட்டும் அது புரட்சிகரமானதா - திரிபுவாதமானதா என்பதை முடிவு செய்யக் கூடாது இரகசியமானது எல்லாம் புரட்சிகரமானதாகவும், வெளிப்படையானது எல்லாம் திரிபுவாதமானது, ஆயுதம் தாங்கிய கட்சிகளே புரட்சிகர கட்சிகள் என்ற பார்வைக்கு பதிலாக, கட்சியின் மூலோபாய ரீதியான அரசியல் நிலைப்பாடுகளில் இருந்து அணுகுவதை முதன்மையானதாக்க வேண்டும்.

இன்றைய இலங்கை நிலைமையில் ''புரட்சிகர கட்சியை பிரகடணப்படுத்துவதே'' புரட்சிகர நிலைமை மீது நம்பிக்கை இன்மையை ஏற்படுத்தும் என்ற சமரின் வாதத்துடன் நமக்கு உடன்பாடு இல்லை, ''புரட்சிகர கட்சி'' எங்கே எவ்வாறு செயற்பட வேண்டும். கட்சி உறுப்பினர்கள், கீழ் அணி - தலைமை அணி. எந்த எந்த தளங்களில், எத்தகைய வடிவங்களில் இயங்க வேண்டும் என சிந்திப்பதற்கு பதிலாக; புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளை நேரடியாகவும் மறைமுகமாகவும், இரகசியமாகவும் - வெளிப்படையாகவும், சித்தாந்த ரீதியில், அரசியல் - அமைப்பு முறையில் ஒருங்கிணைக்கின்ற ஸ்தபான வடிவ

www.tamilarangam.net


மான ''கட்சியை'' இன்று பிரகடணப்படுத்துவதை மறுப்பதுதான் உண்மையில் புரட்சிகர சக்திகளுக்கும், மக்களுக்கும் புரட்சிகர நிலைமை மீது நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகிற போக்காகும்.

''இலங்கையில் கட்சி கட்டப்படும் வடிவமும், இந்தியாவில் கட்சி கட்டப்படும் வடிவமும் முற்றாக வேறுபட்டவை'' என்கின்ற சமரின் வாதத்துடன் எமக்கு முழு உடன்பாடு உண்டு இதை இன்னமும் கொஞ்சம் விரிவாக்குவோம், பிரான்சில் கட்சி கட்டப்படும் வடிவத்துடன் மட்டுமல்ல உலகின் எந்த நாட்டில் கட்சி கட்டப்படும் வடிவமும், இலங்கையில் கட்சி கட்டப்படும் வடிவமும் ஒரே மாதிரியானதாக இருக்க வேண்டியதில்லை. அதற்காக நாம் முயற்சிக்கவும் வேண்டாம்.

நான்காவது அகிலத்தினரின் உலகு தழுவிய ஒரே கட்சி, கட்சி வடிவங்கள், உலகப் புரட்சிக்கான ஒரே மாதிரியான திட்டத்தையும் நாம் நிராகரிப்பதுடன், உலக தொழிலாளி வர்க்க இயக்கமானது. முதலாளித்துவ - ஏகாதிபத்திய நாடுகளின் சோசலிசப் புரட்சி திட்டத்தையும், புதுக் கொலனிய நாடுகளின் தேசியப் பிரச்சினை உள்ளடக்கிய புதிய சனநாயகப் புரட்சித் திட்டத்தையும் வேறுபடுத்தி புரிந்து கொள்வதுடன். அவற்றுக்கிடையிலான பிரிக்க முடியாத உறவுக்குரிய அம்சங்களையும் இணைத்துப் பார்க்கிறது. கூடவே புதுக் கொலனிய நாடுகளின் குறிப்பான நிலைமைகளை பொறுத்து குறித்த நாட்டின் புதிய சனநாயகத் திட்டத்தில் வெளிப்பட வேண்டிய - வெளிப்படும் வேறுபாடுகளையும், கட்சி கட்டப்படும் முறைகளில் வெளிப்படும் வேறுபாடுகளையும் அங்கீகரிக்கிறது, அமுல்படுத்துகிறது.

இந்தியாவில் - புதுக் கொலனிய நாடுகளில் புதிய சனநாயகப் புரட்சியை முன்னிறுத்தும் பலப்பல கட்சிகள் இருக்கின்றன; கோட்பாட்டு அரசியல் வேறுபாடுகளால் மட்டும் இவை முரண்பட்டு இருக்கவில்லை. கட்சி கட்டும் வடிவம், முறை..... இவற்றிலும் வேறுபாடு இருக்கிறது. எனவே இந்தியாவில் கட்சி கட்டப்படும் வடிவம் என ஒரே ஒரு முறையை மட்டும் நாம் குறிக்க முடியாது. (நக்சல்பாரி கட்சிகளின் பிளவுகள் - அய்க்கியம் பற்றி இங்கு விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை; தமிழீழ புரட்சிகர சக்திகள் பல புதுக் கொலனிய நாடுகளில் வாழ்கிறார்கள். முதலாளித்துவ - ஏகாதிபத்திய நாடுகளில் வாழ்கிறார்கள். எல்லா நாடுகளிலும் கட்சிகள் பிளவுபட்டிருக்கின்றன - அய்க்கியப்படுகின்றன, எல்லா நாட்டு கட்சிகளின் அனுபவங்களை அவற்றின் போக்குகளை கிரகிக்க வேண்டும். அவற்றை எல்லாம் விவாதித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கு மையமான பிரச்சனை இலங்கையில் புரட்சிகர கட்சியை எப்படிக் கட்டுவது என்பது; புரட்சிகர தனி நபர்களுக்கும், புரட்சிகர குழுக்களுக்கும், புரட்சிகர கட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடு களை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இவை ஒவ்வொன்றும் தோன்றுவதும், வளர்வதும், திடப்படுவதும், குறிப்பான நாட்டின் குறிப்பான சூழ்நிலைமைகளுடன் தொடர்புடையது; ஒரு கட்சி, புரட்சிகர மக்கள் போராட்டங்களில் ஈடுபடாமலேயே விவாதித்து விவாதித்து பிளவுபடுவதும் உண்டு. தனிநபர்களை, குழுக்களை அய்க்கியப் படுத்துவது உண்டு. இன்னோர் நிலைமையில் ஒரு கட்சி புரட்சிகர மக்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் போதே கட்சிக்குள் எழும் போராட்ட முன்னெடுப்பு பற்றிய விவாதங்களால் பிளவுபடு வதும் உண்டு, போராட்ட முன்னெடுப்புக்கள் வேறு குழுக்களை, கட்சிகளை அய்க்கியப்படுத்துவதும் உண்டு. அதேபோன்று ஒரு கட்சி போராட்ட முன்னெடுப்பில் அரசுகளால், சக கட்சிகள், இயக்கங் களால் தலைமை அழிக்கப்படும்போது; தேக்கத்துக்குள்ளாகி, மீண்டும் பல குழுக்களாக, கட்சிகளாக வெளிவருவது மீண்டும் மீண்டும் பிளவுபடுவது, அல்லது அய்க்கியப்படுவது என்பதும் நடக் கிறது. ஒரு கட்சி அழிக்கப்படும் போது ஏற்படும் தேக்கம், பிளவு, அய்க்கியம் என்பது முதல் இரண்டு போக்குகளில் இருந்து துல்லிய மான வேறுபட்ட தன்மைகளைக் கொண்டது. (இலங்கையின் போராட்ட அரசியல் இயக்கங்கள், கட்சிகளின் பிளவுகளுடன் துல்லி யமாகப் பொருத்திப் பாருங்கள்.)

எனவே பல குழுக்கள், தனித் தனியாக உருவாகி, ஒன்றுபட்ட ஒரு கட்சியை வந்தடைவது இந்தியாவில் நடக்கிறது, புரட்சிகர முரண் பாட்டை அடிப்படையாகக் கொண்டு பல கட்சி உருவாவதும் மீண்டும் ஒரே கட்சியை நோக்கி மீள முன்னேறுவதும் நடக்கிறது. இது இந்தியப் புரட்சிகர இயக்கத்துக்கு உள்ள விசேட குண இயல்பு அல்ல. (இந்திய (M.L.) கட்சிகளுக்கு இடையிலான முக்கிய அரசியல் உடன் பாடு - முரண்பாட்டை பிடிக்க - ''மக்கள் கல்வி இயக்க'' வெளி யீட்டைப் பார்க்கவும்)

ஒரு கட்சி தாய்நாட்டைப் பற்றி எவ்வளவு ஆழமான சமூக விஞ்ஞான ரீதியான புரிதலுடன், உலக நிலைமையையும், உள்நாட்டு நிலைமையும் கணித்து தனது புரட்சிகர அரசியல் திட்டத்தை, அமைப்பு வழியை முன்வைக்கிறதோ அதைப் பொறுத்து கட்சியை கட்டுகிறது. தலைமையை உருவாக்குகிறது, போராடுகிறது, உலக நிலைமை, உள்நா' டு நிலைமைகள் மற்றும் போராட்டத்தின் தாக்கங் களை கவனித்து தனது அரசியல் அமைப்பு முறைகளில் திருத்தம் செய்ய வேண்டும், இங்கேதான் உட்கட்சி விவாதங்கள் இயக்கத்தின்

அரசியல் போராட்ட வழியை வளர்க்கும் வகையில் நடக்கிறபோது கட்சி முன்னேறுகிறது. தவிர்க்க முடியாமல் அரசியல் பாதையின் முன்னேற்றத்துக்காக பிளவுகள் நடந்தாலும், சரியான அரசியல் வழியை கொண்ட கட்சிப் பிரிவு போராட்டத்தில் தொடர்ந்து முன்னேறும்.

கட்சிக்கு வெளியில் இருக்கும் புரட்சிகர குழுக்களை, கட்சிகளை, அய்க்கியப்படுத்துவதற்கான கொள்கையில், அணுகுமுறையில், சித்தாந்த அரசியல் பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் அளித்தும், பின்னர் முக்கியமான அமைப்புக் கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கியும் கட்சி அய்க்கியம் ஏற்படுமானால் அந்த அய்க்கியம், புரட்சியின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமான பாதையில் செல்லும். இவ்வாறு உருவாக்கப்படாத அய்க்கியங்கள், அடிக்கடி கட்சியில் பிளவுகளை தோற்றுவிக்கும் ஒரு கட்சியின் தலைமையில் உள்ளவர்கள் ஒதுங்கிக் கொள்வதன் செயலற்ற போக்குக்கும், கட்சியின் தலைமையில் பிளவு ஏற்பட்டு கட்சி பிளவுபடுவதற்கும் கூட கட்சி, கட்டப்படும் முறையில், சக குழுக்களை, கட்சிகளை அய்க்கியப்படுத்தும் வழி முறைகளில் முக்கிய பங்குண்டு; இதை நுணுக்கமாக கவனிக்காது. கட்சியை கட்டினால் ஒன்றில் தலைமை நபர்கள் ஒதுங்கிக் கொண்டே போவார்கள். கட்சி பிளவுபடாது. ஆனால் கட்சியின் புரட்சிகர பாத்திரத்தை படிப்படியாக இழந்து கட்சி சிதையும் அல்லது வெகுசன அரசியல் இயக்கமாக மாறும் அல்லது ஆயுதக் குழுவாக மட்டும் நீடிக்கும் அல்லது அடிக்கடி கட்சி பிளவுபடும்.

*"கட்சியை மார்க்சிய லெனிய மாவோ சிந்தனைக்குள் காணப்படும் முரண்பாட்டின் அடிப்படையில் (இந்தியாவில் உருவாகுவது போல்) மிக இறுக்கமான ஒரே கோட்பாட்டு நபர்களைக் கொண்டு மட்டும் உருவாக்க வேண்டிய அவசியம் இங்கு அற்றுப் போகின்றது. மார்க்சிய லெனிய மாவோ சிந்தனையை ஏற்றுக் கொள்ளும். பரந்த புரட்சிகரப் பிரிவை உள்ளடக்கிய வகையில், இக்கட்சி முரண்பட்ட பிரிவுகளை உள்ளடக்கியே உருவாக்கப்பட வேண்டும். ஏனெனின் பொதுவாகவே பாசிசம் அனைத்து சட்டபூர்வ ஜனநாயக வடிவங்களை ஒடுக்குவதால், பாட்டாளி வர்க்க சக்தி இதனால் பலத்த நெருக்கடிகளை முகம் கொடுக்கும் போது, முரண்பட்ட கோட்பாட்டு உருவாக்கம் இயல்பாகின்றது. இந்த முரண்பட்ட பிரிவுகளிடையே பாட்டாளி வர்க்கப் புரட்சியை நேசித்து போராடக் கூடிய பிரிவுகளின் ஐக்கியம், முரண்பாட்டையும் பிளவையும் விட முதன்மையானது. இலங்கையின் பாசிச நெருக்கடிக்குள் ஐக்கியம் மார்க்சிய லெனிய மாவோ சிந்தனையை முன்வைக்கும் சக்திகளுக்கு முதன்மையானது. முரண்பாடு இரண்டாம் பட்சமானது. இது மட்டும் தான் இலங்கையில் புரட்சிகர சூழலை உரு*

www.tamilarangam.net



வாக்கும் ஆற்றல் வாய்ந்தவை. இங்கு ஐக்கியம் புரட்சிகர நெருக்கடிகளை சந்திக்கின்றமையால், பிளவு இரண்டாம் பட்சமாவதுடன், ஐக்கியத்தை நோக்கிய தேடுதல், கோட்பாட்டு ஒருமையை புரட்சிகர சரியான பாதை உருவாக்குவதை தீவிரமாக்கும். இங்கு பிளவு என்பது, முரண்பாடு என்பது குறித்த புரட்சிகர நெருக்கடிகளில் அர்த்தமுள்ள அரசியல் நடைமுறைப் பாதையில் களையப்பட்டுவிடும்.

இதை விடுத்து பிளவு ஏற்படின் அது கோட்பாட்டு அடிப்படையை கொண்டிருப்பின், அப்பிளவு ஐக்கியம் ஏற்பட்ட பின் ஏற்படின், ஐக்கியம் ஏற்படாத பிளவுகள் நீடிப்பதை விட ஒரு முன்னேற்றமான நிலையில் நிகழ்வதாக இருப்பதால், அப்பிளவையிட்ட அச்சம் இரண்டாம் பட்சமாக விடுகின்றது. இன்று ஐக்கியம் எல்லாவற்றையும் விட முக்கியமானது. முதன்மையானது. இதை காணத் தவறும் எல்லா நடத்தைகளும், குறிப்பாக இலங்கை நிலைமையை மதிப்பிடத் தவறியதன் விளைவாகும். இது குழுவாதத்தின் பொதுவான தன்மையாகும். இது இலங்கையின் புரட்சிகர நிலைமையை உருவாக்கத் தடையான குறுங்குழுவாதமாகும்.''

சமரின் கட்சிப் பிரகடணம் பற்றிய கண்ணோட்டத்தில் மட்டும் தவறு இல்லை. கட்சி கட்டுவது பற்றிய பார்வையிலேயே மிக ஆழமான முரண்பாடு நமக்கு இருக்கிறது.

மார்க்சியத்தை ஏற்பவர்கள் ஒரு அணி, மார்க்சிய லெனினியத்தை ஏற்பவர்கள் ஒரு அணி, மார்க்சிய லெனினிய மாஓ சிந்தனையை ஏற்பவர்கள் ஒரு அணி, மார்க்சிய - லெனினிய - மாஓயிசத்தை ஏற்பவர்கள் ஒரு அணி. இப்படி ஒரு சுலோகங்களின் கீழ் உள்நாட்டிலும் - உலகளவிலும் தொழிலாளி வர்க்கத்தையும், புரட்சிகர மக்களையும் பிளந்து ஒரு விளையாட்டு நடத்தப்படுகிறது. உண்மையில் மார்க்சிய - லெனினிய மாஓ சிந்தனைகளை ஆழமாகப் புரிந்து உலக சோசலிசப் புரட்சி இயக்கத்தின் கோட்பாட்டு அரசியல் பிரச்சனைகளை, உள்நாட்டு புரட்சி இயக்கம் எதிர் கொள்ளும் சித்தாந்த அரசியல் - அமைப்பு சிக்கல்களை களைவதற்கும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடும் சர்வதேச பிராந்திய நிலைப்பாடுகளில் சரியான பார்வையை ஏற்படுத்தி, புரட்சிகர சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தை ஒன்று திரட்டி பலப்படுத்த வேண்டியுள்ளது. மேற்கண்ட சுலோகங்களை மாற்றி மாற்றி போடுவதன் மூலம் இதைச் செய்ய முடியாது. கட்சி திட்டத்தின் தவறுகளை புரிந்து மேலும் விஞ்ஞானப்பூர்வ திட்டமாக மாற்றுவதற்கு பதில் மாஓ சிந்தனையை - மாஓஇசமாக மாற்றிக் கொள்வதால் கட்சி உள்நாட்டு விவகாரங்களிலும், உலக நிலமை பற்றிய புரித

லிலும், எதிர்கொண்டுள்ள சிக்கல்களை, புரட்சி இயக்கத்தை கட்டுவது, வளர்ப்பதில், விரிவாக்குவதில் உள்ள பிரச்சனைகளை தீர்க்க முடியாது. CPC 'இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி' (சீனச்சார்பு)யின் இந்த ''இசமாற்றம்'' உள்நாட்டிலும் உலகளவிலும் புரட்சி இயக்கம் வளர்வதற்கு - அய்க்கியப்படுவதற்கு பயன்படாது.

சமர் குறிப்பிடுவது போல் மார்க்சிய - லெனினிய மாஓ சிந்தனைக்குள் காணப்படும் முரண்பாட்டு அடிப்படையல்ல. (மா=லெ-மாஓ சிந்தனையை ஆழமாகப் புரிந்து கொள்வதில் அதன் மீது வகுத்த கொள்கைகளில் எழும் முரண்பாடுதான். பல M.L. கட்சிகள் உலகளவில் இருப்பதற்கு காரணம்.

சமர் (இந்தியாவில் உருவாவது போல்) இறுக்கமான ஒரே கோட்பாட்டு நபர்களை கொண்டு மட்டும் இலங்கையில் கட்சியை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிறது; ஒரு கட்சி என்பது குறிப்பிட்ட கோட்பாட்டு முறையை ஏற்று திட்டவட்டமான அரசியல் அமைப்புக் கொள்கைகளை உருவாக்கித்தான், கட்சியாக தன்னை பிரகடணப்படுத்துகிறது. இந்தியாவில் என்றால் இறுக்கமான ஒரு கோட்பாட்டு நபர்களை கொண்டு இருக்கலாம். அதை புரட்சிகரமானதாக கருதுவோம் என்பதல்ல பிரச்சனை உலகம் முழுவதும் ஒரு கட்சி என்பது கோட்பாட்டு விடயங்களில், முரண்பட்ட போக்குகளை கொண்டு கட்டப்படுவதில்லை; முரண்பட்ட கோட்பாடுகள், அரசியல் கொள்கை உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு மார்க்சியக் கல்வி வட்டம், அல்லது விவாதப் பத்திரிகை நடத்தலாம். ஆனால் புரட்சிகர கட்சியை கட்ட முடியாது; நடத்த முடியாது. ஒரே கோட்பாட்டில் கட்சியில் ஒன்றுபட்டவர்கள் நிகழ்ச்சிப் போக்கில், போராட்ட வளர்ச்சியில் வேறுபட்ட கோட்பாட்டு முரண்பாடுகளை வெளிப்படுத்தினால் அதை கட்சி கையாளும் முறை வேறு உள்ளது. ஆனால் முரண்பட்ட கோட்பாட்டு அரசியல் கொண்டவர்களை இணைத்து புரட்சிகர கட்சி உலகில் எங்கும் கட்டப்படுவதில்லை. அப்படிக் கட்டப்பட்டால் அது கதம்பக் கட்சியாகவே வெளிப்படும். பிளவுக்கான கூறை முன் கூட்டியே கட்சி உருவாக்கிக் கொள்கிறது. இவ்வளவு கோட்பாட்டு - அரசியல் முரண்பாடுகளை வெளிப்படுத்தும் சமரும் - தேசபக்தனும் அய்க்கியப்பட்டிருந்தால் எப்படி இருக்கும்?

இலங்கையில் பாசிசம் சட்டபூர்வ சனநாயக வடிவங்களை நசுக்குவதால்,. பாட்டாளி வர்க்க சக்திகள் நெருக்கடிகளை முகம் கொடுப்பதால்; முரண்பட்ட கோட்பாட்டு பிரிவுகள் இயல்பாக இருப்பதால், ''மா-லெ-மா'' சிந்தனையை ஏற்றுக் கொள்ளும் (சுலோகமாக) பரந்த பிரிவை உள்ளடக்கி கட்சி கட்டப்பட வேண்டும் என்கிறது சமர்.

www.tamilarangam.net



சமர்த் தோழர்களே! நல்லது உங்கள் விருப்பம், பாசிசமும், நெருக் கடியும், முரண்பட்ட கோட்பாட்டுப் பிரிவுகளின் பலவீனமும், புரட் சிகர கட்சிக்கான கோட்பாட்டு அரசியல் விடயங்களில் சமரசத்தை செய்து, முரண்பட்ட பிரிவுகளை உள்ளடக்கி இன்றைக்கு கட்சியை உருவாக்கினால். நாளை மேற்கண்ட நெருக்கடிகள் தீரும்போது, அல்லது நெருக்கடியை முகங் கொடுக்கும் சக்தியை ஒவ்வொரு பிரிவும் பெறும் போது, கட்சி திட்ட வட்டமான ஒரு வழிகாட்டுதலை அணிகளுக்கு செய்ய முடியாதபோது, கட்சி பல துண்டுகளாக உடை யுமா? அல்லது நீங்கள் குறிப்பிடுவது போல் முரண்பட்ட பிரிவுகளில் உள்ள சில நபர்கள், சில வேளை புரட்சிகர கோட்பாட்டுப் போக்கை புரிந்து அய்க்கியத்தை உறுதிப்படுத்தலாம். ஆனால் ''மா-லெ-மா''-வுக்குள் உள்ள ஒவ்வொரு பிரிவும் தான், தான் கொண்டிருக்கும் கோட்பாட்டுப் போக்கை புரட்சிகரமானது என்றே நினைத்து செயற்படுகிறது. நாளை நெருக்கடிகள் மாறும். தீரும்போது இந்தக் கோட்பாட்டுப் போக்குகள் தீர்க்கமான நிலையை எடுக்கத் தொடங்கும், வரலாற்று அவசியம் கருதிய பிளவாக அப்போது அது வெளிப்படும்.

நீங்கள் இதையும் புரிந்து வைத்துள்ளீர்கள். அதனால்தான் **அய்க்கியம் ஏற்படாத பிளவுகள் நீடிப்பதை விட அய்க்கியம் ஏற்பட்ட பின்பான பிளவுகள் முன்னேற்றமானது அப்பிளவுகளையிட்ட அச்சம் இரண்டாம் பட்சமானது என்கிறீர்கள். அதற்கு அப்பாலும் சென்று இந்த முறையை ஏற்றுக் கொள்ளாத நடத்தைகள் குழு வாதத்தின் பொதுத் தன்மை. இலங்கையின் புரட்சிகர நிலையை உருவாக்க தடையான குறுங்குழுவாதம் என முடிக்கிறீர்கள்.**

சமரின் பாதைதான் இலங்கையின் புரட்சிகர நிலைமையை உரு வாக்கும் என ஆணித்தரமாக நம்பும் நீங்கள். அது உங்கள் உரிமை. உங்களின் கைவசம் உள்ள **''முத்திரைகளை'' ''வாதங்களை''** விவாதங் களிலேயே **''குத்தி''** புரட்சிகர நிலைமைய உருவாக்க முடியாது என்பதை எப்போது புரியப் போகிறீர்கள்.

நீங்கள் குறிப்பிடும் பரந்த புரட்சிகரப் பிரிவை, ஒன்றிணைக்க ஒரு கட்சி பல வழிமுறைகளை, வடிவங்களை முன்னிறுத்தி செய்ய முடியும். ஆனால் ஒரு உறுதியான முன்னேறிய கோட்பாட்டு அரசியல் தலைமையை கட்டியமைக்க, அதை போராட்டத்தில் புடம் போட்டு எடுக்க, தவறான கோட்பாட்டு போக்குகளை - பிரிவுகளை பிளவு களை எதிர்த்து சித்தாந்தப் போராட்டம் நடத்த கோட்பாட்டு அரசியல் முரண்பாடுள்ள குழுக்கள். கட்சிகளுடன் ஒரே குரலில் (ஒரு குரலில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அல்ல) விவாதிக்கவும். ஒத்த கோட்பாட்டு புரிதல் உள்ள மற்றும் அதை வந்தடையும் குழுக்களை அய்க்கியப்படுத்தவும், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தில் உறுதியான நிலைப்பாடுகளை முன்வைக்கவும். புரட்சிகர கட்சிக்கு - வேறு வடிவங்கள் இல்லை - கட்சி தான் உத்தரவாதமளிக்கிறது. இலங்கையில் உள்ள முரண்பட்ட கோட்பாட்டு பிரிவுகள் முகங் கொள்ளும் புறநிலை நெருக்கடிகளை நாம் அறிவோம். அவற்றை தீர்க்க ஒரு பிரிவு, மற்றப் பிரிவுக்கு தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்யட்டும், புறநிலை நெருக்கடிகளை தீர்க்க தமிழீழ புதிய சனநாயக கட்சி தன்னால் முடிந்த எல்லா உதவிகளையும் வர்க்கப் புரட்சியை நேசித்து போராடக் கூடிய எல்லாப் பிரிவுகளுக்கும் செய்யும் எனக் கூற முடியும். அதேவேளை பொது எதிரிக்கு எதிரான, மற்றும் புரட்சி இயக்கத்தை முன்தள்ளும் விரிவுபடுத்தும் கூட்டு வேலைகளுக்கும் தயாராகவுள்ளது.

ஆனால் முக்கியமான கோட்பாட்டு அரசியல் - அமைப்பு கண்ணோட்டங்களில் விட்டுக் கொடுப்பது அல்லது சமரசம் செய்து கொண்டு அய்க்கியப்பட்டு (பிளவுக்கான வழி இருக்கிறது எனத் தெரிந்தும்) கட்சியை கட்ட முடியாது என்பதில் தெளிவாகவுள்ளோம், முரண்பட்ட கோட்பாட்டுப் பிரிவுகள் தங்களின் அகநிலை நெருக்கடிகளை, தங்களின் சித்தாந்த அரசியல் அமைப்பு பார்வைகளை வளர்ப்பதன் மூலம் வெற்றி கொள்ள வேண்டும்; முரண்பட்ட கோட்பாட்டுப் பிரிவுகள் ஒவ்வொன்றும், பேசுவது, எழுதுவதற்கு அப்பாலும் மக்கள் மத்தியில் செயற்படும் போது, போராட்டங்களை முன்னெடுத்து, தலைமை அளிக்கும் வேளையிலும் தங்களின் கோட்பாட்டுச் சரி பிழைகளை பரிசோதித்துப் பார்க்க முடியும்.

நமது இந்தக் கண்ணோட்டத்தை, **"சிறு பிள்ளைத்தனம், தனிமை வாதப் பண்பாடு, குறுங்குழுவாதம், அய்க்கியத்துக்கு எதிரானவர்கள்"** எனப் பல முத்திரைகளை குத்துவதன் மூலம் நிராகரிக்க முடியாது; கட்சி கட்டுவது பற்றி அல்ல புரட்சிகரக் கட்சியை கட்டுவதற்கான சிறந்த வழிமுறையை முன்வையுங்கள் நாம் ஆய்வு செய்யத் தயாராக இருக்கிறோம்.

*"கட்சி ஒன்றை இன்று பகிரங்கமாக பிரகடணம் செய்வது என்பது, இலங்கையின் நிலைமையை மதிப்பிடத் தவறியதன் விளைவாகும். கட்சி ஊழியர்களையே உருவாக்க முடியாத புறநிலை உள்ள போது, அதுவே பணியாக உள்ள போது, கட்சிப் பிரகடணங்கள் வெறும் விளையாட்டு விளம்பரமாகி விடுகின்றது. கட்சி பற்றிய புரட்சிகரத் தன்மையைப் பொழுது தன்மையில் கேலிக்குரியதாக்கிவிடும். பகி*

www.tamilarangam.net



ரங்கத் தன்மை மேலும் புரட்சிகர நெருக்கடியை தோற்றுவித்து, குறைந் தபட்ச வேலையைக் கூட முடமாக்குவதாகும். கட்சியின் பணி பற்றிய மதிப்பிடின்றியே குறுங்குழுவாத பிரகடனமாகவே முன் வருகின்றது.''

இலங்கையின் நிலைமையை கவனத்தில் கொண்டும், புரட்சிகர சக்திகளின் ஒருங்கிணைப்பை கவனத்தில் எடுத்து கட்சி பிரகடனப்ப டுத்தப்பட்டிருக்கிறது, கட்சியின் அலுவலகம், அதன் தொடர்பு மையங்கள், அதிகார பூர்வ பேச்சாளர்கள், பகிரங்கமாக இல்லை, எல்லா உறுப்பினர்களும் பகிரங்கமாக இல்லை என்பதையும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு கட்சி கூட, ஊழியர்களால்தான் உருவாக்கப்படுகிறது. பின்னர் கட்சி, ஊழியர்களை உருவாக்குகிறது. எத்தனை ஊழியர் உருவாக்கப் பட்ட பின், கட்சி உருவாக்கப்பட வேண்டும் என சர்வதேச பொது விதி இருக்கிறதா? சமர் கட்சி ஊழியர்களை உருவாக்க முடியாத புறநிலை உள்ளது. அதுவே பணியாக உள்ளது. ஊழியர்களை உருவாக்க முடிய வில்லை என்பது விநோதமானது.

கடந்த காலத்தின் ஊழியர்களை உருவாக்கும் தகுதியுள்ள தலைமை மட்ட நபர்கள் புலிகள் அமைப்பை தடை செய்தவுடன், சிலரைக் கைது செய்ததும் மற்றய தலைமை நபர்கள் தலைமறைவாகத் தயார் இல்லை, தாங்கள் அதுவரை வெளிப்படையாக வேலை செய்த பகுதியை விட்டு வெளியேறி தமிழீழத்தின் வேறு பகுதிகளுக்கு சென்று அமைப்பு வேலைகளை முன்னெடுக்க தயார் இல்லை, வெளிப்படையாக இருந் தவர்கள் தலைமறைவாக இயங்கவும், இரகசியமாக இயங்கியவர்கள், புதிய வெளிப்படை வடிவங்களூடாக இயங்குவது பற்றி சிந்திக்க வில்லை - செயற்படவில்லை, வெளிநாட்டில் இருந்த தலைமை நபர்கள் உள்நாட்டுக்குள் வந்து இயங்கத் தயார் இல்லை. இதற்கான தயார் நிலைக்கு தலைமை நபர்கள் தயாராகமல், எப்படி இரகசிய பொறி முறையை கட்டி அமைக்க முடியும்.

கடந்த காலத்தில் தலைமையில் இருந்து தங்களால் உருவாக்கப் பட்ட ஊழியர்களைக் கூட ''அம்போ'' என கைவிட்டு விட்டு கொழும்பை நோக்கிச் சென்றதும், சிறீலங்காவில் கூட நின்று செயற்ப டுவது பற்றி சிந்திக்கமாமல், தம்மை தயார்படுத்தாமல், சாதாரண மக்கள் முகங் கொள்ளும் அரசின் நெருக்கடிகளை கூட எதிர்கொள் ளாது; சிறீலங்காவில் நின்று பிடிப்பதற்கான வடிவங்கள், வழிமு றைகள் பற்றிக் கவலைப்படாது, இந்தியாவுக்கும், அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கும் சென்று கட்சி கட்ட முயன்றார்கள், கீழ் அணி

www.tamilarangam.net


களுக்கு, தங்களின் இச்செயலை 'நீண்டகால மக்கள் யுத்த' தயாரிப்பு என ஏமாற்றி, தங்களின் சொந்த வாழ்க்கையை உறுதிப்படுத்தினர். இந்தியாவில் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதும் உருவான பொது நெருக்கடிகளைக் கூட எதிர்கொண்டு நின்று பிடிக்க திரணியற்ற (அதற்கு உதவ பலர் தயாராக இருந்த போதும்) தலைவர்கள், இலண்டன் சென்று மார்க்சிய அறிவை ஆழப்படுத்தி வெளிநாடுகளில் உள்ள கட்சி மட்டச் சக்திகளை கொண்டு கட்சி கட்டுவதாக கூறி இலண்டன் வந்து சேர்ந்தார்கள். இப்போது தென் அமெரிக்காவுக்கு, கனடாவுக்கு செல்வதற்கு முயன்று கொண்டு இருக்கிறார்கள், நாடு விட்டு நாடு மாறும் போது, தங்களின் சுயநலத் தேவைகளை நிவர்த்திக்க, அரசியலில் மாறுவதும் அமைப்புக்களில் தாவுவதும், பொறுப்புகளிலிருந்து ஒதுங்கவும் செய்கிறார்கள். ஆட்பிடிப்பதின் மூலம் கட்சியை வளர்ப்பதாக கருதும் சிலர், மற்றைய அமைப்புகளில் பொருளாதாரப் பலயீனத்தில், வெளிநாடு போகும் திட்டங்களிலுள்ள சக்திகளை வலைவீசி தேடி வருகின்றனர். அரசியல் ரீதியாக அணுகுவதற்கு பதில் ஆட்பிடிப்பதில் ஈடுபடுகின்றனர். இலங்கையிலும், இந்தியாவிலும் தங்களை அரசியல் ரீதியாக பாதுகாத்தவர்களுடன் கூட தொடர்பு இன்றி இருக்கிறார்கள். தங்களை வெளிநாட்டுக்கு அழைக்க கடன்பட்டு பணம் கொடுத்த தொழிலாளித் தோழர்களின் கடன்களை உழைத்து மீளக் கட்டும் பொறுப்பற்றவர்கள், சிலர் தான் உண்டு. தன் குடும்பம் உண்டு என ஒதுங்கியுள்ளனர். சிலர் புரட்சிகர அரசியல் பத்திரிகைகளை கூடப் படிப்பதில்லை. இந்தியாவிலும், இலங்கையிலும் இருக்கும் வேறு சிலர் தலைமையில் இருந்த நபர்கள், தங்களுடன் இருந்த முன்னாள் தோழர்களின் பணங்களை வாங்கி வாங்கி தின்று ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்; சாயம் வெளுத்துக் கொண்டிருக்கும் இத்தகைய தலைமை நபர்களால் ஒரு கட்சி ஊழியர்களை அல்ல நல்ல நண்பர்களை, உறவுகளை பேணி வளர்ப்பது கூட முடியாது. இப்படியான நபர்களை கொண்டு தலைமை கட்டப்பட்டது. இப்போதும் வெளிநாட்டுக்கு போவதை இலட்சியமாகக் கொண்ட நபர்கள் கட்சிக்குள் இருக்கிறார்கள். இதே போன்று தங்களை ஏமாற்றிய தலைமைகளை வெறுத்த கீழ் அணிகள், புதிய கட்சியை, தலைமையை ஏமாற்ற முயல்கிறார்கள்.

வெளிநாடுகளில் வேலைக்கு சென்று, உழைத்த நேரம் போக மீதி நேரத்தில் மீண்டும் சமூக விவகாரங்களில் அக்கறைப்படுபவர்கள், தங்களின் பணத்தை செலவழித்து வெளியீடுகளை கொண்டு வருபவர்கள், செயற்படுபவர்கள் இருக்கிறார்கள், இலங்கையில் தலைமறைவாக இருந்தபடி கட்சி வேலைகளை செய்பவர்கள் இருக்கிறார்கள்;

www.tamilarangam.net



வேறு வடிவங்களில், வேறு ஸ்தாபனங்களில் இரகசியமாக இருந்தபடி கட்சியின் பணியை நிறைவேற்றக் கூடியவர்கள் இருக்கிறார்கள், புரட்சிகரமான ஊழியர்களை உருவாக்க முடிகிறது, புரட்சியை அறிவுபூர்வமாக நேசித்து எந்தத் தியாகத்துக்கும் தயாரானவர்களால் எத்தகைய நெருக்கடிக்கு மத்தியிலும் (இட்லரின் பாசிசத்துக்கும் மத்தியில் கட்சி கட்டப்பட்டது பற்றி மட்டும் பேசிப் பயன் இல்லை) அதற்குரிய முறையில் ஊழியர்களை உருவாக்க முடியும், கட்சியை கட்ட முடியும்.

உலகம் முழுவதும் சிதறுண்டு வாழும் தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளை ஒன்றிணைப்பது. கட்சியை கட்டுவது என்ற பொறுப்பு மிக்க பணியில் நாம் ஒன்றை கவனிக்க வேண்டியுள்ளது; இலங்கையில் (சிறீலங்கா/தமிழீழம்) புரட்சிகரமான அதன் தலைமையிலான புரட்சிகரப் போராட்டங்கள் இல்லாத சூழ்நிலைமையில், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கம் மையப்பட்டு செயற்பாடத உலக நிலைமையில், ஒவ்வொரு நாட்டிலும் புரட்சிகர சக்திகள் பல கட்சிகளாக பிளவுபட்டிருக்கும் வேளையில், இலங்கையில் புதிய சனநாயக கட்சியை கட்டும் பணியில் ஈடுபட்டுள்ள நாம் கவனிக்க வேண்டியது. தமிழீழப் பகுதியில் இயங்கிய கற்பனா சோசலிச - புதிய சனநாயக இயக்கங்கள், முண்ணிகள், கட்சிகளில் இருந்து செயற்பட்டு வந்த தோழர்கள். சக இயக்கங்களின் தடை விதிப்பு, அழிப்புக்களுக்கு எதிராகவும், தங்களின் தலைமைகளின் தவறுகளுக்கு எதிராகவும் உள் அமைப்பு போராட்டம் நடத்தி மாற்றாக ஒரு கட்சியை உள்நாட்டில் வாழ்ந்தபடி கட்டுவதற்கான முன்முயற்சிகளுக்கு தலைமைப் பாத்திரம் வழங்க முடியாது, வெளிநாடுகளுக்குச் சென்ற நிலைமை தெளிவானது. இன்றும் இது தொடர்கிறது.

உள்நாட்டில் புரட்சிகரக் கட்சியை கட்டுவதற்கான நேரடி முன்முயற்சிகளில் இல்லாத காரணத்தால் அரசியல் ரீதியிலும், அமைப்பு முறையிலும் நேரடியாக புரட்சிகரப் போக்குகளை கிரகித்து கொள்ள முடியாமல் உள்ளனர், புத்தகப் படிப்புக்கள் மூலமும், தாங்கள் வாழும் நாடுகளிலுள்ள புரட்சிகர கட்சிகளுடன் (குறிப்பாக இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டு கட்சிகளுடனும்) தொடர்பு வைத்து அவர்களின் வெளியீடுகளை மட்டும் படித்து வருகின்றனர். முதலில் தொடர்பு கிடைக்கும் கட்சியின் ஆவணங்கள், அரசியல் போக்குகளை அறிந்து கொள்வதுடன் எல்லைப்படுத்திக் கொள்கின்றனர். அக்கட்சிகளின் ஆதரவாளர்கள் என்ற எல்லைக்கு அப்பால், அந்நாட்டுக் கட்சிகள் எதிர்கொண்டிருக்கும் சித்தாந்த, அரசியல், அமைப்புப் பிரச்சனைகளை புரிந்து கொள்ள முடியாது உள்ளனர். அந்த அந்த நாட்டு அமைப்புக்களும் அப்படி ஊக்குவிப்பதில்லை. இவ்வாறு உலகளவில் வெவ்வேறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டுக் கட்சிகளுடன் மட்டுமல்ல. ஒரே நாட்டில் வேறு வேறு புரட்சிகர கட்சிகளுடன், திரிபுவாத கட்சிகளுடன் கூட தொடர்பு வைத்து, அந்நாட்டு கட்சிகளின் உறுப்பினர்களாக, ஆதரவாளர்களாக, வாசகர்களாகவுள்ள தமிழீழ புரட்சிகர சனநாயக சக்திகளில் ஒரு பகுதியினர். இவர்கள் இலங்கையில் ஒரு புரட்சிகர கட்சியை கட்ட வேண்டும் என்பதிலும் ஆர்வத்துடன் உள்ளனர். இவர்களுடன் தொடர்புகளை உருவாக்கி பேணும்போது; ஒன்றிணைக்க முயலும் போது, அய்க்கியப் படுத்த விவாதிக்கும் போதும், அவர்கள் நம்பிக்கை வைத்து கட்சியுடன் தொடர்பு வைத்து, கிரகித்துள்ள சித்தாந்த அரசியல் வழிக்கும், கட்சி பற்றிய பார்வைக்கும், **தமிழீழ புதிய சனநாயக கட்சியின்** சித்தாந்த அரசியல் வழிக்கும், கட்சிக் கண்ணோட்டத்துக்கும் இடையிலான முரண்பாடுகளை தெளிவாக களைந்து கட்சியில் இணைக்க வேண்டியுள்ளது. அய்க்கியப்பட வேண்டியுள்ளது. சர்வதேசக் கட்சிகளுடனான உறவு குறித்த கொள்கையிலும், அணுகுமுறையிலும், சர்வதேச இயக்கங்களுக்கு இடையிலான உறவுக்கு அடிப்படையான சர்வதேசிய கோட்பாட்டு நிலைப்பாடுகளிலும், நமது கட்சியின் தெளிவான புரிதலை விளக்கி அய்க்கியப்படுத்த வேண்டும். இல்லையெனில் நமது கட்சிக்குள் திட்டமிட்ட முறையில், உணர்வு பூர்வமாக பல நாட்டுக் கட்சிகளின் கோட்பாட்டு அரசியல் முட்டி மோதிக் கொண்டிருக்கும். தேவைப்படும் போது கோட்பாட்டுச் சமரசம் உள்ள அய்க்கியமும், தேவைப்படாத போது புரட்சிகரமானது என்ற பெயரில் பிளவுகளும், நமது கட்சிக்கு வெளியில் உள்ள சக்திகளால் தீர்மானிக்கப்படும் அபாயம் உள்ளது.

கொலனிய கட்டத்தில் இலங்கையில் இருந்து பிரிட்டனுக்கு படிக்கச் சென்ற மேட்டுக்குடியினரில் சிலர், பிரித்தானிய கொம்யூனிஸ்ட் கட்சியின் பாணியில் இலங்கையில் கட்சி கட்டியது தெளிவானது. புதுக் கொலனிய கட்டத்தில் இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்துள்ளவர்களில் சிலர் அய்ரோப்பிய, அமெரிக்கக் கட்சிகளின் பாணியில் மீண்டும் இலங்கையில் கட்சி கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போக்குகளையும் கட்சி இன்று எதிர்கொள்கிறது.

நகர்ப்புறங்களில் நல்ல வேலையுடன், வருவாயுடன் இருந்து கொண்டு தாங்கள் வேலை செய்யும் இடங்களில் எந்தப் புரட்சியும் பேசாது, நகர்ப்புற தொழிலாளி வர்க்கத் திரளிடம் எத்தகைய புரட்சிகர வேலையும் செய்யாது, கிராமப்புறத்தில் பட்டாசு வெடிக்க வேண்டும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காடுகளில் கெரில்லா இயக்கத்தை கட்ட வேண்டும் எனப் பேசும், எழுதும் புரட்சி சீவிகளை பார்க்கிறோம். அதேபோன்று வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு, இலங்கையில் கட்சி கட்ட வேண்டும், புரட்சி வெடிக்க வேண்டும் எனப் பேசி, எழுதிக் கொண்டு, தாங்கள் வாழும் நாடுகளில் அகதிகளின் பிரச்சனைகளில், அந்நாட்டு மக்களின் போராட்டங்களில் இருந்து முழுக்க விலகி இருந்தபடி தங்கள் பொருளாதார வாழ்வை மட்டும் திடப்படுத்தி வரும் புரட்சி சீவிகளையும் காண முடிகிறது. மறுபக்கம் நகர்புறங்களில் உருவாகும் ஊழியர்கள், கிராமப்புறங்களுக்கு சென்றால்தான் புரட்சியாளர்கள் என்ற அணுகுமுறையுடன், கிராமங்களில் வேலை செய்பவர்களை மட்டும் புரட்சிக்காரர்களாக பார்க்கின்ற போக்கும், இல்லையெனில் தொழிலாளி வர்க்க கட்சியை கட்ட வேண்டும் எனில் நகர்புற தொழிலாளர்கள் மட்டுமே புரட்சிக்காரர்கள் என்ற நோக்கில் தொழிற்சங்கப் பாதையில் மட்டும் செயற்படுகின்ற போக்கும் வெளிப்படுகிறது. அதேபோன்று வெளிநாடுகளில் இருப்பவர்கள் எல்லாம் நாட்டுக்கு வந்து புரட்சி செய்தால்தான் அவர்களை ஏற்றுக் கொள்ள முடியும் என்ற போக்கும் வெளிப்படுகிறது.

புதிய சனநாயகப் புரட்சித் திட்டத்தில் ஒருவர் இணைந்து வேலை செய்ய விரும்பினால் முதல் அவர் வாழ்கின்ற பகுதியில் (நகரம்/கிராமம்) மக்கள் மத்தியில் செயற்படச் செய்வதற்கான வேலைத் திட்டம், வடிவம் கட்சியிடம் இருக்க வேண்டும், தங்களின் சொந்த வாழ்விடங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு புடம் போடப் படுபவர்களை, புரட்சிகர இயக்கத்தை விரிவாக்க வேறு பகுதிகளுக்கு செல்லத் தயாரானவர்களை, கட்சியின் முக்கிய போராட்ட முனைகளுக்கு அனுப்ப வேண்டும், இலங்கையில் புதிய சனநாயகப் புரட்சிக்கு (சிறீலங்கா/தமிழீழம்) இலங்கையில் வாழ்கின்றவர்களை கட்சி ஊழியர்களாக்குவதே பிரதானமாக இருக்கிறது. வெளிநாடுகளில் இருக்கிறவர்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் உள்ள தமிழீழ மக்களிடம் வேலை செய்ய வேண்டும், அதற்கான வேலைமுறையில்தான் வெளிநாட்டு உறுப்பினர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அவர்கள் இலங்கைக்கு வருவார்கள் என நம்பி எதிர்பார்த்து இலங்கையில் செயற்படும் கட்சி வடிவத்துள் இணைக்க முடியாது, வந்த பின்னர் அதற்கான வேலை வடிவத்தில் இணைக்கலாம்; தமிழீழ புதிய சனநாயக புரட்சிக்கு, ஆதரவான கட்சியின் வேலை வடிவத்துள் வெளிநாட்டு உறுப்பினர்கள் இணைந்து, உருவாக்கி வேலை செய்ய வேண்டும்.

www.tamilarangam.net



இத்தகைய கட்சி வேலை முறையைப் புரிந்து கொண்ட தலைமைச் சக்திகள், உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அந்த அந்த தளங்களில், கட்சி வேலைகளை செய்வதற்கான ஊழியர்களை உருவாக்கிக் கொண்டிருப்பார்கள். இதைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்குக் கட்சிப் பிரகடணம் விளையாட்டாக, விளம்பரமாக தெரிகிறது. சமர் தான் விரும்புகிற அளவு ஊழியர்களை உருவாக்கியபின், அல்லது சமர் தான் இலங்கைக்கு வந்த பின் அல்லது சமரையும் அய்க்கியப்படுத்திய கட்சிப் பிரகடணம்தான். விளையாட்டு அற்ற, விளம்பரம் அற்ற கேலிக்குரியதல்லாத, குறைந்தபட்ச வேலையைக் கூட முடமாக்காத, குறுங்குழுவாத பிரகடனம் இல்லாத, புரட்சிகர கட்சிப் பிரகடணம் ஆக இருக்க முடியும். இது சமர் தங்களைத் தவிர மற்றய சக்திகள் எல்லாவற்றையும் நீங்களா புரட்சிகர சக்திகள், கட்சிகள்? எனக் கேலி செய்கின்ற அரசியல் போக்கு, பக்குவமற்ற பொறுப்புணர்வற்ற விமர்சனப் போக்கு, விடயங்களை ஆழமாக விளக்கி வென்றெடுப்பதற்கு பதில் முத்திரை குத்தி அன்னியப்படுத்தும் போக்கு.

சில கட்சிகள், அதன் உறுப்பினர்கள், தங்கள் கட்சியின் கொள்கைகள், வேலைகள், போராட்டங்கள் பற்றிப் பேசுவதை, எழுதுவதை விட மற்றய கட்சிகளின் குறைகளை விமர்சிப்பதையும், ஏளனம் செய்வதையும் தங்களின் முக்கிய கொள்கைகளாக கொண்டிருக்கிறார்கள். சமர் இந்தப் போக்குக்கு பலியாகிவிடக் கூடாது என விரும்புகிறோம். மார்க்சியர்கள் வெறும் விமர்சகர்கள் மட்டுமல்ல. மாற்றாக ஒன்றைப் படைப்பவர்கள் சமர் புரட்சிகர கட்சியை கட்டுவதற்கான கோட்பாட்டு அரசியல் வழியை, அமைப்பு வழியை உருவாக்கி கொள்வதற்கான பணிகளை நோக்கிமுன்னேற வேண்டும் என எதிர்பார்க்கிறோம். ஒரு உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு கருத்துக்களை, புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சியின் அவசியத்தை வலியுறுத்தி வரும் பத்திரிகை; அந்த வகையில் சமருடன், தேசபக்தன் ஒரு ஆரோக்கியமான உறவை பேணி வருகிறது. தொடர்ந்தும் பேண விரும்புகிறது.

தமிழீழ புதிய சனநாயக கட்சியின் பகிரங்கமான 15 அரசியல் நிலைப்பாடுகள் மீது சமரின் விமர்சனத்துக்கு ஆன பதில் அடுத்த இதழில் தொடர்கிறது.

— தமிழரசன், தீலிபன்

www.tamilarangam.net

# தேசபக்தன்

தமிழீழ புதிய சனநாயக கட்சி தி.பி. 2032 (2001) இதழ் 20

*அன்பார்ந்த வாசகர்களே!*

சிறீலங்கா அரசினதும் - தமிழீழ அராஜக இயக்கத் தலைமைகளினதும் கெடுபிடிகளை, தடைகளை, தேச எல்லைகளை தாண்டி, அகதி முகாம்களில் கையெழுத்துப் பிரதியாக உருவான **தேசபக்தன்** பின் உருட்டச்சிலும் தொடர்ந்து அச்சுக் கோர்ப்பிலும் தற்போது மின் கணணிப் பதிப்பாகவும் வெளி வந்து கொண்டிருக்கின்றது. உங்களுடைய ஆதரவினாலும், பொருளாதார உதவிகளினாலும் படிப்படியாக உயர்ந்த **தேசபக்தன்** இன்று சர்வதேச இணை வலையிலும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. எமது தாய்நாட்டின் விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடும் **தேசபக்தன்** தொடர்ந்தும் உங்கள் ஆதரவையும், விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எதிர் பார்க்கின்றது. தமிழீழ மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள வெளியீட்டாளர்களே! **தேசபக்தனை** விளம்பரப்படுத்தி உதவுங்கள்.

- ஆசிரியர் குழு

**"சிறு துளி பெரு வெள்ளம்" அன்பளிப்பு 25 உரூபா / வெளிநாடு 10 $ டொலர்**

**www.ndpt.org**

**Patriot_editor@Yahoo.com**

RGSD.ISSN-07647-2262 RNI 04512/1999 CANADA

**NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM (N.D.P.T.)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- ★ கறுப்பு யூலை நினைவு
- ★ யுத்தம் - சமாதானம் எதை நோக்கி?
- ★ NDPT-இன் அரசியல் தீர்வுப் பொதி
- ★ சுயநிர்ணய உரிமையா? தனியரசா?
- ★ பாலஸ்தீனமே!
- ★ புலம் பெயர்ந்த தமிழர்களின் எதிர்காலம்?
- ★ அகதிகளை புறக்கணித்த "தமிழ் இனி 2000"
  *(சேரன் + சு. ராமசாமியின் உலகமயம்)*
- ★ தோட்டத் தொழிலாளர்கள் முதுகில் MNC
- ★ வன்முறை எழுத்து
  *(சாரு நிவேதிதாவுக்கு பதில்)*
- ★ பேச்சு வார்த்தையும் சுதேசிய நிலைப்பாடும்
- ★ யுத்தத்தில் பேரினவாதத்தின் கொடூரம்
- ★ அமெரிக்கச் சிறையில் அரசியல் கைதிகள்
- ★ சாமியின் விமர்சனத்துக்கு ஒரு பதில்

**NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM**

# N D P T

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்